வரு.74 இல. 05 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமன்ஜரி

2022 ஜனவரி 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

January 30 Sunday, 2022

06 கொவிட் பெருந்தொற்று உருவாக்கிய நெருக்கடி!

13 நாட்டை முடக்கும் அவசியம் கிடையாது!

18 நீச்சல் உடையில் மாஸ்டர் பட நடிகை!

விமானப் படைத்தளபதி கிண்ணத்துக்கான
24 வருடாந்த கொல்ப் போட்டி தொடர் 2022

தொழில்முறை வாழ்க்கையில் திறன்களை வளர்ப்பது அவசியம்

விமானப்படை அணிவகுப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

தொழில் வாழ்க்கையில் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய கடமை இளம் உத்தியோகத்தர் களுக்கு உண்டு என ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவிலுள்ள இலங்கை விமானப்படை தளத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விமானப் படை அதிகாரிகளின் வெளியேறும் அணிவகுப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதி பதி இவ்வாறு தெரிவித்துள்ளார். மூன்றரை முதல் நான்கரை வருட காலப்பகுதியில் ஆறு பிரிவுகளின் கீழ் பயிற்சிகளை நிறைவு செய்த 153 கெடட் உத்தியோகத்தர்கள் நேற்று

04

பயங்கரவாத யுத்தத்தை வெற்றிகொண்டது போன்று

மக்களின் உயிர்களை பாதுகாக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் வெற்றி

தடுப்பூசி திட்டத்தின் ஒருவருட பூர்த்தி வைபவத்தில் அமைச்சர் கெஹலிய

லோரன்ஸ் செல்வநாயகம்

பயங்கரவாத யுத்தத்தை தோல்வியுறச் செய்து நாட்டு மக களின் உயிர்களைப் பாதுகாத்ததைப் போன்று உலகளாவிய பெருந்தொற்றை தோல்வியுறச் செய்து மக்கள் உயிரைப் பாதுகாக்கும் சவாலை வெற்றி கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று தெரிவித்தார்.

அன்று பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்த சவாலை பொறுப்பேற்ற மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட் டலை பெற்றுக் கொண்டுள்ள தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொரோனா தொற்றை தோற்கடிக்கும் சவாலை வெற்றிகரமாக

04

போராட்டங்கள் மூலம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது;

காணாமல் போனோரது பிரச்சினைக்கு தீர்வு காண அரசுடன் பேச வேண்டும்

யாழ். நடமாடும் சேவையில் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

அரசுடன் பேசமுன்வந்தால் அதற்குரிய தீர்வை நிச்சயம் பெற்றுத்தருவதாகவும் அமைச்சர் அலி சப்ரி உறுதியளிப்பு

யாழ்.விசேட, யாழ்.குறூப், ωபருத்தித்துறை விசேட நிருபர்கள்

போராட்டங்களை நடத்துவதன் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்று விடமுடியாது. தமது பிரச்சி னைக்கு தீர்வு வேண்டுமாக இருந்தால் அரசு டன் பேசினால் அதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியுமென நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நீதியமைச்சின் 'Access to Justice' நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்

04

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில்

பொலிஸாருக்கு தகவல் வழங்கினால் பணப்பரிசு

போதைப் பொருள் தொடர்பில் சரியான தக வல்களை வழங்கும் நபர் களுக்காக பணப்பரிசு வழங்கப்படவுள் ளதாக பொலிஸ்

04

இலஞ்சம் வாங்கிய அதிபர் ஒருவர் கைது

கொழும்பில் அதிகாரிகள் அதிரடி

தரம் ஒன்றிற்கு பிள்ளையை அனுமதிப்பதற்காக 1.5 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற பாணந்துறை பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை

ஒன்றின் அதிபரை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு

04

சீனாவில் மற்றுமொரு வைரஸ் கண்டுபிடிப்பு

WHO நேற்று அறிவிப்பு

சீன விஞ்ஞானிகளால் நியோகோவ் (NeoCov) என்ற புதிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள் ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) அறிவித்துள்ளது.

04

எங்கள் கருத்து...

பாரம்பரிய தமிழ் கட்சியின் இன்றைய பரிதாப நிலை

முன்னொரு காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்றால் தென்பகுதி அரசியல் வட்டாரத்துக்கு ஒரு சிம்ம சொப்பனமாக இருந்த கட்சியாகும். பாராளுமன்றத்திலே எதிரணியில் இருந்து அக்கட்சி அங்கத்தவர்கள் எழுப்பும் கேள் விகளுக்கு பதிலளிக்க முடியாது திணறும் அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் பலரும் இவர்களுடன் சமரசமாக பேசி சாமர்த் தியமாக செயல்பட்ட சம்பவங்கள் ஒருகாலத்தில் பதிவுகளாக இருந்தன.

சட்டவல்லுனர்கள் பலரையும் கொண்டிருந்த அந்தப் பாரம் பரிய கட்சியின் இன்றைய நிலை பரிதாபத்திற்குரியதாக மாறி யிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

முப்பது வருடகால கொடிய யுத்தம் தமிழ் மக்களது பொரு ளாதாரம் மற்றும் அவர்களது வரலாற்றை மட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற பாரம்பரிய கட்சிகளின் செல் வாக்கையும், தனித்துவத்தையும் கேள்விக்குறியாக்கி விட்டே நந்திக்கடலில் மூழ்கிப் போனது.

விடுதலைப்புலிகளால் ஐந்து தமிழ் கட்சிகளின் கூட்டணி யாக உருவெடுத்த தமிழ் கூட்டமைப்பில் ஒன்றாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் தனித்துவத் தன்மையால் அந்தக் கூட்டமைப்பில் தொடர்ந்து அங்கம் வகிக்க முடியாமல் தனித்துச் செல்ல நேரிட்டது.

விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் செய்துவந்த சில மக்கள் விரோத செயற்பாடு களை விமர்சித்த காரணத்தினால் தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டமைப்பிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டது. அன்று தனி மைப்படுத்தப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று வரை தமிழ் அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட்ட ஒரு கட்சி யாக மக்கள் மனதில் பதிவு செய்யப்பட்டது.

04

G.C.E (A/L) பரீட்சை திட்டமிட்ட திகதிகளில்

கல்வியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

க.பொ.த உயர்தரப் பரீட் சையை பெப்ரவரி (07022022) முதல் 2,439 பரீட்சை நிலையங்க ளில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள் ளதாக கல்வி அமைச்சின் செயலா ளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த ஒகஸ்ட் மாதம் பரீட்சையை நடத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கொரோனா தொற்று பரவல் காரணமாக

04

தடுப்பூசிகள் குறித்து தவறான தகவல்களை பரப்ப வேண்டாம்

சமூக வலையமைப்பு விஷமிகளிடம் போப் கோரல்

கொரோனா தடுப்பூசி பற்றிய தவறான தக வல்களை பரப்புவோரை போப் ஆண்டவர் பிரான்சிஸ் கண்டித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்கு எதிராக வலி மையான பேராயுதங்களாக தடுப்பூசிகள் தான் உள்ளன. ஆனால் அந்த தடுப்பூசிகள் பற்றி தவறான தகவல்களை பரப்புவது உலகளவில் தொடர்கிறது. இந்த தருணத் தில் கொரோனா தொற்று தொடர்பான தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதற்கு உண்மை, சரிபார்ப்பு வலை யமைப்பை கத்தோலிக்க பத்திரிகையாளர்கள்

04

நாட்டை மீண்டும் முடக்குவது பிரச்சினைக்கு தீர்வாகாது

மக்களை விழிப்பாக இருக்க கோரிக்கை

நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில், நாட்டை முடக்குவது இதற்கு தீர்வாகாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று மிகவே கமாக பரவுவதன் காரணமாக நாட்டை முடக்கிவிடுமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் தனிநபர்களிடமிருந்தும் அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சுக்கு கோரிக்கைகள்

04

தமிழ் மக்களை குழப்பவே பேரணி

குமாருக்கு மாவை சாட்டை

ஒரு கட்சி எமக்கு எதிராக பிரசாரம் செய் வதாக நினைத்து, தமிழ் மக்களை குழப்புவ தற்காக பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளது என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா

04

தெற்கு அதிவேக வீதியில் விபத்து

இருவர் ஸ்தலத்தில் பலி

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளிவட்ட பாதையின் கடுவெல முதல் கடவத்தை வரையிலான பாதையில் நேற்று அதிகாலை லொறி ஒன்று விபத்துக் குள்ளானதில் இருவர் உயிரிழந்துள் ளதாக பொலிஸார்

04

இளம் எம்.பிக்களுக்கான விருது

2021 சிறந்த எம்.பியாக சாணக்கியன் தெரிவு

சிறந்த இளம் பாராளுமன்ற உறுப்பின ருக்கான 2021ஆம் ஆண்டுக்கான விருது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட

04

விக்கல் வீராச்சாமி

யாழ்ப்பாணத்தில 13 க்கு ஆதரவாயும் எதிராயும் ஏட்டிக்கு போட்டியா ஊர்வலங்கள், ஊடக மாநாடுகள், போராட்டங்கள் எண்டு நடக்குது பாத்தியலே...

பாத்தேன், அதில பெரிய பகிடி என்– னன்டா உதுகல்ல கலந்து கொள்ளுற 90 வீதமானவைக்கு 13, 13 பிளஸ் எண்டு சொன்னா என்னவெண்டே தெரியாதாம்...!!!

இந்தியாவின் 73ஆவது குடியரசு தின நிகழ்வில்..

இந்தியாவின் 73ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய இல்லத்தில் கடந்த 26 ஆம் திகதி காலை நடைபெற்ற தேசிய கொடியேற்ற நிகழ்வில், நாட்டிய கலா மந்திர் மாணவிகள் அதிபர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் நெறியாழ்கையில் வழங்கிய நடனநிகழ்வை காணலாம்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்படும் கம்பளை நகர சபைக்கான உத்தியோகபூர்வ மாத இதழ் 'கங்க சிறிபுர வருண' வெளியீட்டு வைபவம் (28) கம்பளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரியர் பீட பணிப்பாளர் தர்மஸ்ரீ காரியவசம், கம்பளை நகரபிதா சமந்த அருண குமாரவிடம் கையளிப்பதையும் அருகில் செயற்பாட்டுப் பணிப்பாளர் கனிஷ்க விதாரன, நிறுவனத்தின் முகாமைத்துவ ஆசிரியர் சமந்த கருணாரத்ன ஆகியோரையும் படத்தில் காண்க.

23வது கொடகே தேசிய சாகித்திய விருது -2022

23வது கொடகே தேசிய சாகித்திய விருது 2022 விழாவும், கொடகே தேசிய 2020 க்கான தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் பெப்பரவரி 2 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு 07, பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 23ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது 2021க்கான விருதுகளாக மல்லிகை சி.குமாரின் 'வேடத்தனம்' எனும் சிறுகதைத் தொகுப்புக்கும், வெலிமடை ரபீக்கின் 'ஒரு நானும் இன்னும் ஒரு நானும்' எனும் கவிதைத் தொகுப்புக்கும், மொழிபெயர்ப்பு நூலுக்கான விருது சிங்களத்திலிருந்து எம். ரிஷான் ஷரீப் தமிழில் மொழிபெயர்த்த கத்யானா அமரசிங்ஹவின் 'தரணி' எனும் நாவலுக்கும், 'முதல் நூல்' நூலுக்கான விருதினையும் ஆ.லெ.மு. இர்ஷாத்தின் 'ஒளி பூக்கும் இரவு' எனும் ஹைக்கூ தொகுதிக்கும் வழங்கப்படும்.

2020க்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டியில் சிறந்த சிறுதைத் தொகுப்பாக தெரிவு செய்யப்பட்ட பாலரஞ்சனி ஜெயபாலின் 'நெத்திக்காசு' எனும் தொகுப்புக்கும், சிறந்த கவிதைத் தொகுதியாக தெரிவு செய்யப்பட்ட ஜன்ஸி கபூரின் ' பிறப்பிட நிழலிலே' எனும் தொகுப்புக்கும் விருதுகள் வழங்கப்படும், மற்றும் ஆங்கில, சிங்கள நூல்களுக்கும் விருதுகள் வழங்கப்படும்.

சுதார விதிகள்படி நடைபெறும் விழா மட்டுப்படுத்தப்பட்ட அழைப்பாளர்களை கொண்டு இவ்விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலை நிறுவனங்களுக்கிடையிலான நடனம் இசை அரச விருது விழா 2019, மஹரகம இளைஞர் சேவைகள் மன்றத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வவுனியா " நிருத்திய நிஹேதன நுண்கலைக்கல்லூரி" மாணவிகள் அதிபர் திருமதி சூரியயாழினி வீரசிங்கம் நெறியாழ்கையில் வழங்கிய சிறப்பு நடன நிகழ்வை காணலாம்.

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவரும் தேசோதயத்தின் யாழ். மாவட்ட தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் ஜே.பி.யின் பேரனாரின் 06ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் ஆண்டு ஐந்துக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இரா. உதயணன் இலக்கிய விருது விழா 2019

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடாத்தும் இரா. உதயணன் இலக்கிய விருது விழாவும் ஊடகவியலாளர் கே. பொன்னுத்துரையின் அகவை 70 நூல் வெளியீடும். கொழும்புத் தமிழ்ச் சங்கம் விநோதன் மண்டபத்தில் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

முதன்மை விருந்தினராக பேராசிரியர் சபா. ஜெயராசா சிறப்பிக்க, புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் சோ. சந்திரசேகரம், உடுவை எஸ். தில்லைநடராசா, தி.ஞானசேகரன், ஐ. இராசரத்தினம் ஆகியோர் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிப்பார்கள்.

பி. திருஞாவுக்கரசு, வைத்திய கலாநிதி நா. நவகீதன் அ. வைத்திலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், ஊடக விருந்தினர்களாக ஆர். பிரபாகரன், ஆர். சிவராஜா, எஸ் ஸ்ரீகஜன், ரேணுகா பிரபாகரன், தே. செந்தில்வேலவர், வி. தனபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

விருதுபெறும் படைப்பாளிகள் :

சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஞாபகார்த்த விருது நாவல் : 'மூங்கிலாகும் முட்புதர்' திருமதி மைதிலி தயாபரன்.

டாக்டர் யோவான்பிள்ளை சந்திரசேகரம், திருமதி பாக்கியம் சந்திரசேகரம் ஞாபகார்த்த விருது : சிறுகதை 'தஞ்சம்' க. சட்டநாதன், யாழ்ப்பாணம்.

டாக்டர் எம்.என். ஸ்ரீஸ்கந்தராசா ஞாபகார்த்த

விருது : 'தமிழ் வளர்ச்சி இலக்கியம் சங்கமும் தமிழரும்' கலாநிதி தமிழ்மணி அகளங்கன்.

சின்னவட்டர் ஐயம்பிள்ளை ஞாபகார்த்த சிறந்த ஊடகவியலாளர் விருது : சின்னத்துரை சண்முகராஜா.

சின்னத்தம்பி ஸ்ரீஇராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஞாபகார்த்த உயர் இலக்கிய விருது : திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை.

முருகேசுதம்பு, திருமதி தையல் நாயகிதம்பு ஞாபகார்த்த விருது : 'சிறகு' கவிதை வைத்திய கலாநிதி தாஸிம் அகமது.

திரு. திருமதி கிட்னர் பாப்பாத்தியம்மாள் ஞாபகார்த்த இன நல்லுறவு இலக்கிய விருது : ஜீ.ஜீ. சரத் ஆனந்த.

திருமதி தவமணி சிவஞானம் ஞாபகார்த்த வாழ்நாள் சாதனையாளர் விருது : கே.ஆர். டேவிட், யாழ்ப்பாணம்.

சிவகாமிநாதபிள்ளை சிங்காரம் பிள்ளை ஞாபகார்த்த விருது : 'அயலகப் படைப்பு' – கவிதை அ

வைரமுத்து தம்பிராசா ஞாபகார்த்த வாழ்நாள் சாதனையாளர் விருது : இரத்தினசபாபதி மகேந்திரன் (முல்லை அமுதன்).

கலாநிதி தம்பிராசா வசந்தகுமார் ஞாபகார்த்த தேகவியோக நிலையில் சாகித்திய சமத்காரா உயர்விருது : அமரர் திருமதி பத்மாசோமகாந்தன்.

அரசியல் அரங்கம்

அர்ஜுன்

அரசை விமர்சிக்கும் பங்காளிக் கட்சிகள் விலகிச் செல்லட்டும்!

அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்களை ஆக்கபூர்வமான முறையில் அணுகுவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. எனினும், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக இருந்து கொண்டு அரசை எவரும் விமர்சிக்க முடியாது. அவ்வாறு விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து விலகிச் செல்ல வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். எமக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கே: ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, நாடு எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்கு பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒன்றிணையுமாறு அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தார். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: ஜனாதிபதி பாராளுமன்றத்தில் மிக முக்கியமான உரையை ஆற்றினார். பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளைப் போலவே, நாடு எதிர்நோக்கும் தற்போதைய நெருக்கடியை சமாளிக்க அனைவரும் கைகோர்க்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் என்ற ரீதியில், நாடு நிலைபேறான முறையில் முன்னோக்கிச் செல்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்க தங்களை அர்ப்பணிக்க வேண்டியது அவற்றின் பிரதான பொறுப்பாகும்.

கொவிட்19 தொற்றுநோயால் நாடு சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சுப்பர் மார்க்கெட்டுகளில் உணவுகள் கிடைப்பதில்லை. சமீப காலமாக, எரிபொருளைப் பெற இங்கிலாந்தில் பெரும் வாகனங்கள் வரிசையில் நிற்கின்றன. இதேபோல் எல்லா நாடுகளும் சில நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன. வேறுபாடுகள் இன்றி நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால், நாடு எதிர்நோக்கும் தற்போதைய சவால்களை வெற்றி கொள்ள முடியும் என்பதையே ஜனாதிபதி தனது உரையில் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் 13 ஐ.தே.க எம்.பிக்கள் அப்போதைய அரசாங்கத்துடன் கைகோர்த்தது பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு பெரும் பலமாக அமைந்தது. பொறுப்புள்ள அரசியல்வாதிகளும், தாய்நாட்டை நேசிப்பவர்களும் நெருக்கடியான சூழ்நிலையில் ஒன்றிணைந்து செயற்பட முடியும். எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் எப்படி செயல்படுவார்கள் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கே: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் தொடர்பில் சில சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். எவ்வாறாயினும், அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கான உடனடித் திட்டம் எதுவும் தமக்கு இல்லையெனவும், ஆனால் தொடர்ந்தும் முக்கியமான கேள்விகளை எழுப்புவதாகவும் அரசாங்கத்தின் கூட்டுப் பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. இது பற்றி நீங்கள் கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?

பதில்: மைத்திரிபால சிறிசேனவுடன் தொடர்புடைய எவருக்கும் வாக்களிக்க வேண்டாம் என பாராளுமன்றத் தேர்தலின் போது நான் கூறினேன். மைத்திரிபால சிறிசேனவைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் என்பதால்தான் அவ்வாறு தெரிவித்தேன். அவர் ஒரு பாசாங்குத்தனமான மற்றும் சந்தர்ப்பவாத அரசியல்வாதி. அரசாங்கத்தில் இருந்து விலகும் நாளுக்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், தனக்கு விலகும் யோசனை இல்லை என்றும், தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்றும் கூறினார். அவ்வாறு கூறி 24 மணி நேரத்திற்கு முன்னர் அரசிலிருந்து விலகி விட்டார்.

அவர் ஒரு சந்தர்ப்பவாத அரசியல்வாதி என்பதால் அவருடன் நாம் அரசியல் செய்யவோ, அவரை நம்பவோ முடியாது. கடந்த பொதுத் தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் வெற்றி பெற முடிந்தது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நம்பி எங்களால் அரசியல் செய்ய முடியாது. கடந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் கைகோர்த்ததாலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் வெற்றி பெற முடிந்தது

ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமான உண்மையான குற்றவாளிகளை கண்டறிந்து, அவர்கள் அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை!

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு

திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பொதுஜன பெரமுனவுடன் கைகோர்த்ததன் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் ஐ.தே.கவில் இணைந்திருந்தால், அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். அந்த நேரத்திலும் சந்தர்ப்பவாத முடிவை எடுத்தனர். அதனால்தான் தேர்தலுக்கு முன்னதாகவே அந்தச் செய்தியைக் கொடுத்தேன், அவரைப் பற்றி கடுமையாக விமர்சித்தேன். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து விடுபடவும், மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் அரசாங்கத்தை விமர்சிக்க முயற்சிக்கிறார். சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களில் பெரும்பான்மையானவர்கள் இப்போது பொதுஜன பெரமுனவில் உள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தபோது சு.கவுக்கு உதவிய அதன் தீவிர உறுப்பினர்கள் அனைவரும் இன்று பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமையைக் கொண்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய அரசியல் கூட்டணி அமைக்க முயற்சித்தால், மக்கள் அவருடன் கைகோர்க்க மாட்டார்கள். அவர் அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்தவும், தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து விடுபடவும் முயற்சிக்கிறார். அத்தகைய நிலையை நாங்கள் நாட விரும்பவில்லை. அரசாங்கத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லத் தேவையான உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி செய்வது போன்று எவரும் அரசாங்கத்தின் தவறுகளை விமர்சிக்கலாம் மற்றும் சுட்டிக் காட்டலாம். நாங்கள் எப்போதும் ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்கு செவிசாய்ப்பதுடன், தவறுகளை சரிசெய்யத் தயாராக இருக்கின்றோம். ஏறக்குறைய 5.5 மில்லியன் மக்கள் எதிர்க்கட்சிக்கு வாக்களித்துள்ளனர், இதனால் அரசாங்கத்தை விமர்சிக்க அவர்களுக்கு உரிமை உள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கத்தின் கூட்டணி பங்காளியாக இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்க யாராவது முயற்சித்தால், அவ்வாறானவர்கள் முதலில் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும். அப்போது அவர்களின் விமர்சனத்தை ஏற்க தயாராக இருக்கிறோம்.

கே: அரசாங்கத்தின் சில பங்காளிக் கட்சிகள் ஊடகங்களில் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிடும் போது சுசில் பிரேம ஜயந்தவை மாத்திரம் அமைச்சுப் பதவியிலிருந்து அரசு நீக்கியுள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: அரசாங்கத்தில் இருக்கும் போது எவரேனும் அரசாங்கத்தை விமர்சித்தால் அவரை அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கிய பின்னர் அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு நாம் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கோரிக்கை விடுத்தோம். துரதிர்ஷ்டவசமாக அவ்வாறான தீர்மானத்தை அமைச்சரவையில் எடுத்தவுடன் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்ததான் முதலில் ஊடகங்களுக்கு சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டார். அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, பாராளுமன்ற உறுப்பினர் பிரேமஜயந்தவை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி ஜனாதிபதி செயற்பட வேண்டியிருந்தது. எதிர்காலத்திலும் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு ஜனாதிபதி கட்டுப்படுவார் என நான் நினைக்கிறேன்.

கே: அந்நியசெலாவணி கையிருப்பு நெருக்கடியை நாடு எதிர்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டை முன்வைக்கின்றன. இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: இந்த விடயத்தில் உண்மையான பிரச்சினை இருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூட ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் போது உலகம் கொவிட்19 தொற்றுநோயை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நாங்கள் எதிர்பார்த்தபடி தொடங்க முடியவில்லை. மத்திய வங்கி பிணைமுறி மோசடி போன்ற யஹபாலன அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நிலையில், முதலீட்டாளர்கள் எமது நாட்டுக்கு வரத் தயங்கியதுடன் வெளிநாடுகள் கடனையும் வழங்கவில்லை.

இந்தக் கடினமான சூழ்நிலையில், மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். பொருளாதாரத்தில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, கொவிட்19 தொற்றினால் மக்கள் உயிரிழப்பதைத் தடுப்பதில் முக்கிய கவனம் செலுத்தினார். வேறு நாடுகளில் நிலைமை தலைகீழாக இருந்தது. அங்கு இறப்புகள் அதிகரித்து வந்தன. எவ்வாறாயினும், செயல்படுத்தப்பட்ட தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் ஊடாக நம் மக்களின் உயிர்களைக் காக்க முடிந்தது. 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளபடி, நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்புவதைக் காணலாம். இந்நிலை தொடருமானால் இவ்வருட நடுப் பகுதியில் நாட்டை திருப்திகரமான நிலைக்கு கொண்டு வர முடியும் என நம்புகின்றோம்.

(11ஆம் பக்கம் பார்க்க)

உண்மையான பிரச்சினை புதிய அரசியலமைப்பல்ல!

புதிய அரசியலமைப்பு குறித்த கருத்து மீண்டும் எழுந்துள்ளது. பல தசாப்தங்களாக ஒரே தலைப்பு மீண்டும் மீண்டும் தோன்றியுள்ளது. அரசியல்வாதிகளுக்கே அரசியலமைப்பு தேவை. ஒன்றுக்கொன்று மாறுபாடான கருத்துகளைக் கொண்ட அரசியல் கட்சிகள், தங்களுக்கு மாத்திரம் பொருத்தமான அரசியலமைப்புப் பற்றி கனவு காண்கின்றன. கருத்துகளை ஒன்றிணைத்து ஒருமைப்பாட்டிற்கு வரத் தயாரில்லை. கலந்துரையாடி முடிவுக்கு வரலாம். அதுவே ஜனநாயகத்தை மதிக்கும் எம் அனைவருக்கும் இருக்க வேண்டிய உயர்ந்த பண்பாகும்.

கலாசாரம், மதம், ஒழுக்கம் பற்றி மிக உயர்வாக எண்ணும் எம்மிடையே ஒற்றுமை இல்லை. அண்மைக்கால வரலாற்றில் அரசியலமைப்புக்கான கலந்துரையாடல்கள் காலத்தையும் மற்றும் வார்த்தைகளையும் விரயமாக்கிய முயற்சியாகவே முடிவு பெற்றுள்ளன.

மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அது அரசியலமைப்பை பற்றியதல்ல. தற்போதுள்ளது பொருளாதார சிரமங்கள் பற்றிய பிரச்சினைகளாகும். அரசியலமைப்பின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமானால், 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை உள்ள அரசியலமைப்பு மற்றும் திருத்தங்களின் பலனாக நாடு சொர்க்கமாக மாறியிருக்க வேண்டும். அன்றாட வாழ்க்கையை நடத்துவதே மக்களுக்குள்ள பிரச்சினையாகும். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் தட்டுப்பாடாகவுள்ளன. கொவிட் தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினை என்பது இரகசியமான விடயமல்ல. தற்போதுள்ள நிலைமையில் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. நிகழ்காலத்தில் மாத்திரம் அல்ல, எதிர்கால பரம்பரைக்கும் தீர்வு அவசியமாகும். பாதிக்கப்பட்ட இடங்களை சரியாக அறிந்து முடிவெடுக்க வேண்டியது இந்நாட்டு பொதுமக்களின் பிரதிநிதிகளுக்குரிய பொறுப்பாகும்.

பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிபுணர்கள் குழு வொன்று அரசியலமைப்பு கட்டமைப்பு ஒன்றை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அதனை அமைச்சரவையில் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன மற்றும் அவரின் திட்டங்களில் உள்ள எதிர்கால நடவடிக்கை புதிய அரசியலமைப்பு பற்றிய கருத்தை தெரிவிக்க அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாக புரிந்து கொள்ள முடியும்.

உண்மையான நிலைமை அதுவல்ல. மக்களுக்கு தங்களது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அரசியலமைப்புக்குப் பதிலாக மிகவும் திறமையான நபர்களைக் கொண்டு பொருளாதாரத்தை சீர்படுத்துவது முக்கியமாகும். கடுமையான முடிவுகளை எடுத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வருமானத்தை பெறும் வழிகளை ஏற்படுத்துவது அவசியமாகும். கொழும்பு துறைமுக நகர நடைபாதை பற்றி சாதாரண மக்கள் காட்டும் அக்கறை இதற்கு ஒரு உதாரணமாகும். ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு வருகை தந்துள்ளார்கள். கண்டி அதிவேக பாதையின் ஒரு பகுதி திறக்கப்பட்டவுடன் அப்பகுதியை பாவிக்க முன்வந்தவர்களின் எண்ணிக்கை இன்னொரு உதாரணமாகும். ரயில் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த பயணிகள், திணைக்களத்தை தனியார்மயப்படுத்தி சிறந்த சேவையை பெற்றுக் கொடுக்க வற்புறுத்தியுள்ளார்கள். வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் குரலும் எமக்கு முக்கியமானது. அவர்கள் பல தசாப்தங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். புதிய வாழ்க்கையை எதிர்பார்க்கின்றார்கள். பாதை அபிவிருத்தி, புதிய கைத்தொழில் மற்றும் திட்டங்கள் அவர்களின் கோரிக்கைகளாக உள்ளன.

இருப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக வேறான கருத்து வடக்கு, கிழக்கு மக்கள் பிரிவினருக்கு உள்ளது. மக்கள் கருத்துக்களுக்கு பதிலாக எமக்கு தெரிவது இடையிலுள்ள அரசியல்வாதிகளின் குரலாகும். அரசியல்வாதிகள் கேட்பது அதிகாரத்தையும் மற்றும் பதவிகளையும் எனத் தெரிகின்றது. நாட்டில் முன்வைக்கப்படும் யோசனைகளில் தங்களுடைய இருப்பை உறுதி செய்து கொள்வதற்கு பதிலாக சர்வதேசத்தில் கருத்தொன்றை ஏற்படுத்தி நிலைமையை சிக்கலாக்க சில அரசியல் தலைவர்கள் தயார். சர்வதேசத்தில் வேறு நாடுகளிடமிருந்து எமக்கு தீர்வுகள் கிடைக்காது. அனைத்து நாடுகளுமே ஒரே மாதிரியான புதிய சமூக நிலைமைக்கு இரையாகியுள்ளன.

தற்போதுள்ள கட்டமைப்பை ஆராய்ந்தால் தெரியவரும் முக்கிய காரணம் ஒன்றுள்ளது. மக்கள் வேண்டுவது ஒன்று, அரசியல் தலைவர்களின் நோக்கம் வேறொன்று. ஊடகங்களிலும் கூட இந்த இரண்டு பக்கங்கள் குறித்தும் விவாதங்கள், இணைப்புகள் ஏற்படுத்தப்படுவதில்லை. நாம் குழப்பமான ஒரு நிலைமையிலிருந்து இன்னுமொரு குழப்பத்திற்கே பயணிக்கின்றோம். இதன் பலனை நாம் காணக்கூடியதாக உள்ளது. மக்களுக்கு அரசியலே வேண்டாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. அரசியல்வாதிகள் மீது கொண்ட நம்பிக்கை குறைந்துள்ளதாகத் தெரிகிறது. அரசியல்வாதிகளுடன் நெருங்கிய சமூகத் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கும் அந்த நிலைமை ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது.

அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய அரசியலமைப்பை மாத்திரமல்ல தற்போதைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் பொதுவான ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் நீதியையும் நியாயத்தையும் கேள்விக்குள்ளாக்கலாம். தற்போதுள்ள பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு வர்ணமான பதில் இல்லை. நீலம், பச்சை, சிவப்பு அல்லது வேறு எந்தவொரு நிறத்தாலும் தற்போது உலகில் காணப்படும் பொருளாதார கோட்பாட்டுக்கு அப்பால் செல்ல முடியாது.

தமிழில்: வீ.ஆர். வயலட்

தமிழர் தீர்வு விடயத்தில் சில அமைச்சர்களின் கருத்துக்களுக்கு ரவிகுமார் கண்டனம்

ஜனாதிபதி, பிரதமர் நேரடியாக தலையிட புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் கோரிக்கை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இன்றைய அரசாங்கம் தமிழ் மக்களின் நலன் சார்பான செயற்பாடுகளில் உண்மைத் தன்மையுடன் அல்லது இதயசுத்தியுடன் செயல்படுகிறதா எனும் சந்தேகம் எழுந்துள்ளதாக புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அமைச்சர்கள் சிலர் தெரிவித்துவரும் கருத்துக்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை சீர்குலைப்பது போல அமைந்துள்ளமை மிகவும் கவலை தருகின்றது.

குறிப்பாக தமிழ் கட்சிகளின் தலைமைகள் இந்தியாவுடன் தமிழர் நலன் தொடர்பாக பேசுவதை விரும்பாத சில அமைச்சர்கள் தெரிவித்துவரும் கருத்துக்கள் தமிழ் மக்களை வெறுப்படைய வைத்துள்ளது.

இந்த அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் இந்த அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு துணை போகின்றார்கள் அல்லது தெரிந்தும் தெரியாதது போன்று நடந்து கொள்கிறார்களா என்று ஒரு சந்தேகம் எழுந்துள்ளதாகவும் புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அண்மையில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ள கருத்து தமிழ் மக்களை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கும் விடயமாக அமைந்துள்ளது.

தமிழ் கட்சிகளின் தலைமைகளுடன் முரண்பாட்டினை கொண்டிருந்தாலும் அரசாங்கம் என்ற வகையில் தமிழ் மக்களை புண்படுத்தும் வார்த்தை பிரயோகங்களை அல்லது தமிழ் மக்கள் எதிர் பார்த்திருக்கும் தீர்வுகாண முயற்சிகளை அரசாங்கமே சீர் குலைப்பது என்பது மிகவும் வேதனைக்குரிய விடயம் எனவும் ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தின் ஒரு பங்காளி கட்சியாக இருக்கும் நாம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவே இந்த அரசாங்கத்தை நிர்வகிக்கும் கட்சியில் பங்காளிகளாக இருக்கின்றோம்.

அது எப்போது தமிழ் மக்களை பாதிக்கும் ஒரு விடயமாக அமைகின்றதோ அப்போது நாங்கள் எமது பங்காளிக் கட்சிகளின் ஒத்துழைப்பை சந்தேகக் கண்களுடன் அரசை நோக்கி நோக்க வேண்டி உள்ளது.

எனவே அரசாங்கம் என்ற ரீதியில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய எடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்ளாது உண்மையான இதயசுத்தியுடன் தமிழ் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தொழில்முறை வாழ்க்கையில்...

சித்தியடைந்தனர். அதிகாரிகளின் நேர்மை மற்றும் ஒழுக்கத்தின் பெறுமதியை எடுத்துரைத்த ஜனாதிபதி, அது ஏனைய தரத்திலான அதிகாரிகள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் என ஜனாதிபதி இதன் போது மேலும் தெரிவித்தார்.

மக்களின் உயிர்களை...

எதிர்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தடுப்பூசி செயற்திட்டத்தின் ஒரு வருட நிறைவை நினைவு கூரும் வகையில் சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற தேசிய நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

கொரோனா ஒழிப்பு நடவடிக்கை போன்றே தடுப்பூசி செயற்பாட்டிலும் ஜனாதிபதி மிகுந்த ஆத்ம பலத்துடன் செயற்பட்டு வருகிறார். கொரோனா ஒழிப்புக்கு தடுப்பூசியே தீர்வென்ற தூர நோக்குடன் ஜனாதிபதி செயற்பட்டுள்ளார்.

அன்று சிலர் அரசியல் மேடைகளில் இந்த நடவடிக்கையை மலினப்படுத்தும் வகையில் செயற்பட்ட போதும் ஜனாதிபதி பொறுமையாக பதிலளித்து மக்களின் உயிர்களை பாதுகாத்தார்.

தற்போது பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசி செலுத்தும் இலக்கில் தற்போது நாட்டு மக்களுக்கு நூறுவீதம் முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. 94 வீதமானோருக்கு இரண்டாவது தடுப்பூசியும் 92 வீதமான 12 15 வயதான வர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி நடவடிக்கைகளின் ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ளதுடன் முதல் ஐந்து நாடுகளில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது. மக்களுக்கு உயர் பாதுகாப்பை பெற்றுக்கொடுப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது..(ஸ)

தெற்கு அதிவேக...

தெரிவித்துள்ளனர்.

அதிவேக வீதியில் பயணித்த லொறியின் டயர்கள் பழுதடைந்துள்ளதால் அதனை திருத்துவதற்காக வீதியோரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

சாரதியும் உதவியாளரும் இணைந்து லொறியின் டயரை சரிசெய்து கொண்டிருந்த போது,வீதியால் பயணித்த மற்றுமொரு லொறி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் லொ றியின் சாரதி தூக்கி எறியப்பட்டு வீதியில் விழுந்துள்ள நிலையில் லொறியின் இடது இருக்கையில் அமர்ந்திருந்த லொறியின் உரிமையாளர் லொறி தீப்பற்றி எரிந்ததில் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் சாரதியும் உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் போது வாகனம் விபத்துக்குள்ளானால், அது உடனடியாக அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு அறிவித்து மேலதிக திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவர்களின் உதவியை நாட வேண்டும். வாகனத்தை இஷ்டத்திற்கு நிறுத்தி பழுது பார்க்கக் கூடாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதே இடத்தில் வாகனத்தை நிறுத்தி பழுது பார்த்ததாலே இவ்வாறான விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

சபாநாயகருக்கு கொரோனா தொற்றுறுதி ஊழியர்கள் சிலருக்கும் தொற்று

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சில நாட்களாக தமக்கு காய்ச்சல் ஏற்பட்டிருந்ததையடுத்து மேற்கொண்ட என்ரிஜன் பரிசோதனையின் போது தமக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தாம் தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பணிபுரியும் ஊழியர்கள் சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தற்போது ராஜகிரியிலுள்ள கொரோனா தொற்று தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்த சபாநாயகரின் வாசஸ்தலத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் சபாநாயகர் மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன் அவர் நலமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ)

பிம்பங்கள் வழியே ஏற்பாட்டில் நடந்த டொமினிக் ஜீவாவின் முதலாவது நினைவேந்தல் நிகழ்வில் மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்த மேமன்கவியின் டொமினிக் ஜீவாவும் நானும்" எனும் நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து இலக்கியப் பரவலர் ஹாலிம்உமர் பெற்றுக் கொண்டார்.

பொலிஸாருக்கு தகவல்...

ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட 350 கோடி பெறுமதியான போதைப்பொருள் நேற்று சோதனைக்குட்படுத்தப்பட்டது. அதனை சோதனையிட வந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தகவல்களை வழங்கினால் மிகப்பெரிய பணப்பரிசு தயாராக உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் வாங்கிய அதிபர்...

அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, முதலில் 2 இலட்ச ரூபாவை அதிபர் கோரியதாகவும், பின்னர் அந்தத் தொகையை 150,000 ரூபாவாகக் குறைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர் பணத்தை பெற்றுக் கொண்டிருக்கும் போதே தலைமறைவாக இருந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் அதிபரை கைது செய்துள்ளனர்.

குறித்த தகவலை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் நுவான் அசங்க தெரிவித்துள்ளார்.

G.C.E (A/L) பரீட்சை...

6 மாதங்களுக்குப் பின்னர் பெப்ரவரி பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பரீட்சைகள் திணைக்களம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், மாகாண, வலய கல்விப் பணிப் பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய தரப்பினர் பலரது கருத்துக்களைப் பெற்ற பின்னரே பரீட்சைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், பரீட்சை நடாத்துவதற்காக பாடசாலைகள் மற்றும் தனியார் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் குறித்த திகதியில் ஆரம்பமாகி முடிவடையும் எனவும் கபில பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தமுறை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டை இல்லாத பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குச் சென்று பதிவிறக்கம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

2021 சிறந்த எம்.பியாக...

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

Institute of Politics என்ற அமைப்பினால் இந்த விருது இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விருது வழங்கும் நிகழ்வானது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம்பெற்றது.

எனினும், மட்டக்களப்பில் இடம் பெற்ற மக்கள் சந்திப்புகள் மற்றும் வேறு சில முக்கிய காரணங்களினால் இரா.சாணக்கியன் இந்த நிகழ்வில் பங்கேற்றிருக்கவில்லை என அவரது ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த வாரம் Institute of Politics என்ற அமைப்பின் அலுவலகத்தில் வைத்து இரா.சாணக்கியனுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

சீனாவில் மற்றுமொரு...

வுஹான் விஞ்ஞானிகள் குழுவினால், தென்னாபிரிக்காவில் வௌவால்களில் இருந்து இந்த புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் எதிர்காலத்தில் மனிதர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்காலம் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியோகோவ் வைரஸின் போக்குகள், சார்ஸ் கோவ்2 வைரஸைப் போல உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் 3இல் ஒருவரை கொல்லும் கொடிய தன்மை கொண்டது என சீனாவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும், இந்த வைரஸ் மனிதர்களுக்கு ஆபத்தை விளைவிக்கிறதா என்பதைக் கண்டறிய மேலதிக ஆய்வுகள் அவசியமென உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தடுப்பூசிகள் குறித்து தவறான...

உருவாக்கி உள்ளனர். அவர்களை போப் ஆண்டவர் பிரான்சிஸ் நேற்று சந்தித்தார். இதனபோதே அவர் இவ்வாறு கண்டித்துள்ளார்.

இதுபற்றி போப் ஆண்டவர் பிரான்சிஸ் கருத்து தெரிவிக்கையில், "இந்த நாட்களில் தொற்றுக்கு மேலதிகமாக 'இன்போடெமிக்' (தவறான தகவல்கள் நோய் போல பரவுவது) பரவி வருகிறது. இதைப் பார்க்க தவறி விட முடியாது. ஆனால் பயத்தின் அடிப்படையில் யதார்த்தத்தை சிதைப்பது, உலகளாவிய சமூகத்தில் பொய்யான தகவல்கள்பெரும் பிளவுக்கு வழிவகுக்கிறது" என கூறினார்.

போலி செய்திகள் மறுக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ் மக்களை குழப்பவே...

தெரிவித்துள்ளார். அத்தோடு 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வினை தராது என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம் என்றும் கூறியுள்ளார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் கட்சிகள், இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில்,தெளிவுபடுத்தும் ஊடகவியாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

சமஷ்டி கட்டமைப்பில், சுயநிர்ணய தீர்வைத் தான் நாம் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் தெளிவாக சிந்தித்து இந்த முடிவை எடுத்துள்ளோம். ஒரு நாளும் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வினை தராது. அதிலும் நாம் தெளிவாக இருக்கின்றோம்.

நாம் இந்தியாவுக்கு சோரம் போகமாட்டோம். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் அவர்களிடமிருந்து பெறவேண்டியதை பெறுவோம். வடக்கு – கிழக்கு இணைப்பு தொடர்பில் கத்தி கத்தி களைத்துவிட்டோம். அதற்காக அப்படியே இதை விட்டு விட்டோம் என்று நினைக்க வேண்டாம். தமிழர் இருப்புக்கு நாம் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்றார்.

நாட்டை மீண்டும் முடக்குவது...

முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்ததாவது,...

நாட்டை முடக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. எனினும், நாட்டை முடக்குவதற்கு இத்தருணத்தில் எந்தவித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. நாட்டை முடக்குவது பிரச்சினைக்குத் தீர்வாகாது.

நாடு திறந்திருக்கும் போதே, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அ வர் தெரிவித்துள்ளார். கொரோனா வை ரஸ் தொற்றுக்குள்ளாகுவது அதிகரித்தாலும், அந்த நோயாளிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் குறைவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தொற்றாளர்களில் 80 சத வீதமானவர்கள் வீடுகளிலேயே தடுத்துவைத்து சிகிச்சையளிக்க இயலுமாக உள்ளதாகவும் அவர் கூ றினார். எனவே கொரோனா வைரஸ் தொற்று வேகம் அதிகரித்துள்ளமையால் ச கலரும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காணாமல் போனோரது...

போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்டோர் நீண்ட காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்றைய தினம் யாழ்ப்பாணத்திலும் எமது நிகழ்வு நடக்கிறது. இங்கும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நான் முல்லைத்தீவு நிகழ்வில் கலந்து கொண்ட போதும் நிகழ்வு முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை நான் சந்திக்க அழைத்தேன். ஆனால் அவர்கள் சந்திக்க விரும்பவில்லையென்று தெரிவித்தனர்.

எனவே அதிலிருந்து ஒன்றை நான் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் போராட்டம் செய்யவே வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பிரச்சினைக்குரிய தீர்வு தேவையில்லை. அவர்களுக்கு போராட்டத்தின் மூலம் தீர்வு கிடைக்காது.

கடந்த 13 வருடங்களாக போராட்டங்களை நடத்தி அவர்களுக்கு என்ன தான் கிடைத்தது? போராட்டங்களை நடத்துவதன் மூலம் எதையும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது. குறிப்பாக இயக்கங்களில் இருந்தவர்களின் உயிரை மீட்டுத் தருமாறு கூறினால் அதை பெற்றுக் கொடுக்க முடியாது தானே? அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த காணாமலாக்கப்பட்டோருக்கான பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆனால் நான் ஒன்றை கூறிவைக்க விரும்புகின்றேன் நீதியமைச்சர் என்ற ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டுமானால் அது அரசுடன் பேசித் தான் அதற்குரிய தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர போராட்டங்களை நடத்தி தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது.

போராட்டங்களை நடத்துவது அவர்களுடைய ஜனநாயக உரிமை. அதனை மதிக்கின்றேன். அதனை தடுக்க மாட்டேன். ஆனால் போராட்டங்களை நடத்தி அவர்கள் எதனையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

எங்கள் கருத்து...

பாரம்பரிய தமிழ் கட்சியின் இன்றைய பரிதாப நிலை

உண்மைகளை எடுத்துரைப்போருக்கு சமூகத்தில் இடமில்லை என்பது போல தனித்து விடப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் தலைமையை கைப்பற்ற துடிக்கும் பலரது சுழி ஓட்டங்களிலிருந்து தன்னை காப்பாற்றிக் கொண்டு இரு தசாப்தங்களை தொட்டு நிற்கும் நிலையில் மீண்டும் அதே முயற்சியில் தலைமையுடன் கூட இருக்கும் சிலரது சுழி ஓட்டத்திற்கு ஆளாகி இருக்கின்றது.

இந்த நிலையில் அன்று நட்டாற்றில் தனித்து விடப்பட்ட கட்சியை இன்று வரை கட்டிக் காப்பாற்றிவரும் மூத்த அரசியல்வாதி, கிளிநொச்சியை தனி மாவட்டமாக உருவாக மூல காரணமாக இருந்த வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்களை பாராட்ட வேண்டும்.

தள்ளாத வயதிலும் துடிப்பான அரசியல் தூர நோக்கு கொண்ட அவரை விலக்கிவிட்டு கட்சியை கைபற்ற சிலர் முயற்சிப்பது வேதனைக்குரிய விடயம். தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது தமிழ் மக்களது பாரம்பரிய மூத்த ஒரு அரசியல் கட்சி. அதனை ஆனந்தசங்கரி போன்ற சாணக்கிய மூத்த அரசியல் தலைவர் ஒருவரது தலைமையில் முன்னெடுத்துச் செல்வதே ஆரோக்கியமாக இருக்கும்.

அவருக்கு வயதாகிவிட்டது, அவர் கட்சியின் சொத்துக்களை அனுபவிக்கிறார் என்கின்ற பொய்யான கூச்சல்களைத் தவிர்த்து அந்தக் கட்சியை முன்னேற்ற விரும்புவோர் அவருடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். அதை தவிர்த்து அவரை ஒதுக்கி விட்டு கட்சியை கைப் பற்றலாம் என ஒருபோதும் நினைக்க கூடாது.

அவ்வாறு அரசியல் செய்ய விரும்புவோர் தாம் ஒரு புதிய கட்சியை ஆரம்பித்து அதன் மூலம் மக்கள் சேவையை தாராளமாக செய்யலாம், தமிழருக்கான தமக்குத் தெரிந்த அரசியலை முன்னெடுக்கலாம். அதை விடுத்து ஒருவர் கஷ்டப்பட்டு கட்டியெழுப்பி வளர்த்த ஒரு கட்சியை பத்து பதினைந்து பேருடன் சென்று கூச்சல் போட்டு கைப்பற்ற நினைப்பது மடமையான செயல்.

அவ்வாறே இதுவரை காலமும் கட்சியைக் கட்டிக் காத்து வந்த ஆனந்தசங்கரி அவர்கள் புதியதொரு இளம் சமுதாயத்தை தேடி தெரிவு செய்து அவர்களுடன் இணைந்து தனது பயணத்தை முன்னெடுக்க வேண்டும். எதிர்காலத்தில் கட்சி, கட்சியின் செயற்பாடுகளை நம்பிக்கையுடன், அர்ப்பணிப்புடன், ஆர்வத்துடன் முன்னெடுக்கக் கூடிய ஒரு உண்மையான அங்கத்தவர்களை தேர்ந்தெடுத்து பாரம்பரிய கட்சியை மீண்டும் அதே மிடுக்குடன் கட்டியெழுப்ப ஆனந்தசங்கரி அவர்கள் முன்வர வேண்டும்.

இதுவே தமிழ் மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. இல்லையேல் சந்திக்குச் சந்தி தொலைபேசிகளுடன் நிற்கும் சமூக ஊடக வலை ஊடகவியலாளர் அமைப்புகளால் கட்சி மேலும் சிதைவுக்குள்ளாகும் என்பதே உண்மையான யதார்த்தம்.

உணவுப் பாதுகாப்பு – புதிய வருமான வழிகள்

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உட்பட

மேலும் பல்வேறு பயன்களுடன்

வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் பணிகள்

ஆரம்பம்

2022 பெப்ரவரி 03 ஆம் திகதி

காலை 8.52 க்கு

நாடு முழுவதும்

நிதி அமைச்சு

நிலையான அபிவிருத்திக்கு ஒத்துழைக்கும் பெருமிதம்

NLB

தேசிய லொத்தர்

தேசிய லொத்தர் சபை

வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

கொவிட் பெருந்தொற்று உருவாக்கிய நெருக்கடி!

பொருளாதாரப் பின்னடைவிலிருந்து நாட்டை மீட்கும் வகையில் அந்நிய செலாவணியின் வரத்து அதிகரித்திருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மீண்டும் உறுதியளித்துள்ள போதிலும், மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுச் சுமை இன்னும் நீங்க வில்லையென்றே கூற வேண்டும். அந்நிய செலாவணியின் பற்றாக்குறையை சமாளித்து அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் மற்றும் சேவைகளைத் தடையின்றி பேணுவதற்கு அரசாங்கம் போராடி வரும் சூழலில், மின்சார உற்பத்தி தொடர்பான புதிய பிரச்சினை உருவெடுத்துள்ளது.

இந்தப் புதிய நெருக்கடியை சமாளிப் பதற்கு மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே மற்றும் வலு சக்தி அமைச்சர் கம்மன்பில ஆகியோர் ஒருவருடன் ஒருவர் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வதால், பிரச்சினையிலிருந்து மீள்வதற்கு பரஸ்பரம் உதவி செய்கின்றனர். இருந்த போதும், டொலர் பற்றாக்குறையின் காரணமாக உருவான நிலைமையினால் இரு அமைச்சர்களும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியுள்ளது.

நாட்டில் தற்போது வரட்சியான காலநிலை நிலவி வருவதால், நீர்மின் உற்பத்தி சுமார் 25 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன், எதிர்வரும் வாரங்களில் இந்த நிலைமை மோசமடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. நீர்மின் உற்பத்தி குறைந்திருப்பதால், அனல்மின்நிலையங்களைக் கொண்டே மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலைக்கு இலங்கை மின்சார சபை தள்ளப்பட்டுள்ளது. எனினும், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் போதுமான எரிபொருள் இருப்பு மின்சாரசபையிடம் இல்லாமையால் நிலைமை சிக்கலடைந்துள்ளது. எரிபொருள் விநியோகத்துக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நம்பியிருக்கும் நிலைமை தோன்றியுள்ளது.

இருந்த போதும் டொலர் பற்றாக்குறையின் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் இறக்குமதியில் பாதிப்பைச் சந்தித்துள்ளது. அதாவது எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான கடன் பத்திரங்களை திறக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இருப்பில் உள்ள எரிபொருளை வாகனங்களின் தேவை, மின்சார உற்பத்தி, தொழிற்சாலைகள் போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சமாளிக்க வேண்டியேற்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலை 146 ரூபாவிற்குக் கொள்வனவு செய்து இலங்கை மின்சார சபைக்கு அதனை 121 ரூபாவுக்கு

தடையற்ற மின்விநியோகத்தையும், நஞ்சற்ற உணவுகளையும் மக்கள் கோருகின்றனர். ஆனால் சுற்றாடல் மாசடைவதற்கு எதிராக போராட அவர்கள் தயாராக இல்லை!

மானிய விலையில் வழங்க வேண்டியுள்ளது என பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்ஹ தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீட்டின் படி நாட்டின் மாதமொன்றுக்கான எரிபொருள் இறக்குமதிக்கான கட்டணம் 450 மில்லியன் ரூபாவாகும் (ஜனவரிக்குரியது).

வெளிநாட்டு கையிருப்பு விவகாரம் தங்களின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்பதால் அமைச்சர்களான லொக்குகே மற்றும் கம்மன்பில ஆகியோர் அதிகரித்து வரும் மின்சார நெருக்கடியைக் குறைப்பதற்கு தற்காலிகமாக மின்சாரம் மற்றும் எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பதற்கான யோசனைகள் பலவற்றை முன்வைத்து வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் எரிசக்தி அமைச்சர் கம்மன்பில ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், துறைமுகத்திற்கு வந்துள்ள டீசல் ஏற்றுமதிக்கான நிதியை வழங்குமாறு மத்திய வங்கிக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாகத் தெரிவித்தார். மின்வெட்டைத் தவிர்ப்பதற்கான உடனடி ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்கும் விதமாக கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டனர். இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டிய 93 பில்லியன் ரூபா கடனுக்கான பணத்தை வழங்குமாறு ஜனாதிபதி இலங்கை மத்திய வங்கிக்குப் பணிப்புரை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், இந்தியன் ஒயில் நிறுவனத்திடமிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெறுவது தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இயற்கையில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் தோன்றும் நீர்த்தட்டுப்பாடு காரணமாக நீர்மின் உற்பத்தி பாதிக்கப்படுவது காலாகாலம் இடம் பெற்று வருகிறது. இது தற்போதைய அரசாங்க காலத்தில் மாத்திரம் உரியதொரு குறைபாடு அல்ல. இருந்த போதும் டொலர் பற்றாக்குறைக்கு நாடு முகங்கொடுத்திருப்பதால் அனல் மின் உற்பத்திக்கான எரிபொருள் போதிய கையிருப்பில் இல்லாமையே தற்பொழுது நாடு முகங்கொடுத்துள்ள பிரச்சினையாகும்.

இருந்த போதும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தில் புதுப்பிக்கத்தக்க சக்திவலு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. இருந்த போதும் சூரியப்படல்களைப் பயன்படுத்தும் முயற்சிகளுக்குத் தனியார் துறையின் முதலீடுகள் பெரியளவில் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூற வேண்டும்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வருடத்தின் பெரும்பாலான நாட்கள் சூரியஒளி கிடைக்கும் என்பதால் சூரியப் படல்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தியை மேற்கொள்ளலாம். இருந்த போதும் மின்சாரசபையின் பொறியியலாளர்கள் சங்கம் புதுப்பிக்கத்தக்க சக்திவலு விடயத்தில் அதிக அக்கறை காண்பிப்பதாகத் தெரியவில்லை. அனல் மின்உற்பத்தி நிலையங்கள் குறித்தே அவர்கள் பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர். அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்களிலிருந்தும் ஒத்துழைப்பு போதியளவு கிடைக்கவில்லை. இதற்கு சிறந்த உதாரணமாக சேதன உரப்பயன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் உரிய பலனை அளிக்காமல் இருப்பதைக் குறிப்பிடலாம். அத்திட்டத்துக்கு சம்பந்தப்பட்ட தரப்புக்களின் ஒத்துழைப்பு இல்லாததையும் குறிப்பிடலாம்.

விவசாயம் மற்றும் மின் உற்பத்தியை சுற்றுச் சூழலுக்கு உகந்ததாக மாற்றுவது என்பது உயர்வான செயலாகும். விவசாயத்திற்கு வேளாண் இரசாயனங்கள் இருப்பது போல், மின் உற்பத்திக்கும் நிலக்கரி உள்ளது. தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் இல்லாத உணவை எல்லோரும் விரும்புகிறார்கள், ஆனால் விவசாய இரசாயனங்கள் மீதான தடைகளால் உணவுப் பற்றாக்குறையை எதிர்த்துப் போராட யாரும் தயாராக இல்லை. அதேபோல, சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் நிலக்கரி எரிப்பதை யாரும் விரும்புவதில்லை, ஆனால் அனைவருக்கும் தடையில்லா மின்சாரம் தேவை.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இந்த இரண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு நடைமுறை அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை. இவ்வாறான நிலையில் தற்போது தோன்றியுள்ள நிலைமைய எதிர்க் கட்சியினர் தமது அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்துகின்றனர் என்பதுதான் உண்மை.

பி.ஹர்ஷன்...

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாமல் சமாளிக்கும் தீவிர முயற்சிகளில் அரசாங்கம்!

எல்லையில் பாதுகாப்பை பலப்படுத்தும் இந்தியா!

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாகவே எல்லையில் தொடர்ந்து மோதல் போக்கு நிலவி வருகிறது. இரு நாட்டு வீரர்களும் எல்லையில் வீரர்களைக் குவித்து வருகின்றனர். அதிலும் கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு நிலைமை மேலும் மோசமடைந்தது. இதனால் எல்லையில் பதற்றமான சூழல் தொடர்கின்றது.

ஆனாலும் மற்றொரு புறத்தில், எல்லையில் மீண்டும் அமைதியான சூழலை உருவாக்க இரு தரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே பல கட்டங்களாகப் பேச்சுவார்த்தை நடந்துள்ள போதிலும், அமைதியான சூழல் திரும்பவில்லை. இந்தப் பேச்சுவார்த்தைகளில் எந்தவொரு சுமுகமான முடிவும் எட்டப்படவில்லை.

எல்லைப் பகுதிகளில் சீனா கட்டுமானங்களை ஏற்படுத்தி வருகிறது. சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்ட அக்சாய் சின் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானங்கள், ஸ்ரீஜாப் வளாகத்தின் கிழக்கே பாங்கோங் த்சோவின் மீது கட்டப்பட்டு வரும் பாலம் குறித்து இந்திய இராணுவம் வெளிப்படையாகக் கேள்வி எழுப்பியது. இருப்பினும் இதில் சீனா தரப்பில் இருந்து எந்தவொரு முறையான பதிலும் கிடைக்கவில்லை. எல்லைப் பகுதிகளில் சீனா கட்டுமானங்களை ஏற்படுத்தி வருவதாகவும், சில பகுதிகளில் ஒட்டுமொத்த கிராமத்தையே உருவாக்கியுள்ளதாகவும் தகவல் வெளியானது. இது தொடர்பாக எதிர்க் கட்சிகளும் மிகக் கடுமையாக விமர்சித்திருந்தன. இருப்பினும், சீனா மேற்கொண்டு வரும் கட்டுமானங்கள் என்பது இந்தியாவுக்கு உட்பட்ட பகுதிகளை இந்தோ_ சீனா போர் சமயத்தில் சீனா ஆக்கிரமித்தவை ஆகும். இது சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுஒருபுறமிருக்க, இமயமலை பகுதியில் சர்ச்சைக்குரிய தங்கள் எல்லைப் பகுதியில் ஒருவரை ஒருவர் மிஞ்சும் அளவுக்கு கட்டுமானங்களை உருவாக்குவதில் இந்தியாவும் சீனாவும் போட்டியிட்டுக் கொண்டுள்ளன. இந்தியாவின் அதிக உயரமான இடத்தில் உள்ள விமானத் தளத்திற்குச் செல்ல புதிய வீதி அமைக்கப்பட்டதுதான், கடந்த வருடம் ஜூன் மாதம் சீன இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலுக்குக் காரணம் என்று சொல்லப் படுகிறது. அந்த மோதலில் இந்திய வீரர்கள் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர்.

டார்புக் ஷியோக் தௌலத் பெக் ஓல்டி (DSDBO) வீதி 255 கிலோ மீற்றர் (140 மைல்) நீளம் கொண்டது. மலைப் பகுதிகள் வழியாக அமைந்துள்ள இந்த வீதி கடல்மட்டத்தில் இருந்து 5000 மீற்றர் உயரத்தில் லடாக் பகுதியில் உள்ளது. சுமார் இரண்டு தசாப்த கால பணிகளுக்குப் பிறகு கடந்த ஆண்டில் இந்தப் பணி நிறைவு பெற்றது. இந்த வீதி மூலம் மோதல் ஏற்படும் காலத்தில் இராணுவத்தினரையும், அவர்களுக்குத் தேவையான சாதனங்கள், தளவாடங்களையும் அங்கு விரைவாகக் கொண்டு போய் சேர்க்க முடியும்.

தங்களுக்கு இடையிலான 3,500 கிலோ மீற்றர் நீளமான எல்லை குறித்து இரு நாடுகளுக்கு இடையில் ஒருபோதும் ஒருமித்த கருத்து இருந்தது கிடையாது. கரடுமுரடான, வாழத் தகுதியற்ற பகுதிகளில் பல இடங்களில், உலகின் மிகப் பெரிய இந்த இரு நாடுகளின் இராணுவத்தினரும் நேருக்கு நேர் எதிர் கொண்டு நிற்கிறார்கள்.

இரு நாடுகளையும் பிரிக்கும் மெய்யான கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியை (எல்.ஏ.சி) ஒட்டி வீதிகள், ரயில் பாதைகள், விமானத் தளங்களை உருவாக்குவதில் இந்தியாவும், சீனாவும் நிறைய செலவு செய்திருக்கின்றன. அந்தப் பகுதியில் நவீன இராணுவத் தளவாட வசதிகளையும் அவை ஏற்படுத்தியுள்ளன.

DSDBO சாலை உள்பட இந்தியாவின் சமீபத்திய கட்டமைப்புப் பணிகள் சீனாவுக்கு கோபத்தை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் பல ஆண்டுகளாக சீனா தனது எல்லையில் கட்டமைப்புப் பணிகளை செய்து வருகிறது. தங்களுக்கு சாதகமான நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, திட்டமிடப்பட்டு இந்த கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக இரு தரப்புகளுமே கருதுகின்றன. ஒரு பக்கத்தில் பெரிய ஒரு உள்கட்டமைப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டால், மறு பக்கத்தில் கோபம் எழும் காரணத்தால் பதற்றம் உருவாகி வருகிறது.

தௌலத் பெக் ஓல்டியில் நீண்ட காலமாகவே இந்திய இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. விமானத் தளம் மறு செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு, வீதிப் பணிகளை முடிப்பதற்கு முன்பு வரையில், அங்கிருக்கும் வீரர்களுக்கு ஹெலிகொப்டர் மூலமாக, விண்ணில் இருந்து கீழே இறக்குவதன் மூலம் மட்டுமே அத்தியாவசிய தேவைகள் அளிக்கப்பட்டு வந்தன. அங்கிருந்து எதையும் அகற்ற முடியாது என்பதால்,'தளவாடங்களின் கல்லறையாக' அந்த விமானத் தளம் இருந்து வந்தது.

எல்லைப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடிகளை, எல்லைக்கு உள்புறத்தில் உள்ள இராணுவத்தினருக்கான விநியோக நிலையங்களுடன் இணைப்பதற்கான கூடுதல் வீதிகள் மற்றும் பாலங்கள் இப்போது உருவாக்கப்படுகின்றன. எனவே, ரோந்துப் பணியில் இருக்கும் இந்திய இராணுவத்தினர் இன்னும் முன்னேறிச் சென்று பணியில் ஈடுபட முடியும். சாதனங்களை முன்னே கொண்டு செல்ல முடியும்.

உலகின் மிக உயரமான தௌலத் பெக் ஓல்டி விமானதளத்தில் பெரிய விமானங்களை இந்தியா தரையிறக்கி வைத்துள்ளது. மோதல்கள் நடந்தபோதிலும், தன்னுடைய கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டிருப்போம் என இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது. லடாக், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் பகுதியில் சீன எல்லையை ஒட்டி பகுதிகளில் வீதிகளை உருவாக்க, ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்து தொழிலாளர்களை அழைத்துச் செல்கிறது இந்தியா.

பல ஆண்டுகளாக கட்டமைப்பு வசதிகள் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையில், சீனாவுக்குச் சாதகமாக உள்ள வசதிகளுக்கு இணையாக தன்னுடைய வசதிகளையும் பெருக்கிக் கொள்வதற்கு இந்தியா தீவிரமாக முயற்சித்து வருகிறது. அந்தப் பிராந்தியத்தில் பெருமளவில் வீதி மற்றும் ரயில்வே கட்டமைப்பு பணிகளை இந்தியா தொடங்கியுள்ளது.

உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த 73 வீதிகள் மற்றும் 125 பாலங்கள் உருவாக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் பணிகள் வேகமாக நடைபெறவில்லை. இதுவரையில் 35 வீதிகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. உத்தர காண்ட் மாநிலத்தில் காட்டிபகர் லிபுலேக் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் டாம்ப்பிங் யாங்க்ட்ஜே வீதிகள் அவற்றில் முக்கிய மானவையாக உள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் இன்னும் 11 வீதிகளின் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவின் எல்லையை ஒட்டி அமையும் இந்தப் பாதைகள், கனரக இராணுவத் தளவாடங்களை அங்கு கொண்டு செல்ல இந்திய இராணுவத்துக்கு உதவிகரமாக இருக்கும்.

விமானப் போக்குவரத்து வசதிகளைப் பொறுத்த வரையில், மெய்யான கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டிய பகுதிகளில் இந்தியாவுக்கு 25 விமான தளங்கள் உள்ளன. இப்போது நவீன தரையிறங்கல் தளங்களை விரிவுபடுத்துவதில் அண்மைக் காலமாக இந்தியா கவனம் செலுத்தி வருகிறது.

விமானப் படை பலத்தைப் பொறுத்த வரையில், இந்தியாவுக்கு ஓரளவுக்கு சாதகமான நிலைமை இருப்பதாக இராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் தங்களுடைய சிறந்த போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி, இந்திய எல்லைப் பகுதிக்கு அருகே எவ்வளவு விரைவாக தங்கள் இராணுவத்தினரை குவிக்க முடிந்தது என்பதை சீன அரசு ஊடகம் மேன்மைப்படுத்தி செய்தி வெளியிட்டிருந்தது.

எல்லையின் இருபுறங்களிலும் பெருமளவில் புதிய வீதிகள், ரயில் வழித் தடங்கள், பாலங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனவே எதிர்காலத்தில் இந்தியா மற்றும் சீன இராணுவத்தினருக்கு இடையில் நிறைய மோதல்கள் உருவாகும் ஆபத்து இருக்கிறது.

சீனாவின் அச்சுறுத்தலை முறியடிக்க இராணுவ தளவாடங்கள் சகிதம் படையினர் குவிப்பு!

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தரப்புகளின் மத்தியில் தற்பொழுது அதிகம் பேசப்படும் விடயமாக 13வது திருத்தச் சட்டம் அமைந்துள்ளது. அதாவது, 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாக உள்ளடக்கப்பட்ட மாகாண சபை முறையை வலியுறுத்தும் 13வது திருத்தம் பற்றியே தமிழ் அரசியல் கட்சிகள் அதிக கவனம் செலுத்தியுள்ளன.

நல்லிணக்கப்பாட்டுக்கு வர முடியாத நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள்!

வார இறுதி

அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

13 ஆவது திருத்தத்தை ஆதரிப்பதில் ஒன்றுடனொன்று மாறுபட்ட நிலைப்பாட்டில்!

நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் கையெழுத்திடுவதை சில கட்சிகள் தவிர்த்தது ஏன்?

மாகாண சபையில் போட்டியிட்டவர்கள் இன்று 13 ஆவது திருத்தத்தையே எதிர்க்கும் விசித்திரம்; 13 ஆவது திருத்தத்தை நிராகரித்தவர்கள் இன்று அதனை அமுல்படுத்துமாறு இந்தியாவை கோருகின்ற புதுமை!

1987ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நோக்கில் அரசியலமைப்புக்கு 13 வது திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்தியாவின் அழுத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கு இலங்கையின் மத்திய அரசு தலையசைத்தாலும், முழுமையான அதிகாரங்கள் எதுவும் இதுவரை பகிரப்படவில்லை. குறிப்பாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் உள்ளிட்ட அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளிக்கவில்லை என்பது நாம் அனைவரும் நன்கு அறிந்த விடயம்.

அதேநேரம், 13வது திருத்தம் தொடர்பில் ஆரம்பம் தொட்டு தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்துள்ளன. ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றிருந்த காலப் பகுதியில் எல்.ரி.ரி.ஈ உள்ளிட்ட ஆயுதக் குழுக்கள் மாகாணசபை முறையில் பெரிதாக நாட்டம் கொண்டிருக்கவில்லை. ஆயுதக் குழுக்கள் மாத்திரமன்றி அப்போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளும் அதில் பெரிதாக அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதே உண்மை.

இருந்தபோதும் பின்னைய நாட்களில் 13வது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதில் அவை ஆர்வம் காட்டியிருந்தன. இவ்வாறான பின்னணியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பேச்சுக்கள் எழுகின்றன ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 13வது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டது போன்று மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு விடயம் அவ்வப்போது தலைதூக்கிச் செல்லும். குறிப்பாக தமிழ்க் கட்சிகளின் ஆதரவை பிரதான

கட்சிகள் கோருகின்ற அநேகமான சந்தர்ப்பங்களில், அதிகாரப்பகிர்வு பற்றிய ஏதாவது ஒரு விடயம் உள்ளடங்கியிருக்கும்.

இருந்தாலும் மற்றுமொரு தேர்தல் வரும் வரை இதுபற்றி எவருக்கும் அக்கறை இருக்காது. மறுபக்கத்தில் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற விடயத்தில் இந்தியா உறுதியாக இருந்து வந்துள்ளது. புதுடில்லியில் ஆட்சிக்கு வரும் இந்திய மத்திய அரசாங்கம் எதுவாக இருந்தாலும் இது விடயத்தில் மாற்றுக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை. பாரதீய ஜனதா கட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸாக இருந்தாலும் சரி அவர்கள் 13வது திருத்தத்தை அமுல்படுத்துமாறு தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு வலியுறுத்தியே வந்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்குமாறு இந்தியாவை கோருகின்ற புதுமை தற்பொழுது அரங்கேறியுள்ளது.

இது விடயத்தில் இந்தியப் பிரதமருக்கு கடிதமொன்றைத் தயாரித்து அனுப்பி வைத்துள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசியக் கட்சி ஆகிய கட்சிகளே இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளன. பிரதமர் மோடிக்கு எழுதப்பட்டுள்ள இந்தக் கோரிக்கைக் கடிதம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

'பதின்மூன்றாம் சட்டத் திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், 1987 முதல் அரசாங்கத்தின் சகல தரப்புகளாலும் தெளிவாக மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகளை அமுல்படுத்துதல். அத்துடன் தமிழ் பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தும் வகையில் தம் வரலாற்று ரீதியான வாழ்விடங்களில் கண்ணியத்துடனும், சுயகௌரவத்துடனும், அமைதியாகவும் பாதுகாப்பாகவும், ஒன்றிணைந்த, பிரிக்கப்படாத நாட்டிற்குள் ஏற்படுத்தப்படும் அமைப்பில் வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும்' என்ற கோரிக்கை இந்தக் கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் கையொப்பம் இட்டுள்ளவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளே அதிகமாகக் காணப்படுகின்றன. பொதுவான ஆவணமொன்று தயாரிக்கப்பட்டிருந்தாலும் கூட்டமைப்பினருக்கிடையில் இது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதை நன்கு தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை. அதேநேரம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் முதல் கூட்டங்களில் பங்கெடுத்திருந்தனர். அதன் பின்னர் கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்திலும் அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இருந்தபோதும் அவர்கள் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பும் ஆவணத்தில் கைச்சாத்திடுவதிலிருந்து விலகிக் கொண்டனர். இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கிடையிலேயே மாறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான எம்.ஏ.சுமந்திரன் கூட இந்த முயற்சிகளை ஆரம்பத்தில் விமர்சித்திருந்தார். '13வது திருத்தத்துடன் நிற்பதாயின் அதன் பின்னர் ஏன் இதுவரை பல உயிர்களை இழந்துள்ளோம். இப்பொழுதுபோய் 13வது திருத்தத்தை அமுல்படுத்த இந்தியாவிடம் கோரி கூட்டம் வைக்கின்றனர். 13வது திருத்தம் அடிப்படையிலேயே பழுதுபட்டது, இதனைத் திருத்த முடியாது என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார். இப்படியான சூழ்நிலையில் நாம் சென்று 13வது திருத்தத்தைத் தா என்று கேட்பதா? 13வது திருத்தத்தில் முக்கியமான நல்ல விடயங்கள் இருக்கின்றன. இல்லையென்று நான் கூறவில்லை. மாகாணம் ஒரு அலகாக வந்தது, வடக்கு,கிழக்கை ஒரு அலகாக இயக்கக் கூடிய சாத்தியம், பொலிஸ் அதிகாரங்கள் ஓரளவுக்குக் கொடுக்கப்பட்டது. 13இல் உள்ள நல்ல விடயங்களை வீசுமாறு கூறவில்லை. அதற்காக 13 தான் எங்களது அபிலாசை என தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டதில்லை. இதற்கும் அப்பால் செல்ல வேண்டும் என இந்த அரசாங்கமே கூறியிருக்கும் நிலையில், நாங்களாகவே போய் இந்தப் படுகுழிக்குள் விழவேண்டிய தேவை இல்லை' என சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது கூறியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் இந்தியாவின் அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற இந்த முயற்சிக்கு வித்திட்ட ரெலோ ஆரம்பத்தில் தயாரித்திருந்த பொது ஆவணத்துக்கு ஏனைய கட்சிகள் இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. இதனால் இந்த ஆவணத்தை முழுமையாக மாற்றும் நிலை ஏற்பட்டது. பின்னர் நடைபெற்ற நீண்ட கலந்துரையாடல்களையடுத்தே தற்பொழுது ஆவணமொன்று தயாரிக்கப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேநேரம், இந்த விடயத்தில் ஆரம்பம் முதல் பங்கெடுக்காத கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இம்முயற்சியை விமர்சிக்கத் தொடங்கியுள்ளது.

அதாவது புலிகளே ஏற்றுக் கொள்ளாத 13வது திருத்தத்தை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்ளும் இவர்கள் எவ்வாறு முழுமையாக அமுல்படுத்துமாறு கோருவார்கள் என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கேள்வியெழுப்பியுள்ளது. கேள்வியெழுப்பியது மாத்திரமன்றி இதற்கு எதிரான பிரசாரத்திலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இலங்கை மீது சீனா கொண்டிருக்கும் ஆதிக்கத்தை சமாளிக்கும் இந்தியாவின் காய் நகர்த்தல்களில் ஒன்றாக இந்த முயற்சி அமைந்துள்ளது.

இதில் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இருப்பதாகவும், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குகின்றோம் எனக் கூறி பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்யக் கூடிய சமாளிப்பொன்றை வழங்கும் திரைமறைவிலான சதி இருப்பதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். 13வது திருத்தத்தை தும்புத்தடியால் கூடத் தொட மாட்டோம் என இரா.சம்பந்தன் முன்னொரு தடவை கூறியிருந்தார். தற்பொழுது 13வது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என இந்தியாவுக்கு கடிதம் அனுப்புகின்றனர். இதில் மக்களை ஏமாற்றும் சதி உள்ளது என கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சி விமர்சித்து வருகிறது.

மறுபக்கத்தில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பதைக் கூட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் விரும்பவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறியுள்ளது. மாகாணசபை முறைமைய அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் ஏன் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்? கஜேந்திரகுமார் பொன்னம் பலம் முதலமைச்சர் பதவிக்குக் கூடப் போட்டியிட்டவர். இவ்வாறான நிலையில் அவர்கள் தற்பொழுது இரட்டை வேடம் போடுகின்றனர் என அவர்கள் மீது ஏனைய கட்சிகள் விமர்சனங்களை முன்வைத்துள்ளன. அரசியல் கட்சிகள் தமது அரசியல் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு அவ்வப்போது இவ்வாறான வித்தைகளைக் காண்பிப்பது சாதாரணமாகும்.

உண்மையில், பூகோள அமைவிடம் சார்ந்து எப்பொழுதும் வெளி நாடுகளின் கண்களை உறுத்தும் வகையில் இலங்கை காணப்பட்டு வந்துள்ளது. தற்பொழுது காணப்படும் பொருளாதார பின்னடைவு என்ற விடயம் ஏனைய நாடுகளை இலங்கை மீது மேலும் தாக்கம் செலுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. இலங்கையுடன் நட்புப் பாராட்டுவதற்கும் உதவிகளை மேற்கொள்வதற்கும் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் போட்டிநிலையொன்று காணப்படுகின்றது.

இதற்கிடையில் யுகதனவி அனல் மின்நிலைய விவகாரத்தில் அமெரிக்காவும் இணைந்து கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் 13வது திருத்தம் தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு திடீர் ஞானோதயம் ஏற்பட்டது ஏன் என்றதொரு கேள்வியும் இங்கு எழுத்தான் செய்கிறது.

பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பொதுவாகவே அரசியல்வாதிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கும் நிலையில், மாகாணசபைத் தேர்தலொன்று வந்தால் அதனை எதிர்கொள்வதற்கான தளத்தை உருவாக்கும் நோக்கில் 13வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு என்ற விடயம் முன்வைக்கப்பட்டிருக்கலாம். தமிழ்க் கட்சிகள் மற்றும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து செயற்படுவதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடம் இல்லையென்றாலும் இந்த இணைவு உண்மையில் மக்களின் நலனுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர வெறும் தேர்தலுக்கான கூட்டாகவோ அல்லது வாக்கு வங்கிகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு உத்தியாகவோ இருக்க முடியாது.

தீப் பிடித்து எரியும் பெருந்தோட்ட காடுகள்

மனநோய் பிடித்த மனிதர்களின் குரூர விளையாட்டு!

நாட்டில் மழைகாலம் ஓய்ந்து கோடை காலம் ஆரம்பித்துள்ளது. கடந்த மூன்று வாரங்களாகவே கடும் வெயில்வுடனான காலநிலை நில வுகிறது. குறுகிய இந்த கோடை காலத் தில் நாட்டில் உள்ள நீர்தேக்கங்களின் நீர் மட்டம் கணிசமான அளவு குறைவடைந்து உள்ளது.

நாட்டின் தேவைக்கு ஏற்ப நீர் மின் சாரத்தை உற்பத்தி செய்யும் அளவிக்கு நீர்தேக்கங்களில் நீர் மட்டம் இல்லை. ஆறுகள் குளங்கள் குட்டைகளிள் நீர் குறை வடைந்து உள்ளது. பலபகுதிகளில் குடிநீ ருக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

எமது நாடு நீர்வளமிக்க செழிப்பான நாடு என்பது எமக்கு மட்டும் அல்ல, உலகுக்கே நன்கு தெரியும். ஆனால் வெகு வேகமாக இந்த நிலையில் இருந்து நாடு பின்நோக்கிச் செல்ல முயல்வதும் தெரிகிறது.

விவசாயத்தில் தன்னிறைவு கொண்டி ருந்த எமது நாட்டை ஆண்ட பண்டைய மன்னர்களுக்கு நீர்வளத்தின் அவசியம் தெரிந்திருந்ததால்தான் பல குளங்களை அமைத்து நீரை சேகரித்தனர்.இலங்கை யில் முதல் முதலாக குளம் கட்டியது பண் டுகாபயன் என மஹாவம்சம் கூறுகின்றது. இவர் வழியில் தொடர்தும் பல மன்னர்கள் குளங்களைகட்டியுள்ளனர் வசபமன்னன் 11 குளங்களை காட்டினார். மகாசேனன் 1000குளங்களை அமைத்ததாக சொல்லப் படுகிறது. முதலாம் பராகிரமபாகு 163 குளங்களை அமைத்தாராம்.

எமது முன்னோர்கள் மரங்களுக்கும் மழைக்கும் இடையிலான தொடர்பை நன்கு அறிந்து வைத்திருந்தனர். மழையை மாரி என்று அழைப்பார்கள். மழைக்கான கடவுள் என்பதே மாரியம்மனாயிற்று" குறித்த காலத்தில் மழை பெய்யாவிட்டால் பல கிலோமீட்டருக்கு அப்பால் இருக் கும் நீர் ஊற்றில் இருந்து குடங்களில் நீரை

ஆர். நவராஜா ...✍

எடுத்து வந்து மாரிதாயே மழை பொழிய மாரிதாயே மழை பொழிய என குலவை போட்டுக்கொண்டு வீதி வழியே வந்து அம் மனுக்கு நீர் ஊற்றும் வழக்கம் பெருந் தோட்டப் பெண்களிடம் உள்ளது.

தமிழ் நாட்டில் 1800களில் தொடர்ச் சியாக பலவருடங்கள் வானம் பொய்த் தமையால் விவசாயம் செய்யமுடியாது. பஞ்சத்தில் சிக்கிய விவசாயிகளே கண்டிச் சீமைக்கு தோட்டத்தொழில் செய்ய வந்த னர். அவர்கள் ஏற்கனவே விவசாயிகளாக இருந்ததால் காடுகளின் அவசியம் அவர்க ளுக்கு புரிந்திருந்தது. அன்றைய பொழுது களில் இந்த அளவுக்கு மலையகக் காடுகள் அல்லது தோட்டங்களில் தீப் பற்றிக் கொண் டதில்லை.

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் தீப் பிடிப்பது இப்போது வாடிக்கையாகி உள்ளது. இவ்வாறு பற்றிக் கொள்ளும் கானக அல்லது பற்றைகாடுகளிலேயே குடிநீர் ஊற் றெடுக்கிறது. இதை கவனத்தில் கொள்ளா மல் சிலர் விலங்குகளை வேட்டையாடுவ தற்காக திட்டமிட்ட ரீதியாக காடுகளுக்கு தீயிடுகின்றனர்.காடுகள் தீக்கிரையாகும் போது உணவு மற்றும் நீர் தேடி மனிதனின் வாழ்விடம் நோக்கி காட்டு விலங்குகள் வரத்தானே செய்யும்! உணவுக்காக வரும் விலங்குகளை இலகுவாக வேட்டை யாடுகின்றனர். எவ்வளவு கொடுமையான விஷயம்!

மாட்டுக்கு புல் அறுக்கும் ஒருசாரார் காய்ந்து சருகாகிவிட்ட புல் தரைகளுக்கும் மானாபற்றைகாடுகளுக்கும் தீ மூட்டுகின்ற னர் இவை எரிந்து சாம்பலாகியதும் அவ் வெளியில் பசும்புல் செழித்து வளரும். பு

திய புற்கள் மாட்டுக்கு சிறந்த தீவன மாக அமையும் என்பதற்காக தீயிடுவது மற்றொரு குரூரம்!

சிலர் பொழுது போக்குக்காகவும் விளை யாட்டாகவும் தீ வைத்து ரசிக்கின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் குடிநீர் விநியோக குழாய்கள் எரிந்து சாம்பலாகிய சந்தர்ப்பங்களும் ஏராளம் உண்டு. விவ சாயத்துக்காக குழாய்கள் மூலம் மலைபாங் கான பகுதிகளில் இருந்து நீரெடுத்துவரும் குழாய்களும் எரிந்து சாம்பலாகின்றன.

போட்டி பொறாமை குறுகிய சிந்தணை கொடூர மனப்பாங்கு என்பனவும் காடுக ளுக்கு தீமூட்ட காரணமாக அமைகின்றது. விஷமிகள் காடுகளுக்கு தீயை மூட்டி அது எரிவதை பார்த்து இரசிக்கின்றனர் இது ஒரு விலங்கு குணம். விலங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்பதற்கு இது போன்ற கொடூர குணங்கள் சான்றாக அமை கின்றன. காடுகளை அழிப்பது தன்னைத் தானே அழிப்பதற்கு சமன் என்பதை நம்மவர்கள் புரிந்து கொள்ளாதவரை காடுகள் எரியத்தான் செய்யும்!

(படங்கள் : தெல்தொட்டை தினகரன் நிருபர்)

பெருந்தோட்ட குடும்பங்களுக்கு 7 பேர்ச் காணி

உடனடித் தேவை காணி உரிமையா வீடமைப்புத் திட்டமா ?

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 7 பேர்ச் காணியை வழங்க ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மனித்துள்ளதாக அமைச்சர் மஹிந்தானத்த அளுத்கமகே அண் மையில் தெரிவித்திருந்தார். அரசாங்கம் வழங் கும் இக்காணியில் தோட்ட மக்கள் முறையான வீடுகளை தாமே நிர்மாணித்துக் கொள்ளலாம் எனவும் அவர் கூறிவைத்தார்.

இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன. 7 பேர்ச் காணியை வழங்குவதன் மூலம் பெருந் தோட்டத்துக்கான தனிவீட்டுத் திட்டம் கைவிடப்ப டுமா? இது முதலாவது கேள்வி. அப்படி காணி விநியோகம் இடம்பெறும் பட்சத்தில் தற்போது தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங் களுக்கு மட்டுமே எனும் நிலைப்பாடு எடுக் கப்படுமா? அதற்கான வாய்ப்புகளே தற்போ தைய நிலையில் அதிகமாக காணப்படுவதாக மலையக தொழிற்சங்க வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில் கலந்த கொண்டு பேசிய இரா ஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை, வீடமைப்பு திட்டம் பற்றிய சில கருத்துக்களைச் சொல்லியிருந்தார். மலையக மக்களுக்கு வீட மைப்பு முக்கியமில்லை. காணி உரிமையே அவசியம். 150 வருடங்களாக வாழ்பவர்கள் காணி உரிமை இல்லாமல் இருக்கின்றனர். தவிர சொந்தக் காணியில் வீடுகளைக் கட்ட வேண்டும் என்னும் எதிர்பார்ப்பில் பெருந் தோட்ட மக்கள் இருக்கின்றார்கள். காணியி ருந்தால் வீடுகளைக் கட்டிக்கொள்ள முடி யுமானவர்கள் மலையகத்தில் இருக்கவே செய்கிறார்கள். எனவே இம்மக்களுக்கு வீடு வழங்குவதை விட காணி வழங்கவே நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆக வீடுகளுக்குப் பதிலாக காணி வழங் குவதே பொருத்தமானது என்னும் நிலைப் பாட்டை கொண்டுள்ள இ.தொ.காவின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டி ருக்கலாம் என்றே தோன்றுகிறது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க ஆட்சிக் காலத்தில் 7 பேர்ச் காணி வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டது. அன்று பிரதிய மைச்சராக இருந்த அமரர் சந்திரசேகரன் உடனே குரல் எழுப்பினார். 7 பேர்ச் காணி வழங்குவது வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஆனால் வெறும் கை முழம் போடாது. காணி கிடைத்தாலும் அதில் தமக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள திராணியற்ற நிலையிலேயே மலையக மக்கள் இருக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி சந்திரி காவிடம் வலியுறுத்தினார்.

அதன் பயனாக கடனுதவி ஏற்பாடுகள் செய்யப்பட்டது. 25 ஆயிரம் வீடுகள் என்னும் இலக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 6000 வீடுகள் மட்டுமே நிர்மாணிக் கப்பட்டன. அப்போதைய நிலைக்கும் இப் போதைய நிலைக்கும் பொருளாதார ரீதியில் ஏதாவது பரிமாணங்கள் ஏற்பட்டுள்ளதாக ஆய்வுத் தரவுகள் எதுவுமே கிடையாது. ஒரு சிலரின் வளர்ச்சியை மேலோட்டமாக வைத்து ஒட்டுமொத்த சமூகத்தையும் எடைபோட முடியாது. உண்மையில் இன்று எத்தனை குடும்பங்கள் காணி கிடைத்தால் தனி வீடு கட்டிக் கொள்ளத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லப்போகின்றன?

1000 ரூபா தினக்கூலி பெற்றுக் கொடுத் ததால் இம்மக்களின் வாழ்வாதாரம் அதி ரடியாக உயர்ந்து போயிருக்கிறது என்று யாராலும் கூற முடியாது. ஏனெனில் அந்த 1000 ரூபா சம்பள அதிகரிப்பை முழுமை யாகப் பெற முட்டுக்கட்டைப் போடுவதாக தோட்ட நிர்வாகங்கள் மீது காட்டமான குற்றச் சாட்டுக்களை இ.தொ.கா தான் சுமத்தி வருக் கின்றது. அன்மையில் அதன் ஊடக செய்தி இதனை உறுதி செய்கின்றது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள அதிகரிப்பை தொடர்ந்து தோட்ட நிர்வாகங் கள் பல்வேறு கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றன. தொழிலாளர்களுக்கு வேலை நாட்கள் குறைப்பு, அரைநாள் சம்பளம் வழங் குதல், மேலதிக கொழுந்து பறித்தலுக்கு கொடுப்பனவு வழங்காமை போன்ற அழுத் தங்களை தொழிலாளர்கள் மீது கம்பனி தரப்பு பிரயோகித்து வருகின்றது என்று புலம்புகிறது இ.தொ.கா.

இதன்படி பார்க்கப் போனால் 1000 ரூபா வேதன அதிகரிப்பால் பொருளாதார ஸ்திரம் எதுவுமே ஏற்பட்டிருக்க வாய்பில்லை. கொழும்பு போன்ற நகரங்களில் ஆயிரக்கணக்கான பெருந்தோட்ட மக்கள் வேலை செய்து வருகிறார் கள். அநேகமான பெருந்தோட்ட இளைய தலை முறையினருக்கு நாட்டின் நகரங்களே தஞ்சம். இவர்களில் சிலரது குடும்பங்கள் மட்டுமே இன்று தேயிலைத் தொழிலில் ஈடுபடுகின்றன.

இக்குடும்பங்களுக்கு 7பேர்ச் காணி கிடைக் கும் பட்சத்தில் பல முறைகேடுகளும் இடம் பெற வழியுண்டு. இன்று நகர வாழ்க்கையோடு தம்மை இணைத்துக் கொண்ட பல இளைஞர் கள் தோட்டங்களுக்குத் திரும்புவதை விரும்பு வதாகத் தெரியவில்லை இப்படியானவர்களுக்கு காணி கிடைத்தால் அதை விற்றுவிட்டு கொழும் புப் போன்ற நகரங்களில் காணி வாங்கி செட்டில் ஆகிவிட எண்ணி விட்டால் என்ன நடக்கும்?

லயக் காம்பிராக்களுக்கு மாற்றாக தனிவீட்டத் திட்டம் மூலம் வீடுகளைப் பெற்ற சிலர் அதனை விற்கவோ வாடகைக்கு விடவோ செய்துள்ள சம்ப வங்கள் ஏற்கனவே நடந்துள்ளன. வீடுகளுக்கே இந்தக் கதி என்றால் காணிகளைப் பற்றிப் பேசவா வேண்டும். பல குடும்பங்கள் இன்று பெருந்தோட்டத் தொழிலைக் கைவிட்டுள்ளன.

இக்குடும்பங்களின் வாழ்விடமாக மட்டுமே பெருந்தோட்டப் பிரதேசங்கள் காணப்படுகின் றன. பெருந்தோட்டங்களுக்கு வெளியே வேலை செய்தாலும் அப்படி யொன்றும் உபரிவருமா னம் பெற்று உல்லாசித்திருக்கவில்லை இக்குடு பங்கள். வேலைக்குப் போனால் மட்டுமே வேளா வேளைக்குச் சாப்பாடு என்பதே நிலைமை.

இவர்கள் 7 பேர்ச் காணி விநியோகத்தில் ஓரங்கட்டப்படும் நடைமுறை கையாளப்பட்டால் லய வாழ்கைக்குப் முற்றுப்புள்ளி என்பதே கிடை யாமல் போய்விடும். தவிர உழைத்து ஓய்ந்திருக் கும் முன்னாள் தொழிலாளர்கள், ஆசிரியர் தொழில் புரிவோர். ஓய்வுபெற்ற தோட்ட உத் தியோகத்தர்கள் என பலரும் பெருந்தோட்டப் பகுதிகளிலேயே வதிவிடங்களைக் கொண்டி ருக்கிறார்கள்.

இவ்வாறானவர்களுக்கு 7 பேர்ச் காணி வழங்க கம்பனி தரப்பு இணங்கும் என்று எதிர் பார்க்க முடியாது. ஏனெனில் இந்தியா வழங்கி யுள்ள வீடுகளை நிர்மாணித்துக் கொள்ளவே இட ஒதுக்கீடு செய்வதில் கம்பனி தரப்புக் காட்டும் பிடிவாதம் கொஞ்ச நஞ்சமல்லவே! தவிர தற்போதைய நிலையில் வீடொன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கு குறைந்த பட்சம் 15 இலட்சமாவது வேண்டும்.

இந்திய அரசு தமது வீடமைப்புத் திட்டத்துக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் 12 இலட்ச ரூபாவையே ஒதுக்குகின்றது. எஞ்சிய தொகையை இலங்கை அரசாங்கத்திடம் இருந்தே பெற வேண்டியுள்ளது. முன்னைய ஆட்சியில் முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் தமது அமைச்சுக்கூடாக வழங்கினார். தற்போது இரா ஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதியில் இருந்தே வழங்கி வருகிறார்.

இவ்வாறான பிரச்சினைகள் பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டத்தில் வராமல் இருக்க வேண் டுமானால் தனிவீடுகளுடன் காணியும் உரித் தாக்குவதே உகந்த தீர்வாகவே இருக்க முடியும். காணியை இலவசமாக வழங்கிவிட்டு கடன்பட்டு வீடு கட்ட வழிவகுத்தால் அத பெருந்தோட்ட மக்களை தொடந்தும் கடனாளிகளாக்கி விடவே உதவும்.

எது எப்படியோ தனி வீட்டுத் திட்டம் என்றாலும் சரி, 7 பேர்ச் காணியில் சுய வீடமைப்புத் திட்டம் என்றாலும் சரி தோட்டத்தில் வேலை செய்யாத அதேநேரம் பெருந்தோட்டப் பிரதேசங்களையே தமது பரம்பரை வதிவிடமாக கொண்டுள்ள பல் லாயிரக் கணக்கானோரையும் பங்காளியாக்கிக் கொண்டால் மட்டுமே முழுமை பெறும். இல்லா விட்டால் தோட்டங்களைக் கிராமங்கள் ஆக்கும் கனவு மெய்ப்படாமலே போய்விடும் .

பன்பால ...✍

13 இன் பெறுமதி என்ன?

13 என்பதே பிரச்சினைக்குரிய எண் என்பார்கள். அதை நிரூபிப்பதைப்போலவே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமும் உள்ளது. 1987 இல் இலங்கை – இந்திய உடன்படிக்கையின் விளைவாக உருவாக்கப்பட்ட 13 ஐ ஏற்றுக் கொள்வதில் தொடங்கிய நெருக்கடியானது அதை நடைமுறைப்படுத்துவது வரையில் 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

தமிழ்க்கட்சிகளின் கடிதத்துக்கு மதிப்பென்ன?

இப்பொழுது இந்தப் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடிக்குத் தமிழ்த்தேசிய அடையாளத்தை வலியுறுத்தும் கட்சிகள் சில கடிதம் எழுதியிருக்கின்றன. இந்தக் கடிதத்தை எழுதுவதற்குப் பட்ட பாடு கொஞ்சமல்ல. முதலில் மலையகக் கட்சிகளும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும் தமிழ்க் கட்சிகளோடு இணைந்து இதைப்பற்றிப் பேசின. இறுதியில் மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் விலகி விட்டன. 13 ஐ அப்படியே ஏற்றுக் கொள்வதில் இவர்களுக்குப் பிரச்சினை. அதனால் தமிழ்க்கட்சிகளில் ஒரு பகுதியினரே கையெழுத்திட்டு இந்தக் கடிதத்தை மோடிக்கு அனுப்பி வைத்தனர்.

இதேவேளை இந்தப் 13 ஏ தவறானது. இது தமிழர்களுடைய அரசியலுக்கும் உரிமைக்கும் வைக்கப்பட்ட சவப்பெட்டி – படு குழி என்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இதை எதிர்த்து அவருடைய கட்சியான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஊர்திப் போராட்டமொன்றை ஆரம்பித்திருக்கிறது. இந்த ஊர்திகள் இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும்போது வவுனியாவிலிருந்து நெடுங்கேணி வழியாக முல்லைத்தீவுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. இனி அவை கிளிநொச்சிக்குச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் போகும் என்று சொல்லப்படுகிறது.

ஆனால், இந்தப் 13 இன் விளைவான மாகாணசபைக்கான தேர்தலில் தாம் – தம்முடைய கட்சி போட்டியிடுவோம் என்று கஜேந்திரகுமார் சொல்லியிருக்கிறார். இதற்கு அவர் ஒரு (சப்பைக்கட்டு) நியாயத்தையும் சொல்லியுள்ளார். அதாவது மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்த பின்பு "இந்த மாகாணசபையில் எந்த அதிகாரமும் இல்லை" என்று பிரசித்தம் பண்ணப்போகிறாராம்.

இதைக் கேட்கும்போது உங்களுக்குச் சிரிப்பு வரலாம். கூடவே பலருக்கும் கோபமும் ஏற்படக் கூடும்.

ஏனென்றால், 1987 இல் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டபோதே அதனைப் புலிகள் எதிர்த்தனர். அதற்குப் பிறகு மாகாணசபை முறையை நிராகரித்தும் இந்தியப் படைகளை எதிர்த்தும் விடுதலைப்புலிகள் 2009 வரை செயற்பட்டனர். அவர்கள் சொன்ன காரணம், "இந்த மாகாணசபையில் எதுவுமே இல்லை"

இதற்காக அவர்கள் செலவிட்ட காலமும் இழந்த இழப்புகளும் கொஞ்சமல்ல. இறுதியில் தம்மையே முழுதாக விலை கொடுத்தனர்.

அதை விடவா கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 13 ஐயும் மாகாணசபையையும் அம்பலப்படுத்தப்போகிறார்?

புலிகளின் வழியில் தாமும் 13 ஐயும் மாகாணசபையையும் நிராகரிப்பதாக இருந்தால் ஒரு வகையில் அது ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியது. புலிகளின் அரசியற் தொடர்ச்சியை காங்கிரஸ் கட்சியும் தொடர விரும்புகிறது என்று ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், அதை புலிகளைப் போல மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல் செய்ய வேணும். அதுவே நியாயமானது. இது அப்படியல்ல. மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவும் வேணும். அதிகாரத்தில் இருக்கவும் வேணும். அது பயனற்றது என்று சொல்லவும் வேணும்.

இதைக் கேட்கும்போது சிரிப்பும் கோபமும் வராமல் என்ன செய்யும்?

பதவிக்கு அதிகாரத்துக்கு வந்த பின் என்ன வெல்லாம் நடக்கும் என்பது யாரும் அறியாத ரகசியமோ வித்தையோ அல்ல.

ஆக இது ஒரு "சுத்தமான பம்மாத்து" என்பதற்கு அப்பால் வேறொன்றுமேயில்லை. எப்படி அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் கட்சியாக இருந்து கொண்டே தேர்தலில் வாக்கெடுப்பதற்கான தந்திரோபாயமாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரையும் மஞ்சள் – சிவப்பு வண்ணத்தையும் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அதைப்போலத்தான் இதுவும். சுத்த ஏமாற்று.

ஆனால் இதைப் புரிந்து கொள்ளாமலும் புரிந்து கொள்ள மறுத்தும் ஒரு தரப்பினர் கம்பு சுத்துவார்கள். இவர்களால்தான் தலைவர்கள் எப்போதும் தங்களை வளப்படுத்திக் கொள்வது.

மறுவளத்தில் – சிங்களத்தரப்பில் 13 ஓ மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்வோ தேவையில்லை என்று சொல்லி எதிர்க்கின்ற போக்குத் தீவிரமடைந்து கொண்டிருக்கிறது.

தொடக்கத்திலிருந்தே இந்தப் 13 சோதனைக்குட்பட்டே வந்திருக்கிறது. இலங்கை – இந்திய உடன்படிக்கையை அப்போதே (1987) ஜ.தே.கவின் ஒரு பகுதியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக இந்த உடன்படிக்கை செய்யப்பட்ட போது அதிகாரத்தில் இருந்த பிரதமர் ஆர். பிரேமதாசவும் அவருக்கு நெருக்கமான வர்களும் இதைப் பகிரங்கமாகவே எதிர்த்தனர். இது தொடர்பாக அப்பொழுது நடந்த எந்த உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளிலும் பிரேமதாசவும் அவருடைய அணியினரும் பங்குபற்றவில்லை.

அவர் ஜனாதிபதியாக வந்த பிறகு மாகாணசபையைச் செயலிழக்க வைக்கும் காரியங்களிலேயே மும்முரமாக ஈடுபட்டார். இதற்காக அவர் அன்று விடுதலைப் புலிகளையும் பயன்படுத்திக் கொண்டார். காரணம், விடுதலைப்புலிகளுக்கும் இந்தப் 13 இலும் அதன் விளைவாக உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையிலும் விருப்பில்லை.

எனவே இதை வாய்ப்பாகக் கொண்டு புலிகள் – பிரேமதாச பேச்சுவார்த்தை நடைபெற்றபோது, அன்றிருந்த தமிழ்த் தரப்பின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பயன்படுத்தி பிரேமதாச மாகாணசபை முறைமையை வலுவிழக்கச் செய்ய முற்பட்டார்.

இதனால் உண்டான நெருக்கடிகளால் வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணசபையின் முதலமைச்சராக இருந்த வரத ராஜப்பெருமாள், பிரேமதாச அரசாங்கத்தைக் கண்டித்து தமிழீழப் பிரகடனத்தைச் செய்து விட்டு வெளியேறினார். அப்படி அவர் வெளியேறுவதற்கான சூழலை பிரேமதாச அரசும் புலிகளும் இணைந்த அன்று உருவாக்கியிருந்தனர்.

அன்று 13 ஐயும் மாகாணசபை முறைமையையும் இலங்கை – இந்திய உடன்படிக்கையையும் தீவிரமாக எதிர்த்த இன்னொரு முக்கியமான தரப்பு ஜே.வி.பி. இடையில் இணைந்த மாகாணசபையை உடைக்க வேண்டும் என்று அது உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதை உடைத்தும் விட்டது. இன்னும் அது மாகாணசபைக்கும் 13 க்கும் இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கும் எதிராகவே நிற்கிறது.

A. Adaikalanathan

C.V. Wigneswaran

Dharmalingam Siththadthan


K. Premchandran

Aavai Senathraja


N. Srikantha

சரி, மாகாணசபை முறைமை திருத்தியானதல்ல என்றால், பதிலாக எந்த வகையான ஏற்பாட்டை நீங்கள் முன்வைப்பீர்கள் என்றால், அதற்கு ஜே.வி.பியிடமும் சரியான பதில் இல்லை. ஏனைய சிங்களத் தரப்புகளிடத்திலும் உரிய விடையில்லை.

இருந்தாலும் 13 அவர்களுக்கு ஒரு தீராத பிரச்சினையாகவே தோன்றுகிறது. அரசாங்கத்துக்கும் 13 இல் திருப்தியில்லை. முஸ்லிம் கட்சிகளுக்கும் வடக்குக் கிழக்கு இணைப்பு உட்பட 13 இல் சுட்டப்படும் விடயங்கள் தொடர்பாக முழுமையான உடன்பாடில்லை.

இப்படியான குழப்பங்கள் நிறைந்த சூழலில்தான் 13 பற்றிய பேச்சுகள் தீவிரம் பெற்றுள்ளன. இப்பொழுது 13 நடைமுறைப்படுத்தப்படுமா? இல்லாதொழிக்கப்படுமா என்ற கேள்விகள் எழுகின்றன.

13 பற்றி இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு என்ன?

தமிழ்க் கட்சிகளில் சில மட்டும் 13 ஐ வலியுறுத்துவதால் ஏதாவது பயன் கிட்டுமா?

ஈ.பி.டி.பி உள்பட அரசாங்கத்தை ஆதரிக்கின்ற சில தரப்புகளும் 13 ஐ வரவேற்கின்றன. அப்படியென்றால் அது பலப்படுத்தப்படுமா? தனியே தமிழ்த்தரப்பின் ஆதரவுடன் வடக்குக் கிழக்கில் மட்டும் 13 ம் மாகாணசபைக்கான அதிகாரப் பகிர்வும் நடக்குமா? அது சாத்தியமாகுமா? முஸ்லிம் கட்சிகள் மட்டுமல்ல, கிழக்கை மையப்படுத்தி இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் உட்பட வேறு சில தரப்புகளும் வடக்குக் கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படியென்றால் 13 இன் பெறுமதி என்ன? 13 ஐ வலியுறுத்தும் தமிழ்க்கட்சிகளின் கடிதத்துக்கு மதிப்பென்ன?

இப்படிச் சிக்கலானதொரு நிலையில் இலங்கை இந்திய உடன்படிக்கை, 13 ஆவது திருத்தம் மாகாணசபைகளின் அதிகாரம், வடக்குக் கிழக்கு இணைப்பு எல்லாம் எப்படியாகப்போகிறது?

இதற்குள் பழைய முறையிலா புதிய முறையிலா மாகாணசபைகளுக்கான தேர்தல் நடக்கும் என்ற வாதங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

தேர்தலே நடக்குமா என்பது இன்னொரு கேள்வி.

எல்லவாற்றையும் விட 13 சோதனைக்குள்ளாகிறது. எல்லோரையும் 13 சோதனை செய்கிறது.

ஆனால் எல்லா எண்ணுக்கும் உரிய தனித்துவமும் சிறப்பும் 13 க்கும் உண்டு. இப்பொழுது அதுதான் (13) அதிவிசேசமாக இருக்கிறது. எல்லோரையும் ஆட்டிப்படைக்கிறது.

கருணாகரன்...✍

இன மத அரசியலும் இரு பக்கத்து பக்கத்து நாடுகளும்

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் ஒரு தனிநாடாகப் பிரிந்தபோது பஞ்சாப் இரண்டாகப் பிரிந்தது. அதேபோல வங்காளமும் இரண்டானது. இச் சந்தர்ப்பத்தில் இந்திய பிரதேசம் மற்றும் பாகிஸ்தான் பகுதி என இரு பக்கத்திலும் மிக மோசமானதும் கொடூரமானதுமான மத ரீதியான வன்முறைகள் அரங்கேறின. பிசாசுத்தனமான மதவெறி. முஸ்லிம்களுக்கு இந்துக்களை கண்டந் துண்டமாக வெட்டிச் சாய்க்க வேண்டுமென்றால் இந்துக்கள் இஸ்லாமியர்களைத் தேடி வீடுவீடாக வேட்டையாடினார்கள். வரலாற்றின் இந்த அசிங்கமான பக்கங்களைப் பற்றி நூல்கள், கதைகள், நாவல்கள் வெளிவந்துள்ளன. பிரபல ஆங்கில பத்திரிகையாளர் குஷ்வந்த் சிங் TRAIN TO PAKISTAN என்ற நாவலை, இந்த இனக்கலவரத்தை மையப்படுத்தியதாக எழுதினார்.

மனிதன் சக மனிதனை சாதி, மத, மொழி அடிப்படையில் பார்ப்பதும், வெறுப்பதும் அவனை அழித்து விட நினைப்பதும் தொன்றுதொட்டு நடைபெற்றுவந்த ஒன்றுதான். மன்னர் காலத்தில் இருந்து உலகெங்கும் நிகழ்ந்து வந்திருக்கிறது. எழுபது ஆண்டுகளுக்கு முந்தைய உதாரணமாக அடோல்ஃப் ஹிட்லரைச் சொல்லலாம். யூதர் என்ற இனத்தையே பூண்டோடு ஒழித்துக் கட்டி விட வேண்டும் எனச் செயல்பட்டவர் அவர். அவர்தான் இறுதியில் மறைந்தாரே தவிர யூதர்கள் மறையாமல் தழைத்தோங்கவே செய்தார்கள்.

இந்தியா – பாகிஸ்தானுக்கு வருவோமானால் இந்துக்களுக்கு இஸ்லாமியர் மேல் இருக்கும் கோபம் அல்லது வெறுப்பு, 500 ஆண்டுகளாக தம்மை. அடிமைப்படுத்தி ஆண்டதோடு தம்மை தலையெடுக்க விடவில்லை என்பதாகவே இருக்கிறது. இது அடிப்படையான விஷயம். இந்த வெறுப்பின் மீது பல்வேறு வெறுப்புகளும், சம்பவங்களும் கட்டமைக்கப்பட்டன. பாகிஸ்தான் என்ற தனி இஸ்லாமிய நாட்டை இந்திய முஸ்லிம்கள் கோரியபோது இஸ்லாமிய வெறுப்புணர்வு வெடித்துக் கிளம்பியது. சுதந்திரம் பெற்றதும் வெள்ளைக்காரர்கள் திரும்பிப் போய் விடுவார்கள். அவர்கள் போனபின் இந்துக்களே இந்தியாவை ஆள்வார்கள். அவர்களின் அதிகாரத்தின் கீழ் இஸ்லாமியர்களால் சுதந்திரமாக வாழ முடியாது. எனவே இந்தியா சுதந்திரம் பெறும் போது இந்தியாவில் இருந்து இஸ்லாமியர்கள் வெளியேறிச் சென்று புதிய நாடொன்றை தமக்கென கட்டி எழுப்பிக்கொள்ள வேண்டும் என இந்திய முஸ்லிம்களின் தலைவரான முகம்மதலி ஜின்னா கருதினார். இதை எதிர்த்த காந்தியிடமும் நேருஜியிடமும் அவர் ஒன்றைச் சொன்னார். உங்கள் இருவரையும் நான் நம்புகிறேன். ஆனால் உங்கள் காலத்தின் பின்னர் இந்தியாவில் வாழும் இஸ்லாமியர் நிலை என்னவாகும்? என்ற அவரது கேள்வி மகாத்மாவுக்கும் நேருஜிக்கும் சரியாகவே பட்டது.

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து செல்ல வேண்டியதற்கான காரணங்கள் இவ்வாறு முன்வைக்கப்பட்டன. பாகிஸ்தானும் பிரிந்தது. ஜின்னாவின் தலைமையில் ஒரு ஜனநாயக நாடாக அது மலர்ந்தது உண்மையானாலும் ஜின்னாவின் மரணத்தின் பின்னர் அங்கே ஜனநாயகம் தொலைந்து போனது. அவ்வப்போது ஜனநாயக ஆட்சி தூசுதட்டி எடுக்கப்படுவதும் விரைவிலேயே தொலைந்து போவதும் பாகிஸ்தானில் வாடிக்கையான விஷயம்.

பாகிஸ்தான் பிரிந்த போது இந்தியர்களிமும் பாகிஸ்தானியர்களிடமும் கிளர்ந்தெழுந்த வன்மமும் வன்முறையும் படிப்படியாகக் குறைந்து போயின. எனினும், இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே ஒரு அவநம்பிக்கையை தொடர்ந்து புகைய விடுவதில் அரசியல்வாதிகள் குறியாக இருப்பது போலவே பாகிஸ்தானிலும் ஒரு இந்திய வெறுப்பை அரசியல் கட்சிகளும் மத அமைப்புகளும் தொடர்ச்சியாக புகைய விட்டு வருகின்றன. அவர்களுக்கு அதில் ஒரு இலாபம் இருக்கிறது. இந்தியாவை காட்டிக் காட்டியே பாகிஸ்தானியர்களை கொம்புசீவி தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்பது ஒரு பிரதான காரணம். பாகிஸ்தான் பிரிந்து சென்றபின்னர் இரு நாடுகளுக்கும் இடையே நான்கு யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பு நாடுகளாகவே தொடரலாம் என ஜின்னா கருதினாலும் அதற்கு வாய்ப்பு இல்லாமலேயே எதிர்ப்பு அரசியல் இரு நாடுகளிலும் வளர்க்கப்பட்டுவிட்டது.

பாகிஸ்தான் அரசியலானது இந்தியாவுக்கு எதிராக இரண்டு விஷயங்களை எடுத்துக் கொள்கிறது. முதலாவது, இந்தியா பாகிஸ்தானை எப்போது வேண்டுமானாலும் ஆக்கிரமிக்கலாம் என்ற பய உணர்வை மக்கள் மத்தியில் விதைப்பது. இரண்டாவது, இந்தியாவில் காணப்படும் மதங்களை விட இஸ்லாம் மிக உயர்வானது என்ற மனப்பான்மையை விதைப்பது. மூன்று முழு அளவிலான யுத்தங்கள் இரு நாடுகளுக்கு இடையே நடந்திருப்பதால் வெறுப்புணர்வை சுலபமாக விதைந்துவிடலாம் அல்லவா!

எனவே இந்தியாவுடனான நல்லுறவு என்பது பாகிஸ்தானுக்கு மேலோட்டமாக மட்டுமே சாத்தியமே தவிர உண்மையாக அல்ல. இந்திய எதிர்ப்பு அரசியல்தான் அங்கே விற்கப்பட முடியும். இந்தியாவைக் காட்டித்தான் மக்களை உசுப்பேற்றி வைக்க முடியும்.

இந்தியாவிலும் இஸ்லாமிய வெறுப்புணர்வு, குறிப்பாக வட இந்தியாவில், விரவிக் கிடக்கத்தான் செய்கிறது. குஜராத் கலவரத்தை உதாரணமாகச் சொல்லலாம். ஆனால் தொடர்ச்சியாக முஸ்லிம்களை குறி வைத்து தாக்குவது, வாழ்வதற்கான வாய்ப்புகளை மறித்து வைப்பது, இம் சைப்படுத்துவது போன்றவை இந்தியாவில் திட்டமிட்ட ரீதியாக இல்லை. ஆர்.எம்.எஸ். இஸ்லாமிய எதிர்ப்பு வாதத்தை முன்வைத்து வந்தாலும் இந்துக்களும் இஸ்லாமியர்களும் இந்தியாவில் சகோதரர்கள்போல பழகி வருகின்றனர். மேலும் ஜனநாயக நாடு என்ற வகையில் முஸ்லிம்களுக்கு ஆதரவாக சட்ட சபைகளிலும், பாராளுமன்றத்திலும் ஊடகங்கள் வாயிலாகவும் குரல் எழுப்ப இந்தியாவில் வாய்ப்புகள் உள்ளன. இஸ்லாமியர் அல்லாதோரே அங்கே இஸ்லாமியருக்காக குரல் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் இராணுவ ஆட்சியும் சில சமயம் இராணுவ கண்காணிப்புடனான ஜனநாயக ஆட்சியும் நிலவும் பாகிஸ்தானில் மக்கள் சுதந்திரமாக சிந்திக்கக்கூடிய வாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது.

கடந்த டிசம்பர் 20ஆம் திகதி கராச்சி பழைய நகரில் அமைந்திருக்கும் நாராயன் மந்திர் ஆலயத்தில் புகுந்த ஒருவர் சுத்தியலால் விக்கிரங்களுக்கு சேதம் விளைவித்தார். அங்கிருந்து இந்து பக்கதர்கள் அவரை சுற்றி வளைத்து பிடித்து பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இப் பகுதியில் வசிக்கும் இந்துக்கள் குறை வருமானம் பெறும் ஏழைகள் என்று சொல்லப்படுகிறது.

பஞ்சாப்பின் ரஹீம் யார்க்கான் மாவட்டத்தில் உள்ள போஸ் என்ற கிராமத்தில் உள்ள கணேசர் ஆலயத்தில் சுமார் 200 குண்டர்கள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இந்த ஆலயம் நூறு வருடம் பழையது. இச் சம்பவத்தின் பின்னர் இந்து குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டனராம்.

கைபர் பிரதேச தேரி கிராமத்தில் நூறு வருடங்கள் பழைமையான ஸ்ரீ பரமான்ஜி மஹாராஜா கோவிலில் 2020ஆம் வருடம் உட்புகுந்த ஒரு கூட்டம் ஆலயத்தை சேதப்படுத்திச் சென்றது. பின்னர் இவ்வாலயம் மீளவும் புதுப்பிக்கப்பட்டது.

வங்கதேசம் டாக்காவில் 600 வருடங்கள் பழைமையான காளிகோவில் உள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

காளிங்கன்...✍

பெருந்தோட்ட அமைச்சு

நிறுவனத் தோட்டங்களின் மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் சார்ந்த பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை

2022ஆம் வருடத்திற்கான செயற்றிட்ட வழங்குநர்களைப் பதிவு செய்தல்

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இந்த அதிகார சபையில் வழங்குநர் மற்றும் ஒப்பந்தக்காரராக பதிவு செய்துகொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022-02-25ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உருப்படிகள் பின்வருமாறாகும்,

1. தேயிலைப் பயிர்ச்செய்கையில் உயர்ந்த நிழல் கன்றுகளை நடுவற்காக சிபாரிசு செய்யப்பட்ட விதைகள் அல்லது விதைக் கன்றுகளை வழங்குதல்
   - அல்பீசியா வய்னென்சிஸ்
   - அல்பீசியா மொலுகானா
   - கிரவ்லாயா (சபுக்கு)
   - டெரிஸ்
2. தேயிலை பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும்,
   - கவ்வாத்து இயந்திரம்
   - குழி தோண்டும் இயந்திரம்
   - தேயிலைக் கொழுந்து பறிக்கும் இயந்திரம்

   இதற்கு இயைபான பாதுகாப்புக் கருவியாக
   - தலைக் கவசங்கள்
   - அங்கிகள் (Overall)
   - பூட் சப்பாத்துகள்
   - தலை மறைப்புகள்
   - கண் மறைப்புகள்
3. தேயிலை நாற்றுமேடைக்குத் தேவையான மெதம்சோடியம்

கவனிக்கவும்: வழங்கக்கூடிய கொள்ளளவு, போக்குவரத்து செய்யக்கூடிய பிரதேசங்கள் மற்றும் வழங்கக்கூடிய வருடத்தின் மாதங்கள் தொடர்பாக குறிப்பிடுதல் வேண்டும்.

பதிவு செய்து கொள்ளும் பொருட்டு இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட உரிய மாதிரிப்படிவத்தில் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சேவை நிபந்தனைகளை ஒரு உருப்படிக்கு 2500.00 ரூபா வீதம் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவம் இன்றி விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விசாரணை: **டப்.டீ.ஆர்.பீ. விமலரத்ன,**
பிரதிப் பொது முகாமையாளர் (விஸ்தரிப்பு) பதில்
0117909038 / 0777006417

தலைவர்,
தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை,
இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்ல.
தொலைபேசி இல. 0117909020/21
தெலைநகல்: 0112784925/28

நிதி அமைச்சு
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் சில வருடாந்தம் சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த அறிக்கை (இல 15/15A மாதிரிப் பத்திரம்) சமர்ப்பிக்கலாம் இருப்பதாக அவதானிக்கப்படடுள்ளது.

கூட்டிணைக்கப்பட்ட சகல கம்பனிகளும் கம்பனிகள் சட்டத்தின் 133(1) பிரிவின் கீழ் வருடாந்த மகா சபைக் கூட்டத்தை நடத்தி வருடாந்த அறிக்கையை (இல. 15/15 A மாதிரிப் பத்திரத்தின் மூலம்) 30 வேலை நாட்களுக்குள் கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு குறித்த கட்டணத்தைச் செலுத்தி ஒப்படைத்தல் வேண்டும். வருடாந்த கூட்டம் நடத்தப்படவில்லையாயின் கம்பனிகள் சட்டத்தின் 144(3) பிரிவின் பிரகாரம் செயற்பட்டு 30 வேலை நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையை கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

கம்பனிகள் சட்டத்தின் 133(1) பிரிவின் பிரகாரம் செயற்படும் சகல கம்பனிகள் சார்பாகவும் சட்டத்தின் 133(6) பிரிவின் பிரகாரமும் ரூ 100,000/- இற்கு மேற்படாத தண்டத் தொகையும், தவறுதல் சம்பந்தமாக அவ்வாறான கம்பனியின் சகல அதிகாரிகளும் (பணிப்பாளர்கள்) ரூ. 50,000/- இற்கு மேற்படாத தண்டத் தொகைக்கு உட்படுவர்.

எனவே, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள சகல கம்பனிகளினதும் பணிப்பாளர்களுக்கு, செயலாளர்களுக்கு, மேம்பாட்டாளர்களுக்கு மற்றும் ஆர்வம் காட்டுகின்ற ஏனைய தரப்பினருக்கு குறித்த காலத்திற்குள் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு பொறுப்புடன் செயற்படுமாறு இத்தால் எச்சரிக்கை விடுக்கப்படுவதுடன் தவறுகின்ற சகலருக்கு எதிராகவும். நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சஞ்சீவ திஸாநாயக்க
கம்பனிகள் பதிவாளர் நாயகம்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்.

ජාතික විද්‍යා ආයතනය
தேசிய விஞ்ஞான மன்றம்
National Science Foundation

விண்ணப்பங்கள் கோரல்

ஆய்வு பட்டத்திற்கான ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் (SUSRED) - 2020/ 2021

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவோர் யார்?

2018, 2019, 2020 அல்லது 2021 ஆம் கால எல்லைக்குள் ஆய்வு பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பட்டதாரிகளின் ஆய்வு மதிப்பீட்டாளர்கள்

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்
- பதிவு செய்த தினம் முதல் 04 வருடங்களில் (2018/ 2019 இற்குள் பூர்த்தி செய்த பட்டத்திற்காக) அல்லது 05 வருடங்களில் (2020/ 2021 இற்குள் பூர்த்தி செய்யப்பட்ட பட்டத்திற்காக) மதிப்பீடு செய்யப்பட்ட கலாநிதி (PhD) பட்டம் வழங்கியிருத்தல்.
- பதிவு செய்த தினம் முதல் 03 வருடங்களில் (2018/ 2019 இற்குள் பூர்த்தி செய்யப்பட்ட பட்டத்திற்காக) அல்லது 04 வருடங்களில் (2020/ 2021 இற்குள் பூர்த்தி செய்யப்பட்ட பட்டத்திற்காக) மதிப்பீடு செய்யப்பட்ட விஞ்ஞான வைப்பாளர் (MPhil) பட்டத்தை வழங்கியிருத்தல்

விண்ணப்பிப்பதற்கான அறிவுருத்தல்கள்

பிரதான ஆய்வு மதிப்பீட்டாளரினாலேயே விண்ணப்பித்தல் வேண்டும். இப் பட்டப் பின் படிப்பு ஆய்வு பட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு பங்களிப்பை நல்கிய சகல ஆய்வு மதிப்பீட்டாளர்களினால் விண்ணப்பத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் கீழான சகல விண்ணப்பங்களும் உப பீடாதிபதி மூலமாகவும், ஆய்வு நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களும் நிறுவன தலைமையூடாகவும், சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக தகவல்களை தேசிய விஞ்ஞான மன்றத்தின் இனையதளத்திற்கு பிரவேசித்தல் பெற்றுக்கொள்ளலாம். http://www.nsf.gov.lk

உங்களது விண்ணப்பங்களை 2022 மார்ச் 01ம் திகதி பி.ப. 3.00 இற்கு முன் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவையுங்கள்.

பூர்த்தியற்ற, பிழையான மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

47/5, மெயிற்லண்ட் பிளேஸ், கொழும்பு-7,
தொலைபேசி: + 94 112 696771, மின்னஞ்சல்: susred@nsf.gov.lk, இணையம்: www.nsf.gov.lk

ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைத்தல்

மஹாபொல உயர் கல்வி புலமைப்பரீட்சை நம்பிக்கை நிதியம்

மஹாபொல ஒன் – லைன் லொத்தர் சீட்டின் முதலீடு மற்றும் செயற்பாடு

1981 ஆண்டில் இலங்கை பாராளுமன்ற சட்டமொன்றின் மூலமாக இலங்கை மஹாபொல உயர் கல்வி புலமைப்பரீட்சை நம்பிக்கை நிதியமானது தாபிக்கப்பட்டது. அதிலிருந்து, இலங்கையில் 325,000 பல்கலைக்கழக மாணவர்களுக்கு பலவகையான புலமைப்பரீட்சைகளை வழங்கியிருப்பதுடன் அதனது தாபிப்பாளரின் உன்னத நோக்கத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றது.

மஹாபொல உயர் கல்வி புலமைப்பரீட்சை நம்பிக்கை நிதியமானது அதனது நோக்கங்களை இன்னும் அதிகரிப்பதற்காக பயன்படுத்துகைகளை எதிர்காலத்தில் அதிகரிப்பதற்காகவும் அதனது 'நிதியத்தை' மேலும் விஸ்தரிப்பதற்காக ஆவலாகவும் விருப்பமாகவும் உள்ளது.

எனவே, மஹாபொல உயர் கல்வி புலமைப்பரீட்சை நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையானது மஹாபொல ஒன்-லைன் லொத்தர் சீட்டிழுப்பொன்றை செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதற்கமைவாக, உலகளாவிய அல்லது தேசிய மட்டத்தில் ஒன்-லைன் லொத்தர் சீட்டிழுப்பில் 10 வருடங்களுக்கு மேலதிகமான நிரூபிக்கப்பட்ட அனுபவத்தையுடைய புகழ்வாய்ந்த சர்வதேச/ உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகள் இத்தால் கோரப்படுகின்றன. கம்பனியானது ஒன்-லைன் சீட்டிழுப்பின் முழுமையான முதலீட்டிற்கும் செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்குமான திறமையான நிதியிடல் பலம் மற்றும் ஆற்றலை காட்சிப்படுத்துவதற்கும் தாபிப்பதற்குமான இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை மஹாபொல உயர் கல்வி புலமைப்பரீட்சை நம்பிக்கை நிதியத்திற்கான இலக்கை அடையக்கூடிய ஒன்-லைன் லொத்தர் சீட்டிழுப்பின் செயற்பாட்டில் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிக்கலாம். வளமுள்ள விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்திலுள்ள ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பத்தை வர்த்தக அமைச்சின் அல்லது மஹாபொல உயர் கல்வி புலமைப்பரீட்சை நம்பிக்கை நிதிய உத்தியோகபூர்வ இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். **(https://www.trade.gov.lk/downloads/ministry-notifications or rb.gy/gmjfwx)**

உரிய முறையில் முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Mahapola Online Lottery" என குறிக்கப்பட்டு தூதஞ்சல் அல்லது பதிவுத் தபால் மூலம் 2022.02.28 ஆம் திகதியன்று நியமமாக்கப்பட்ட உள்ளூர் நேரம் பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, வர்த்தக அமைச்சு, இல. 492, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, கொழும்பு-03, இலங்கை என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை, கொழும்பு-03, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, 492 ஆம் இலக்கத்திலுள்ள வர்த்தக அமைச்சின் 3 ஆம் மாடியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

இலங்கை, கொழும்பு-03, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, 492 ஆம் இலக்கத்திலுள்ள வர்த்தக அமைச்சு, 3 ஆம் மாடியில் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதியன்று நியமமாக்கப்பட்ட உள்ளூர் நேரம் பி.ப. 3.15 மணிக்கு ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பங்கள் திறக்கப்படும். ஆர்வ வெளிப்பாட்டு திறக்கும் வேளையில் எந்தவொரு விண்ணப்பதாரியும்/ அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியாளர் சமுகமளிக்கலாம்.

எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்கும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரீட்சை நம்பிக்கை நிதியத்தின் திரு. எம்.பி. பண்டாரவுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொடர்பு விபரங்கள் : தொலைபேசி: +94 719900014. மின்னஞ்சல்: **mahapoladirector@gmail.com.**

தலைவர்,
அமைச்சு பெறுகைக் குழு,
வர்த்தக அமைச்சு,
இல. 492, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை,
கொழும்பு-03,
இலங்கை.

30.01.2022

கேள்வி கோரல்

வர்த்தக வெடி பொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு
வெலிசர, ராகமவிற்கு சுடுகலன்கள் மற்றும் வர்த்தக வெடி பொருட்களின் பெறுகை மேற்கொள்ளல்

01. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடம் இருந்து வர்த்தக வெடி பொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் அலகு (CEFAP Unit) இற்கு 12 துளை தனிக் குழாய் ரவைத் துப்பாக்கி - 350 கொள்வனவு செய்வதற்காக கேள்வி அழைப்புப் பத்திரத்தின் மூன்றாம் பிரிவில் (Section III) குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

ஒப்பந்த இலக்கம்

CEFAP/PRT/12/2021 - துறை 12 தனிக் குழாய் ரவைத் துப்பாக்கி -350

2. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி செயற்பாட்டின் அடிப்படையில் இடம்பெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கு தேவைப்படும் மேலதிக தகவல்களை வெலிசர, ராகமவில் அமைந்துள்ள வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் அலகில் கொள்வனவு செய்யும் அதிகாரியின் தொலைபேசி இல. 011 2958227 அல்லது பணிப்பாளர் வர்த்தக வெடி பொருட்கள் சுடு கலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் அலகு (தொ.பே. இல.011 2955514) இடம் பெற்றுக் கொள்ளலாம்.

04. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் வேறு வேறாக கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்தல் வேண்டும்.

05. பணிப்பாளர், வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் அலகு. வெலிசர, ராகமவிற்கு எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்து ஒரு கேள்விக்காக மீளளிக்கப்படாத ரூ. 4500.00 வீதம் கட்டணத்தை காசாக செலுத்தி 2021 ஜனவரி 31 முதல் 2022 மார்ச் 14 வரை வாரத்தின் வேலை நாட்களில் 9.00 மணி முதல் 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். (வெளிநாட்டு வழங்குநர்களால் உள்ளூர் பிரதிநிதியொருவரை இதற்காக நியமித்தல் வேண்டும்.)

06. கேள்விகள் திறக்கப்படும் தினம் முதல் 120 நாட்கள் கால எல்லைக்கு கேள்வி செல்லுபடியாதல் இருத்தல் வேண்டும். அத்துடன் சகல கேள்விக்கும் நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை (Bid Bond) சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த கேள்வி கோரல் கேள்விகள் திறக்கப்படும் தினம் முதல் 150 நாட்கள் கால எல்லைக்கு செல்லுபடியாதல் வேண்டும். (அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பிணையை உள்ளூர் வர்த்தக வங்கி மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.)

07. கட்டளைப் பத்திரத்தை வழங்குவதுடன் குறித்த வழங்குநர்களால் வரியின்றிய கேள்வி பெறுமதியில் 10% பெறுமதிக்கு சமமான நிபந்தனையற்ற செயற்பாட்டு பிணையை (Performance Bond) வழங்குதல் வேண்டும்.

08. 2022 மார்ச் 15ம் திகதி 14.00 மணிவரை கொழும்பு -01 கொடிகஹ வீதியில் இலங்கை கடற்படை தலைமையகத்தின் கேள்விச் சபைத் தலைவருக்கு இரு பிரதிகளுடனான பொறியிடப்பட்ட கேள்விகளை ஒப்படைத்தல் அல்லது அந்த முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது கடற்படைத் தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ள கேள்விப் பத்திர பெட்டியில் உள்ளிட முடியும். அத்துடன் கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கும் கேள்விப் பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும்.

09. இக் கேள்வி கோரல் பற்றிய மேலதிக விபரங்களை கடற்படை இணையதளம் www.novy.lk மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
வர்த்தக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகள் கொள்வனவு செய்யும் அலகு,
அரச வெடி பொருட்கள் களஞ்சியம்,
வெலிசர, ராகம.

இளையோரின் ஏற்றத்திற்கான கம்பன் கழகத்தின் புதிய திட்டம்

உலகம் தழுவி நம் ஈழத் தமிழ் இளைஞர்கள் ஆளுமை வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காக நாம் எடுக்கத் தொடங்கியிருக்கும் புதிய முயற்சி பற்றி விளக்கம் அளிப்பதற்காக இக்கட்டுரையை வரைகிறேன்.

மூன்று தசாப்தங்களாக போரின் இன்னல்களுக்கு இடையில் வளர்ந்த எமது இளைய தலைமுறை, அதனால் பல பாதிப்புகளுக்கு ஆளாகி இருக்கிறது. அப்பாதிப்புகளில் முக்கியமானதாய் நாம் கருதுவது 'ஆளுமை' இழப்பினையேயாம். இத்தனைப் பெரிய இன்னல் பாதையைக் கடந்து வந்த பின்னும்கூட நம் இளையோர், தம் அறிவாற்றலில் யாருக்கும் சோடை போகவில்லை. ஆனால், நிகழ்ந்த ஆளுமை இழப்பு என்பது அவர்கள் அடைந்திருக்க வேண்டிய உயர் நிலைகளை அடையமுடியாமல் ஆக்கியிருக்கிறது.

இதுபற்றி நானும் எனது கழக நண்பர்களும் பல காலமாக சிந்தித்து வருகிறோம். அதிகூடிய பரீட்சை சித்திபெற்ற மாணவனும் கூட, நம் மண்ணைத்தாண்டி தெற்கிற்குள் நுழைந்தால், அங்குள்ள மாணவர்களின் ஆளுமைக்கும், நிமிர்விற்கும் முன்னால் நின்று பிடிக்க முடியாமல் தளர்ந்து போகிறான். அதனால் அவன் கஷ்டப்பட்டு தேடிய தகுதிகளெல்லாம் 'விழலுக்கிறைத்த நீராய்'ஆகி விடுகின்றன.

நாம் கூடி ஆராய்ந்தபோது இதற்கான இரண்டு காரணங்களை இனங்கண்டோம். முதலாவது, இந்நாட்டில் பயிலப்படும் மொழிகளில், தமிழ்மொழி தவிர்ந்த மற்றைய மொழிகளில் நம் இளையோர்க்கு ஏற்பட்டிருக்கும் பயிற்சியின்மை. இரண்டாவது, உயர் ஆளுமையாளர்களை சந்திக்கக் கிடைக்காத வாய்ப்பிழப்பு.

நம் மண்ணில் ஆளுமையாளர்கள் இல்லையா? என உடன் கேட்பீர்கள். முற்றாய் இல்லை என நான் சொல்லமாட்டேன். ஆனால் ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த உயர் கல்வியாளர்கள், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் என்பவர்களின் ஆளுமைத்திறனோடு ஒப்பிடும்போது இன்றைய நம் சமூகத்தின் ஆளுமைத்திறன், பூச்சியத்தை அண்மித்ததாகவே இருக்கிறது. அதனால், இன்று நம் இளையோர் பதவிகளையும் பட்டங்களையும் மட்டுமே ஆளுமையாய் நினைந்து, ஏமாந்து, உயர் ஆளுமைத் தரிசனம் இன்றிக் கிடக்கின்றார்கள்.

தெற்கில் வாழ்ந்த இளையோரோ, போர்க் காலத்திலும் தனிமைப்படாது உலகத் தொடர்பைப் பேணி வந்தார்கள். அதனால் அவர்களது மொழித்திறனும் ஆளுமைத்திறனும் மிகவும் விருத்தியாகி இருக்கிறது. அவர்கள் ஆளுமைத் திறனில் முப்பதாண்டு முன்னால் பயணிக்க, நம் பிள்ளைகள் பின்னால் பயணித்தார்கள். காலம் செய்த கொடுமை இது! இதனால் அவர்களுக்கும் நம் பிள்ளைகளுக்கும் இடையிலான ஆளுமை வேறுபாடு ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது.

இந்த இடைவெளியை நிரப்பி நம்மவர்களின் ஆளுமையை வளர்ச்சியுறச் செய்து, பழையபடி மற்றவர்கள் நம் பிள்ளைகளின் நிமிர்வு கண்டு, வியக்கும் நிலைக்கு நம் சமூகத்தையும் நிமிரச் செய்யவேண்டும் என்பதற்காகவே எமது இந்தப் புதிய முயற்சியை நாம் தொடங்கியிருக்கிறோம்.

இன்று இத்தகைய ஆளுமைப் பயிற்சிக் களங்கள் பலராலும் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றிலெல்லாம் வெறும் வகுப்பு எடுக்கும் முயற்சியே செய்யப்படுகிறது. அதனால் பெரும்பயன் கிடைக்காது என்பது எம் கருத்து. அதனாற்றான், மொழிப்பயிற்சியையும் ஆளுமைத் திறனையும் செயல்முறையூடாக நம் இளைஞர்கள் பெறவேண்டும் என நாம் நினைந்தோம்.

அதற்காக, இலங்கையின் பிறபகுதிகளிலும், வெளிநாடுகளிலும் வாழும் ஆற்றல்மிக்க மொழியியல் அறிஞர்கள், ஆளுமையாளர்கள் ஆகியோருடன் நம் இளையோர்க்கான சங்கமத்தை உண்டாக்க வேண்டும் என முடிவு செய்தோம். அச்சங்கமத்தால், இலங்கையளவில் தேவைப்படும் சிங்கள மொழிப்பயிற்சியையும், உலக அளவில் தேவைப்படும் ஆங்கில மொழிப்பயிற்சியையும் இயல்பாக உருவாக்கலாம் என்றும் உயர் ஆளுமையாளர்களின் சங்கமத்தால் நம் பிள்ளைகளின் ஆளுமையை வளர்ச்சியுறச் செய்யலாம் என்றும் நாம் கருதினோம்.

அதனால், இயல்பாகவே ஆளுமைத்திறன்கொண்ட இளையோர் சிலரை இனம் கண்டு, அவர்களை வேற்று மொழியாளர்களுடனும், ஆளுமையாளர்களுடனும் ஒன்றாகத் தங்க வைத்து, மொழித்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றை பயிலச்செய்ய வேண்டும் என்பது எங்களது முதற் திட்டமாய் இருக்கிறது. ஆங்கிலத்தை ஆங்கிலய ஆசிரியர்களுடனும், சிங்களத்தை அம்மொழிசார்ந்த ஆசிரியர்களுடனும் நாள்முழுதும் உடன் இருந்து செயல்முறையால் அவர்களைப் பயிலச் செய்ய வேண்டும் என நினைத்திருக்கிறோம்.

மொழிப்பயிற்சியை ஏற்படுத்தியபின்பு, ஆளுமைமிக்கவர்களை சந்திக்கவும், அவர்களோடு உடன் இருக்கவும் செய்து, அவர்களின் ஆளுமைத்திறனை நம் இளையோர் உள்வாங்கும்படியாகச் செய்யவேண்டும் என்பது எமது அடுத்த திட்டமாய் இருக்கிறது. அதற்காக ஆளுமைமிக்க அரசியல் தலைவர்கள், நிறுவனத்தலைவர்கள், தொழிலதிபர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்திக்கச் செய்து, அதன்மூலம் நம் இளையோரின் ஆளுமைத் திறனை வளர்க்கத்தெடுக்க வேண்டும் என தீர்மானித்திருக்கிறோம்.

இராணுவ உயரதிகாரிகளைச் சந்திக்க வைப்பதன் நோக்கம், நம் இளையோர்கள் அவர்களோடு நம் பிரச்சினைகளைப் பற்றி சமநிலையில் நின்றுபேசி, தீர்வு காணும் துணிவைப் பெறுவதற்காகவும் இராணுவத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்காகவுமேயாம். யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற ஹாட்லி, சென். ஜோன்ஸ் கல்லூரிகளில் அதிபராய் இருந்த பூரணம்பிள்ளை அவர்களே முன்பு ஒருதரம், மாணவர்களது ஆளுமை வளர்ச்சிக்கான இத்தகைய ஒரு முறையை எமக்குச் சொல்லியிருந்தார்.

அதுமட்டுமன்றி, நம் இளையோர்க்கு இத்தேசத்தில் வாழும் பிற மொழிச் சமூகங்கள், பிற மதங்கள் என்பவற்றைப் பற்றியும் ஆழ்ந்த புரிந்துணர்வை உண்டாக வேண்டும் என்பதற்காக, அத்தகைய இடங்களில் நம் இளையோரை நேரடியாகத் தொடர்புபடுத்தி அனுபவம் பெறச் செய்யவேண்டும் என்பதும் எம் எண்ணமாய் இருக்கிறது.

ஒரு சிறு தேசத்திற்குள் வாழ்ந்தாலும், நம்மவர்க்கு அருகில் இருக்கும் மதங்கள் பற்றியோ, அம்மதத்தாரின்; வழிபாட்டு முறைகள் பற்றியோ பெரும்பாலும் தெரிவதில்லை. அதுபோலவே அருகிருக்கும் வேற்று இன மக்களின் வாழ்க்கை முறை, உணவுமுறை, கலாசாரம், பண்பாடு என்பவை பற்றியும் நம்மவர்கள் தெரிந்திருப்பதில்லை. இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டால் நம் இளையோரிடம் பரந்த சிந்தனையும் மற்றைய சமூகங்களுடன் சமப்பட்டு இணைந்து வாழும் திறனும் தாமாக உண்டாகும். அதனால் நம் இளையோரின் ஆளுமை மிக வேகமாக வளரும். அது மட்டுமல்லாமல் நம் இனத்தினதும், மொழியினதும், மதத்தினதும் பெருமைகளையும் மற்றவர்க்கு உணர்த்துகிற வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டும். அதனால்தான் இப்பயிற்சியில் ஈடுபடப் போகும் இளையோரை மற்றைய இன, மத, மொழி மாணவர்களுடன் கலாசாரப் பரிவர்த்தனம் செய்யவேண்டும் எனவும் திட்டமிட்டுள்ளோம்.

இவையெல்லாம் எமது கனவுகள்! ஒரு காலத்தில் இலங்கை முழுவதிலுமாக தமிழினத்தார் கொண்டிருந்த ஆளுமைமிக்கத் தலைமைத்தன்மையை மீட்டெடுக்கும் முயற்சியாகவே இத்திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம். நடந்து முடிந்த போரையும் அதன் பாதிப்புக்களையும் சொல்லிச் சொல்லி, எவ்வளவு காலத்திற்குத்தான் எம் வாழ்க்கையை நாம் ஓட்டுவது? நிகழ்கால முயற்சியால், இறந்தகாலப் பாதிப்புக்களை நீக்கி வருங்காலத்திலேனும், நம் கைவிட்டு நழுவிப்போன வீரியத்தை நாம் மீட்டெடுக்கவேண்டாமா? அதற்காகவே இலக்கிய முயற்சி எனும் எம் எல்லையைக் கடந்து இத்தகைய ஒரு பாரிய சமூகப்பணியை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.

மேற்சொன்ன திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கிளிநொச்சியில் அரசினால் எமக்குத் தரப்பட்ட ஒரு ஏக்கர் காணியில் கட்டட வேலைகளை ஆரம்பித்திருக்கிறோம். கழகத்திற்கான அலுவலகம், நூறு பேருக்கு மேற்பட்ட மாணவர்கள் தங்கக்கூடிய இருப்பிட வசதிகள், கருத்தரங்க மண்டபம், பிரார்த்தனை மண்டபம், விருந்தினர்கள் தங்குவதற்கான விடுதிகள், சமையல் கூடங்கள் முதலிய விடயங்களை உள்ளடக்கியதாக அக் கட்டடத் தொகுதிகள் அமைந்திருக்கும்.

எங்களின் இம்முயற்சிக்கு கைகொடுக்க முன்வரவேண்டுமென இனப்பற்றுள்ள அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

கம்பவாரிதி இ. ஜெயராஜ்...✍

இயல்பாகவே ஆளுமைத்திறன்கொண்ட இளையோர் சிலரை இனம்கண்டு, அவர்களை வேற்று மொழியாளர்களுடனும், ஆளுமையாளர்களுடனும் ஒன்றாகத் தங்க வைத்து, மொழித்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றை பயிலச்செய்ய வேண்டும் என்பது எங்களது முதற் திட்டமாய் இருக்கிறது. ஆங்கிலத்தை ஆங்கிலய ஆசிரியர்களுடனும், சிங்களத்தை அம்மொழிசார்ந்த ஆசிரியர்களுடனும் நாள்முழுதும் உடன் இருந்து செயல்முறையால் அவர்களைப் பயிலச் செய்ய வேண்டும் என நினைத்திருக்கிறோம்.

அரசை விமர்சிக்கும் பங்காளிக் கட்சிகள்... *(03ஆம் பக்கத் தொடர்)*

கே: முன்னாள் அரசாங்கத்தின் பலவீனம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலைமையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பதிலாக போலியான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தேசிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது. இது பற்றி உங்கள் பார்வை என்ன?

பதில்: கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமது மக்களின் சார்பாகப் பேசுவதற்கு நியாயமான காரணமும் வேதனையும் உள்ளன. அவருடைய உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவர் திருப்தியடையவில்லை. அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை விமர்சித்தார். நாட்டில் ஒரு ஜனநாயக செயல்முறை நிலைநாட்டப்படுகிறது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நானும் உறுப்பினராக இருந்த அமைச்சரவை துணைக் குழுவும் நியமிக்கப்பட்டது. அமைச்சரவை உபகுழு நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தனது சமர்ப்பணங்களை வழங்கியுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். மேலும் ஏதேனும் தகவல் இருந்தால் அதை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் தெரிவிக்கலாம்.

விசாரணைகளை துடைத்தெறிய முன்னாள் அரசாங்கம் ஏதேனும் வேண்டுமென்றே முயற்சிகளை மேற்கொண்டிருந்தால், அவற்றை தாமதமின்றி மேற்கொள்ள எங்களால் முடிந்தவரை முயற்சிப்போம். இந்த சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அனைவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசு உறுதியாகக் கடைப்பிடிக்கிறது. எவ்வாறாயினும், விசாரணைகள் பக்கச்சார்பற்ற முறையில் நடத்தப்பட்டு இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மையான குற்றவாளிகளை கண்டறிய வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் போது, ஜே.வி.பியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்து இந்த சம்பவத்தை மூடிமறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கே: நாடு உணவு நெருக்கடியை நோக்கிச் செல்கிறது என்று சில சர்வதேச ஊடகங்கள் கூறும் ஊகங்களில் உண்மை உள்ளதா?

பதில்: ஒரு அரசாங்கம் என்ற வகையில், நாட்டில் உணவு நெருக்கடியை ஏற்படுத்துவதற்கு எந்த இடமும் வழங்க மாட்டோம். அரிசி மற்றும் குறைந்த பட்சம் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன எப்போதும் அமைச்சரவைக் கூட்டங்களில் பேசுகின்றார். எங்களால் நிலைமையை கட்டுப்படுத்த முடியும். செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்த ஜனாதிபதி, தம் மீது நம்பிக்கை வைக்குமாறு மக்களிடம் கேட்டுக் கொண்டதுடன், தனது அடுத்த மூன்று வருட பதவிக் காலத்தில் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவேன் எனவும் தெரிவித்தார். பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி உறுதியளித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக நாங்கள் போர் தொடுத்த போது, சர்வதேச சமூகத்தின் உதவியுடன் அப்போதைய எதிர்க்கட்சிகள் எப்படி விமர்சித்தன என்பது மக்களுக்கு நினைவிருக்கலாம். அப்போது, தீவிரவாதிகளுக்கு எதிராக எந்த முட்டாளாலும் இது போன்ற போரை நடத்த முடியும் என்றனர். அப்போதைய எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரம் செய்த போதிலும், எங்களால் எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற முடிந்தது.

கல்வி அமைச்சு
வட்டி இல்லா மாணவர் கடன் திட்டம்
IFSLS
6வது உள்ளீர்ப்புக்கான விண்ணப்பம் கோரல் இறுதித் திகதி
2022 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 2022 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
பிரவேசிக்க வேண்டிய இணையதளம்: www.studentloans.mohe.gov.lk
பணிப்பாளர் (மாணவர் கடன்)
அரசு சாரா உயர் கல்விப் பிரிவு
கல்வி அமைச்சு

தேசிய மின் உற்பத்தி நீண்டகால அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும்

இலங்கையில் மீண்டும் ஒரு பாரிய கோவிட் 19 அலை ஒமிக்ரோன் பிறழ்வுகளோடு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் தோன்றியிருக்கிறது. நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் தொற்றாளர்களின் எண்ணிக்கை இவ்வச்சத்திற்கு வலு சேர்க்கிறது.

தென்னிந்தியாவின் தமிழகத்தில் சமீபத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து அங்கு முழு முடக்கம் அறிவிக்கப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தம். இலங்கையில் கோவிட் 19இற்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது பூஸ்டர் ஊசியை ஏற்றும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் மூலம் தொற்றுப்பரவலை கட்டுப்படுத்தலாம் என நம்பப்படுகிறது.

அண்மைய நாட்களில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொற்று பரவிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் பூரண இயல்வில் பணியாளர்களை பணிக்கு அழைத்திருக்கும் நிலை தொற்றுப்பரவல் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது. தடுப்பூசி ஒருவருக்கு நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுக்காது என சுகாதார தரப்பினர் பலதடவைகள் தொடர்ச்சியாக எச்சரித்து வருகின்றனர்.

தடுப்பூசியானது நோய் காரணமாக ஏற்படும் சிக்கல்களைக் குறைத்து மரணம் ஏற்படுவதைத் தடுக்கும் என்றே நம்பப்படுகிறது. நம்மில் பலர் மூன்று தடுப்பூசிகளையும் ஏற்றி விட்டோம் தானே பிறகெதற்கு முகக் கவசம் அணிவது ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுவது, கைகளைக் கழுவுவது என்று கேள்வி கேட்கின்றனர். படிப்பறிவற்ற பாமரர்கள் மட்டுமன்றி நன்கு படித்த உயர் பதவிகளில் உள்ள கனவான்களும் சீமாட்டிகளும் கூட அடக்கம்.

இந்நிலையில் தனிமனித ஒழுக்கமும் சுய பாதுகாப்பு நடவடிக்கைகளும் மாத்திரமே நோய்த்தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க உதவும். ஆயினும் காரியாலயப் பணிகளில் ஈடுபடுவோர் இரட்டை முகக் கவசங்களை அணிந்து சுகாதார நடைமுறைகளைப் முறையாகப் பின்பற்றினாலும் கூட தேனீர் இடைவெளிகளின் போதும் மதிய போசன இடைவெளிகளின் போதும் முகக் கவசங்களை அகற்ற வேண்டியிருக்கிறது. இந்த இடங்களே நோய்த்தொற்று ஏற்படவாய்ப் பளிக்கும் கவலைக்குரிய சந்தர்ப்பங்களாக உள்ளன. அத்துடன் பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும் பணியாளர்களால் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுவது சாத்தியமில்லை.

இலங்கையின் புகையிரத மற்றும் பேருந்துப்போக்குவரத்து வசதிகள் அந்தளவுக்கு வளர்ச்சியடையவில்லை. அரசாங்கம் சட்டம் போட்டு அதைச் செயற்படுத்த முயற்சித்த போதிலும் நடைமுறையில் அது வெற்றிபெறும் சாத்தியமில்லை.

அதேவேளை நாடு டொலருக்கு கையேந்தி நிற்கும் இன்றைய நிலையில் இப்போது தான் உல்லசப்பயணிகளின் உள்வருகை அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. இதன்மூலம் கணிசமானளவு டொலர்களை ஈட்டி தற்போதைய நெருக்கடிகளிலிருந்து ஓரளவு ஆசுவாசப்படுத்திக்கொள்ளலாம் என்று பெரும் நம்பிக்கையில் இலங்கை இருக்கிறது.

இப்போது கோவிட் 19இன் இன்னும் ஒரு அலை நாட்டில் உருவானால் இந்த நம்பிக்கை புஸ்வாணமாகிப் போய்விடும். நாட்டில் நோய்த்தொற்று அதிகரிக்கும் பட்சத்தில் உல்லாசிகளின் வருகை குறைவடையும். எனவேதான் இன்னும் ஒரு அலை நாட்டில் ஏற்படாமல் தடுப்பது இன்றைய சூழலில் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள இரட்டை நெருக்கடிகள் காரணமாக தொடர்ச்சியாக மின் விநியோகத்தை மேற்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. இலங்கை மின்சார சபையும் பெற்றோலியக் கூட்டத்தாபனமும் பொதுவெளியில் வெளியிடும் அறிக்கைகளைப் பார்க்கும் ஒருவருக்கு இவை இரண்டும் ஒரே அரசாங்கத்தின் கீழ் இயங்கும் அரசுத்துறை நிறுவனங்கள் தானா என்ற சந்தேகம் எழுகிறது. அமைச்சு மட்டத்தில் அதிகாரிகளால் மூடிய அறைகளுக்குள் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் முடிவுகளும் பொது வெளியில் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் குற்றஞ்சுமத்தி விமர்சித்து வெளிப்படுத்தப்படும்போது அரச நிருவாகமே அசிங்கப்பட்டு நிற்கிறது.

> **"எதிர்காலத்தில் வாகனங்களின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படலாம் என்று செய்திகள் வருகின்றன. மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த பின்னர் கீழே கிடப்பவனை இன்னொருவரும் வந்து உதைப்பது போல இலங்கையின் நீரேந்து பகுதிகளில் இப்போது நிலவிவரும் வரட்சி மோசமாகி வருகிறது'**

ஏற்கனவே விநியோகித்த எரிபொருளுக்கு இன்னும் காசு தரவில்லை. இதனால் மின்சார சபைக்கு எரிபொருள் தரமுடியாது என்று பெற்றோலிக் கூட்டுத்தாபனம் அறிக்கை விடுகிறது. எரிபொருள் கிடைக்காவிட்டால் அடுத்துவரும் நாட்களில் மின்சார உற்பத்தியை போதியளவில் மேற்கொள்ள முடியாது போவதால் மின்வெட்டு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று மின்சாரசபை அறிக்கை விடுகிறது. போதாக்குறைக்கு சட்டப்படி வேலை செய்கிறோம் என்று மின்சார சபை எந்திரிகள் பயமுறுத்துகிறார்கள்.

நாட்டில் மின்வெட்டு ஏற்பட அனுமதிக்கப்படாது என்று ஒரு சாராரும் மின்வெட்டு ஏற்படும் என்று இன்னொரு தரப்பினரும் கூறுகின்றனர். எது எவ்வாறாயினும் தற்போது மின் வினியோகம் அடிக்கடி தடைப்படுகிறது. அது மின்வெட்டல்ல மின்சாரத்தடை என்று காரணங் கூறுகின்றனர். மசகெண்ணெய் வராதபடியால் எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளதாக பெற்றோலியத் தொழிற்துறைத் தகவல்கள் கூறுகின்றன.

எதிர்காலத்தில் வாகனங்களின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படலாம் என்று செய்திகள் வருகின்றன. மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த பின்னர் கீழே கிடப்பவனை இன்னொருவரும் வந்து உதைப்பது போல இலங்கையின் நீரேந்து பகுதிகளில் இப்போது நிலவிவரும் வரட்சி மோசமாகி வருகிறது. இந்நிலை தொடருமாயின் மின்னுற்பத்திக்காக நீர்வழங்கலை மேற்கொள்ள முடியாதென தொடர்புடைய அமைச்சு ஊடகங்களில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தனியார் மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியம் பற்றி ஆராயப்படுவதாகவும் அறியக்கிடைக்கிறது. எது எவ்வாறாயினும் இலங்கையின் மின்னுற்பத்தித் துறையானது பாரிய நெருக்கடியில் இருப்பதுவும் நாட்டுக்குத் தேவையானளவு மின்சாரத்தை வழங்க முடியாத நிலைமை உருவாகியுள்ளமையும் வெளிப்படையாகத் தெரிகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

ஜேர்மனியின் போக்கு ரஷ்யாவின் கனவை சாத்தியமாக்குமா?

உக்ரைன் விடயம் அமெரிக்க ரஷ்யாவுக்கிடையே இராஜதந்திர போரை நிகழ்த்தி வருகிறது. இன்றைய சர்வதேச அரசியல் பரப்பினை இராஜதந்திர போரும் ஆயதப் போருக்கான தயாரிப்பும் முழுமையாக நிரப்பியுள்ளது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நகர்வுகள் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளுக்கு சவால்விடும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக உக்ரைனை மையப்படுத்தி இராணுவ குவிப்புக்களையும், பயிற்சிகளையும் திட்டமிட்டு நகர்த்தி வருகின்றார். அதற்கு போட்டியாக அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளை பலப்படுத்துவதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளையும் இராணுவ ஆயுத தளபாடக் குவிப்புகளையும் அதிகப்படுத்தி வருகின்றது. அமெரிக்க ஜனாதிபதி பைடன் புட்டினுக்கு எதிரான தனிப்பட்ட தடைகள் பற்றியும் ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதார தடைகள் பற்றியும் உரையாடல்களையும் முன்னெடுத்து வருகிறார். இக்கட்டுரை அமெரிக்க-ரஷ்ய மோதல் போக்கினையும் ரஷ்ய உக்ரைன் போர் தொடர்பில் ஐரோப்பிய நாடுகளுக்குள் ஏற்பட்டுவரும் அண்மைய போக்குகளையும்; தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சோவியத் யூனியன் என்ற அமைப்பில் இருந்த பெரிய நாடுகளில் ஒன்றாக உக்ரைன் ரஷ்யாவிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புவிசார் அரசியல் பிரதேசமாகக் காணப்படுகிறது. மொழி கலாசார அடையாளத்தில் ருசியப் பண்பாட்டை அதிகம் கொண்டதாக உக்ரையின் பிரதேசம் விளங்குவதனால் ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகின்றது. 2014ஆம் ஆண்டில் உக்ரைனின் கிரிமியா பகுதியை ஆக்கிரமித்தபோதும் தன்னுடைய அங்கமாகவே மக்களின் பண்பாட்டு மற்றும் நிலத்தொடர்ச்சி அடையாளங்களை முன்னிறுத்தியது ரஷ்யா அதேநேரம் உக்ரைனின் மற்றொரு சிறப்பியல்பாக அந்த நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் மேற்கு ஐரோப்பிய கலாசாரத்தோடு இணைந்தவர்களாய் காணப்படுகின்றனர்;. அத்துடன் உக்ரைன் மக்கள் தடையற்ற பொருளாதாரம் அதிக ஜனநாயக உரிமைகள் மேற்கத்தேய நாடுகளின் நுகர்வுக்கலாசாரம் பொழுதுபோக்குகளால் ஈர்க்கப்பட்டவர்களாய் உள்ளனர். அம்மக்கள் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பாடான வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்ட மேற்குசார் தாராள ஜனநாயக முறைமைக்குள் வாழ அதிக நாட்டத்தை வெளிப்படுத்துகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே உக்ரைன் அரசாங்கமும் நேட்டோவுடன் இணைவதற்கான தனது விருப்பை வெளிப்படுத்தியது. ஆனால் அதன் புவிசார் அரசியலானது ரஷ்யாவை அதிகம் மையப்படுத்தியதாகவும் ரஷ்யாவின் பாதுகாப்பு அரணாகவும் காணப்படுகிறது.

ரஷ்யா தனது நிலமாக கருதும் உக்ரைன் அமெரிக்கா தலையிலான நேட்டோ பாதுகாப்பு கூட்டினுள் இணைந்து கொள்வதனை முழுமையாக நிராகரித்து வருகின்றது. இதனை மையப்படுத்தியே கடந்த ஆண்டு(2021) இறுதியிலிருந்து ரஷ்யஉக்ரைன் எல்லைப்பகுதியில் ரஷ்ய இராணுவ பிரசன்னத்தை அதிகரித்;து வருகிறது. ரஷ்ய உக்ரைன் பதட்டமானது நேட்டோவை மையப்படுத்தியே அமெரிக்க ரஷ்ய மோதலாக சர்வதேச அரசியல் மாறுகிறது. குறிப்பாக ரஷ்யா முன்வைத்த நிபந்தனைகளை நிராகரித்த அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அந்தோனி பிளிங்கன் ரஷ்யாவுக்காக நேட்டோவின் கொள்கைகளில் ஒருபோதும் மாற்றம் செய்யப்படாது. உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தால் அதற்கு எதிராக நடவடிக்கைகள் குறித்தும் அந்த நாட்டுடன் சமரம் பேச முடியாது" எனக்குறிப்பிட்டது. அவ்வாறே நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க் "உக்ரைன் விவகாரத்தில் எங்கள் நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துரைப்பதற்காக ரஷ்யாவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எங்கள் அமைப்பின் பாதுகாப்பு மற்றும் உறுப்பினர் சேர்க்கைக் கொள்கையில் எந்த சமரசமும் செய்து கொள்ளப்பட மாட்டாது"; எனத்தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் அமெரிக்கா நேட்டோ கூட்டை பலப்படுத்தும் வகையில் இராஜதந்திர செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதனடிப்படையிலேயே அந்தோனி பிளிங்கன் கடந்த வாரம் உக்ரைன் சுவிஸர்லாந்து ஜேர்மனிக்கான இராஜதந்திர விஜயங்களை மேற்கொண்டு நேட்டோ மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் தலைவர்களுடன் முக்கிய சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஐரோப்பா மற்;றும் நேட்டோவின் நட்பு நாடுகளின் தலைவர்களுடன் ஜனவரி24(2022)அன்று இணையவழி சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார். சந்திப்பின் நிறைவில் "நான் ஒரு மிக நல்ல சந்திப்பை மேற்கொண்டுள்ளேன். அனைத்து ஐரோப்பிய தலைவர்களுடனும் ஒருமித்த கருத்து காணப்படுகிறது." என செய்தியாளர்களிடம் பைடன் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐரோப்பா நாடுகளுடனான அமெரிக்காவின் இராஜதந்திர நகர்வுகளில் சந்தேகப் பார்வைகளே சர்வதேச அரசியல் பரப்பில் நிலவுகிறது. வர்த்தகத்தை மையப்படுத்தி கட்டமைக்கப்பட்டுவரும் புதிய உலக ஒழுங்கில் ஐரோப்பா நாடுகளுடன் ரஷ்யா கொண்டுள்ள பொருளாதார உறவுகள் ஐரோப்பா நாடுகளை ஒன்றிணைத்து பலமான அணியைக் கட்டமைக்க முனையும் அமெரிக்கா அதிக நெருக்கடியை எதிர் கொண்டு வருகிறது. இதனை விரிவாக நோக்குதல் அவசியமாகிறது.

முதலாவது பிரான்ஸ் ஜேர்மனி ஆகிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடையே அமெரிக்கா தலைமையிலான நேட்டோவை தவிர்த்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கென தனித்துவமான பாதுகாப்பு கூட்டை உருவாக்க வேண்டுமென்ற உரையாடல் சமீப காலமாக முதன்மை பெறுகிறது. குறிப்பாக அமெரிக்கா-இங்கிலாந்து-அவுஸ்ரேலியா இணைந்து மேற்கொண்ட ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் பிரான்ஸிற்கு அமெரிக்கா துரோகமிழைத்ததாக பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கடுமையாக சாடியிருந்தன. அதுமட்டுமன்றி ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் கடந்த ஆண்டு (2021) ஆகஸ்டில் முழுமையாக வெளியேறியமை தொடர்பில் ஐரோப்பிய நாடுகளுக்கு கடும் அதிருப்தி காணப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் கடந்த ஆண்டு செப்டெம்பர் ஐரோப்பிய பாராளுமன்ற உரையில் "பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் உலகளாவிய நெருக்கடிகளை எதிர்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் அதன் இராணுவத் திறனை அதிகரிக்க முற்பட வேண்டும். ஐரோப்பிய ஒன்றிய இராணுவப் படைகள் தீர்வின் ஒரு பகுதியாக இருக்கும்" என்று தான் நம்புவதாக கூறியுள்ளார். பிரான்ஸ் நடப்பாண்டில் (2022) ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு உச்சி மாநாட்டை நடத்தும்" என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இரண்டு ரஷ்யா-உக்ரைன் விவகாரம் தொடர்பில் அமெரிக்கா தலைமையில் நேட்டோவின் நகர்வுகளுக்கு புறம்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் தனித்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. உக்ரைனும் ரஷ்யாவும் ஜனவரி 26 (2022) பாரிஸில் உள்ள எலிஸி அரண்மனையில் ஜேர்மனி மற்றும் பிரான்சின் பிரதிநிதிகளுடன் நோர்மண்டி வடிவத்தின் கீழ் பேச்சுவார்த்தை நடத்தினர். 2019ஆம் ஆண்டுக்குப் பிறகு இது போன்ற பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். உக்ரைனின் எல்லையில் மாஸ்கோவின் சமீபத்திய இராணுவக் கட்டமைவு தொடங்கியதிலிருந்து இதுவே முதல் முறையாகும். பாரிசில் எட்டு மணிநேர பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு வெளியிடப்பட்ட ஒரு கூட்டு அறிக்கையில் ரஷ்யா உக்ரைன் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் பிரதிநிதிகள் நிபந்தனையற்ற போர்நிறுத்த உடன்படிக்கையை ஆதரித்தனர். செப்டம்பர்-2014இல் கையெழுத்திடப்பட்ட மின்ஸ்க் ஒப்பந்தமும் கிழக்கு உக்ரைனில் சண்டையை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் தோல்வியடைந்தது. எவ்வாறாயினும் பிரான்ஸ் ஜேர்மனி அமெரிக்காவை தவிர்த்து ரஷ்யா உக்ரைன் விவகாரத்தை கையாள எத்தனிக்கின்றது என்பது உறுதியாகிறது.

மூன்றாவது ஜேர்மனியின் புதிய அரசாங்கம் ஜேர்மனி சுதேச தயாரிப்பான ஹோவிட்சர் பீரங்கிகளை உக்ரேனுக்கு மாற்ற நேட்டோ நட்பு நாடான எஸ்டோனியாவை தடுத்துள்ளது. அதே நேரத்தில் ஜேர்மனியின் கடற்படைத் தலைவர் கேஅச்சிம் ஷான்பாக் கிரிமியா உக்ரைனுக்குத் திரும்பாது என்றும் ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் மரியாதைக்குரியவர் என்றும் கூறியுள்ளார். அது மட்டுமல்ல அவர் தனது பதவியையே இராஜினாமா செய்துள்ளார். எனவே இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஜேர்மனி ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே முன்னெடுத்துவருகிறது. ஐரோப்பாவுடன் நெருக்கமான உறவை உருவாக்கத் திட்டமிடும் ரஷ்யா அமெரிக்காவை ஐரோப்பாவிலிருந்து அகற்றுவதற்கு முன்னர் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வெளியேற்றும் உபாயத்தை முன்நிறுத்தியுள்ளது.

எனவே இரு தரப்புக்குமான போரை அதிகம் நோக்கிய நகர்வு காணப்படுவதுடன் இராஜதந்திர ரீதியான நடவடிக்கையும் நிகழ்ந்துவருகிறது. அமெரிக்க ஜனாதிபதி தொடர்ச்சியாக உக்ரையின் ஆளும் தரப்புடன் போரைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ரஷ்யா மீது மிரட்டலை விடு;க்கவும் அதிக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். பதிலுக்கு முன்னாள் சோவியத் யூனியன் கனவுடன் தனது உத்திகளை வகைப்படுத்திவரும் ரஷ்யா ஜனாதிபதி ஏறக்குறை ஒரு போருக்கு தனது படைகளை தயாராக்கிவிட்டார். ஐரோப்பாவின் ஒத்துழைப்பு இல்லாத நிலை அமெரிக்காவுக்கு ஏற்படுமாயின் இந்த போரில் அதிக நெருக்கடியை அமெரிக்கா சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். அதே நேரம் அமெரிக்காவின் கூட்டுபாதுகாப்பு இராணுவ பலவியூகம் ரஷ்யாவுக்கு அதிக பாதிப்பினை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. ரஷ்யாவுக்குரிய புவிசார் அரசியல் பலமும் அமெரிக்க தலைமையிலான நோட்டோவுக்குரிய கூட்டுப் பாதுகாப்புப்பலமும் மோதலுக்கான இருப்பினை தீர்மானிக்க கூடியதாக உள்ளது.

நாடு முடக்கப்படுவதற்கான அவசியம் கிடையாது!

பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள மக்கள் தயங்கக் கூடாது!

வலியுறுத்தி சொல்கிறார் சுகாதார மேம்பாட்டு பணியக பணிப்பாளர் ரஞ்சித் பட்டுவந்துடாவ

நோய் அறிகுறிகள் தென்படாத நிலையில் பலர் சமூகத்தில் இருப்பதால் தொற்றலைகளில் இருந்து தப்பிக் கொள்வதற்கான ஒரே வழி பூஸ்டர் தடுப்பூசி மட்டுமே!

தற்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் காணப்படும் காய்ச்சல், தடிமனுடன் கூடிய நோய் நிலை, கொவிட் 19 தொற்றின் ஒமிக்ரோன் பிறழ்வு, பூஸ்டர் டோஸ் வழங்கும் நடவடிக்கை மற்றும் மக்கள் முன்பாக உள்ள பொறுப்பு என்பன தொடர்பில் சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டு பணியகப் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்ஜித் பட்டுவந்துடாவ 'தினகரன் வாரமஞ்சரி'க்கென அளித்த விசேட பேட்டி.

கேள்வி: *நாட்டில் காய்ச்சலையும் தடிமனையும் பிரதான அறிகுறிகளாகக் கொண்ட நோய்கள் பல பிரதேசங்களிலும் பரவியுள்ளமை தொடர்பில் சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?*

பதில்: தற்போது காய்ச்சலுடன் கூடிய நோய் நிலைமை நாட்டில் காணப்படுகிறது. அவ்வாறான நோய்க்குறிகளில் முக்கியமாக மூன்று விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது இந்த நோய அறிகுறிகளுக்கு ஒன்றில் நுளம்புகளால் பரப்பப்படும் டெங்கு நோய் காரணமாகவும் இருக்கலாம் அல்லது கொவிட் 19 தொற்றாக இருக்கலாம். இல்லாவிட்டால் வேறு வைரஸ் நோய் காரணமாக இருக்கலாம். அதனால் இந்நோய்கள் குறித்து அதிக முன் அவதானத்துடன் செயற்பட வேண்டும். குறிப்பாக டெங்கு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு தற்போதைய சூழலில் காய்ச்சலுடன் கூடிய நோய் நிலை காணப்படுமாயின் அது டெங்காக இருக்கலாம். அவ்வாறு இல்லாவிடில் கொவிட் 19 தொற்றுடன் தொடர்புள்ளவர்கள் அதிகமான பிரதேசமாயின் அந்த அறிகுறிகளுக்கு கொவிட் 19 தொற்று காரணமாக அமையலாம்.

அதேநேரம் இவையிரண்டுமில்லாத சுவாசத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட வேறு நோய்களும் நாட்டில் தற்போது காணப்படவே செய்கின்றன. எனவே நோய் அறிகுறிகள் அதிகளவில் காணப்படுமாயின் தாமதியாது மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசியம்.

கேள்வி: *டெங்கு, கொவிட் 19 தொற்றின் ஒமிக்ரோன் பிறழ்வு, எலிக் காய்ச்சல் மாத்திரமல்லாமல் புதியதொரு வைரஸ் நோயும் நாட்டில் காணப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கூறியுள்ள சூழலில் சீனாவில் புதிதொரு வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறதே?*

பதில்: சீனா போன்ற நாடுகளில் அடிக்கடி வைரஸுகள் உருவாகின்றன. அந்த வகையில் தற்போது புதியதொரு வைரஸ் அங்கு கண்டுபிடிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனமும் குறிப்பிட்டுள்ளது. என்றாலும் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வைரஸினால் இலங்கைக்கு இப்போதைக்கு அச்சுறுத்தல் கிடையாது. அது குறித்து அச்சம் கொள்ளவும் தேவை இல்லை.

மேலும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டிருப்பது சில நேரம் இன்புளுவென்ஸா வைரஸாக இருக்கலாம் அல்லது சுவாசத் தொகுதி தொற்றுடன் சம்பந்தப்பட்ட வைரஸாக இருக்கலாம். மற்றபடி விசேட வைரஸாக இராது.

கேள்வி: *தற்போது நாட்டில் பதிவாகும் கொவிட் 19 தொற்றுகளில் 95 வீதமானவை ஒமிக்ரோன் பிறழ்வு எனக் கூறியுள்ளமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன?*

பதில்: ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் நீலிக்கா மாளவிகேயின் ஆய்வு கூடத்திலும் சுகாதார அமைச்சின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலும் தற்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் மாதிரிகளில் 90 - 95 வீதமானவை ஒமிக்ரோன் பிறழ்வு தொற்றையே பெறுபேறாக வெளிப்படுத்துகின்றன. டெல்டா பிறழ்வு தொற்றுக்கு உள்ளாகின்றவர்களாக 05 வீதத்திற்கும் குறைவானவர்களே அடையாளம் காணப்படுகின்றனர். இப்பரீட்சிப்பு பெறுபேற்றின் அடிப்படையில் தான் சமூகத்திலும் இவ்வாறான நிலைமை காணப்பட முடியும் எனக் கருதுகின்றோம். என்றாலும் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் தற்போது ஒமிக்ரோன் பிறழ்வு காணப்படுகின்றது.

கேள்வி: *அவ்வாறெனில் தற்போது நாட்டில் காணப்படும் காய்ச்சலுடன் கூடிய நோய் நிலையானது ஒமிக்ரோன் தொற்று நோய் நிலை எனக் கருத முடியுமா?*

பதில்: இல்லை. அவ்வாறு கருத முடியாது. ஒமிக்ரோன் தொற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பரிசோதனை செய்தாக வேண்டும். இந்த ஒமிக்ரோன் பிறழ்வில் பி 1, பி 2 என இரு உப பிரிவுகள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இரண்டும் ஒரே விதமான பிரிவுகள் என்றாலும் இரண்டாவது பிரிவு தான் அதிகசெல்வாக்கு மிக்கது. இதேநிலை தான் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றது.

என்றாலும் இப்பிறழ்வு தொற்றுக்குள்ளாகி இருப்பதை பரிசோதனை மூலமே அடையாளம் காண முடியும். அதேநேரம் இத் தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்கு அதிக தலைவலி அறிகுறியாக வெளிப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கேள்வி: *ஒமிக்ரோன் பிறழ்வு பரவி வருவதால் உலகின் பல நாடுகள் உட்பட எமது அயல்நாடான இந்தியாவின் சில மாநிலங்களிலும் தனிமைப்படுத்தல் ஊடரங்கு, முடக்க நிலை உள்ளிட்ட பல கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளன. அவ்வாறான நிலை இலங்கையில் மீண்டும் ஏற்படுமா?*

பதில்: அவ்வாறான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இந்நாட்டில் மீண்டும் முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படுமென நான் கருதவில்லை. இங்கு கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியைப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். இந்நாட்டில் 100 வீதமானவர்கள் இதத டுப்பூசியின் முதலாவது டோஸையும், 85 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள். இரண்டாவது டோஸையும் பெற்றுள்ளனர். பூஸ்டர் டோஸை இற்றைவரையும் 40 வீதமானோர் பெற்று இருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமை இந்தியாவில் இல்லை. அதனால் இந்தியாவைப் போன்று இத் தொற்று கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகளை இங்கு முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்படாது.

கேள்வி: *கொவிட் 19 தொற்றின் மூன்றாவது அலை கடும் சிரமங்களுடன் தான் ஏற்கனவே இங்கு கட்டுப்படுத்தப்பட்டது. அப்படியிருந்தும் தற்போது ஒமிக்ரோன் பிறழ்வு பரவுவதற்கான காரணம் யாதெனக் கருதுகிறீர்கள்?,*

பதில்: இப்பிறழ்வானது கொவிட் 19 தொற்றின் ஏனைய பிறழ்வுகளை விடவும் மிக வேகமாகப் பரவக்கூடியதாகும். அதன் விளைவாகவே இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் கொவிட் 19 தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களான முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்டவற்றை சிரத்தையுடன் பின்பற்ற வேண்டும்.

கேள்வி: *சளிப் பிரச்சினை கொண்ட ஒருவர் அன்டிஜன் அல்லது பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டால் 'பொசிட்டிவ்' தான் பெறுபேறாக கிடைக்கப்பெறும் என்ற அபிப்பிராயம் மக்களிடம் காணப்படுகிறதே?*

பதில்: தற்போதைய சூழலில் ஒவ்வொருவருக்கும் இப்பரிசோதனையை செய்ய வேண்டிய தேவை இல்லை. ஆனால் நோயறிகுறிகள் தீவிரமாகக் காணப்படுமாயின் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக இப்பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் நோய் அறிகுறிகள் வெளிப்படாத நிலையில் நிறைய ஒமிக்ரோன் தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கவே செய்கின்றனர். அதனால் எமது சுகாதார அமைச்சு கொவிட் 19 தொற்றுக்கான நோய் அறிகுறிகளைக் கொண்டிராதவர்களுக்கு இவ்விதமான பரிசோதனைகள் அவசியமில்லை என்ற வகையில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தி இருந்த விதிகளில் திருத்தங்களை செய்துள்ளது.

> 'சீனா போன்ற நாடுகளில் அடிக்கடி வைரஸுகள் உருவாகின்றன. அந்த வகையில் தற்போது புதியதொரு வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனமும் இது தொடர்பில் அறிவித்துள்ளது. எனினும் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வைரஸினால் இலங்கைக்கு இப்போதைக்கு அச்சுறுத்தல் கிடையாது. அது குறித்து அச்சம் கொள்ளவும் தேவை இல்லை' பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக உடலின் நோயெதிர்ப்புச்சக்தி மேலும் பலமடைகிறது. ஆனால் தற்போதைய சூழலில் ஒருவருக்கு ஏதாவது ஆரோக்கிய ரீதியிலான பிரச்சினைகள் ஏற்பட்டால் அதனை இத்தடுப்பூசியுடன் தொடர்புபடுத்துகின்றார்கள். அதில் எவ்வித உண்மையும் இல்லை.

கேள்வி: *பூஸ்டர் டோஸ் வழங்குதலின் தற்போதைய நிலைமை எவ்வாறுள்ளது? அது அதிக பக்கவிளைவுகள் கொண்டதாகக் கூறப்படுகிறதே?*

பதில்: நாட்டில் பூஸ்டர் டோஸ் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இற்றை வரையும் ஐந்து மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் இத்தடுப்பூசி டோஸைப் பெற்றுள்ளனர். தினமும் சுமார் 30 ஆயிரம் பேர் இந்த டோஸைப் பெற்றுக்கொள்கின்றனர். அதனால் ஏனையவர்களும் இந்த டோஸைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேநேரம் பூஸ்டர் டோஸ் அவ்வாறு பாதிப்பான ஒன்றல்ல. ஆனாலும் சுமார் 5 வீதமானோருக்கு பக்கவிளைவுகள் ஏற்பட்டுள்ளன. 90 வீதத்தினருக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக உடலின் நோயெதிர்ப்புச்சக்தி மேலும் பலமடைகிறது.

ஆனால் தற்போதைய சூழலில் ஒருவருக்கு ஏதாவது ஆரோக்கிய ரீதியிலான பிரச்சினைகள் ஏற்பட்டால் அதனை இத்தடுப்பூசியுடன் தொடர்புபடுத்துகின்றார்கள். அதில் எவ்வித உண்மையும் இல்லை.

மேலும் இந்நாட்டின் சில பிரதேசங்களில் முதலிரு டோஸ்களாக பைஸரைத் தான் ஏற்றியுள்ளோம்.

முதலிரு டோஸாக பைஸர் டோஸ் பெற்றவர்களும் பூஸ்டர் டோஸாக பைஸர் டோஸைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினை இல்லை. இஸ்ரேல் நாலாவது டோஸாகவும் பைஸரையே தன் பிரஜைகளுக்குப் பெற்றுக்கொடுத்திருப்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

கேள்வி: *நிறைவாக, நாட்டு மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?*

பதில்: ஒமிக்ரோன் தொற்றை எதிர்கொள்ள பூஸ்டர் டோஸைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியம். அத்தோடு எதிர்காலத்தில் வேறு திரிபுகள் ஏற்பட்டாலும் அவற்றுக்கு முகம் கொடுக்கவும் பூஸ்டர் டோஸ் பெரிதும் உதவும். பூஸ்டர் டோஸ் பெற்றுள்ளவர்கள் கொவிட் 19 தொற்றின் நெருக்கடிகளுக்கு உள்ளாவதும், வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் சந்தப்பங்களும், ஒட்சிசன் சிகிச்சையின் தேவையும் மாத்திரமல்லாமல் உயிராபத்து அச்சுறுத்தலும் பெரிதும் குறைவடையும். இவ்வாறு எல்லாமே குறைவடைந்தே காணப்படும்.

அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் பூஸ்டர் டோஸைப் பெற்றுக் கொள்வதும், வீட்டை விட்டு வெளியே செல்லும் போது முகக்கவசம் அணிந்து கொள்வதும், சமூக இடைவெளியைப் பேணிக்கொள்வதும், மக்கள் அதிகளவில் கூடியுள்ள இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்வதும் மக்களின் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும்.

பேட்டி கண்டவர்:

மர்லின் மரிக்கார்...✍

மனிதனின் துடிப்பு பன்றியின் பையில்

தென் ஆபிரிக்காவின் கேப் டவுன் பல்கலைக்கழக, க்ரூட் ஷ்ர் மருத்துவமனையில் (Groote Schuur Hospital), 1967ஆம் ஆண்டு கிறிஸ்டியன் பெர்னாட் (Christian Bernard) எனும் சத்திரசிகிச்சை நிபுணரால் நடத்தப்பட்ட இதய மாற்று அறுவை சிகிச்சையே (Heart Trans Plant Surgery) உலகின் முதல் மனித இதயமாற்று சத்திர சிகிச்சையாக பதிவாகி உள்ளது.

அதன் தொடர்ச்சியாக 1969ம் ஆண்டு அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் வைத்திய நிபுணர் டென்டன் ஆர்தர் கூலி (Dr. Denton Arthur Cooley) என்பவரால் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்ட முதல் செயற்கை இருதய மாற்று அறுவை சிகிச்சை, அதன் பின்னரான பாரிய, வியத்தகு மருத்துவ, விஞ்ஞான, அறிவியல் வளர்ச்சி, இன்று மிருக இனமான பன்றியின் இருதயத்தை மனிதனுக்கு பொருத்திய மற்றொரு சாதனையை வெற்றிகரமாக அரங்கேற்றி உள்ளது ,

அண்மையில் அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாண மேரி லாண்ட் பல்கலைக்கழக வைத்திய சாலையில் (University Hospital of Maryland) இதய செயலிழப்புடன் அனுமதிக்கப்பட்ட 57 வயதுடைய டேவிட் பென்னட் என்பவருக்கே பன்றியின் இருதயம் பொருத்தப்பட்ட இந்த சத்திர சிகிச்சை சாதனை படைக்கப்பட்டுள்ளது.

உலகின் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் சிலர் இணைந்து, ஏற்படுத்திய இந்த சாதனையானது, உறுப்புகளின் மாற்றீடு அவசியமான மனித நோயாளிகளுக்கு விலங்குகளின் உறுப்புகளை வழங்க முடியும் என்கிற நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி உள்ளது இன்றைய மருத்துவ உலகிற்கு.

உலகெங்கிலும் உள்ள மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் பல தசாப்தங்களாக விலங்குகளின் உறுப்புகளை மனிதர்களுக்கு இடமாற்றம் செய்வதை இலக்காகக் கொண்டு செயல்பட்டு வந்த நிலையில் இந்த பன்றியின் இதய மாற்றீட்டை வெற்றியின் முக்கிய படி என்றே கொள்ள வேண்டும்.

மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பென்னட் ஏறக்குறைய இரண்டு மாதங்களாக ஒழுங்கற்ற இதயத் துடிப்புடன் இருதய ஆதரவு தேவைப்படும் நிலையில் இருந்தார் என சொல்லப்படுகிறது. மாற்று அறுவை சிகிச்சையில் பயன்படுத்தப்பட்ட பன்றியின் இதயமானது பல மரபணு மாற்றங்களுடனேயே பென்னட்டிற்கு பொருத்தப்பட்டதாக தெரிவித்தனர் சத்திர சிகிச்சை மேற்கொண்ட நிபுணர்கள்.

அறுவைசிகிச்சை நன்றாக நடந்தது எனவும் இதயத்தின் செயல்பாடு நன்றாக இருக்கிறது எனவும் தெரிவித்த குழுவின் தலைவர் Dr.மொஹிதீன், தனது குழுவினர் பென்னட்டின் நோயெதிர்ப்பு செயல்பாட்டையும் அவரது இதயத்தின் செயல்திறனையும் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

பென்னட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட இந்த செயல்முறை வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டால், மேலும் பல நாடுகளின் மருத்துவ குழுக்கள் இதே போன்ற அறுவை சிகிச்சைக்கு முயற்சிக்க முடியும் எனவும் ஆனால் ஒரு நோயாளி பன்றியின் உறுப்புக்கு தகுதியுடையவர் என்பதை வரையறுக்க வேண்டும் என்றும் அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழக மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் ஜெர்மி சாப்மேன் கூறினார்.

மேலும், இதுபோன்ற மாற்று சிகிச்சைக்கு முனையும் மருத்துவர்கள் பன்றி இதயத்தின் உடலியலைப் படிக்க வேண்டும் எனவும் அது மனித இதயத்தின் அதே விகிதத்தில் துடிக்குமா மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் ஆரோக்கியமான மாற்று அறுவை சிகிச்சைக்கு எதிர்வினையாற்றுவார்களா என்பன போன்ற விடயங்களில் மிக நுட்பமாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த இதய மாற்று அறுவை சிகிச்சைக்கு சுமார் 8 மணி நேரம் எடுத்தது எனவும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்த பின்னர் தற்போது வாழ்க்கை ஆதரவுகள் (life support) அனைத்தும் அகற்றப்பட்ட நிலையில் பென்னட் நலமுடன் இருக்கிறார் என வும் வைத்தியசாலையின் பிந்தைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17ம் நூற்றாண்டிலிருந்தே முன்னெடுக்கப் பட்டுவரும் விலங்கினங்களின் ரத்தத்தை மனிதர்களுக்கு செலுத்தும் முயற்சிகளின் ஆரம்பமாக செம்மறி ஆட்டின் ரத்தத்தை சிறுவன் ஒருவனுக்கு செலுத்திய இரத்த மாற்று நிகழ்வு பிரான்ஸ் நாட்டில் முதன் முதலாக பதிவாகியது.

பின்னர் 19ம் நூற்றாண்டு முதலே விலங்கினங்களின் தோல் பகுதிகளை மனிதர்களுக்குப் பொருத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 1838இல் முதன்முறையாக பன்றியின் விழிவெண்படலம் (Cornea)) மனிதன் ஒருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது. 1960இல் குரங்குகளின் சிறுநீரகத்தை மனிதர்களுக்கு பொருத்தும் அறுவை மாற்று சிகிச்சையை மேற்கொண்டார் அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் (New Orleans) நகரத்தை சேர்ந்த ரீம்ட்ஸ்மா என்கிற அறுவை சிகிச்சை மருத்துவர். இவர் சோதனை நடாத்திய 13 பேரில் ஒரே ஒருவர் மட்டுமே மூன்று மாதங்கள் உயிர் வாழ்ந்தார். பின்னர் 1964 இல் மனிதக் குரங்கின் இதயம் மனிதன் ஒருவருக்குப் பொருத்தப்பட்டு அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. 1996இல் பரூவா என்கிற அறுவை சிகிச்சை மருத்துவர், 32 வயது பூர்னோ சைக்யா என்பவருக்கு பன்றியின் நுரையீரலையும், இதயத்தையும் மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்த முற்பட்டு, அந்த நோயாளியும் இறந்தது மட்டுமல்லாது, முன் அனுமதி இல்லாமல் இந்த சோதனையை நடத்தியதற்காக மருத்துவர் பரூவா கைது செய்யப்பட்டு, தனது மருத்துவர் பட்டத்தையும் இழக்க நேர்ந்தது. இந்த தோல்வி நிகழ்வுதான் பன்றி ஒன்றின் இதயத்தை மனிதர்களுக்குப் பொருத்தும் முதல் முயற்சியாக பதியப்பட்டுள்ளது.

மனித உடலிலுள்ள எதிர்ப்பு சக்தி அந்நிய உறுப்புக்கள் எதையும் ஏற்றுக்கொள்ளாது என்பதால், பன்றிகளின் மரபணுக்கள் மாற்றப்பட்டே அவை பயன்படுத்தப் படுகின்றன. இதனால் அவை நிராகரிக்கப்படாமல் சரியாக வேலை செய்யும் என எதிர் பார்க்கிறது மருத்துவ உலகம்.

ஏனைய விலங்கினங்களைவிட, பன்றியின் உறுப்புகள் மனித உறுப்புகளுடன் அதிகம் பொருந்துவதாக கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக அறியப்பட்டுள்ளதால், இதற்காகவே அமெரிக்க நிறுவனம் ஒன்று பண்ணை ஒன்றை ஏற்படுத்தி அதில் மரபணு மாற்றப்பட்ட பன்றிகளை வளர்க்கிறது.

மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக விலங்கினங்களை பலியிடலாமா...? என்கிற மனிதாபிமான கேள்விக்கு, விலங்குகளைக் கொன்று மாமிசமாக உட்கொள்ளும்போது மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக விலங்குகளின் உறுப்புகளை பொருத்துவதில் தவறில்லை என்கிறார்கள் மருத்துவர்கள்.

அதேவேளை பன்றி உள்ளிட்ட விலங்கினங்களின் உறுப்புகளை மனிதர்களுக்குப் பொருத்தும் முயற்சியில் சில ஆபத்துகளும் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. எவ்வளவு காலத்திற்கு அந்த உறுப்புகள் மனித உடலில் செயல்படும் என்பதும். அதனால் பக்கவிளைவுகள் ஏற்படுமா என்பதும் தெரியாத நிலையிலேயே தற்போதைய மாற்றீட்டு அறுவை சிகிச்சையும் நடாத்தி முடிக்கப் பட்டுள்ளது.

கோவை நந்தன்...✍

நீங்களும் பார்ப்பதற்கு...

காரையன் கதன்

ஒடுங்கிய பாலத்தில்
வழிவிட முடியாத வாகனச் சண்டையில்
ஓய்வு கொள்கிறது எனது வாகனமும்
கண்ணாடியை இறக்கி
எட்டிப் பார்க்கிறேன்
டயர்கள் திடீர் நப்புக்களை உருவாக்கி
கதைத்துக் கொள்கிறது
சூடு தணித்த பாதையில்
கானல் நீர்கள் தாகம் தீர்க்க
டயர்கள் புது குழுமமே வாட்சாப்பில்
தொபங்கி விட்டது
அவசரமாக கண்ணாடியை உயர்த்திவிட்டு
சண்டையை பார்க்கிறேன்
யாரும் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை
சட்டங்கள் வரமட்டும்
டயர்கள் எல்லாம் சந்தோஷமாக
இருக்கட்டும்
ஏற்றிய கண்ணாடியை
மீண்டும் இறக்கி விடுகிறேன்
நீங்களும் பார்ப்பதற்கு

வழி பிறக்கும்

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

ஓடி ஓடி உழைத்தால்
ஓடி விடும் களைப்பு

தேடி தேடி உதவினால்
தேடிவரும் நலவு

பிறர் நலன் காத்தால்
நன்மை நடக்கும் நமக்கு

நாவை பேணி கொண்டால்
நால்வர் புகழ் உண்டு

பெறுமை வருமை பட்டால்
தன்னடக்கம் தழைப்பதுண்டு

சாந்தம் அதிகம் செய்தால்
மன அழுத்தம் மறைவதுண்டு

தாங்கும் திறன் தரும்
அதிர்ச்சி குறைக்கும் வரம்

செயல்களில் எல்லை இருப்பின்
ஏக்கம் எழுவது குறையும்

நடத்தை சீரானால்
ஒழுக்கம் அரணாகும்

நடுநிலை மனதானால்
துக்கபடிநிலை குறையும்

விரும்பி வேலை செய்தால்
வெறுப்பு வெறுமை காணும்

நிதானமாய் நின்றால்
கோபம் நில்லாமல் ஓடும்

புரிதல் பூத்து விட்டால்
பிரிதல் வாடிப்போகும்

இவை அனைத்தும்
நம்மிடம் இருந்தால்
வாழ்வு சிறக்க
வழி பிறக்கும்

தாயின் டயறி

என். பாரத்,
மானிப்பாய்

அழித்து விடு என்றனர்
நானோ
வளர்ப்பேன் என்றேன்
ஒருவர் இருவர் ஆனோம்
உறவு என்னை வெறுத்தது
வறுமை என்னை வஞ்சித்தது
பாலும் பச்சைத் தண்ணியாகியது
இதயமும் துடிக்காமலே போனது
பணத்தை தேடி அலைந்தேன்
உடம்பே பணம் என
உண்டவர்கள் சொன்னார்கள்
ஊன் உண்ணிகள் என்னை
உண்கிறது
கண்மணியோ என் மடியினுள்
தூங்குகிறாள்
என் கதையினை கேட்டவண்ணம்

கல்லூரி நாட்கள்

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

அடிமனதில் ஆணிவேராய்
பதிந்ததுவே
கல்லூரிநாட்கள்!

கண்மூட முடியவில்லை
கண்ணுக்குள்
அதன்நிழல்கள்!

செதுக்கிய முத்துக்களாய்
கரும்பலகை எழுத்துக்கள்!

அழியா ஓவியமாய்
அரங்கேறிய கலைநிகழ்வுகள்!

பட்டாம்பூச்சிகளாய்
கைக்கோர்த்த நிமிடங்கள்!

நடுநிசி தெரியாமல்
பரீட்சைக்காக
படித்தஇரவுகள்!

கண்மூடி நினைத்துப்பார்
நம் கல்லூரி நாட்களை!

தனிமையின் நினைவுகள்

பொத்துவில் அஜ்மல்கான்

தனிமையினால் ஈர்க்கப்பட்ட
கருப்பன்
இனிமைகளை களவு
கொடுத்தபடி புலம்புகிறான்
இன்று

அந்த தனிமையின்
உணர்வுகளை புரிந்திடவும்
அறிந்திடவும் அவளுடனான
நினைவுகளுக்கே தெரியும்

சொற்பமான நேரம்
என்றாலும் கற்பனையில்
யாரும் வாழ்ந்திட
முடியாத காலமாய்
போனது என்பதை
யார் அறிவார்

இருந்தும் அந்த
தனிமையில் நுழைந்து
வலிகளை மறந்து
அவளுடனான நினைவுகளில்
மிதந்து கொண்டு
இருக்கிறான் யுகங்கள்
கடந்து

பெண்மை எனும் வரம்...

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

பெண்மை என்பதை
பேரழகு என்பேன்
பெண்மைக்கேது இங்கே
வரைவிலக்கணம்
வரைவிலக்கணம் தாண்டிய
வார்த்தையல்லவா அது

பெண்மை ஒரு வரம்
பெண்மை ஓர் இன்பம்
பெண்மை ஒரு பேறு
பெண்மை ஒரு முன்னுதாரணம்
பெண்மை ஒரு பொறுமைப் பொக்கிஷம்

தனக்கென மட்டுமன்றி
தன் குடும்பத்துக்கென்றும்
தன் பெற்றோருக்கென்றும்
தன் குழந்தைகளுக்கென்றும்
தன் கணவெனுக்கென்றும்
தன்னை சுற்றிய ஓர் உலகத்துக்குள்
அவள் அரசியாகி
அதில் தன்னை
முழுமையாக ஈடுபடுத்திக்
கொண்டு அல்லல்களையும்
அரவணைப்பென கருதிக் கொண்டு
அப்படியே நகரும்
பெண்மை ஒரு வரமே
இன்று மட்டுமன்றி என்றைக்குமே...

அறிவு கெட்ட மனிதன்

பாண்டியூர் பொன். நவநீதன்.

அண்டையில் மூழ்கியவன்
மண்டையைப் போட்டுக்
சுடலையில் தூங்குகின்றான் – இவன்
என்டைக்கு விழித் தெழுவான்?

ஊரோடித் தேடினாலும்
ஆறடி நிலந்தான்
அவனது சொந்தமாம் – இதை
ஆரடா சொன்னவன்!
அடுத்தவன் குழியிலே(தான்)!
படுத்திவன் கிடக்கிறான்!

நாலு பேருக்கு(ம்)
நன்றி சொன்னான் அன்று
நரனுடலை – சுடலை
நாலுசக்கர வாகனத்தில்
கிடத்தி யந்த நால்வருக்கும்
வேலையில்லை இன்று!

இறந்து போனால் எல்லாம்
மறந்து போகும் மனித ஆன்மா,
இருக்கையிலே அவன் பசிக்கு
"இருப்பவர்கள் இரங்கவில்லை"என்று
அழுது செத்தவனின் ஆன்மாவுக்கு
அழுது படைக்கின்றான் – இந்த
அறிவு கெட்ட மனிதன்!

நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே!

ரதிதேவி, மானிப்பாய்

மெல்ல வானம்
இனித் தூங்கட்டும்
உன் தூய பேரொளி
ஓயட்டும்
உன் வாயில் ஒலித்த
ஓங்காரம் தீரட்டும்
வான் எங்கும்
பறவைகள் நிறையட்டும்

காணும் உன்
நடனமே
காணும் திசை எங்கும்
உடல் ஊனமே
நீ யாரைக் காக்கத்தான்
தோன்றினாய்
யாரைக் கேட்டு எனைத்
தோற்றினாய்

மலர்கள் பனியில் உறைய
என் மனதில் உறுதி குறைய
நீ வாழ்கிறாயோ
உன் இருப்பு நிஜமோ ஈசனே
விருப்பு வெறுப்பற்ற நேசனே

உலகை உன் கண்கள் பார்க்குதோ
அங்கு உலவும் துயரம் கேட்க்குதோ
மழைத்துளிகள் வீழ்ந்த
மண்ணின் மீது
குண்டு மழைகள் பொழியுது
நதிகள் பாயும்
ஈர மண் மேல்
சடல ஓடங்கள் காயுது

இனங்கள் மொழிகள் கடந்த
எனது இதயம் உணர
சொன்னனி
தர்மம் அதர்மம் தாண்டிக்கிடக்கும்
நியதி அறிய
உரைத்தனி
நீ உரைத்தபொழுது உறங்கிவிட்டு
உனை உதவிக்கழைப்பது
அதர்மமே

யேசு, கிருஷ்ணா,
புத்தர், அல்லா,
சிவனே, ராமக்கிருஷ்ணனே,
ரமணா, ஓஷோ,
கிருஷ்ணமூர்த்தி,
ஆனந்தமயி மா அம்மனே
நீ பாடம் சொல்லக்
கொண்ட வேடங்கள்
கோடிதான் மன்னனே

இனத்தில் மொழியில்
பெருமை என்ன
மனிதப்பிறவி விடப் பெருமையோ
தன்னையறிதல் சேவை
உரைத்தார் ரமணர்
சுயநலத்தில் வாழ்தல்
அதர்மமே

குற்ற உணர்வில் விளையும்
சேவை நிலையா
பாசம் பற்றறு
நண்பனே
மிக இலகுப் பாடம்
"தன்னையறிதல்"
அதை அறிந்து
போர்ப் பரீட்சை வெல்வாய்
தோழனே

உனை அறியும் ஞானம்
கவசமே
அதைத் துளைக்குமோ
அணு குண்டுமே

கோடி ஐ.நா.
தேவையில்லை
கண்மூடி
தியானம் செய்கவே

இன்று உதிரும்
ஒவ்வொரு சிசுக்கும்
எனது சோம்பல் காரணம்
அறிகிறேன்
இருந்தும் இதயக் கரையில்
உன் மேல் கோபம்
யாது செய்கிலேன்

பேசும் மொழியும் கருவி
வாழும் தேசம் கருவி
உனை வணங்கும் ரூபம்
யாவும் கருவி
அறிந்தும் ஆறுமோ மூடமே
அணியும் ஆடை
தைத்த கம்பெனிக்காக
சாதல் மூடமே

நிர்வாணம் நிஜமாம்
கர்மயோகம் நிஜமாம்
மதிப்பெண் பெருமை பேசும்
கல்வி விடுத்து
பரீட்சையில் தோற்றாலும்
பரவாயில்லை என்று
கல்வி கர்மயோகம் ஆகில்
நாளை போர்க்களத்தில்
கர்மயோகம் பேசவேண்டிய
தேவை வராது

மாற்றங்கள்

பசறையூர் மல்லிகா
பத்மநாதன்

மொட்டுகள் மலர்களாகிப் போகும்
முகிற்கூட்டம் மழையாகி வீழும்
சொட்டுகள் வெள்ளமாய் மாறும்
சொந்தங்கள் பகையாக நேரும்

நட்டவை மரமாகிப் போகும்
நலிந்தவை திடமாக மாறும்

பொட்டலும் பொலிவாகித்தோன்றும்
பொய்கையும் எழிலற்றுப் போகும்
கட்டளை கருணையாய் மாறும்
கவலையும் மகிழ்வாகிப் போகும்

திட்டுவார் அன்பாகக் கூடும்
தீங்குகள் நலமாக மாறும்

முட்டுக் கட்டைகள் வெற்றியாய் ஆகும்
முரண்பாடுகள் சாந்தியாய் மாறும்
சட்டென ஒவ்வொரு செயற்பாடுகளிலும்
சடுதியாய் மாற்றங்கள்வந்தே தீரும்

தவமாய்க் கிடைத்தாயே

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

ஈரைந்து திங்கள் சுமந்திருந்தேன்
இனிய கனவுகளுடன் காத்திருந்தேன்
கண்மணி உன்னைக் கண்ணாரக் காணவே
கடிதாய் ஒரு தவமிருந்தேன்
கடும் வலி பொறுத்திருந்தேன்
இரவில் தூங்காமல் விழித்திருந்தேன்
மெத்தென்ற மேனியை தொட்டுத் தூக்கவே
மெதுவாக உந்தன் விரல் பற்றவே
கொஞ்சும் மழலையை நெஞ்சாரக் கேட்கவே
பிஞ்சுப் பாதங்கள் பதுமையென உதைக்கவே
வந்தாயே எந்தன் செந்தூரமே வரமாக
தந்தாயே வாழ்வினிலே சந்தோசம் இதமாக



அன்பே சக்தி...!

சி. மௌநேஷ், மட்டக்களப்பு

ஒரு மனிதனை
வாழ்த்தா விடினும்
தூற்றாதிருங்கள்!...
புண்பட பேசுவதால்...
அவர் உள்ளம்
நொந்து போகும் அல்லவா!...
அன்பாக பேசுங்கள்...
பண்பாக பழகுங்கள்...
ஒருவருக்கு ஒருவர்
உதவி செய்யாவிடினும்
உபத்திரம் செய்யாதீர்கள்
அன்பின் சக்தியை
அளவிட முடியாது
ஒருவர் உள்ளத்தில்
பொறாமை எண்ணம்
ஏற்படா வண்ணம்
உள்ளத்தை எப்போதும்
தூய்மையாக வைத்திருங்கள்
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார்
வேண்டுவதுவென்பது...
சுவாமி விபுலானந்தரின்
பொன் மொழி...!

பிடிவாதம் கொள்

ஜஸ்ரா ஜலீல்

பிடிவாதம் கொள் என் நண்பா
முரட்டு பிடிவாதம் கொள்

பூமியாய் பிறந்து விட்டு
சுழன்று விட மறுப்பதா
சூரியனின் கதிர்களை
எதிரியாய் நினைப்பதா

போர்களத்து பூமியில்
போராளியாய்
பிறந்து விட்டு
கத்தி கொண்டு எதிரியை
தாக்காமல்
பதுங்கியே நிற்பதா?

கண்ணீரைத் துடைத்து நீ
வியர்வை வடித்து வா
காயத்தின் சுவடுகளில்
அனுபவத்தை படித்து வா

நத்தை போல் ஊர்ந்தாலும்
இதயத்தை தகர்க்க வா
வஞ்சோரின் நெஞ்சுடைத்து
சூரியன் போல் ஒளி வீச வா

மழைக்கால நேரத்தில்
குருவிக்கூடு உடைந்து
விட்டதென்று
குருவிகள் மழை நீரை
வெறுப்பதில்லை

கண்ணீரால் உன் வாழ்க்கை
கரைபட்டு விட்டதென்று
பிறப்பையே
நீ வெறுத்து பிதற்றுவது
நியாயமில்லை

உன் உதடும் உன் காதும்
ஊமையாக மாறட்டும்
உன் மனதும் உன் மூளையும்
உரையாடல் போடட்டும்

புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும்
மௌனத்தையே பதிலாக்கு
செயலால் மட்டுமே
விமர்சனத்தை நீ தாக்கு

கருங்கல்லாய் உன்னுடைய
தன்னம்பிக்கை இருந்தாலும்
பாராங் கல்லாய் உன்
பிடிவாதம் இருக்கட்டும்

உன் வாழ்வை உனது விதி
முடக்கியே போட்டாலும்
உன்னுடைய பிடிவாதம்
உன்னையே வெல்லட்டும்

ருஹுன பல்கலைக்கழகம் - மாத்தறை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

ருஹுன பல்கலைக்கழகத்திற்காக கணினி மற்றும் துணைப்பொருட்கள், அலுவலக மற்றும் கற்பித்தல் உபகரணம், விளையாட்டு உபகரணம் மற்றும் ஏனையவைகளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், சோதனை மற்றும் பராமரிப்பு (மேலதிக உள்வாங்கல்)

1. ருஹுன பல்கலைக்கழகத்திற்காக பின்வரும் பொருட்களின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல், சோதனை மற்றும் பராமரிப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து ருஹுன பல்கலைக்கழக, துணைவேந்தரின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

IFB No: RUH /SUP/NCB/2022/01 (**SCI** பொதி 01-07 இன் கீழான பொருட்களை ருஹுன பல்கலைக்கழக, வெல்லமடம வளாகத்திற்கு விநியோகித்தல் வேண்டும்)

உருப்படி இல.	பொருட்கள்/ விபரங்கள்	அளவு	மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம்	விலைமனு பிணை (ரூபா)
SCI பொதி 01 : கணினி மற்றும் துணைப்பொருட்கள்				
1.1	மேசைக் கணினிகள் i7	88	10,800.00	176,000.00
1.2	மேசைக் கணினிகள் i5	66		102,400.00
1.3	மடிக் கணினிகள் i5	46		83,000.00
1.4	மடிக் கணினிகள் i7	13		29,000.00
1.5	1.2KVA UPS	195		28,200.00
1.6	புற வன்தட்டு (2TB)	2		400.00
1.7	Internet Switch	1		2,000.00
SCI பொதி 02 : அலுவலக உபகரணம் மற்றும் வளிச் சீராக்கிகள்				
2.1	லேசர் அச்சுப்பொறிகள்	8	3,600.00	7,400.00
2.2	பல் செயற்பாட்டு நிழற்பிரதி இயந்திரம்	3		14,000.00
2.3	டுப்லோ இயந்திரம்	2		12,000.00
2.4	Collector with stapler machine	1		17,000.00
2.5	பல்லூடக திரைபெருக்கி	13		13,600.00
2.6	கூரையில் பொருத்தப்படும் பல்லூடக திரைபெருக்கி	4		5,400.00
2.7	சுவரில் பொருத்தப்படும் திரைபெருக்கி திரை	6		2,200.00
2.8	நிறுத்தல் கருவியுடன் திரைபெருக்கி திரை	2		1,000.00
2.9	Laser Pointer	3		500.00
2.10	வளிச் சீராக்கி (12000BTU)	1		2,000.00
2.11	வளிச் சீராக்கி (18000BTU)	5		11,500.00
2.12	வளிச் சீராக்கி (24000BTU)	4		7,500.00
2.13	வளிச் சீராக்கி (36000BTU)	2		8,000.00
2.14	குளிர்சாதனப்பெட்டி	2		1,500.00
SCI பொதி 03 : ஆய்வுகூட கருவிகள் (இரசாயனம்)				
3.1	Analytical balance (Top Loading)	1	3,800.00	500.00
3.2	Analytical balance	4		8,000.00
3.3	Triple beam balance	6		4,000.00
3.4	Conductivity meter (bench top)	6		9,000.00
3.5	Conductivity meter (portable)	2		4,000.00
3.6	PH meter	13		20,000.00
3.7	Colorimeter	6		10,000.00
3.8	Dissolved oxygen meter	1		2,500.00
3.9	Polari meter	1		15,000.00
3.10	Refractor meter	1		12,000.00
3.11	Ion meter with electrode	1		5,000.00
3.12	Potentiometer	10		10,000.00
3.13	Stop watch – analog	6		2,000.00
3.14	Stop watch – digital	30		3,000.00
3.15	Scientific calculators	155		5,600.00
3.16	UV – vis diffusion reflectors	1		100.00
SCI பொதி 04 : ஆய்வுகூட உபகரணம் (இரசாயனம்)				
4.1	MilliQ water filter	1	4,300.00	12,000.00
4.2	Centrifuge (Biology)	2		5,500.00
4.3	Centrifuge	4		10,000.00
4.4	Ice flaking machine	1		14,000.00
4.5	Distilled plant	2		6,000.00
4.6	Fume hood	1		10,000.00
4.7	Fume hood with base cabinet	1		5,000.00
4.8	Muffle furnace	1		7,000.00
4.9	Laboratory oven (Medium)	2		10,000.00
4.10	Laboratory oven (Large)	4		16,000.00
4.11	Heating mantle	5		2,500.00
4.12	UV lamp	2		2,000.00
4.13	Hot plate with mag stirrer (Small)	1		1,100.00
4.14	Hot plate with mag stirrer	5		5,000.00
4.15	Hot plate (normal)	1		1,000.00
4.16	COD reactor	1		5,000.00
4.17	Dehumidifier	2		1,800.00
4.18	Nitrogen gas cylinder	1		1,250.00
4.19	Dry compressed air cylinder	1		500.00
4.20	Hydrogen gas cylinder	1		1,250.00
4.21	Incubator	2		17,000.00
SCI பொதி 05 : ஆய்வுகூட உபகரணம் (பௌதீகவியல்)				
5.1	Edspot Galvanometer	10	2,800.00	15,000.00
5.2	Osciloscope	15		9,000.00
5.3	Spectrometer (General purpose)	4		8,000.00
5.4	Combi B Sensor S	2		7,000.00
5.5	Travelling microscope	4		4,000.00
5.6	Fiberoptics kit	1		3,000.00
5.7	Cadmium Lamp with power unit	2		4,000.00
5.8	Sodium Lamp with power unit	2		4,000.00
5.9	Electromagnetic Oscillation and waves Practical (Microwave) kit	1		4,000.00
5.10	Millicon Aparator kit	1		3,000.00
5.11	Signal genarator	15		6,000.00
5.12	Ultrasonic Kit	1		4,000.00
5.13	Zeeman effect kit	1		5,000.00
SCI பொதி 06 : ஆய்வுகூட உபகரணம் (உயிரியல்)				
6.1	Autoclave	1	7,300.00	7,000.00
6.2	COD meter	1		2,000.00
6.3	Geldock equipment	2		31,000.00
6.4	Leaf area meter	1		3,000.00
6.5	Binocular Microscope (Student)	100		184,000.00
6.6	Plankton Net	1		2,000.00
6.7	Scientific Blender	1		3,000.00
6.8	Semi-Automated Rotary microtome	1		18,000.00
6.9	Soxhlet Appratus	1		5,000.00
6.10	Blood Pressure meter	3		300.00
6.11	Haemocytometer	15		3,000.00
6.12	Micropipettes	16		8,000.00
6.13	Portable Multi parameter machine	1		2,500.00
SCI பொதி 07 : அலுவலக தளபாடம்				
7.1	கணினி மேசை – வகை 1	60	3,500.00	12,000.00
7.2	கணினி மேசை – வகை 2	23		5,500.00
7.3	கணினி மேசை – வகை 1	110		11,000.00
7.4	கணினி மேசை – வகை 2	40		7,500.00
7.5	கணினி மேசை – வகை 3	40		3,600.00
7.6	எழுதும் தட்டுடன் மரக் கதிரைகள்	30		5,400.00
7.7	மரத்தாலான மாணவர் மேசை (மடிக்கக்கூடியது)	130		26,000.00
7.8	கைகளுடன் மரத்தாலான எழுதுநர் கதிரை	24		4,000.00
7.9	அலுவலக மேசை (மரப்பலகை) – வகை1	10		4,000.00
7.10	அலுவலக மேசை (மரப்பலகை) – வகை2	1		500.00
7.11	கனிஷ்ட நிறைவேற்றுநர் மேசை (மரப்பலகை) – வகை1	2		1,200.00
7.12	கனிஷ்ட நிறைவேற்றுநர் மேசை (மரப்பலகை) – வகை2	2		1,400.00
7.13	High Back நாற்காலி	10		2,000.00
7.14	உருக்கு அலுமாரி	30		8,500.00
7.15	4 இழுப்பறைகளுடன் உருக்கு கோப்பு பேடகங்கள்	25		8,200.00
7.16	பெரிய வெள்ளை பலகை	3		500.00

IFB No: RUH/AGRI/NCB/2022/01 (**AGRI** பொதி 01-03 இன் கீழான பொருட்களை மாபலான, விவசாய பீடத்திற்கு விநியோகித்தல் வேண்டும்)

உருப்படி இல.	பொருட்கள்/ விபரங்கள்	அளவு	மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம்	விலைமனு பிணை (ரூபா)
Agri பொதி இல. 01- ஆய்வுகூட உபகரணம்				
1.1	Fume Hood	01	4,000.00	12,000.00
1.2	Analytical Balance	02		6,000.00
1.3	Distilled Water Unit	02		4,000.00
1.4	Top Loading Balance	01		1,000.00
1.5	Soil Moisture Meter	01		3,000.00
1.6	Digital Soil Thermometer	01		2,000.00
1.7	Benchtop PH Meter	02		4,000.00
1.8	Sieves	13		1,700.00
1.9	Microbial Test Kit	01		500.00
1.10	Water Bath	01		3,000.00
1.11	Kjeldahl N Automatic Distillation Unit	01		25,000.00
1.12	Hand Held / Portable PH Meter	04		4,000.00
1.13	Electronic Balance	02		3,000.00
1.14	Feezer (-20^{0}C)	01		1,500.00
1.15	Water Activity Meter	01		2,500.00
1.16	Food Dehydrator	01		2,500.00
1.17	Stainless Steel Sieve Set	08		400.00
1.18	Upright Trinocular Microscope	01		3,000.00
1.19	Portable EC Meter	02		2,240.00
1.20	Clinometer	01		1,150.00
1.21	Benchtop Leaf Area Meter	01		14,000.00
1.22	UV Visible Spectrophotometer	01		10,000.00
1.23	Dissolved Oxygen Meter	01		750.00
1.24	Gel Documentation Unit	01		15,000.00
1.25	Humidity & Temperature Meter	01		1,000.00
1.26	Pen Type Waterproof PH/EC & Temp Meter	01		1,000.00
1.27	Dissecting Microscope with Digital Camera	01		2,500.00
1.28	Insect Showcase Cabinet	01		1,000.00
1.29	Potometer Apparatus	10		3,500.00
Agri பொதி இல. 02 – கணினி மற்றும் துணைப்பொட்கள்				
2.1	மடிக் கணினிகள் (i7)	10	1,500.00	30,000.00
2.2	மேசைக் கணினிகள் (i5)	04		8,000.00
2.3	ஸ்கேனர் இயந்திரம்	01		250.00
2.4	லேசர் அச்சுப்பொறிகள்	02		1,000.00
2.5	வண்ண அச்சுப்போறி	01		2,000.00
2.6	OnlineUPS– 1000VA	05		1,000.00
Agri பொதி இல. 03 – தளபாட உபகரணம்				
3.1	விரிவுரை மண்டப கதிரைகள்	495	3,750.00	48,300.00
3.2	ஆய்வுகூட ஸ்டூல்கள்	55		5,000.00
3.3	மடிக்கும் மேசை	150		15,000.00
3.4	ஆய்வுகூட மேசைகள்	04		2,000.00
3.5	கை நாற்காலிகள் (வருகையாளர் நாற்காலிகள்) – மரப்பலகை	15		3,750.00
3.6	மாணவர் மேசை – மரப்பலகை	50		10,000.00
3.7	கை நாற்காலிகள் – மரப்பலகை	20		1,500.00
3.8	வாசிப்பு மண்டபத்தின் மேசை	10		1,250.00
3.9	துவாலை செருகு சட்டங்கள்	25		500.00
3.10	வளைவு கேட்போர் கூட மேசை	01		500.00
3.11	அலுவலக நாற்காலிகள்	01		1,000.00
3.12	அலுவலக மேசைகள்	01		300.00
3.13	ஆய்வுகூட அலுமாரிகளை நிறுவுதல்	01		10,000.00
3.14	துருப்பிடிக்காத உருக்குடன் சமையலறை மேசை	04		2,000.00
3.15	பங்க் படுக்கைகள்	25		11,250.00
3.16	மெத்தைகள்	50		2,500.00
3.17	பிளாஸ்டிக் கதிரைகள்	300		7,500.00
3.18	கண்ணாடி முகப்புடனான உருக்கு அலுமாரிகள்	05		1,250.00

IFB No: RUH/MED/SUP/NCB/2022/01 (**MED** பொதி 01-06 இன் கீழான பொருட்களை கராபிட்டிய, மருத்துவ பீடத்திற்கு விநியோகித்தல் வேண்டும்)

உருப்படி இல.	பொருட்கள்/ விபரங்கள்	அளவு	மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம்	விலைமனு பிணை (ரூபா)
MED பொதி இல. 01- சி.சி.டீ.வி கெமரா அமைப்பு				
1.1	சி.சி.டீ.வி கெமரா அமைப்பு	1	3,500.00	60,000.00
MED பொதி இல. 02 – கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள்				
2.1	3KV Online UPS	4	3,500.00	3,400.00
2.2	வண்ண அச்சுப்பொறி	1		2,500.00
2.3	Server Computer	1		10,000.00
2.4	Server Rack	1		6,000.00
2.5	PC i7	1		2,000.00
2.6	மடிக் கணினி i5	4		6,000.00
2.7	2022 windows server license	1		2,000.00
2.8	3KV Online UPS with Battery Pack	1		3,000.00
2.9	டெப்லெட் கணினி	3		2,000.00
2.10	All-in-One Touch Pc	2		4,000.00
2.11	பல்லூடக திரைபெருக்கி	1		2,500.00
MED பொதி இல. 03 –தளபாடம் மற்றும் பொருத்துதல்கள்				
3.1	தண்டவாளத்தில் நகரும் உருக்கு ஏணியுடன் சுவரில் பொருத்தப்பட்ட அலுமாரி	2	5,000.00	9,000.00
3.2	மேற்பகுதி தேக்கு மரப்பலகையுடன் உருக்கு சட்டக மேசைகள் 36''x36''x30'	50		18,000.00
3.3	மெத்தை 72''x30''x4''	75		7,500.00
3.4	படுக்கை – உருக்கு சட்டகம் மற்றும் மரப்பலகை	50		12,500.00
3.5	சுவரில் பொருத்தப்பட்ட புத்தக சட்டம்	50		13,000.00
3.6	8' *4'அடி மேசைகள்	10		5,000.00
3.7	மேசைகள் 10'*2.5'	6		3,960.00
3.8	மேசைகள் 6'*3'	6		3,000.00
3.9	துவாலை செருகு சட்டங்கள் (மரப்பலகை) 30''x 12''x30''	25		2,500.00
3.10	Medium back கணினி நாற்காலி	3		600.00
3.11	முகப்பு அறை நாற்காலிகள்	100		20,000.00
3.12	முகப்பு அறை மேசைகள்	5		3,000.00
3.13	நிறுத்தும் கருவியுடன் வெள்ளை பலகை	4		800.00
3.14	ஸ்மார்ட் புத்தக சட்டங்கள்	5		1,000.00
3.15	ஆய்வுகூட மரப்பலகை ஸ்டூல்கள்	100		6,000.00
MED பொதி இல. 04- ஆய்வுகூட உபகரணம் (Manikins)				
4.1	Electrical Birthing simulator (Manikins)	1	3,500.00	50,000.00
4.2	Difficult Airway Trainer	2		10,000.00
4.3	Newborn CPR Full Body Manikin	3		6,000.00
4.4	Adult IV cannulation training manikin arm	2		6,000.00
4.5	Child Resuscitation Bag	3		1,200.00
4.6	Adult Resuscitator Bag	4		4,000.00
4.7	Emergency Crash Cart	1		1,000.00
4.8	Paediatric IV cannulation training manikin/ arm	2		4,000.00
MED பொதி இல. 05 – அலுவலக உபகரணம்				
5.1	A/C 36000 BTU	1	1,000.00	5,000.00
5.2	கனரக காகித துண்டாக்கி	1		3,000.00
5.3	A/C 48000 BTU	2		9,000.00
MED பொதி இல. 06- விளையாட்டு உபகரணம்				
6.1	5 Feet olympic	3	1,000.00	690.00
6.2	Dumbbell rack	1		600.00
6.3	2575KG dumbblells 2.5kg to 25 kg	18	1,000.00	1,656.00
6.4	300kg Olympic plate	1		1,800.00
6.5	Ez bar olympic	3		200.00
6.6	ABS machine	1		700.00
6.7	Battle rope	1		250.00
6.8	Yoga Mat	4		240.00
6.9	Flat bench	2		890.00
6.10	Heavy punching bag	1		200.00
6.11	Treadmill	1		4,500.00
6.12	Spin cycle	1		900.00
6.13	Smith Machine	1		5,000.00
6.14	Leg press	1		3,500.00
6.15	Inline Adjustable bench	2		2,000.00
6.16	4 Feet olympic	1		230.00
6.17	Decline Adjustable bench	1		1,000.00

IFB No: RUH/AHS/SUP/NCB/2022/01 (**AHS** பொதி 01-03 இன் கீழான பொருட்களை கராப்பிட்டிய, கொடகந்த வீதி, இணைந்த சுகாதார அறிவியல்கள் பீடத்திற்கு விநியோகித்தல் வேண்டும்)

உருப்படி இல.	பொருட்கள்/ விபரங்கள்	அளவு	மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம்	விலைமனு பிணை (ரூபா)
AHS பொதி இல. 01- தளபாடம்				
1.1	மடிக்கக்கூடிய பரீட்சை மேசை	220	3,500.00	44,000.00
1.2	உருக்கு குஷன் நாற்காலி	400		20,000.00
1.3	உருக்கு கை நாற்காலி	300		30,000.00
AHS பொதி இல. 02 – கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள்				
2.1	மேசைக் கணினி i5	9	3,500.00	18,000.00
2.2	மடிக் கணினி i3	5		10,000.00
AHS பொதி இல. 03 – ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணம்				
3.1	Microscope	5	5,000.00	10,000.00
3.2	Tissue Embedding System	1		20,000.00
3.3	Semi-Automated Bio-Chemistry Analyzer	1		6,000.00
3.4	Analytical Balance	1		4,000.00
3.5	Bio-Safety Cabinet	1		13,000.00
3.6	UV/Visible Double beam Spectrophotometer	1		15,000.00
3.7	Rotary Evaporator	1		15,000.00
3.8	Disintegration Apparatus	1		18,000.00
3.9	Friability Tester	1		5,000.00
3.10	Centrifuge	1		15,000.00
3.11	Electronic Balance	5		4,500.00
3.12	Low Pressure Vaccum Pump	1		300.00
3.13	Ointment tube Preparing Machine	1		3,500.00
3.14	Autoclave	1		2,000.00
3.15	Laboratory High speed Emulsifier	1		1,200.00
3.16	Vernier Calliper	10		500.00
3.17	Andreasen Apparatus	5		200.00
3.18	Manual Capsule filling machine	1		400.00
3.19	Hand homogenizer	1		1,000.00
3.20	Soxhlet apparatus	2		450.00

IFB No: RUH/TEC/SUP/NCB/2021/062,RUH/TEC/SUP/NCB/2021/063, RUH/TEC/SUP/NCB/2022/001 (**TEC** பொதி 01-03 இன் கீழான பொருட்களை கம்புருபிட்டிய, கரகொட உயன்கொட, தொழில்நுட்ப பீடத்திற்கு விநியோகித்தல் வேண்டும்)

உருப்படி இல.	பொருட்கள்/ விபரங்கள்	அளவு	மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம்	விலைமனு பிணை (ரூபா)
TEC பொதி இல. 1 : UPS உடன் மேசைக் கணினிகள் மற்றும் நோட்புக் கணினிகள்				
1.1	நோட்புக் கணினிகள் (Intel Core i7 – 11th Gen)	4	12,500.00	6,000.00
1.2	UPS உடன் மேசைக் கணினிகள்; (Internationally branded) -Intel Core i7 10 Gen or later	50		75,000.00
1.3	GPU மற்றும் UPS இற்கு ஒதுக்கப்பட்ட மேசைக் கணினிகள் (Intel Core i7 10th Gen or later)	20		40,000.00
TEC பொதி இல. 02- பணியாளர் அறைகள், சிற்றுண்டிச்சாலை மற்றும் நூலகம்				
2.1	நூலக வாசிப்பு மேசை	15	3,500.00	4,500.00
2.2	நூலக கதிரை	60		8,400.00
2.3	அலுவலக மேசை	40		12,000.00
2.4	சிற்றலுமாரி	40		12,000.00
2.5	அலுவலக நாற்காலி	40		6,000.00
2.6	சிற்றுண்டிச்சாலை மரப்பலகை உணவு இருக்கை	28		7,280.00
2.7	சிற்றுண்டிச்சாலை மரப்பலகை உணவு மேசை	14		8,400.00
TEC பொதி இல. 03- ஆய்வுகூட தளபாடம் மற்றும் பொருத்துதல்கள்				
3.1	அய்வுகூட பணி இருக்கை (Island bench)	4	12,500.00	36,500.00
3.2	L வடிவ ஆய்வுகூட இருக்கை	4		31,500.00
3.3	ஆய்வுகூட சுவர் இருக்கை	4		12,000.00
3.4	eye washer உடன் பொருத்தப்பட்ட இருக்கை	4		2,000.00
3.5	ஆய்வுகூட ஸ்டூல்	16		4,000.00
3.6	ஷவருடன் தரையில் பொருத்தப்பட்ட eye washer	1		2,750.00
3.7	ஆய்வுகூடத்தின் உயரமான சேமிப்பு பாலிப்ரொப்பிலீன் பேடகங்கள்	2		2,450.00
3.8	ஆய்வுகூடத்தின் சேமிப்பு கரைதிரவங்களுக்கான எரியக்கூடிய சேமிப்பு பேடகங்கள்	1		13,000.00
3.9	Laboratory fume hood 4ft	1		9,800.00
3.10	Balance bench	1		1,000.00

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. மக்கள் வங்கியின் எந்த ஒரு கிளையின் மூலமும் (மக்கள் வங்கி, உயன்வத்த , மாத்தறை) 032100112477589 என்ற கணக்கு இலக்கம் அல்லது சிறாப்பர் கருமபீடத்திற்கு மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2022.02.22 ஆம் திகதி 10.00 மணி வரை வெல்லமடம வளாகம், ருஹுன பல்கலைக்கழகத்தில் இருந்து (ஆங்கிலத்தில்) விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும்.
4. 2022.05.23 ஆம் திகதி வரை விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
5. ஒவ்வொரு உருப்படி அடிப்படையில் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அதனால், மேலுள்ள பொது முறையில் வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. விலைமனுவானது, வெல்லமடம, ருஹுன பல்கலைக்கழக, சிறாப்பருக்கு ரொக்கப்பணமாக அல்லது இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட பொருத்தமான விலைமனு உருப்படிகளுக்கு தொடர்புடையதாக (நிபந்தனையற்ற) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனு பிணை "ருஹுன பல்கலைக்கழக, துணைவேந்தர்" பெயருக்கு, 2022.06.23 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
8. விலைமனுவை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2022.02.23 அன்று 10.00 மணி
9. விலைமனுவுக்கு முந்திய Zoom சந்திப்பு 2022.02.07 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.
10. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேலுள்ள இறுதித் திகதி அல்லது அதற்கு முன் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ருஹுன பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள இறுதித் திகதிக்கு முன்னர் மாத்தறை, வெல்லமடம, ருஹுன பல்கலைக்கழக, பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டி 01 இல் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெயர், கேள்விமனு இலக்கம் மற்றும் பொதி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
11. மேலுள்ள முகவரியில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படுவதோடு விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்கும்படி விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.
12. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தொலைபேசி: 041-2227027, மின்னஞ்சல்: sabsupp2@admin.ruh.ac.lk மாத்தறை, வெல்லமடம, ருஹுன பல்கலைக்கழகம், சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்கள்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
ருஹுன பல்கலைக்கழகம்,
வெல்லமடம, மாத்தறை.
2022 ஜனவரி 30

நடிகர் விஜய் கார் வழக்கில் அபராதம் வசூலிக்க தடை

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

நடிகர் விஜய் சொகுசு கார் வழக்கில் அபராதம் வசூலிக்க உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. விஜய் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை முடியும் வரை அபராதம் தொடர்பாக வணிக வரித்துறை எந்த கட்டாய நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என கூறியுள்ளது.

நடிகர் விஜய் இறக்குமதி செய்த சொகுசு காருக்கு அதிகப்படியான அபராதம் விதிக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. சொகுசு காருக்கு நுழைவு வரி செலுத்துவதற்கு தாமதம் செய்ததற்காக 400% அளவிற்கு வணிக வரித்துறை அபராதம் விதித்ததை எதிர்த்து நடிகர் விஜய் தரப்பில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, வழக்கினை செவ்வாய்க்கிழமைக்கு ஒத்தி வைத்தார். அபராதத்தை வசூலிப்பது தொடர்பான எவ்வித கடுமையான நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டாம் என்றும் தமிழக அரசுக்கு சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் மற்றும் அடையார் கேட் ஹோட்டல்களின் இதே போன்ற பிற வழக்குகளுடன் இந்த வழக்கையும் சேர்த்து விசாரிப்பதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் விற்பனைக்கு

KADAWATHA VEHICLE YARD

THREE WHEELERS

AAG-14XX	AAR-00XX	AAY-52XX	QK-49XX	QR-69XX	QZ-93XX	YN-67XX	YY-04XX
AAM-28XX	AAS-42XX	ABB-23XX	QK-86XX	QT-82XX	YB-75XX	YQ-15XX	YY-50XX
AAN-91XX	AAT-62XX	ABB-76XX	QN-96XX	QW-21XX	YG-28XX	YQ-20XX	
AAO-78XX	AAW-31XX	ABK-74XX	QO-22XX	QW-85XX	YH-62XX	YR-99XX	
AAP-24XX	AAW-88XX	ABO-04XX	QO-69XX	QX-22XX	YJ-76XX	YV-19XX	
AAP-74XX	AAY-43XX	BIU-68XX	QO-85XX	QX-42XX	YL-16XX	YW-82XX	
AAQ-60XX		QE-62XX	QP-52XX	QZ-05XX	YL-55XX	YX-56XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE
17-26XX	DAIHATSU	MOTOR CAR
58-16XX	NISSAN	MOTOR VAN
60-12XX	TOYOTA	MOTOR COACH
BFV-13XX	HONDA	MOTOR CYCLE
BGT-63XX	YAMAHA	MOTOR CYCLE
BHL-97XX	HERO	MOTOR CYCLE
BHW-61XX	SUZUKI	MOTOR CYCLE
BIR-80XX	TVS	MOTOR CYCLE
CAD-66XX	HONDA	MOTOR CAR
CAE-97XX	SUZUKI	MOTOR CAR
CAI-12XX	SUZUKI	MOTOR CAR
CAL-34XX	MICRO	MOTOR CAR
CAU-61XX	SUZUKI	MOTOR CAR
CAX-99XX	MAZDA	MOTOR CAR

VEHICLE NO	MODEL	MAKE
HR-32XX	KIA	MOTOR CAR
KC-40XX	VOLVO	MOTOR CAR
KG-17XX	TOYOTA	MOTOR CAR
KI-00XX	TOYOTA	MOTOR CAR
KM-66XX	NISSAN	MOTOR CAR
KU-76XX	TATA	NANO
KV-72XX	TOYOTA	MOTOR CAR
LF-28XX	ASHOK LEYLAND	MOTOR LORRY
PC-12XX	MAZDA	MOTOR VAN
PC-71XX	MICRO	MOTOR VAN
PD-12XX	NISSAN	MOTOR CAR
PI-51XX	MITSUBISHI	MOTOR VAN
PY-54XX	TATA	MINI TRUCK
RE-79XX	KUBOTA	TRACTOR

ANURADHAPURA VEHICLE YARD

THREE WHEELERS

AAB-95XX	AAO-39XX	AAS-62XX	ABQ-11XX	QT-35XX	QV-06XX	YF-68XX	YR-12XX
AAG-95XX	AAP-42XX	AAW-23XX	QG-63XX	QT-97XX	YE-50XX	YI-44XX	YW-49XX
AAN-92XX	AAQ-84XX	ABO-95XX	QR-97XX	QU-53XX	YF-36XX	YK-97XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE
15-37XX	NISSAN	MOTOR CAR
18-70XX	DAEWOO	MOTOR CAR
BGB-64XX	HERO	MOTOR CYCLE
BGJ-90XX	TVS	MOTOR CYCLE
BHA-91XX	SUZUKI	MOTOR CYCLE
BHO-16XX	BAJAJ	MOTOR CYCLE
BHS-60XX	TVS	MOTOR CYCLE
BIB-69XX	TVS	MOTOR CYCLE
BID-42XX	HERO	MOTOR CYCLE
BID-84XX	HERO	MOTOR CYCLE
BIH-27XX	HERO	MOTOR CYCLE

VEHICLE NO	MODEL	MAKE
BIL-13XX	TVS	MOTOR CYCLE
BIM-70XX	HERO	MOTOR CYCLE
BIV-65XX	HERO	MOTOR CYCLE
BIX-52XX	HERO	MOTOR CYCLE
PV-55XX	MAHINDRA	MINI TRUCK
RE-05XX	MAHINDRA	TRACTOR
RE-63XX	SONALIKA	TRACTOR
RE-65XX	NEW HOLLAND	TRACTOR
RE-79XX	SONALIKA	TRACTOR
RE-85XX	SONALIKA	TRACTOR
RF-44XX	TAFE	TRACTOR

HORANA VEHICLE YARD

THREE WHEELERS

AAA-48XX	AAN-63XX	AAX-85XX	QJ-56XX	QS-85XX	YH-61XX	YV-08XX
AAB-28XX	AAQ-09XX	AAY-33XX	QN-43XX	QT-36XX	YJ-82XX	YV-69XX
AAB-32XX	AAR-95XX	AAZ-10XX	QN-48XX	QU-53XX	YK-57XX	YZ-69XX
AAC-02XX	AAS-19XX	QG-32XX	QO-17XX	QV-43XX	YL-61XX	
AAK-90XX	AAV-85XX	QH-58XX	QR-95XX	QX-13XX	YU-32XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE
BGK-37XX	TVS	MOTOR CYCLE
BHF-79XX	BAJAJ	MOTOR CYCLE
BHN-96XX	TVS	MOTOR CYCLE
BHS-17XX	TVS	MOTOR CYCLE
BIA-84XX	HONDA	MOTOR CYCLE
BIA-92XX	HONDA	MOTOR CYCLE

VEHICLE NO	MODEL	MAKE
BIB-13XX	HONDA	MOTOR CYCLE
BIC-58XX	TVS	MOTOR CYCLE
BID-02XX	TVS	MOTOR CYCLE
BIO-05XX	HERO	MOTOR CYCLE
BIX-73XX	TVS	MOTOR CYCLE
CAO-85XX	SUZUKI	MOTOR CAR

KULIYAPITIYA VEHICLE YARD

THREE WHEELERS

AAB-63XX	AAV-04XX	QK-81XX	QS-37XX	QV-72XX	QX-02XX	QZ-70XX	YN-38XX
AAG-68XX	ABG-86XX	QL-40XX	QT-56XX	QW-15XX	QZ-20XX	QZ-83XX	YP-74XX
AAO-88XX	QF-58XX	QL-62XX	QT-83XX	QW-59XX	QZ-31XX	YF-17XX	
AAP-50XX	QG-23XX	QP-95XX	QU-89XX	QW-70XX	QZ-66XX	YF-33XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE
BHA-68XX	TVS	MOTOR CYCLE
BHD-21XX	YAMAHA	MOTOR CYCLE
BHY-81XX	BAJAJ	MOTOR CYCLE
BIF-63XX	HERO	MOTOR CYCLE
BIG-49XX	HERO	MOTOR CYCLE
BIH-00XX	SUZUKI	MOTOR CYCLE
BIL-49XX	YAMAHA	MOTOR CYCLE

VEHICLE NO	MODEL	MAKE
BJB-22XX	TVS	MOTOR CYCLE
JU-34XX	MICRO	MOTOR CAR
LA-40XX	LANKA ASHOK LEYLAND	MOTOR LORRY
PS-74XX	TATA	MINI TRUCK
PU-41XX	MAHINDRA	MINI TRUCK
RE-77XX	NEW HOLLAND	TRACTOR

NITTAMBUWA VEHICLE YARD

THREE WHEELERS

AAC-24XX	AAW-76XX	QK-08XX	QS-40XX	QT-73XX	QX-78XX	YM-02XX	YT-76XX
AAE-74XX	AAX-14XX	QK-58XX	QS-42XX	QT-75XX	QZ-29XX	YM-81XX	YV-23XX
AAG-98XX	AAZ-47XX	QK-65XX	QS-49XX	QV-19XX	QZ-37XX	YN-83XX	YV-55XX
AAH-35XX	QC-39XX	QN-61XX	QS-96XX	QV-94XX	YA-74XX	YQ-19XX	YX-72XX
AAN-57XX	QI-44XX	QP-29XX	QT-14XX	QW-79XX	YE-29XX	YQ-33XX	YY-47XX
AAO-88XX	QK-06XX	QS-30XX	QT-53XX	QW-80XX	YE-52XX	YQ-34XX	

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE
BGH-82XX	HERO	MOTOR CYCLE
BGX-07XX	YAMAHA	MOTOR CYCLE
BIG-18XX	YAMAHA	MOTOR CYCLE
BIO-02XX	TVS	MOTOR CYCLE

VEHICLE NO	MODEL	MAKE
BIQ-51XX	TVS	MOTOR CYCLE
KK-53XX	MICRO	MOTOR CAR
RD-97XX	MAHINDRA	TRACTOR

2022 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி மற்றும் 2022 பெப்ரவரி மாதம் 01, 02, 03 ஆம் திகதி வரை மு.ப 10.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை பின்வரும் இடங்களில் பார்டவையிடலாம். 2022 பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி பி.ப 4.00 மணிக்கு கேள்வி படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுப்பெறும். கேள்வி படிவங்களை ரூபா. 250.00 ஐ (மீளளிக்கப்படாத) செலுத்தி பின்வரும் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம். (தலவத்துகொட, மஹார, ஹொரண, நிட்டம்புவ, அனுராதபுரம் மற்றும் குளியாப்பிட்டிய)

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனங்களில் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

வாகனபரி சோதனை

Kadawatha Vehicle Yard: No. 125/F, Ragama Road, Kadawatha.
Horana Vehicle Yard: No. 166, Aguruwathota Road, horana.
Anudharapura Vehicle Yard: Ala 05, Rathmale, Shrawasthipura.
Nittabmuwa Vehicle Yard: No. 655, Jayasuriya Mawatha, Nittabmuwa.
Kuliyapitiya Vehicle Yard: No. 259, Madampe Road, Kuliyapitiya.

Do Ads

* முன் அறிவித்தலின்றி வாகனத்தை மீளபெறும் உரிமை நிறுவனத்துக்குண்டு.

CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC
No. 125/F, Ragama Road, Kadawatha.
Tel: 0112 920 665 / 0112 925 044 / 034- 22 66 244 / 025-205 26 32

இன மத அரசியலும்... (09ஆம் பக்கத் தொடர்)

1971 இந்தியா – பாகிஸ்தான் யுத்தத்தின்போது கிழக்கு பாகிஸ்தானாக அறியப்பட்ட அம்மண்ணில் இருந்த பாகிஸ்தான் இராணுவம் அக்கோவிலை இடித்தது. சமீபத்தில் வங்கதேச அரசாங்கம் அக்கோவிலை மீளவும் அமைத்தது. 2020ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் ஏழு இந்து கோவில்கள் மீது தாக்குதல் நடைபெற்றிருந்தது. இவை தவிர, பாகிஸ்தானில் மத நிந்தனைச் சட்டம் அமுலில் உள்ளது. மத நிந்தனையில் ஈடுபட்டதாக எவர் மீதாவது குற்றச்சாட்டு எழுந்தால் அவர் மீது மரண தண்டனை விதிக்கப்படலாம். இச்சட்டம் தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதாக பாகிஸ்தானில் ஒரு பரவலான குற்றச்சாட்டு உண்டு. மத நிந்தனை குற்றச்சாட்டில் ஒருவர் சிக்கி பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டாலும் அவர் மீதான அக்கறை நீங்குவதில்லை. அவரைத் தொடர்ந்தும் அதே கண்ணோட்டத்திலேயே சமூகம் பார்க்கத் தொடங்கும். பலர் அவ்வூரை விட்டே விலகி தூர இடங்களுக்குச் சென்றுவிடுவதுண்டு.

ஜனநாயக நாடு என்ற வகையிலும் சுதந்திரமாக இயங்குவது உறுதிசெய்யப்பட்டிருப்பதாலும் இந்தியாவில் இன, மத வெறுப்பூட்டல்கள் பெரிய அளவில் இல்லை. ஊடகங்களுக்கு உள்ள சுதந்திரமும் ஒரு காரணம் எனலாம். இன, மத மோதல்களில் ஒருவர் ஈடுபடுகிறார் என்றால் அதை எதிர்க்க பத்துப் பேர் இருப்பார்கள். இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்பது கவனிக்கத் தக்கது. ஆனால் பாகிஸ்தான் மதம் சார்ந்த ஒரு நாடு. அரசியலும் அங்கே மதம் சார்ந்ததாகவே காணப்படுகிறது. அங்கு கிறிஸ்தவர்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக பரவலாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

நாம் இங்கே குறிப்பிட்ட விரும்புவது, மதம் அல்லது மதம் சார்ந்த அழுத்தங்கள் கொண்ட நாடுகள் தொடர்ந்து பொருளாதார ரீதியான பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டே இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதைத்தான். அதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு நல்ல உதாரணம். இன, மத முரண்பாடுகள் தீர்க்கப்பட்ட எல்லா நாடுகளுமே பொருளாதார ரீதியாக வெற்றி பெற்றுள்ளன என்பதை மறக்கக் கூடாது.

தேசிய மின் உற்பத்தி... (12ஆம் பக்கத் தொடர்)

இதன் அடுத்த கட்டமாக மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கக் கூடிய சாத்தியங்கள் தெளிவாகத் தெரிகின்றன. மின் கட்டண அதிகரிப்பு நாட்டின் சாதாரண மின் பாவனையாளரை மாத்திரமன்றி கைத்தொழிற்துரையினரையே மிக மோசமாகப் பாதிக்கும். உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். இதனால் ஏற்கெனவே அதிகரித்துச் சென்றுள்ள பொருட்கள் சேவைகளின் விலைகள் மேலும் தீவிரமாக அதிகரிக்கும். சுருக்கமாகக் கூறுவதானால் பெற்றோலிய இறக்குமதி குறைவடைந்து மின்னுற்பத்திக்கு தேவையான எரிபொருள் போதியளவில் கிடைக்காத பட்சத்தில் மின்னுற்பத்தி பாதிக்கப்படும்.

மின்வெட்டு ஏற்பட்டால் இலங்கையின் தொழிற்துறைகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு பொருள்விலைகள் சடுதியாக உயரும். உள்நாட்டுப் பணவீக்கம் அதிகரிக்கும்போது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் உயரும். இதனால் வேறுநாடுகள் இலங்கையின் சந்தைகளை இலகுவாகக் கைப்பற்றிக்கொள்ளும் ஆபத்து நிலவுகிறது. எனவே தான் எப்பாடுபட்டாவது மின்சாரத்தை சீராக வழங்குவதும். அதன் கட்டணத்தை முறையாகப் பேணுவதும் அவசியமானது.

நீண்டகால அடிப்படையில் மாற்று சக்திவளங்களுக்கு நகர்வது முக்கியமானது குறிப்பாக சூரிய சக்திவளத்திற்கு மாறுவது பற்றி ஆராயவேண்டும். இலங்கைளில் சூரிய கலத்தொகுதியொன்றை அமைப்பதற்கான செலவுகள் மிகமிக அதிகமாக உள்ளன. அவற்றை மிகக்குறைந்த செலவில் சாதாரண குடும்பங்களும் பெற்றுக் கொள்ளும் வண்ணம் வழங்க அரசாங்கம் முயல வேண்டும். இவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள தனியுரிமை நீக்கப்படவேண்டும்.

இதுபோன்ற ஒரு மின்சாரப் பற்றாக்குறையை தென்னிந்தியாவின் தமிழ்நாடு சில காலங்களுக்கு முன்னர் எதிர்நோக்கியது. மத்தியதர வகுப்பினரின் வருமான அதிகரிப்பும் தொடர்ந்து மின்சாரத்திற்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வியும் காரணமாக அங்கு நீண்டநேர மின்வெட்டுகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டன. அதனால் தமிழ்நாட்டின் தொழில்துறைகள் மோசான பாதிப்புகளைச் சந்தித்தன. கூடங்குளம் அணுமின்னுற்பத்தி நிலையம் தொடங்கப்பட்ட பின்னரே மின்பற்றாக்குறைக்கு அங்கு தீர்வு காணப்பட்டது.

இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடி டொலர் பற்றாக்குறை காரணமான ஏற்பட்டதாக சொல்லப்பட்டாலுங்கூட அதிகரித்தவரும் மின்சாரத்திற்கான கேள்வியைச் சமாளிக்க போதியளவு மின்னுற்பத்தி நாட்டில் மேற்கொள்ளப் படவில்லை. இது ஒரு புரையோடிப்போன நீண்டகாலப் பிரச்சினையாக மாறுமுன்னர் அப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைக் காணவேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)
மினிமார்ட் அங்காடியை வாடகைக்கு விடல்

பெலிஹுலோய, நன்பேரியலில் அமைந்துள்ள புதிதாக நிறுவப்பட்ட சரசவிகம மினிமார்ட் (வசதியான பொருள் கொள்வனவுகள் மற்றும் ஆறுதல் மையம்) அங்காடியை இயக்குவதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

சரசவிகம, பல்கலைக்கழகத்தின் பணிக்குழு உறுப்பினர்களுக்கான முழு அளவிலான குடியிருப்பு வசதிகளை வழங்கும் ஒரு பிரத்தியேக குடியிருப்பு பகுதி என்பதோடு இங்கு வெளி விருந்தாளிகளுக்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட பல விருதிந்தினர் விடுதிகளையும் கொண்டுள்ளது.

கொழும்பு – பதுளை பிரதான வீதியை ஒட்டி அனைத்து குடியிருப்பாளர்கள் மற்றும் பயணிகளின் ஒட்டுமொத்த தேவைகள் மற்றும் கோரிக்கைகளையும் வழங்குவதற்காக மினிமார்ட் வடிவமைக்கப்பட்டுள்ளது. மினிமார்ட் அங்காடி பெலிஹுலோய மற்றும் சூழவுள்ள உலக முடிவு, நீர்வீழ்ச்சிகள் போன்ற பல கவர்ச்சிகரமான சுற்றுலா தளங்களின் மையப்புள்ளியில் அமைந்துள்ளது. அது பலங்கொடையில் இருந்து 20 கி.மீ. மற்றும் பண்டாரவளையில் இருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மினிமார்ட் அங்காடியானது பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள், பயணிகள் மற்றும அருகிலுள்ள ஏனைய அரச மற்றும் அரச சாரா அமைப்புகளுக்கு சேவை வழங்கும் கௌரவத்தை பெற்றுள்ளது.

தேசிய போட்டிரீதியான விலைமனுவின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பொருத்தமான விலைமனுதாரர்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு ஏதேனும் அரச நிறுவனங்களினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

விலைக்கேட்பு வழங்கல் ஒப்பந்தக் காலம் பற்றி இரு தரப்புகளும் பரஸ்பரம் இணங்குவது அன்றி அல்லது விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 12 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்.

கடந்த மூன்று நிதி ஆண்டுகளுக்கான நிதி அறிக்கைகளை விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.

மின்சாரம், நீர் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுவதோடு பயன்பாட்டுக் கட்டணங்களை தேர்வு செய்யப்படும் விலைமனுதாரர் ஏற்றல் வேண்டும். வளாகத்தை தினசரி சுத்தம் செய்வது மற்றும் குப்பைத் தொட்டிகளை பேணுவதை வாடகையாளர் மேற்கொள்ளல் வேண்டும். ஒப்பந்தக் காலத்தில் பராமரிப்பு மற்றும் 20,000.00 ரூபாவுக்கு குறைந்த சிறிய பழுதுபார்த்தல்களை வாடகையாளர் ஏற்றல் வேண்டும்.

பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்:

- முகப்பு தோட்டம், கொல்லைவாசல் மற்றும் தனி கடை அறை உட்பட தோராயமாக 7500 சதுர அடியுடன் மினிமார்ட் கட்டிடம்,
- துப்புரவேற்பாட்டு வசதிகள்,
- வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோக வாகனங்களுக்கான போதுமான தரிப்பிட வசதி,
- விசேட தேவையுடையோருக்கான நுழைவும் உள்ளது.

மீளளிக்கப்படாத 15,000.00 ரூபா கட்டணத்தை செலுத்தி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்த பின் ஆர்வமுடையவர்களுக்கு இந்த வளாகத்திற்கு வருகைதர முடியும். தகுதியுடைய விலைமனுதாரர் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பெயருக்கு 119 நாட்கள் செல்லுபடியான 100,000.00 ரூபா மீளளிக்கப்படும் வைப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும். விலைமனு காலத்தை நீடிக்க விரும்பினால், செயல்திறன் பிணையும் நீடிக்கப்படுதல் வேண்டும்.

தகுதியுடைய விலைமனுதாரரின் தேர்வின்போது பெறுகைக் குழு பின்வரும் தொழில்நுட்ப விபரக்குறிப்புகளை கருத்தில்கொள்ளும்:

1. சிறு பல்பொருள் அங்காடி எண்ணக்கருவுடனான தொழில் முயற்சியாளர்
2. அனைத்து தேவையான வர்த்தக வாயில்களையும் வழங்குவதற்கு பல்பொருள் அங்காடியை நிறுவ மற்றும் முதலீடு செய்ய நிதித் திறன்
3. இலாபம் ஈட்டுவதை ஆரம்பிக்கும் வரை மினிமார்ட் அங்காடியை நடத்திச் செல்வதற்கு நிதி ஆற்றல்
4. ஐந்து ஆண்டுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் பல்பொருள் அங்காடித் துறையில் நன்கு நிறுவப்பட்ட நிறுவனம்
5. உணவேற்பாடு மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை கையாளுதலில் அனுபவம்
6. பின்வரும் உருப்படிகளுடன் சிறு பல்பொருள் அங்காடி ஒன்றை நடத்திச்செல்லல்: வீட்டுடைமை/ பலசரக்கு பொருட்கள்; அத்தியாவசிய ஆடை; அத்தியாவசிய பாதணி; அடிப்படை அத்தியாவசிய மருந்துகள்; பகுதி அளவான வன்பொருட்கள்; சமையலறை பயன்பாடுகள்; பாத்திரங்கள்; அழகுசாதனப் பொருட்கள்; குழந்தை பராமரிப்பு; தோட்டப் பராமரிப்பு; எழுதுபொருட்கள்; சிற்றுண்டிக் கடை; அச்சுப்பொறி மற்றும் நிழற்பிரதி; ATM; சிகை அலங்கார நிலையம் (விருப்பத்தெரிவுக்குரியது); Recharging Centre; நினைவு பொருட்கள்
7. தொழில்முறையான விற்பனை பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள், தரை வேலை பணியாளர்கள் இயக்குபவரால் வழங்கப்படுதல் வேண்டும்.

ஆரம்பத்தில், 60 மாத காலத்திற்காக தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுடன் பல்கலைக்கழகம் உடன்படிக்கை செய்துகொள்ளும் என்பதோடு 60 மாத கால உடன்படிக்கை பூர்த்தியான பின் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் இரு தரப்புகளும் வாடகையில் திருத்தம் மற்றும் உடன்படிக்கையை புதுப்பிப்பதுடன் தொடர்ந்து செயற்பட இணங்க முடியும்.

* விலைமனுதாரரின் ஒப்புதலுடன் வசதிகளை அதிகரிப்பதற்கு பல்கலைக்கழகம் உரிமை பெற்றுள்ளது.

2022.02.01 ஆம் திகதி தொடக்கம் 2022.03.15 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் விண்ணப்பம் ஒன்றுக்கு 15,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2246976 என்ற கணக்கு இலக்கத்திற்கு இலங்கை வங்கி, பலாங்கொடை கிளையில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகதிற்கு வரவு வைத்து அதற்கான வங்கி ரசீது அல்லது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் சிறாப்பர் கருமபீடத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை சமர்ப்பித்து பொது நிர்வாக, பிரதிப் பதிவாளரிடம் இருந்து விலைமனு படிவங்களை பெற முடியும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022.02.24 ஆம் திகதி மு.ப. 10.00க்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.

இரு பிரதிகளுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களைக் கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக - மினிமார்ட் அங்காடியை வாடகைக்கு விடல்" என்று குறிப்பிட்டு 2022.03.15 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு "தலைவர், பெறுகைக் குழு, பொது நிர்வாகப் பிரிவு, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், த. பெட்டி 02, பெலிஹுலோய" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம். பெலிஹுலோய, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக, பதிவாளரின் அலுவலகத்தில் 2022.03.15 ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.

தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

இது தொடர்பில் மேலதிக விபரங்களை வேலை நாட்களில் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாக/ பிரதிப் பதிவாளரிடம் இருந்து பெற முடியும் (தொ. இல. 045 2280027/ 045 2280009).

பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது என்பதோடு பல்கலைக்கழக அதிகாரிகளிடம் ஆதரவு திரட்டல் தடுக்கப்பட்டுள்ளது.

தலைவர்
பெறுகைக் குழு
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுலோய
2022.01.30

SMIB

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

மத்துகம, வவுனியா, சிலாபம், ஹொரண மற்றும் மாத்தளை பிரதான நகரங்களில் அலுவலக வசதிகள் தேவை

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் மத்துகம, வவுனியா, சிலாபம், ஹொரண மற்றும் மாத்தளை கிளைகளுக்கு கீழ்க்காணும் வசதிகளுடன் அலுவலக இடவசதி வாடகை/குத்தகையில் பெற்றுக் கொள்ள தேவையாக உள்ளது.

கிளை	சதுர அடி
மத்துகம	1750 - 2500
வவுனியா	1750 - 2500
சிலாபம்	1750 - 2500
ஹொரண	3800 - 4000
மாத்தளை	1750 - 2500

தேவைப்படும் வசதிகள்:-

- பிரதான வீதிக்கு முகப்பாக ஓர் தரைமாடியாக இருத்தல் வேண்டும்
- குறைந்த பட்சம் 4 வாகனங்கள் நிறுத்தக் கூடிய இட வசதி
- போதுமான காற்றோட்டத்துடன் ஜெனரேட்டர் அறைக்கான பிரத்தியேக இடவசதி
- தீ காப்புறுதி மற்றும் மின்சார பொறியியல் சான்றிதழ்
- அங்கவீனர்களுக்கான பிரத்தியோக உள்நுழைவு
- நீர், தொலைபேசி, மூன்று சுற்று மின்சாரம், ஜெனரேட்டர் மற்றும் துப்புறவேற்பாட்டு வசதிகள் உள்ளடங்கலாக ஏனைய அடிப்படை தேவைப்பாடுகள்
- அவசரகால கதவுகள்
- டைல் செய்யப்பட்ட தரை
- குறைந்த பட்சம் 30 அடியில் பாதைக்கு முகப்பாக

எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை சதுர அடிஅளவு, அனுமதி பெற்ற கட்டிட வரைபடம், COC உறுதி மற்றும் நில அளவையாளர் வரைபடத்தின் பிரதிகள் மற்றும் ஏனைய நிபந்தனைகள் உள்ளடங்கிய எல்லா விபரங்களுடனான பொறியிடப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது 2022.02.25ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்பு கீழ்க் காணும் முவரிக்கு விநியோகிக்கப் படலாம். கேள்விகள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.

தலைவர் (பெறுகைக் குழு),
அரச ஈட்டு முதலீட்டு வங்கி,
இல. 269, காலி வீதி,
கொழும்பு -03.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பிரதம முகாமையாளர் (HR& Logistics) தொ. பே. இலக்கங்கள் 011-7722879/ 011-7722784 மூலமாக தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
அரச ஈட்டு முதலீட்டு வங்கி,
இல. 269, காலி வீதி,
கொழும்பு -03.

பெறுகை அறிவித்தல்

தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்கல்

களனிப் பல்கலைக்கழகம் - களனி

களனிப் பல்கலைக்கழகத்திற்கு உரித்தான பின்வரும் இடங்களில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் விடுதிக

மங்கையர் முற்றம்

தன்னம்பிக்கையே வெற்றியைத் தரும்

வெற்றி தோல்விகளை கணக்கில் கொள்ளாமல் செயலில் இறங்க வேண்டும். தோற்று விடுவோமோ? என்கிற எண்ணத்திலிருந்து வெளியே வர தன்னம்பிக்கையே உதவும்.

கற்கும் கல்வி தான் ஒவ்வொருவரின் தனித்திறமையையும், தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்தும்.

பெண்கள் தாங்கள் வளர்வதற்கு முன் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு உயர விடாமுயற்சி, கடின உழைப்பு, திட்டமிடல் போன்றவை தேவை. இவை எல்லாவற்றுக்கும் அடித்தளமாக இருப்பது தன்னம்பிக்கை தான். இதை மனதில் கொண்டவர்கள் எப்போதும் சோர்வு அடைவதில்லை.

உலக அளவில் செய்யப்படும் அரிய சாதனைகள் அனைத்துக்கும் காரணமாக இருப்பது தன்னம்பிக்கை தரும் வலிமையே. வெற்றி இலக்கை அடைய தன்னம்பிக்கையுடன் சேர்ந்த உற்சாகம் இருந்தால் போதும். விரும்பியதை அப்படியே செய்து காட்டலாம்.

தன்னம்பிக்கை கொண்டவர்கள் தாங்கள் மட்டுமன்றி தங்களுடன் இருப்பவர்களின் எண்ண ஓட்டங்களையும் நேர்மறையாக மாற்றுகின்றனர். மற்றவர்களிடம் நல்ல நம்பிக்கையை பெறுவது கூட வெற்றியடைவதற்கான ஒரு முக்கிய அம்சமாகும். நமக்குள் இருக்கும் திறமைகளை கண்டறிந்து பெருமைப்பட வேண்டும். அந்த எண்ணமே சிறந்த தன்னம்பிக்கையைத் தரும். சுய சந்தேகத்துடன் நம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்வது இன்னும் சிறப்பாக செயல்பட உதவும். பாராட்டுகிறவர்களையும், நேர்நிலை எண்ணங்கள் கொண்டவர்களையும் அருகில் வைத்துக்கொள்ளுங்கள். சரியான புரிதல்களுடன் நம்மை பற்றி நாமே உயர்வாக நினைக்க பழகுவது மனவலிமையை கூட்டும்.

நாம் அனைவரும் சாதிக்க பிறந்தவர்கள், உலகம் நம்மை திரும்பி பார்ப்பதெல்லாம். இருக்கட்டும். முதலில் உலகை நாம் திரும்பி பார்ப்போம். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் தலைமை பண்புகள் எனும் பல உயர்பதவிகள் நம்மை அழகு படுத்தக்காத்திருக்கும்.

தன்னம்பிக்கையை வளர்க்க நம்மிடம் இருக்கும் செல்வம், உடைமைகள், திறன்கள், சாதனைகள் மற்றும் பண்புகளை மற்றவர்களுடன் ஒப்பிடக்கூடாது. நம் உடல் ஆரோக்கியமாக சிறந்து விளங்கும் போது இயல்பாகவே அதிக தன்னம்பிக்கை பிறக்கும். ஆகவே ஆரோக்கியமான உடலுடன் நற்சிந்தனைகள் கொண்டு மகிழ்வான வாழ்க்கை முறையை வைத்து கொள்ளுங்கள். தொடர் வெற்றியாளராக வலம் வருவீர்கள்.

அழகைத் தேடுவோம் ஆபத்தில்லாமல்

நவீன யுகத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் பெண்களின் வாழ்க்கைமுறை வேகமெடுத்திருந்தாலும், அழகு சாதனங்களால் அழகை ஆராதிப்பதற்கும் அவர்கள் நேரம் ஒதுக்க தவறுவதில்லை. எவ்வளவு அவசரமாக வெளியே செல்ல வேண்டி இருந்தாலும் 'மேக்கப்' போட்டுக் கொள்ளாவிட்டால், அவர்களுக்கு மனநிறைவு ஏற்படாது. முகமும் பொலிவு பெறாது.

பெண்கள் தங்களுக்கு விருப்பமான மேக்கப் சாதனங்களை தேடிப்பிடித்து வாங்கும்போதும், பயன்படுத்தும்போதும் அதன் மூலம் வெளிப்படும் அழகுத்தன்மையை மட்டுமே கவனத்தில் கொள்வார்கள். ஆனால் அவை கூந்தலுக்கும், சருமத்திற்கும் தீங்கு விளைவிக்காத, இரசாயன கலப்படமற்ற பொருட்களாக இருக்க வேண்டும். இதை பெரும்பாலான பெண்கள் கவனத்தில் கொள்வதில்லை. சிலரிடம் இதன் பின்விளைவுகளை பற்றிய விழிப்புணர்வும் இல்லை.

வீட்டில் அழகு சாதன பொருட்களை பயன்படுத்தினாலும், பலருக்கு அழகு நிலையங்களுக்கு சென்று தங்களை அழகுபடுத்திக்கொண்டால்தான் மனநிறைவு ஏற்படுகிறது. ஆனால், எல்லா அழகு நிலையங்களிலும் தரமான பொருட்களை தேர்ந்தெடுத்து வாடிக்கையாளர்களுக்கு பயன்படுத்துவதில்லை. சில அழகு நிலையங்களில் பயன்படுத்தப்படும் பொருட்கள் விலை மலிவானவை. அவை பெரும்பாலான பெண்களுக்கு ஒத்துக்கொள்ளாது.

அதை பயன்படுத்திய சில மணி நேரங்களில் முகத்தில் அரிப்பு, கண்களில் எரிச்சல் தோன்றும். விலை உயர்ந்த அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்தினால் அத்தகைய பக்கவிளைவுகள் ஏற்படாது. கட்டணத்தை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் அதன் தரத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதனுள் ஆபத்து ஒளிந்திருக்கும்.

இதில் இன்னொரு பெரிய நெருக்கடி என்னவென்றால், பிரபலமான நிறுவனத்தின் பெயரில் போலி தயாரிப்புகள் சந்தைக்கு வருகின்றன. அதனால் உன்னிப்பாக கவனித்து அழகு சாதன பொருட்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் காசை கொடுத்து கஷ்டத்தை விலைக்கு வாங்கியது போல் ஆகிவிடும்.

மேக்கப் இல்லாமல் வெளியே போய்விட முடியுமா? என்று கேட்டால் பெரும்பாலானோரின் பதிலில் மௌனத்துடன் கூடிய புன்னகைதான் எட்டிப்பார்க்கும். ஏனெனில் இப்போதெல்லாம் ஆண்கள் கூட மேக்கப் போட்டுக்கொள்ள தொடங்கிவிட்டார்கள். உச்சி முதல் பாதம் வரை ஆண்களுக்கும், பெண்களுக்கும் தேவையான பல அழகு சாதனப் பொருட்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. அவைகளில் போலிகள் எது, எப்படி கண்டுபிடிப்பது என்ற குழப்பமா? அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்...

மனச்சோர்வு

கவலை மற்றும் மனச்சோர்வு, ஆண்களை விடப்பெண்களை இரண்டு மடங்கு அதிகமாக பாதிக்கிறது. பெண்கள் ஒரே நேரத்தில் பலவற்றை பற்றி சிந்திக்கும் குணம் கொண்டவர்கள். ஒரு கட்டத்தில் இந்த சிந்தனையே அவர்களுக்கு கவலையை ஏற்படுத்தும். இதன் காரணமாக பெண்கள் பல சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள்.

கவலை என்பது மன அழுத்தத்தின் முதல் படி. அதை கட்டுப்படுத்துவது அனைவருக்கும் கடினமான விஷயமாக உள்ளது. இது அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் போது எதிர்மறையான பல சிக்கல்களை உருவாக்குகிறது. அடிக்கடி கவலைப்படும் பிரச்சினை ஐந்தில் ஒருவருக்கு உள்ளது என சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

மாதவிடாய் சுழற்சி மற்றும் கர்ப்பக்காலங்களில் பெண்களின் ஹார்மோன் மற்றும் ஈஸ்ட்ரோஜன் அளவுகளில் ஏற்படும் மாற்றங்கள் இதற்கு காரணமாக இருக்கின்றன. கர்ப்பக்காலத்தில் ஏற்படும் எடை அதிகரிப்பு, உடல் பருமன் போன்றவை பெண்களிடையே கவலையையும் மனச்சோர்வையும் அதிகரிக்கின்றன.

இதை தவிர அதீத சிந்தனை என்பது சில குடும்பங்களில் மரபியல் வழியாகவும் ஏற்பட கூடியது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதிர்ச்சிகரமான நிகழ்வுகள், தாக்குதல் அல்லது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாதல் போன்ற செயல்களால் இது பெண்களிடம் அதிகம் காணப்படுகிறது.

கவலையை தொடர்ந்து மன அழுத்தம் மனச்சோர்வு ஆகியவை கடுமையான உடல் மற்றும் மனநலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அதை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் தகுந்த சிகிச்சைகளின் மூலம் எளிதில் குணப்படுத்த முடியும். உங்களுக்கு மனச்சோர்வு மற்றும் தேவையில்லாத கவலை இருந்தால் அதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சரி செய்வதற்கான வழிகளை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆண்களை விட பெண்களையே அதிகம் பாதிக்கிறது

முகக்கவசம்

முகக் கவசமே கொரோனாவிலிருந்து மக்களை பாதுகாக்கும் கேடயமாக விளங்கி வருகிறது. துணியினாலான முகக் கவசம் பாதுகாப்பை அளிப்பதோடு, செலவையும் குறைக்கிறது.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் உள்ள மக்களை முடக்கி போட்டு உள்ளது. கொரோனா வைரசுக்கு எதிராக போராட்டம் தொடர்கிறது. வைரசிடம் இருந்து மக்களை தற்காத்துக்கொள்ளும் வகையில் சமூக இடைவெளி, தனித்து இருத்தல், முகக் கவசம் அணிதல், கைகழுவுதல் போன்றவற்றை அரசாங்கம் அறிவுறுத்தி வருகிறது.

தற்போது துணியினாலான முகக்கவசம் அதிக அளவில் தயாரிக்கப்பட்டு வீதியோரங்களில் கூட விற்பனைக்கு வந்து விட்டது. இந்த முகக் கவசம் பெயரளவுக்கு அணியும் வகையில் இருக்கக் கூடாது. அதை முறையாக பராமரித்து அணிய வேண்டும். அப்போது தான் நோயின் தாக்கத்தில் இருந்து நாம் விடுபட முடியும்.

பொதுமக்கள் துணியினாலான முகக்கவசத்தை தற்போது அணிந்து வருகிறார்கள். இவர்களால் தினமும் முகக்கவசம் வாங்குவது என்பது சிரமம். இதற்காக மீண்டும் துவைத்து பயன்படுத்தக்கூடிய துணியினாலான முகக்கவசங்களை அணிந்து வருகிறார்கள். 3 அடுக்கு துணி முகக்கவசங்களை ஒருவர் வைத்துக்கொண்டால் அவற்றை துவைத்து சுழற்சி முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். ஒருநாள் பயன்படுத்திய முகக்கவசத்தை துவைத்து அதை 3 நாட்கள் கழித்து மீண்டும் பயன்படுத்தலாம்.

முகக் கவசத்தை முன்பகுதியில் கைகளால் தொடக்கூடாது. இது நோய் கிருமிகள் நமக்குள் எளிதில் பரவும் வாய்ப்பை ஏற்படுத்தும். முகக்கவசத்தை கழற்றும்போது கயிற்றை பிடித்து மட்டுமே கழற்ற வேண்டும்.

துணி முகக் கவசம் என்பது தற்காத்துக் கொள்வதற்காக பயன்படுத்திக்கொள்ளலாம். தற்போது முகக் கவசத்துடன் தான் வெளியில் சுற்றித்திரிய வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது. இதனால் அனைவரும் கட்டாயமாக முகக் கவசம் அணிய வேண்டும். முகக்கவசத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

வளைகாப்பு விழா எதற்கு?

வளைகாப்பு சடங்கு உறவினர்களும், நண்பர்களும் கூடி வந்து உன்னை பத்திரமாக பார்த்து கொள்ள நாங்கள் இருக்கிறோம் என்ற நம்பிக்கையை கொடுக்கும் நிகழ்வாகும். முதல் குழந்தையை பெற்றெடுக்க போகும் பெண்களுக்கு பிரசவத்திற்கு முன்பாக வளைகாப்பு எனும் சடங்கை பாரம்பரியமாக செய்து வருகிறார்கள். இதன் பின்னணியில் பல நன்மைகள் இருக்கின்றன.

கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் மாற்றங்கள்

கருவுற்றிருக்கும் பெண்களுக்கு உடல் மற்றும் மன ரீதியாக பல்வேறு இரசாயன மாற்றங்கள் நிகழும். வாந்தி, மயக்கம், ஒவ்வாமை உள்ளிட்ட உடல் சார்ந்த பிரச்சினைகளால் குழப்பம், பிரசவம் பற்றிய அச்சம் போன்ற மனநல பிரச்சினைகளும் ஏற்படும். இந்த நேரத்தில் பெரும்பாலான கர்ப்பிணிகள் தங்களுக்கு விருப்பமான உணவுகளை சாப்பிட விரும்புவார்கள். ஆனால் குமட்டல் உணர்வு காரணமாக சாப்பிட முடியாது. அப்படியே சாப்பிட்டாலும் வாந்தி ஏற்பட்டு அவர்களை சிரமப்படுத்தும்.

கண்ணாடி வளையல்கள் அணிவது ஏன்?

கருவுற்ற ஏழாவது மாதத்தில் உறவினர்களும், நண்பர்களும் பெண்ணின் புகுந்த வீட்டுக்கு வந்து வளைகாப்பு செய்வார்கள். கருவுற்ற பெண்ணுக்கு தாய்மார்கள் ஒவ்வொருவராக நலங்கு வைத்து கண்ணாடி வளையல்களை அணிவித்து ஆரத்தி எடுத்து அட்சதை தூவுவார்கள்.

கர்ப்பிணியின் மணிக்கட்டு முதல் முழங்கை வரை வண்ணமயமான வளையல்கள் நிறைந்திருக்கும். சுற்றமும் நட்பும் சூழ அந்த பெண்ணை தாய் வீட்டுக்கு அழைத்து செல்வார்கள்.

கருவுற்ற பெண்களுக்கு ஏற்படும் வாந்தி பிரச்சினை ஏழாவது மாதத்திற்குள் பெரும்பாலும் நின்று விடும். வளைகாப்பு சமயத்தில் அவர்களுக்கு புளி, எலுமிச்சை, போன்ற சோறு வகைகளையும், இனிப்பு காரம் போன்ற உணவுகளையும் தாய் வீட்டில் இருந்து சமைத்து கொண்டு வந்து கொடுப்பார்கள். கர்ப்பிணி பெண்கள் தங்களுக்கு விருப்பமானவற்றை ஆசை தீர உண்பார்கள்.

கண்ணாடி வளையல்கள் குலுங்கும் சத்தத்தை வயிற்றில் இருக்கும் குழந்தையால் நன்றாக கேட்க முடியும். அந்த சத்தம் தாயையும், சேயையும் மகிழ்ச்சியாக வைத்து கொள்ள உதவும்.

மேலும் ஏழாம் மாதத்திற்கு மேல் தம்பதிகளுக்கிடையே தாம்பத்திய உறவை தவிர்க்க வேண்டும். அதற்காகவே எளிதில் உடையக்கூடிய கண்ணாடி வளையல்களை அணிவிப்பார்கள்.

இதன் மூலம் கணவன் தன்னை பார்க்க வரும் நாளில் கூட அப்பெண் பாதுகாப்பாக நடந்து கொள்வதற்கு அந்த வளையல்களே காப்பாக அமையும்.

ஒவ்வொரு பெண்ணும் கருவுற்ற காலத்தில் நம்மையும் நம் தாய் இப்படித்தான் தாங்கியிருப்பாள்? என்று நினைத்து தாயின் மீது அதிக பாசம் கொள்வார்கள். தாயின் அருகில் இருப்பதை பாதுகாப்பாக உணர்வார்கள். எனவே தான் தலைப்பிரசவத்தை தாய் வீட்டில் வைப்பது வழக்கமாக உள்ளது.

சினி மஞ்சரி

தளபதி 66

பக்காவான குடும்ப கதை...!

தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவர் தளபதி விஜய். இவர் நடிப்பில் கடைசியாக மாஸ்டர் படம் 2021 பொங்கலுக்கு வெளியாகி பெரிய வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து நெல்சன் இயக்கத்தில் பீஸ்ட் படத்தில் நடித்துள்ளார். இந்த படம் ஏப்ரல் மாதம் வெளியாகவுள்ளது.

இதனை அடுத்து விஜய் நடிக்கும் படம் தளபதி 66. இந்த படத்தினை தோழா, மஹரிஷி போன்ற வெற்றி படங்களை இயக்கிய வம்சி இயக்குகிறார். தெலுங்கின் முன்னணி தயாரிப்பாளரான தில் ராஜுவின் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் தயாரிக்கின்றனர்.

இந்த படத்தின் அறிவிப்பு சில மாதங்களுக்கு முன் அறிவிக்கப்பட்டது. இந்த படத்தின் ஷூட்டிங் மற்றும் படத்தில் நடிக்கும் நடிகர்கள் குறித்த தகவல் விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமன் இந்த படத்திற்கு இசையமைக்கவுள்ளார் என்ற தகவலும் பரவலாக பரவி வருகிறது. இந்த படத்தின் ஷூட்டிங் மார்ச் மாதம் முதல் தொடங்கவுள்ளது.

இந்த படத்தினை 2022 தீபாவளி அல்லது 2023 பொங்கலுக்கு கொரோனவை பொறுத்து வெளியிட திட்டமிட்டுள்ளதாக தயாரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது சமீபத்தில் ஒரு பேட்டியில் இந்த படம் ஒரு பக்காவான குடும்ப கதை, பூவே உனக்காக, துள்ளாத மனமும் துள்ளும் படங்களை போல விஜய்க்கு அனைத்து அம்சங்களும் அமைந்த ஒரு படமாக இது இருக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நீச்சல் உடையில் மாஸ்டர் பட நடிகை!

கடந்த ஆண்டு விஜய் நடிப்பில் வெளிவந்த திரைப்படம் மாஸ்டர். இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்திருந்தவர் நடிகை மாளவிகா.

இதற்கு முன் பேட்ட படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தாலும், மாஸ்டர் படத்தின் மூலமாக தான், கதாநாயகியாக தமிழ் சினிமாவில் என்ட்ரி கொடுத்துள்ளார்.

ரஜினி மற்றும் விஜய்யை தொடர்ந்து மீண்டும் முன்னணி நடிகர்களில் ஒருவரான தனுஷுடன் ஜோடி போட்டு, கார்த்திக் நரேன் இயக்கியுள்ள மாறன் படத்தில் நடித்துள்ளார்.

நடிகை மாளவிகா அவ்வப்போது சமூக வலைத்தளத்தில் வெளியிடும் புகைப்படங்கள் ரசிகர்கள் வைரலாவதுண்டு.

அந்த வகையில் தற்போது நீச்சல் உடையில், மாலைத் தீவில் போஸ் கொடுத்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தை வெளியிட்டுள்ளார் மாளவிகா மோகனன்.

பிக் பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியில் ஓவியா!

தமிழ் சினிமாவின் பிரபல நடிகைகளில் ஒருவர் ஓவியா. இவர் களவாணி படத்தின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார்.

இதனை தொடர்ந்து விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பிக் பாஸ் முதல் சீசனில் கலந்துகொண்டு, தனக்கென்று ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கினார்.

பிக் பாஸ் நிகழ்ச்சிக்கு பின் இவர் நடிப்பில் வெளிவந்த 90ML திரைப்படம் சர்ச்சையில் சிக்கியது. இதன்பின் பெரிதும் படவாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறார்.

மேலும், மீண்டும் பிக் பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவிருக்கிறார் நடிகை ஓவியா.

இந்நிலையில், பிக் பாஸ் 5 நட்சத்திரம் நடிகர் வருண் மற்றும் ஓவியா இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்று இணையத்தில் வெளியாகியுள்ளது.

பிரபுதேவாவின் மிரட்டலான டைட்டில் மற்றும் மோஷன் போஸ்டர் வெளியானது

இந்திய திரையுலக ரசிகர்களின் ப்பேவரட்டான சினிமா நட்சத்திரமான பிரபுதேவா ஆகச்சிறந்த நடன இயக்குனர் நடிகர் பிளாக்பஸ்டர் படங்களை இயக்கும் மாஸ் இயக்குனர் என பன்முகத்தன்மை கொண்ட கலைஞராக வலம் வருகிறார். கடந்த பொங்கல் வெளியீடாக பிரபுதேவா நடிப்பில் அதிரடி ஆக்ஷன் திரைப்படமாக வெளிவந்து ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

அடுத்ததாக இயக்குனர் டான் சாண்டி இயக்கத்தில் ரெஜினா கெஸன்ட்ராவுடன் இணைந்து ப்ளாஷ்பேக் படத்தில் பிரபுதேவா நடித்து வருகிறார். முன்னதாக குழந்தைகள் கொண்டாடும் கலகலப்பான ஃபேன்டசி திரைப்படமாக பிரபுதேவா நடித்துள்ள மை டியர் பூதம் திரைப்படம் ரிலீசுக்கு தயாராகி வருகிறது.

இதனிடையே இயக்குனர் சந்தோஷ். பி.ஜெயக்குமார் இயக்கத்தில் மாற்றுத்திறனாளியாக மிரட்டலான கதாபாத்திரத்தில், பிரபுதேவா நடித்துள்ள பொய்க்கால் குதிரை & இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் பல வித்தியாசமான கெட்டப்களில் பிரபுதேவா நடித்துள்ள சைக்கோ த்ரில்லர் திரைப்படமான பஹீரா ஆகிய திரைப்படங்களின் படப்பிடிப்பு நிறைவடைந்து இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வரிசையில் பிரபுதேவா அடுத்து நடிக்கும் திரைப்படத்தின் மிரட்டலான டைட்டில் மற்றும் மோஷன் போஸ்டர் தற்போது வெளியானது. ரேக்ளா என பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தை இயக்குனர் அன்பு எழுதி இயக்குகிறார். ஜிப்ரான் இசை அமைக்கிறார்.

பொல்லாத உலகம் பாடல் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு...

தமிழ் சினிமாவின் தன்னிகரற்ற நடிகர்களில் ஒருவராக திகழ்ந்து வருபவர் தனுஷ். ஒவ்வொரு படத்திலும் ஏதேனும் ஒன்றை ட்ரை செய்து தமிழ் சினிமாவை வேற லெவெலிற்கு எடுத்து செல்லும் சில நடிகர்களில் ஒருவராக தனுஷ் இருக்கிறார். இவரது நடிப்பில் கடைசியாக அத்ரங்கி ரே படம் வெளியானது.

இதனை தொடர்ந்து தனுஷ் மாறன், வாத்தி, ராட்சசன் இயக்குனர் ராம்குமார் இயக்கத்தில் ஒரு படம், தி கிரே மேன், செல்வராகவன் இயக்கத்தில் நானே வருவேன், வெற்றிமாறனுடன் ஒரு படம், சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் திருச்சிற்றம்பலம், ஆயிரத்தில் ஒருவன் 2, சேகர் கம்முலா இயக்கத்தில் ஒரு படம், வாத்தி என்று ஒரு தனி லிஸ்டே வைத்துள்ளார் தனுஷ்.

மாறன் படத்தை சத்யஜோதி பிலிம்ஸ் தயாரித்துள்ளனர். கார்த்திக் நரேன் இந்த படத்தினை இயக்கியுள்ளார், ஜீ.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தில் ஹீரோயினாக மாளவிகா மோஹனன் நடித்துள்ளார். இந்த படத்தில் ஸ்மிருதி வெங்கட், சமுத்திரக்கனி, மஹேந்திரன் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இந்த படம் விரைவில் நேரடியாக ஹாட்ஸ்டார் தளத்தில் வெளியாகவுள்ளது. இந்த படத்தின் மோஷன் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. இந்த படத்தின் முதல் பாடலான பொல்லாத உலகம் பாடல் வீடியோ தற்போது வெளியிடப்பட்டுள்ளது. தனுஷ் மற்றும் அறிவு இணைந்து பாடியுள்ள இந்த பாடல் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இன்ஸ்டாகிராமில் அசத்தல் சாதனையை நிகழ்த்திய சாய் பல்லவி!

பிரேமம் படத்தின் மூலம் தென் இந்தியாவின் Favourite நடிகையானவர் சாய் பல்லவி. நடிப்பு, நடனம் என என்னவாக இருந்தாலும் அடிச்சு தூள் கிளம்புவார். தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் பல படங்களில் நடித்து வந்த இவர், இந்த படங்கள் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றிருந்தன. தியா படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

இதனை தொடர்ந்து சூர்யா நடிப்பில் வெளியான NGK, தனுஷ் நடிப்பில் மாரி 2 என்று தமிழிலும் பெரிய ஹீரோக்களுடன் இணைந்து அசத்தினார். மாரி 2 படத்தில் இடம்பெற்ற Rowdy Baby பாடலில் இவரது நடனத்தை பாராட்டாதவர் எவரும் இருக்க மாட்டார்கள். இதனை தொடர்ந்து சில படங்களில் ஹீரோயினாக நடித்து வருகிறார் சாய் பல்லவி.

மானாட மயிலாட உள்ளிட்ட ஷோக்களில் பங்கேற்று வந்த சாய் பல்லவியின் நடனம் ரசிகர்களால் மிகவும் வரவேற்கப்பட்டது. சாய் பல்லவியின் நடிப்பை தாண்டி அவரது நடனத்திற்கென்றே தனியொரு ரசிகர் பட்டாளமே உருவானது. இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது வீடியோ, போட்டோக்களை பதிவிட்டு வருவார் சாய் பல்லவி.

இவர் அடுத்ததாக சில முக்கிய படங்களில் நடித்துள்ளார். இவர் நானியுடன் நடித்த ஷ்யாம் சிங்கா ராய் படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. தற்போது இவர் இன்ஸ்டாகிராமில் 5 மில்லியன் ரசிகர்களை பெற்று சாதனை படைத்துள்ளார். இவரது இந்த சாதனையை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

தொழிலதிபர் தெய்வநாயகம் ஈஸ்வரன்

இலங்கை சின்மயா மிசன் தலைவர் என்ற ரீதியில் மலையகத்தில் உள்ள ரம்பொடையில் ஸ்ரீ ஹனுமான் கோவில் கட்டும் செயற்பாட்டை முன்னெடுத்து, தமிழ்நாட்டின் மகாபலிபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட 18 அடி உயரமான ஹனுமான் சிலையை இலங்கைக்கு கொண்டு வந்து பிரதிஷ்டை செய்வதில் அளப்பரிய பணியாற்றிய தெ. ஈஸ்வரன் அமரராகி 4வது ஆண்டில் அவரது மற்றுமொரு பெரு முயற்சியில் இன்று குருணாகல் ரம்படகொல்லவில் உள்ள கற்பாறையில் 60அடி உயரத்தில் எழுந்தருளியிருக்கும் இலங்கையிலேயே உயரமான தியானநிலை புத்தர் சிலை அருகில் அன்னாரது நினைவாக நேற்று (29.01.2022) பௌத்த குருமார்களுக்கு தானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

தேசிய இன ஒற்றுமைக்கு முன்னின்று பாடுபட்டுவரும் சமயத் தலைவர்களில் ஒருவரும் அமரபுரபீடத்தைச் சேர்ந்த மகா நாயக்கருமான அதி சங்கைக்குரிய பீடாதிபதி எகொடமுல்லே அமரமோலி தேரரின் ஆசிர்வாதத்துடன் நடைபெற்ற நிகழ்வில் அமரர் ஈஸ்வரனின் சகோதரர்கள், குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று பலர் கலந்துகொண்டனர். அமரர் ஈஸ்வரன் எவ்வித இன வேறுபாடுமின்றி சமய சமூக பணிகளை ஆற்றியதையிட்டு பௌத்த மக்கள் அன்னாருக்கு வழங்கிய மாபெரும் கௌரவமாக இதனை கொள்ள வேண்டும். குரோதம் வென்று ஆப்கானிஸ்தானில் வாழும் கடும் போக்கு பயங்கரவாத இயக்கம் 2500 ஆண்டுகள் பழமைவாய்ந்த பாமியான் புத்தர் சிலைகளை 2001இல் குண்டு வைத்து தகர்த்த நிகழ்வினால் உலகெங்கும் வாழும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம்கள் மனவேதனை அடைந்திருந்த தருணத்தில், குரோதம் வென்று அன்பில் உருவான குருணாகல் ரம்பொடகல்லயில் சமாதி புத்தர் சிலையை நிர்மாணித்த அமரர் ஈஸ்வரன் தமிழ்நாட்டில் திருநெல்வேலிக்கு அருகில் இருந்த சிறிய கிராமம்

ரம்பொடையில் ஸ்ரீ ஹனுமாள் கோவில்

தந்தை தெய்வநாயகம் பிள்ளை

தெ.ஈஸ்வரன்

ஒன்றில் 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் திகதி பிறந்தார்.

கொழும்பு சென்.பெனடிக்ட் கல்லூரியில் தனது ஆரம்ப கல்வியை பூர்த்தி செய்த அவர் தமிழகம் சென்று தனது உயர் கல்வியை தொடர்ந்தார். அங்கு அவருக்கு தமிழ் மற்றும் ஆங்கில பேராசியர்களுடனும் இலக்கியவாதிகளுடனும் ஏற்பட்ட தொடர்பு எதிர்காலத்தில் சிறந்த பேச்சாளராகவும், ஆற்றல்மிக்க எழுத்தாளராகவும் வளர பெரிதும் உதவியது.

உயர் கல்வியை பூர்த்தி செய்து கொழும்புக்கு திரும்பிய அவர் தனது தந்தையாரின் ஆலோசனையின் பேரில் 1963ம் ஆண்டு ஈஸ்வரன் பிரதர்ஸ் என்ற நிறுவனத்தை தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்யும் நோக்கத்துன் ஆரம்பித்தார். முதலில் 300 தேயிலைப் பெட்டிகளை சோமாலியா வசதிகளுடன் தேயிலை பொதிகளை தயாரிக்கும் மூன்றாவது பெரிய நிறுவனமாக ஈஸ்வரன் பிரதர்ஸ் இன்று வளர்ந்துள்ளது. தனது ஏற்றுமதிக்கான முதலாவது ஜனாதிபதி விருதினை 1981ஆம் ஆண்டு முன்னால் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன விடமிருந்து பெற்றுக்கொண்டார். இன்று சுமார் 500 பேர் வரை பணியாற்றும் வர்த்தக நிறுவனமாக மாறியுள்ள ஈஸ்வரன் ப்ரதர்ஸ் 60இற்கு மேற்பட்ட நாடுகளுடன் தன் ஏற்றுமதி வர்த்தகத்தை விஸ்தரித்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஈஸ்வரன் தொடர்ந்து Tபிரின்ட் என்ற கம்பனியையும் பாகிஸ்தான் ஆசிய உணவுக் கைத்தொழில் நிறுவனத்துடன் இணைந்து மேபெயார் கம்பனியையும் 1997இல் ஆரம்பித்தார். இக் கம்பனி இலங்கையில் முதல் முதலாக பப்பில் கம் தயாரிப்பதில் ஈடுபட்டதோடு இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனம் வழங்கிய தேசிய சிறப்பு வணிக விருதினையும் 2008ம் ஆண்டு பெற்றுக் கொண்டது.

அத்துடன் அன்னார் இந்தியாவின் 'நீல்கமல்' தளபாட தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து இலங்கையில் தளபாட நிறுவனத்துடன் ஒன்றிணைந்து இலங்கையில் தளபாட பொருட்களை தயாரிக்கும் நிறுவனத்தையும் ஸ்தாபித்தார்.

இந்தியாவின் NR நிறுவனத்துடன் இணைந்து அகர்பத்தி தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நிறுவனத்துக்கு ஏற்றுமதி செய்த ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனம் தற்போது தேயிலை ஏற்றுமதி துறையில் இலங்கையில் ஒரு பாரிய இடத்தை நிலைநிறுத்தியுள்ளது.

இலங்கையில் ஏற்றுமதி துறையில் அதி நவீன மொன்றையும் இவர் ஆரம்பித்தார். இலங்கையின் வடக்கு கிழக்கில் இடம் பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் விதவைகளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்கள இந்த செயற்பாட்டின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

ஈஸ்வரன் 2009/2010 இல் இலங்கை தேசிய வர்த்தக சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். சிறிய விவசாயிகளுக்கு நல்ல விலைகளைப் பெறவும், விலைகளை ஸ்திரமாக வைத்திருக்கும் வகையிலான ஒப்பந்தங்களை அவர்கள் ஏற்றுமதியாளர்களுடன் செய்து கொள்ள உதவும் வகையில் கிராமப்புற வர்த்தக

சபைகளை உருவாக்குவதில் அவர் முன்னோடியாக இருந்தார். ஆயுர்வேத மருந்து வகைகள் நாட்டின் கிராமப் பகுதிகளில் வர்த்தக வாய்ப்புகளைப்; பெறும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதிலும் அவர் முன்னின்று உழைத்தார்.

கல்விப் பணி

தந்தையார் அமரர் தேசபந்து வி.டி.வி.தெய்வநாயகம் பிள்ளை தொழிலின் அவசியம் காரணமாக தனது கல்வியில் அதிக கவனம் செலுத்த முடியாமல் போனமையினால் அதே போன்ற பொருளாதார சவால்களுக்கு மத்தியில் வறுமை காரணமாக கல்வியை கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள மாணவர்களுக்கு அவர்களது கல்வியைத் தொடர புலமைப் பரிசில்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் ஈஸ்வரன் உறுதியாக இருந்தார். இதற்காக அவர் வி.டி.வி. நிதியத்தை நிறுவினார். கொழும்பைச் சுற்றியுள்ள இடங்களில் வசிக்கும் சுமார் 300 மாணவர்களின் கல்வித் தேவைகளை மட்டுமன்றி அவர்களது பாடசாலை சீருடை, பாடப் புத்தகங்கள், மேலதிக வகுப்பு ஆகியவற்றுக்கு வி.டி.வி. நிதியம்; அனுசரணை வழங்கி வருகின்றது. தற்போது பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் சுமார் 10 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் செயல்திட்டத்தினூடாக வைத்திய பீட மாணர்களுக்கு ரூபா. 10 000.00 வீதமும் மற்ற மாணவர்களுக்கு மாதம் ரூபா. 5000.00 உதவித் தொகையினையும் மாதம் வழங்கி வருகின்றது. மேலும் பதுளை மாவட்டத்தில் பசறை வித்தியாலயத்தில் கணித, விஞ்ஞான பாடத்திற்காக இரு ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவான ரூபா. 40 000.00 வீதம் ரூபா. 80 000.00 நிதியினை வழங்கி வருகின்றது.

இந்த கல்விச் சேவை இலங்கையில் மட்டுமன்றி திருக் கோவிலையும் ஈஸ்வரன் குடும்பத்தினரே பரிபாலித்து வருகின்றனர்.

வறிய மாணவர்களின் கல்வி விடயத்தில் வி.டி.வி. நிதியத்தின் ஊடாக ஈஸ்வரன் வழங்கிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் அவரை பதுளையில் உள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்லைக்கழகத்தின் பேரவை உறுப்பினர்களில் ஒருவராக நியமித்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமல் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சியின்போது 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஈஸ்வரன் தேச பந்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஆப்கானிஸ்தானில் சேதமாக்கப்பட்ட பாமியான் புத்தர் சிலையை அடிப்படையாகக் கொண்ட இந்த புத்தர் சிலை இன ஒற்றுமையையும் பல்வேறு மதங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் சமாதானம் ஆகியவற்றை குறிப்பிடுவதாக உள்ளது. அன்னாரது சமய சமூக பணிகளை நன்கு அறிந்த சங்கைக்குரிய அஸ்கிரிய, அமரபுர பீடாதிபதிகள் மற்றும் ராமாணிய நிக்காய மகாநாயக்க தேரர்கள் ஒன்றிணைந்து "தேச மான்ய" என்ற அதிஉயர் விருதை அவருக்கு தமிழ்நாடு சென்னையில் வழங்கி கௌரவித்தமை மனம்கொள்ளத் தக்கதாகும்.

மொரிஷியஸ் குடியரசின் முன்னாள் கௌரவத்தூதுவராக சேவையாற்றிய அவர், ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தாவாகவும், கம்பன் கழகத்தின் முன்னாள் தலைவராகவும், பல்வேறு மனித நேயம் அமைப்பின் தர்மகர்த்தாவாகவும் பணியாற்றியவர்.

அவரது மற்றுமொரு செயல்திட்டமான அவிசாவளை சத்ய சாயி சர்வதேச மத்திய நிலையத்தினை நிர்மாணிக்கும் செயல்திட்டத்தினை அவரது சகோதரர்கள் தெ. வீரபாகு வும் அவரது புதல்வர் ஈஸ்வரன் கணேஷ் உம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வர்த்தக, சமூக, கலை இலக்கிய மற்றும் ஆன்மீகப் பணிகளில் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிட்ட ஈஸ்வரன் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி சிங்கப்பூரில் இறைவனடி சேர்ந்தார்.

ரம்பொடை ஆஞ்சனேயர் ஆலய நிர்மாணப் பணிகள் தொடங்கிய காலம் முதல் கும்பாபிஷேகம் வரையும், ரம்பொடகல்ல நிர்மானப்பணிகள் ஆரம்பம் முதல் திறப்பு விழா வரையும் அவரது பணிகளுக்கு பக்கபலமாக இருந்தவன் என்ற வகையிலும் 1968களில் நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் வீரகேசரி பிரதம ஆசிரியர் கே.வி.எஸ். வாஸ் ஐயா வீட்டில் கார்மேகம் உடன் ஈஸ்வரனை முதன் முதல் சந்தித்ததை நினைவுகளோடு பின்னர் 1980களில் அவரது பெரும் நம்பிக்கைக்குரிய ஊழியனாக ஈஸ்வரன் ப்ரதர்சில் பணியாற்றியவன் என்ற வகையிலும் அவர் மரணமான 2008ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி சிங்கப்பூரில் நடைபெற்ற வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த நான் தகவல் அறிந்தவுடன் அவருக்கு சிங்கப்பூரிலேயே அஞ்சலி செலுத்தும் பாக்கியம் சித்தித்தது இறைவனின் அருளாகும்.

சில மனப்பதிவுகள்

எச்.எச்.விக்கிரமசிங்க ...✍

மல்ல தென்னிந்திய கிராமப்புறத்துக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அவரது தந்தையார் வி.டி.வி.தெய்வநாயகம் பிள்ளையின் ஞாபகார்த்தமாக திருநெல்வேலி வல்லநாடு கிராமத்தில் வி.டி.வி. உயர்நிலைப் பள்ளியை ஸ்தாபித்து 400 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றார்கள். மேலும் வல்லநாடு கிராமத்தில் சுமார் 500 விருந்தினர்கள் அமரக்கூடிய இரண்டு தளங்களைக் கொண்ட திருமண மண்டபத்தை நிர்மாணித்து கிராம மக்களின் பொருளாதார சூழ்நிலையை கருத்திற் கொண்டு கட்டிட பராமரிப்பு செலவிற்காக நாளொன்றுக்கு ரூபா. 5000.00 மட்டுமே அறிவிடப்படுகின்றது. அத்துடன் வல்லநாடு கிராமத்தில் உள்ள லக்ஷ்மி விநாயகர் திருக் கோவிலையும் ஈஸ்வரன் குடும்பத்தினரே பரிபாலித்து வருகின்றனர்.

வறிய மாணவர்களின் கல்வி விடயத்தில் வி.டி.வி. நிதியத்தின் ஊடாக ஈஸ்வரன் வழங்கிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் அவரை பதுளையில் உள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்லைக்கழகத்தின் பேரவை உறுப்பினர்களில் ஒருவராக நியமித்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமல் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சியின்போது 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஈஸ்வரன் தேச பந்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஆப்கானிஸ்தானில் சேதமாக்கப்பட்ட பாமியான் புத்தர் சிலையை அடிப்படையாகக் கொண்ட இந்த புத்தர் சிலை இன ஒற்றுமையையும் பல்வேறு மதங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் சமாதானம் ஆகியவற்றை குறிப்பிடுவதாக உள்ளது. அன்னாரது சமய சமூக பணிகளை நன்கு அறிந்த சங்கைக்குரிய அஸ்கிரிய, அமரபுர பீடாதிபதிகள் மற்றும் ராமாணிய நிக்காய மகாநாயக்க தேரர்கள் ஒன்றிணைந்து "தேச மான்ய" என்ற அதிஉயர் விருதை அவருக்கு தமிழ்நாடு சென்னையில் வழங்கி கௌரவித்தமை மனம்கொள்ளத் தக்கதாகும்.

மொரிஷியஸ் குடியரசின் முன்னாள் கௌரவத்தூதுவராக சேவையாற்றிய அவர், ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தாவாகவும், கம்பன் கழகத்தின் முன்னாள் தலைவராகவும், பல்வேறு மனித நேயம் அமைப்பின் தர்மகர்த்தாவாகவும் பணியாற்றியவர்.

அவரது மற்றுமொரு செயல்திட்டமான அவிசாவளை சத்ய சாயி சர்வதேச மத்திய நிலையத்தினை நிர்மாணிக்கும் செயல்திட்டத்தினை அவரது சகோதரர்கள் தெ. வீரபாகு வும் அவரது புதல்வர் ஈஸ்வரன் கணேஷ் உம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வர்த்தக, சமூக, கலை இலக்கிய மற்றும் ஆன்மீகப் பணிகளில் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிட்ட ஈஸ்வரன் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி சிங்கப்பூரில் இறைவனடி சேர்ந்தார்.

ரம்பொடை ஆஞ்சனேயர் ஆலய நிர்மாணப் பணிகள் தொடங்கிய காலம் முதல் கும்பாபிஷேகம் வரையும், ரம்பொடகல்ல நிர்மானப்பணிகள் ஆரம்பம் முதல் திறப்பு விழா வரையும் அவரது பணிகளுக்கு பக்கபலமாக இருந்தவன் என்ற வகையிலும் 1968களில் நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் வீரகேசரி பிரதம ஆசிரியர் கே.வி.எஸ். வாஸ் ஐயா வீட்டில் கார்மேகம் உடன் ஈஸ்வரனை முதன் முதல் சந்தித்ததை நினைவுகளோடு பின்னர் 1980களில் அவரது பெரும் நம்பிக்கைக்குரிய ஊழியனாக ஈஸ்வரன் ப்ரதர்சில் பணியாற்றியவன் என்ற வகையிலும் அவர் மரணமான 2008ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி சிங்கப்பூரில் நடைபெற்ற வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த நான் தகவல் அறிந்தவுடன் அவருக்கு சிங்கப்பூரிலேயே அஞ்சலி செலுத்தும் பாக்கியம் சித்தித்தது இறைவனின் அருளாகும்.

1ம் ஆண்டு நினைவஞ்சலி..!

"சஞ்சிகைச் சாதனையாளர்" தோழர் டொமினிக் ஜீவா..!



வீசிய ''மல்லிகை"
உதிர்ந்து ஓராண்டு கடந்தது..!

ஈழத் தமிழ் இலக்கியத்திற்கு
உரமிட்டது ''மல்லிகை" இதழ்..
மாத இதழாய் மணம்பரப்பி
மக்கள்மனதில் பதிந்த சஞ்சிகை...
ஆரோக்கியமான இலக்கிய இருப்பை
ஸ்திரப்படுத்தியது திங்கள் தோறும்...
நாற்பத்தியேழு ஆண்டைக் கடந்தது
நல்லதோர் சாதனை என்பர்..!

அயரா உழைப்பே மூலதனமென
அடுத்த தலைமுறைக்கும் சொல்லி
நடைமுறையால் விளக்கிய அருமை
ஆசிரியர் டொமினிக் ஜீவா அன்று
அகவை தொண்ணூற்றி நான்கில்... ..
இயற்கையோடு இரண்டறக் கலந்தார்...!

மூத்த எழுத்தாளர் இடதுசாரி இயக்கப் பணியாளர்..
47 ஆண்டுகளுக்கு மேலாக 'மல்லிகை" சஞ்சிகையை
வெளியிட்ட சாதனையாளர்...

✦ முதன்முதலில் சிறுகதைத் தொகுதிக்கான (1961) இலங்கை சாகித்திய மண்டல விருதினைப் (தண்ணீரும் கண்ணீரும்) பெற்றவர்..'மல்லிகைப் பந்தல்' பதிப்பகத்தின் மூலம் பலரின் நூல்களை வெளிக்கொணர்ந்தவர்..
✦ பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவர். உணர்ச்சிகரப் பேச்சாளர்..
✦ சிறுகதைத் தொகுதிகள் பயணக் கட்டுரை நூல் வாழ்க்கை வரலாற்று நூல் உட்பட பல நூல்களை எழுதி வெளியிட்டவர்..
✦ ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவர் நாமம் நிரந்தரமாய் நிலைத்து நிற்கும்..!

எமது அஞ்சலி..!

வி. ரி. இளங்கோவன்

கனடாவை தலைமையகமாக கொண்டு செயல்படும் விழித்தெழு பெண்ணே என்ற அமைப்பானது கொழும்பு மாநகர சபை உறுப்பினர் செல்வி.காயத்திரி விக்கிரமசிங்கவின் சமூக மற்றும் ஆன்மீக பணிகளை பாராட்டியும் கொரோனா காலத்தில் அவரது அர்ப்பணிப்புமிக்க பணி கடுமையான உழைப்பு என்பவற்றினை கருத்தில் கொண்டும் அவருக்கு விழித்தெழு பெண்ணே அமைப்பின் ஸ்தாபகரும் இயக்குனருமான சசிகலா நரேன்திரா சர்வதேச பெண் சாதனையாளர் விருதினை வழங்கி கௌரவிப்பதையும் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் சான்றிதழ் வழங்குவதையும் வீரகேசரி நிறுவன பிரதம செயற்பாட்டு அதிகாரி செந்தில் நாதன் நினைவு கேடயம் வழங்குவதையும் படத்தில் காண்க.

BUDGET

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

WATTALA 38P LAND FOR DEVELOP & LONG LEASE

Facing COLOMBO - NEGOMBO MAIN ROAD

Just few meters to :-
- Main Banks
- Super Markets
- Popular Retail Clothing Shops
- Popular Fast Food Restaurants
- Toyota Lanka
- Hemas Hospital

Contact - 077 777 5851

வீரமஞ்சரி BUDGET ADZ

போட்டோ குறும் விளம்பரம்

De hydrator இயந்திரம் குறைந்த விலைக்கு மற்றும் நம்பிக்கையான நிறுவனத்தில் விற்பனைக்குண்டு. N.C. இன்ஜினியரிங் (பீவிடி) எல்டிடீ, பிலியந்தல. **info@ncengineering.lk/www.ncengineering .lk**
011 5 882 077 / 077 2 357 502 / 076 66 31 887

வேலை வாய்ப்புக்கள்

ரியல் எஸ்டேட் / நிர்மாண விஷேடத்துனர், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் மற்றும் அனைத்தையும் முகாமைப்படுத்துவதற்கான செயற்பாட்டாளர். 25 வருடங்களுக்கு மேலான அனுபவம்.
விஞ்ஞானம் எவ்வனவோ முன்னேறிய போதிலும் எரிவாயு அடுப்புக்கள் தோற்றுவிக்கும் பாதிப்புக்களும் அதனால் ஏற்படும் அவலங் களும் எனது மனதை உலுக்கின. ஆபத்துக் களை தடுப்பதற்கு ஒரு வழியை கண்டுபிடிக்க வேண்டும். அப்படியில்லா விட்டால் அப்பாதிப் புக்கள் தொடர்கதையாகி நமது நாட்டை நாசப் படுத்திவிடும் என் என் உள்மனம் எனக்கு எச்சரிக்கை விடுத்தது அடுப்பை எரிப்ப தற்கு இரண்டு வாயுக்கள் சேர்ந்த கலவையே பாவிக்கப்படுகிறது. எனது நோக்கம் சிலிண் டரிலிருந்து வாயு வேகமாக வெளிக்கிளம்பும் வேளையில் அதனை உணர்ந்து அதை நிறுத் துவதற்கு கருவியை கண்டுபிடிப்பதாகும்.

அதுவே "அதற்கு "உணர் கருவி" என்று பெயரிட்டேன். எனது கண்டுபிடிப்பில் பிரதான பாகமே அதுதான். இதனை கண்டுபிடிப்பதற் கும் பொருத்திப் பார்த்து தவறுகனை திருத் தித்திருத்தி அமைப்பதற்கும் ஓரிரு வாரங்கள்

தேவைப்பட்டன. எந்தவொரு கண்டுபிடிப்பை யும் வெளிக் கொணரும்போது. அதில் தவ றுகள் ஏற்பட்டு விடக் கூடாதல்லவா? தவ றுகள் ஏற்படும்போது அதன் விளைவு உயிராபத்தை ஏற்படுத்திவிடக்கூடும் என்ற

பேட்டி கண்டவர்: எஸ்.எஸ்.தவபாலன்

எண்ணமே. எனது ஆய்வை கச்சிதமாக செய்வதற்கு காரணமாயிருந்தது.நான் கண்டு பிடித்ததை நான் என் அம்மாவிடம் காட்டினேன்" அம்மா என்னை கட்டி அணைத்து முத்தமிட்டார்" பின்பு எனது பாடசாலை அதிபர். வண.சகோ. சந்தியாகுவுக்கும் செய்முறையினூ டாக காட்டினேன் எனது பாடசாலை அதிபரும் ஆசிரியார்களும் ஒட்டு மொத்தமாக பாடசா

லைச் சமூகமும் என்னைப் பாராட்டின. எனது பாடசாலை மாணவர்கள் இருவர் இரண்டு கண்டு பிடிப்பக்களை செய்து பாடசாலைக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள். இந்த வரிசை யில் நான மூன்றாமிடத்தில் நிற்கிறேன்.

எனது பாடசாலை 120 வருடங்கள் பழமை வாய்ந்தது. அதற்கு எமது கண்டுபிடிப்பக்க ளும் செழுமை சேர்ப்பதாக இருக்கிறது.

இப்போது இதற்குரிய ஆக்க உரிமைப் பத்திரத்தை பெறுவதற்காக விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சுக்கு விண்ணப்பித்தி ருக்கிறேன்.

அது இலகவில் கிடைப்பதில் பல்வேறு ஆய் வுகளை அங்குள்ள ஆராய்ச்சியாளர்களிடம் நான் செய்து காட்டி அதற்கான விளக்கங்க ளையும் விபரங்களையும் கொடுத்து அவர் கள் திருப்தியடையும் பட்சத்திலே அது கிடைக் கும்.

அதன் பின்பு எனது பெயரும் எனது பாடசா லையின் பெயரும் இலங்கையிலுள்ள கண்டு பிடிப்பாளர்கள் பட்டியலில் இடம்பெறும். அந்த நாள் வெகுதொலைவில் இல்லை.

நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

பழைய பேப்பர்

எல்லா நாளிலும் எல்லா இடத்திலும் ஒரே மாதிரிச் சீரான ஓட்டத்தைக் காண முடியாது; வியாபாரத்தில் அப்படி முன்னப்பின்னத்தான் இருக்கும்; என் றாலும் இந்தப் பழைய பேப்பர் கடை முதலாளி சண்டித்தனம் பண்ணுகிறார்; ஒரு றாத்தல் பேப்பர் வாங்குவதென்றால் இவர் கடையில் ஒரு ரூபாவுக்கு டொபி வாங்க வேண்டுமாம்; இதற்கிடையில் ஒரு றாத்தல் பேப்பர் ஒரு ரூபாய்தான்; ஒன்றுக்கொன்று நிகரான விலையில் பணம் கொண்டு போனால்தான் பேப்பர் கிடைக்கும்...

இவரோடு என்ன பேச்சு என்பதுபோல் இரண்டு ரூபாய் தாள் நாணயத்துடன் இவர் கடைக்குள் நுழை கின்றபோது அந்தப் பழைய பேப்பர் கட் டுகளில் இருந்துவ ரும் வாசம் மூக்கை ஈர்த்து விடும்; கடை முதலாளி முணுமுணுப்புடன் ஏறிட்டுப் பார்ப் பார்; "இன்னும் பரீட்சை முடிய லேயே தம்பி" என்பார்; அவருக் கெங்கே விளங் கப் போகிறது; அதிலுள்ள செய் திகள், படங் களை வெட்டி ஒட்டிச் சேகரிகவே பழைய பேப்பர் வாங்குகிறேன் என்பது; "தம்பி நல்ல படிப்பு யோகம் வாய்ச்சிருக்கு விட் டிராதே.." உருக்கமாகச் சொன்னார்...

தினகரன்
The Dinakaran

பேப்பர்கள் அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்யும் வெறும் பதிவேடு என்றே நம்மில் பலர் கருதி விடுகிறோம்; கருத் துச் சுதந்திரத்தின் அடி நாதமாக விளங் கும் பத்திரிகைகள் காலத்தின் கண்ணாடி; நிகழ்வுகளையும் அது தொடர்பான தக வல்களையும் சொல்வதன் மூலம் மக்களி டையே புதிய எண்ணங்கள் மற்றும் சமூக மாற்றங்கள் நிகழப் பயன்பட்டு வரும் ஒரு சாதனம்; அன்றாட வாசிப்புக்குப் பிறகு, பத்திரிகைகள் பழைய பேப்பராகி விடுவது நிஜம்தான்; ஆனால் அது ஏற்ப டுத்திச் சென்ற தாக்கம் முக்கியமானது...

புத்தகங்களைப்போல் பதித்திரிகை களைக் குறிப்பாக நாளிதழ்களைச் சேகரித்து வைத்துக் கொள்வது பெரும் பாலும் நடைமுறையில் சாத்தியமில்லை தான்; ஆனாலும் பழைய இதழ்களில் புதைந்து கிடக்கிறது எம்மவர் வரலாறு; நமது அலட்சியத்தால் பல்வேறு அவ சியம் வாய்ந்த ஏடுகளைக் காலக் கரை யான்களுக்கு இரையாகக் கொடுத்து விட்டோம்; இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த பல பேப்பர்கள் காணக் கிடைக்காதவை; அவை எப்படி இருந் திருக்கும் என்பதை யூகிக்க முடியாது; பழைய இதழ்களைத் தேடிப் பிடித்து அவற்றிலுள்ள கனதியான படைப்பு களை வெளியிடும் முயற்சிகள் கடந்த நூற்றாண்டில் பல ஆங்கில பிரெஞ்ச் புத் திரிகைகள் புகைப்படம் எடுக்கப்பட்டு அவற்றின் மூல வடிவங்கள் தொகுப்புக ளாக வந்துள்ளன...

"இலங்கையில் ஆகக் கூடிய விற்ப னையுள்ள தேசிய தமிழ் நாளிதழ் தின கரனே", "திக்கெட்டும் நிகழும் செய் திகளைத் திரட்டித் தீஞ் சுவையுடன் தருவது வீரகேசரியே", ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி", ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணிதான்" இப்படி ஒவ்வொரு பத்திரிகையின் முன்பக்க அடிப் பாகத்தில் கரை வாசகமாக வந்தி ருக்கும்; அத்தாணி மண்டபம், கவிதா மண்டலம், பரஸ்பரம், பூலோக சஞ்சா ரம், மலையக மாருதம், தாயும் சேயும், மனையும் மங்கையும், குறிஞ்சிப் பரல், சாளரம், பலகணி, கோடம்பாக்கம், ஜெ.செய்னுலாப்தீனின் மர்ம அலசல், கவிதைச் சோலை இவற்றின் உள்ளே நுழைந்து படிப்பதனால் அவை நமக் குள் ஏற்படுத்தும் கிளர்ச்சியும் அதிர்ச்சி யும் எப்போதுமே மீளப் பெற முடியா தவை...

தினபதி நாளிதழின் முகப் பக்கத்தில் குடையோடு நிற்கும் வயோதிகர் ஒரு வரைச் "சோமண்ணை" என்று சித்தி ரமாகக் கீறியிருப்பார்கள்; அப்போது "டாக்டர்கள் வேலைநிறுத்தம்" என்று வந்த செய்திக்கு "அப்போ டாக்குத்த ருக்கு ஜல தோஷம் பிடிச்சிருக்கு என்று சொல்லுங்கோவன்.." என்பார்....

இந்த நிலையில் வீரகேசரி பிரசுரங்க ளாக சுமார் ஐந்தாண்டு காலத்துக்குள் (19721976) இருபத்தொன்பது எழுத் தாளர்களின் நாற்பத்தைந்து நாவல் கள் பிரசுரமாகின; ரஜனி, செங்கை ஆழியன், கே.டானியல், க.அருள் சுப்ரமணியம், வ.அ. இராசரத்தினம், அன்னலட்சுமி இராசதுரை, பா.பா லேஸ்வரி, கோகிலம் சுப்பையா, கே.எஸ்.ஆனந்தன், அருள் செல்வநா யகம், சொக்கன், மணி வாணன், உத யணன், பொ.பத்மநாதன், அ.பாலம னோகரன், தெணியான், இந்துமகேஷ், நயிமா ஏ.பஷீர், எஸ்.ஸ்ரீ ஜோன்ரா ஜன், வை. அஹமத், தெளிவத்தை ஜோசப், ஞானரதன், இந்திராதேசி சுப் பிரமணியம், கே.ஆர்.டேவிட், வீ.ஆர். நீதிராஜா, புரட்சி பாலன், கே.விஜயன் அதே நேரம் கிருஷன் சந்தரின் உருது மொழி நாவலை கதிர்காமநாதன் தமி ழாக்கினார்; கருணாசேன ஜயலத்தின் சிங்கள நாவலை தம்பிஜயா தேவதாஸ் மொழி பெயர்த்தார்....

அதேபோல் முக்கியமான சில தொடர் களும் பத்திகளும் மிக மிகப் பிரதானம்; சிந்தாமணியில் மாஸ்டர் சிவலிங்கம் எழுதும் சிறுவர் தொடர் கதைகளுக்கு ஒவ்வொரு வாரமும் காத்திருப்போம்; சிறுவர்களின் தீவிரமான அறிவு ரசனைத் தேடலுக்கான உணர்வாகவும் உந்துதலா கவும் அது இருந்தது...

தாள் மற்றும் பொருட்களின் விலை அதிகரிக்க நேரிடும் சமயங்களில் ஆசி ரியர் குழாம் வாசகர்களிடம் மன்னிப்புக் கோரும்; இரண்டு ரூபாயாக இருந்த பேப்பர் பதினைந்து சதத்தால் கூடுகின்ற போது வாசகர் மத்தியில் காணும் மனத் தளம்பலைச் சமாளிக்கும் பொருட்டு அதன் சந்தா விகிதத்தில் எவ்வித உடனடி மாற்றமும் நிகழாது என்று கூறப்பட்டது; பேப்பர் விலையேற்றம் அந்நாளில் சந்தை முதல் சர்பந் கடை வரை அலசப்பட்டது; எதற்கெடுத்தா லும் "இன்று பேப்பர் விலை கூடுகி றது" என்பார்கள்...

வெகுஜனங்களின் விருப்பத்தில் புழக் கத்தில் இருக்கும் எல்லாவற்றைப் பற் றியும் அக்கறை காட்டுவதும் வாழ் கின்ற காலத்தின் நிலைமைகளைச் சமயோசிதமாகப் பிரதிபலிப்பதும்தான் பத்திரிகை; கை துடைத்து எறியும் கடதாசிகள் கூட எவ்வளவோ செய்தி களைச் சொல்கின்றன; எங்கள் வேலிக் கால்களுக்கு மடுவுகள் போடும்போது மண்ணுக்குள் புதையுண்ட மஞ்சள் வெளி ருண்ட பேப்பர் துண்டுகளில் ஒட்டியி ருக்கும் துணிக்கைகளைத் தட்டிவிட்டுப் படிக்கின்ற பழக்கம் என்னிடம் இருந்தது; அதில் பிரசுரமாகும் விளம்பரங்களும் கவர்ச்சிதான்" வானொலிப் பெட்டிகளுள் ஒரு மாணிக்கம்; இலங்கை அடங்கிலு முள்ள எல்லா மல்லட் வினியோகஸ்தர்க ளிடமும் கிடைக்கும்; ரூபாய் இருநூறு; மாதத் தவணைமுறை நிபந்தனைகளுக்கு மனுச் செய்யவும்; 355, டீன்ஸ் றோட், கொழும்பு; போன். 4211; பீடிகளிற் சிறந்த பாலக்காடு ஆர்.வீ.ஜீ பீடிகள் எங்கும் கிடைக் கும்...

அந்த வேகா வெயிலில் நடந்துவரும் ஒருவரை நிலா காயுற மாதிரி வெளிச்சமா கக் காட்டிப் படம் பிடித்து அதற்குச் செய்தி எழுதும் விற்பன்ன நிருபர்கள் அன்று வரிசை யில் நின்றார்கள்; நாம் கலர் கலராய் பார்க் கின்ற கிராமியப் படங்கள் கறுப்பு வெள் ளையாகவே அச்சாகின; ஆனால் அதில் துல்லியம் தெரிந்தது...

தனிமையில் இருப்பவர்களுக்குத் தினசரி, வாராந்திரப் பத்திரிகைகள் முடிவில்லாத தேடலைச் சலிப்பின்றி வழங்கின; சாப் பிட்டு முடிந்ததும் சாய்மனைக் கதிரையில் அமர்ந்து பேப்பரை விரித்தால்தான் வாப் பாவுக்கு ஏவுறை பறியும்.

வடக்கில் கடற்றொழில் பயிற்சித் திட்டத்தை முன்னெடுக்கும் Sail Lanka Yachting

- வேலணையில் புதிய படகுத்துறை
- சுமார் நூறு தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சி
- ஒரு வருட கோட்பாட்டு மற்றும் பிரயோகக் கற்கைகள்

Sail Lanka Yachting Group தனது *Building a Future Foundation* திட்டத்தினூடாக இலங்கையின் வட பிராந்தியத்தில் கடற்றொழில் பயிற்சித் திட்டத்தை முன்னெடுக்க முன்வந்துள்ளது. இதனூடாக வடக்கைச் சேர்ந்த இளைஞர்களுக்கு கடற்றொழில்சார் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன், படகு நிர்மாண பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தின் வேலணைப் பகுதியில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த, *Sail Lanka Yachting Group* இன் தவிசாளர் பிரேபிரிங்கியர்ஸ், "இலங்கையின் தென் பிராந்தியத்தில் 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து, பாதிக்கப்பட்ட சமூகத்தாருக்கு உதவிகளை வழங்கும் வகையில் முன்னெடுத்திருந்த *'Building a Future Foundation'* திட்டம் வெற்றிகரமானதாக அமைந்திருந்தது. இவ்வாறான திட்டத்தை வட பிராந்தியத்திலும் முன்னெடுப்பது எமது சிந்தனையாக அமைந்துள்ளது.

நாட்டின் தென் பகுதியைச் சேர்ந்த பல இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை *BAFF* ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பன்னிரண்டு இளைஞர்கள் இலங்கையின் தென் பகுதியில் அமைந்துள்ள *BAFF* பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே 12 மாத காலப்பகுதிக்கான கோட்பாட்டு மற்றும் பிரயோக பயிற்சிகளை பின்பற்றியுள்ளனர்" என்றார்.

இந்தத் திட்டத்தின் அறிமுக நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டதுடன், மேலும் பல சிறப்பு அதிதிகளும் பங்கேற்றனர். வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இந்நிகழ்வுக்கு தமது ஆதரவை வழங்கியிருந்தார்.

"கடல்சார் மற்றும் அனுபவசார் சுற்றுலா மையமாக யாழ்ப்பாணம் திகழ்வதற்கு அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன. மிரிஸ்ஸ மற்றும் கொழும்பு மரீனா போர்ட் சிற்றியைத் தொடர்ந்து இது எமது மூன்றாவது செயற்பாட்டு மையமாக அமைந்திருக்கும். உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா வளர்ச்சியை கட்டியெழுப்ப எமக்கு ஏதுவாக அமைந்திருக்கும். வேலணையில் 4.5 ஏக்கர் காணியில் 540 சதுர மீற்றர் பகுதியில் புதிய *SLYG* பயிற்சி நிலையம் மற்றும் படகுத்துறை ஆகியன அமைந்துள்ளன" என்றார்.

யாழ்ப்பாண பயிற்சி நிலையத்தினால் எந்திரவியல் பொறியியல், மின்சாரம், வெல்டிங், குளிர்சாதனப் பெட்டி மற்றும் வாயு குளிரூட்டி போன்றவற்றில் அடிப்படை திறன் பயிற்சிகள் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து படகு நிர்மாணம் மற்றும் உள்ளக மற்றும் வெளியக என்ஜின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான பிரயோக பயிற்சிகளும் வழங்கப்படும். ஒரு வருட காலப்பகுதிக்கு கற்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதுடன், கோட்பாட்டு மற்றும் பிரயோக ரீதியான பயிற்சிகளைக் கொண்டிருக்கும். அதனூடாக பட்டதாரிகளுக்கு படகு நிர்மாணத் துறையில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் *Ocean Diamond 80* அடி மிதக்கும் புட்டிக் ஹோட்டல் மற்றும் *Ceycat 55* அடி மிதக்கும் கட்டுமரம் போன்ற படகுகள் நிர்மாணம் தொடர்பான பிரயோக பயிற்சிகள் வழங்கப்படும்.

பிரிங்கியர்ஸ் தொடர்ந்து குறிப்பிடுகையில், "போர்ட் சிட்டி கொழும்பு மரீனா மற்றும் யாழ்ப்பாணம் இடையே படகுச் சேவையை ஆரம்பித்து யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தூரத்தை நெருக்கமாக்க நாம் முயற்சிக்கின்றோம்.

அதனூடாக வடக்கை நீர்அடிப்படையான சுற்றுலா மற்றும் கடல்சார் சுற்றுலா நடவடிக்கைகளுக்கான புதிய மையமாக கொண்டிருக்க முடியும். சிலோன் சிப்பிங் கோர்பரேஷனுடன் இணைந்து படகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். இவை ஆரம்பத்தில் உள்நாட்டில் பயன்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து, எதிர்காலத்தில் எல்லைகளுக்கிடையே பயணிக்கக்கூடிய படகுகளை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளோம். பயிற்சி முற்றிலும் இலவசமானதாகும், சகல மாணவர்களுக்கும் இலவச காலை உணவு, மதிய உணவு, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தினசரி கொடுப்பனவு வழங்கப்படும். அவர்கள் பயிற்சியை பூர்த்தி செய்ததும், அவர்களுக்கு *NAITA* மற்றும் *BAFF* சான்றிதழ்கள் வழங்கப்படும். இவை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் செல்லுபடியாகும்" என்றார்.

2021 இல் GPTW விருதுகளை வென்றுள்ள AIA இன்ஷூரன்ஸ்

பணி செய்வதற்கான சிறந்த இடம் (Great Place to Work) நிறுவனத்தினால் 2021 இல் மிகவும் கௌரவமிக்க 4 விருதுகளுக்காக AIA ஸ்ரீலங்கா பாராட்டி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் பணி செய்வதற்காக சிறந்த இடம், நிறுவனத்தின் சுயாதீன ஆய்வாளர்களினால் AIA இன்ஷூரன்ஸ் தொடர்ச்சியாக 9 ஆவது வருடமாகவும் மிகச்சிறந்த பணியிடம் *(Best WorkplaceTM)*, முதன் முறையாக பாரிய வகைப்படுத்தலுக்கான ஆசியாவின் பட்டியலில் மிகச்சிறந்த பணியிடம் *(Best WorkplacesTM in Asia list – large category)*, மற்றுமொரு முதல் விருதான மிலேனியல் தலைமுறையினருக்கான மிகச்சிறந்த பணியிடம் *(Best WorkplacesTM for Millennials)*, மற்றும் பெண்களுக்கான மிகச்சிறந்த பணியிடம் *(Best WorkplacesTM for Women)* விருதுகளை தனதாக்கியிருந்ததால் AIA இன்ஷூரன்ஸ் நிறுவனத்திற்கு 2021 மிகவும் முக்கியத்துவமிக்க ஒரு வருடமாகவே அமைந்திருந்தது.

AIA மிகச்சிறந்த தொழில் தருநருக்கான த் தனதாக்கி தனது அனைத்து ஊழியர்களுக்கும்

மிகச்சிறந்த பணியிடமாகத் தன்னை அடையாளப்படுத்தி வேறுபடுத்திக் காட்டியிருந்த காரணத்தினால் 2021 இல் பணி செய்வதற்கான சிறந்த இடம் *(Great Place to Work)* நிறுவனத்தின் பகுப்பாய்வு முடிவுகளின் ஊடாக மிகவும் கடுமையான அளவுகோல் மற்றும் கலாசாரத் தணிக்கை வினாத்தாள் ஆகியவற்றில் AIA சித்திந்திருந்ததுடன் இலங்கையில் மிகச்சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற நிறுவனமாகவும் திகழ்ந்திருந்தது.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி கருத்துத் தெரிவிக்கையில், பணியிடத்தைப் பற்றிய ஊழியர்களின் நம்பிக்கை, பெருமிதம் மற்றும் மகிழ்ச்சி போன்றன மிகவும் முக்கியமானதும் முதன்மையானதுமான விடயங்களாகும் எனத் தெரிவித்திருந்தார்.

William Angliss @ SLIIT நிறுவனத்தின் ஏழாவது வருடாந்த பட்டமளிப்பு விழா

William Angliss @ SLIIT நிறுவனம் விருந்தோம்பல் துறைமு காமைத்துவம், நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் சமையற் கலைத்துறை ஆகிய பிரிவுகளில் தமது வருடாந்த பட்டமளிப்பு விழாவை அண்மையில் கொழும்பு ஷெங்ரீலா ஹோட்டலில் வெகு விமரிசையாக நடாத்தி யது. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைக்கு பிரவேசிக்கின்ற புதுமுகங்களுக்கு பெரும் முக்கியத்துவமிக்க தருணமான இந்நிகழ்வில் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களும் விருந்தோம்பல் துறையுடன் தொடர்புடையோர்களும் கலந்து கொண்டனர். சுற்றுலாத் துறைசார்ந்த முன்னணி நிறுவனங்களின் அனுசரணையுடன், மேம்பட்ட திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சிறப்பு கௌரவிப்புகளோடு William Angliss நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் கோலாகலமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2021 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவின் விருந்தோம்பல் துறை முகாமைத்துவம், சமையற் கலை மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளிலான வருடாந்த பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வில் பிரதம விருந்தினராக ஷெங்ரீலா ஹோட்டலின் பொது முகாமையாளர் ஹர்விடு பொஸ்க் கலந்து சிறப்பித்தார்.

ரெஸ்ப்லென்டன்ட் சிலோன் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் டில்மா தேயிலை / ஆதுகுஹோல்டிங் நிறுவனத்தின் பணிப்பாளருமான மலிக் ப்ரனாந்து முதலாவது அமர்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பட்டமளிப்பின் இரண்டாவது அமர்வில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையுடன் தொடர்புடையவரும் முன்னணி கிரிக்கெட் வீரருமான மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர் கிரன் பவெல் பிரதம விருந்தினராகவும், கோல்பேஸ் ஹோட்டலின் பொதுமுகாமையாளர் டேனியல் க்ரூ சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

புதிய இடத்தில் நொச்சியாகம HNB FINANCE மத்திய நிலையம்

நொச்சியாகம மற்றும் அநுராதபுரம் மாவட்டத்தில் வேகமாக வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தளத்திற்குப் பதிலளிக்கும் வகையில், முன்னணி ஒருங்கிணைந்த நிதிச் சேவை வழங்குநரான *HNB FINANCE PLC*, நொச்சியாகம, தபுத்தேகம வீதியிலுள்ள *Buddhist Centre*க்கு அருகாமையில் இருந்து இலக்கம் *58* புத்தளம் வீதி, நொச்சியாகம, இ சேவை மத்திய நிலையத்தை இடமாற்றம் செய்துள்ளதுடன் புதிய தங்கக் கடன் பிரிவையும் திறந்துள்ளது.

*HNB FINANCE*இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத், நொச்சியாகம சேவை மத்திய நிலைய ஊழியர்கள் மற்றும் பிற நிர்வாக பணியாளர்கள் ஆகியோரின் முன்னிலையில் மீண்டும் திறந்து வைத்தார்.

"புதிய வாடிக்கையாளர்களுக்கு வசதியாக எங்கள் கடுமையான விரிவாக்கம் மற்றும் இடத் தேவைகளின் ஒரு பகுதியாக தங்கக் கடன் பிரிவுடன் இந்த சேவை மத்திய நிலையத்தை இடமாற்றம் செய்து மீண்டும் தொடங்குவது மிகவும் முக்கியமானது. எங்களது விரிவாக்கத் திட்டங்களைச் சீராகச் செயல்படுத்துவதை உறுதி செய்ததற்காக எங்கள் குழுவிற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், மேலும் இந்த கதவுகள் வழியாகச் செல்லும் எங்களுடைய தற்போதைய மற்றும் சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய நாங்கள் இப்போது நன்கு தயாராகி, ஆர்வமாக உள்ளோம் என்று நம்புகிறேன்." என *HNB FINANCE*இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் கருத்து தெரிவித்தார்.

புதிய விசாலமான சேவை மத்திய நிலையமானது வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை வர்த்தக நடவடிக்கைகளுக்காக திறந்திருக்கும், மேலும் வணிகக் கடன்கள், தனிநபர் கடன்கள் மற்றும் லீசிங் வசதிகள் உள்ளிட்ட அவர்களின் சேவைகளின் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் முழுமையாகத் தயாராக உள்ளது.

அறிமுகமாகிறது இயற்கை சேர்மானங்களடங்கிய மீரா Facewash

பெண்களின் ஆர்வத்தை வெளிக்கொண்டு வரும் வகையில், மீரா *facewash* இனால் சல்பேட்அற்ற, பரபென் அற்ற தயாரிப்புகளை மிருதுவான சருமங்களுக்கு பயன்படுத்த ஊக்குவிப்பு

வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் விற்பனையில் சந்தையில் முன்னோடியாகத் திகழும் *Cavinkare* லங்கா நிறுவனத்தினால் மீரா *Facewash* இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிமுக நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது. பெண்களின் தினசரி சருமம்சார் பிரச்சனைகளுக்கு தீர்வாக Red Sandal (மென்மையான சருமத்துக்கு), Neem& Tea Tree (பருக்கள் இல்லாத சருமத்துக்கு) மற்றும் Wild Turmeric (தெளிவான சருமத்துக்கு) என மூன்று தெரிவுகளில் மீரா *Facewash* அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சவர்க்காரம் அற்ற, சல்பேட் அற்ற, பரபென் அற்ற தயாரிப்பாக மீரா *facewash* அமைந்துள்ளதுடன், சருமத்துக்குமிகவும்மிருதுவானதாகஅமைந்துள்ளது. பாரம்பரிய ஆயுர்வேத முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்கையான சேர்மானங்களைக் கொண்டு இந்தத் தயாரிப்பு அமைந்துள்ளது.

சலிசைக்கிளிக் அமிலம் இல்லாத பருக்களுக்கான சிகிச்சை வழங்கக்கூடிய *facewash* ஆக அமைந்துள்ளது.

prebiotic தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பருக்களை ஏற்படுத்தக்கூடிய 99.9% ஆன பக்டீரியாக்களை அகற்றுவதற்கு உதவியாக அமைந்துள்ளது.

இலங்கையின் நவீனயுக இளம் பெண்களை இலக்காகக் கொண்டு மீரா *facewash* அமைந்திருப்பதுடன், பாரம்பரிய செயற்பாடுகள் மற்றும் இயற்கை சேர்மானங்கள் தொடர்பில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்போருக்கு பொருத்தமானதாக அமைந்துள்ளது.

ஆரோக்கியமான சருமத்தைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் இன்றைய இளம் பெண்கள் நன்கு வாசித்து, புரிந்துணர்வைக் கொண்டுள்ளனர். அழகிய சருமம் எந்தளவு ஆரோக்கியமானது என்பது பற்றியும் அறிந்துள்ளனர். இந்த இயற்கை சேர்மானங்கள் தொடர்பான விஞ்ஞான ரீதியான புரிந்துணர்வுடனான நம்பிக்கையின் அடிப்படையில் இவர்கள் மத்தியில் இந்த புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது.

பிரத்தியேக பராமரிப்பு பிரிவின் (இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளம்) வியாபார தலைமை அதிகாரி அருண்சாக்கோ இந்த நிகழ்வில் மெய்நிகரான முறையில் இணைய வழியாக இணைந்து கருத்துத் தெரிவிக்கையில், "இன்று மீரா *facewash* அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், பெருமளவு வெற்றிகரமாக அமைந்துள்ள மீரா ஷம்பு தெரிவுகளுடன் இதையும் சேர்த்துள்ளோம். இதனுடன், இலங்கையர்களுக்கு நீண்டகாலமாக மீரா வர்த்தகநாம தயாரிப்புகளின் பாரம்பரியத்தின் செழுமையை மேம்படுத்த எதிர்பார்க்கின்றோம். இவற்றில் காணப்படும் தெரிவுகள், இலங்கையர்களின் தேவைகளுக்கு பொருத்தமானதாக அமைந்திருக்கும் என நம்புகின்றோம். நுகர்வோருக்காக மேலும் பல தயாரிப்புகளை அறிமுகம் செய்ய உறுதியளிக்கின்றோம்" என்றார்.

இந்நிகழ்வில் பிரத்தியேக பராமரிப்பு வியாபார பிரிவின் இலங்கைக்கான தலைமை அதிகாரி ரனீ கருத்துத் தெரிவிக்கையில், "மீரா *facewash* அறிமுகத்தினூடாக *Cavinkare* லங்காவுக்கு பிரத்தியேக பராமரிப்பு வியாபாரத்தின் பாரிய பிரிவொன்றினுள் பிரவேசிக்க முடிந்துள்ளது. எமது விநியோக வலையமைப்பை மேம்படுத்தி, அதனூடாக எமது வாடிக்கையாளர்களுக்கு தரமான சரும பராமரிப்பு தீர்வுகளை வழங்கக்கூடியதாக இருக்கும். இலங்கையின் ஒவ்வொரு நுகர்வோருக்கும் தரமான தயாரிப்புகளை பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யும் வகையில் நாம் பணிகளை முன்னெடுப்போம்" என்றார்.

அளுத்கமயில் பாஸி திருமண throne காட்சியறை

களுத்துறை மாவட்ட எழுத்தாளர் சங்க செயலாளரும் பிரபல எழுத்தாளரும் அறிவிப்பாளருமான எம். பாஸி ஸுபைரின் (Fassy wedding throne show room & flower garden) அளுத்கம சீனாதுறை, மஸ்ஜித் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

தர்காநகர் ரூமி பவுண்டேஷன் ஸ்தாபகரும் இலங்கை மருந்தாக்கக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமான டொக்டர் எம்.எச்.எம். ரூமி, இரத்தினக்கல் வர்த்தகர் அதாவுல்லா, அபூபக்கர் ஆகியோர் இதனை திறந்துவைத்தனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் ஹாஜியார், தர்காநகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கதலைவர் ஏ.பி.எம். ஸுஹைர் ஹாஜியார், பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சி பிரதான அமைப் பாளருமான ஏ.ஆர்.எம். பதியுத்தீன் சமூக சேவையாளர் ஜெஸ்ஃக் அஹமத், முகத்தம் முர்தாஜ் சமீம் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். திருமண வைபவங்களுக்கு throne தேவையானவர்கள் எம்.பாஸி ஸுபைர் 0770812420 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

(படங்கள் - பேருவளை பீ.எம். முக்தார்)

வாரபலன்

30.01.2022 - 05.02.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

மேஷம்

மேஷ ராசிக்காரர்களே, உங்கள் ராசிக்கு இந்த வாரம் நவ கிரகங்கள் சாதகமாக உள்ளது. பத்தாம் வீட்டில் சூரியன், சனி, புதன், லாப ஸ்தானத்தில் குரு, இரண்டாம் வீட்டில் ராகு, எட்டாம் வீட்டில் கேது செவ்வாய், ஒன்பதாம் வீட்டில் சுக்கிரன் என கிரகங்கள் பயணம் செய்கின்றன. ராசிநாதன் செவ்வாய் ஒன்பதாம் வீட்டில் சுக்கிரன் உடன் பயணம் செய்கிறார். பணத் தேவைகள் பூர்த்தியாகும். வேலையில் முன்னேற்றம் ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு அமையும்

ரிஷபம்

சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட ரிஷப ராசிக்காரர்களே, ராசியில் உள்ள ராகு சில நேரங்களில் மனக்குழப்பத்தை தருவார். உடல் ஆரோக்கியத்தில் கவனமும் நிதானமும் தேவை. சூரியன், சனி,புதன் இணைந்து ஒன்பதாம் வீட்டில் பயணம் செய்கின்றன, எட்டாம் வீட்டில் சுக்கிரன் பயணம் செய்வதால் பேச்சில் கவனம் தேவை. பயணங்களில் நிதானம் அவசியம். புதனும் சுக்கிரனும் வக்ர நிலையில் பயணம் செய்கின்றன. கணவன் மனைவி இடையே சிறு சிறு பிரச்சினைகளும் செலவுகளும் வரலாம்.

மிதுனம்

புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட மிதுன ராசிக்காரர்களே, இந்த வாரம் சூரியன் உங்கள் ராசிநாதன் புதனோடு இணைந்து எட்டாம் வீட்டில் சனியோடு பயணம் செய்கிறார். ஏழாம் வீட்டில் சுக்கிரன், விரைய ஸ்தானத்தில் ராகு, ஆறாம் வீட்டில் கேது, செவ்வாய், ஒன்பதாம் வீட்டில் குரு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. நீண்ட காலமாக எதிர்பார்த்த நல்ல காரியம் நடைபெறும். கடன் பிரச்சினை நீங்கும் அளவிற்கு பண வரவு அதிகரிக்கும். சொந்த தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சொந்த தொழில் தொடங்க முயற்சி செய்யலாம்.

கடகம்

சந்திரனை ராசி அதிபதியாகக் கொண்ட கடக ராசிக்காரர்களே, இந்த வாரம் ராசிக்கு ஐந்தாம் வீட்டில் செவ்வாய், கேது, ஆறாம் வீட்டில் சுக்கிரன், ஏழாம் வீட்டில் சூரியன், புதன், சனி, எட்டாம் வீட்டில் குரு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. இந்த வாரம் சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளதால் உங்களுக்கு சுப செலவுகள் அதிகம் இருக்கும் சகோதரர்கள் வீட்டு விஷேசங்களில் பங்கேற்பீர்கள். மறைமுக எதிரிகள் தொல்லை அதிகரிக்கும். பிள்ளைகளால் சுப செய்திகள் தேடி வரும். சிலருக்கு நல்ல வேலை கிடைக்கும்.

சிம்மம்

சூரியனை ராசி அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்களே, இந்த வாரம் ராசிக்கு நான்காம் வீட்டில் கேது ஐந்தாம் வீட்டில் செவ்வாய் சுக்கிரன், ஆறாம் வீட்டில் சூரியன், சனி, புதன், ஏழாம் வீட்டில் குரு பத்தாம் வீட்டில் ராகு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. யோகங்களும் வெற்றிகளும் நிறைந்த அமோகமான வாரமாக அமைந்துள்ளது. எதிரிகள் தொல்லைகள் நீங்கும். தேவைக்கு ஏற்ப பண வரவு அதிகரிக்கும். வேலை வாய்ப்புகளுக்கான போட்டி தேர்வுகளில் வெற்றி கிடைக்கும். வீடு நிலம் வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

கன்னி

புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நவ கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக அமைந்துள்ளது. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சூரியன், சனியோடு ராசிநாதன் புதன் இணைந்துள்ளார். பிள்ளைகளால் நல்ல செய்திகள் தேடி வரும் சொத்து சேர்க்கை ஏற்படும். யோகங்கள் நிறைந்த வாரம். திருமணம் முடிந்து குழந்தைகளுக்காக காத்திருப்பவர்களுக்கு புத்திரபாக்கியம் கை கூடி வரும். மன நிம்மதி அதிகரிக்கும். புதிய வேலையும் இடமாற்றமும் ஏற்படும். பெண்கள் மனமகிழ்ச்சியோடு இருப்பீர்கள். கணவன் மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

துலாம்

சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட துலாம் ராசிக்காரர்களே, இந்த வாரம் உங்கள் ராசிக்கு இரண்டாம் வீட்டில் கேது செவ்வாய், மூன்றாம் வீட்டில் சுக்கிரன் நான்காம் வீட்டில் சூரியன், சனி, புதன், ஐந்தாம் வீட்டில் குரு, எட்டாம் வீட்டில் ராகு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. தொழில் வியாபாரத்தில் லாபம் வரும். குழந்தைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். விவசாயம் விருத்தியாகும். எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும். சுபிட்சங்கள் நிறைந்த வாரம் செல்வச் சேமிப்பு அதிகரிக்கும்.

விருச்சிகம்

செவ்வாய் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களே, கேது உடன் செவ்வாய் இணைந்து உங்கள் ராசியில் பயணம் செய்வதால் தேவையற்ற எண்ணங்களை தவிர்க்கவும். சந்திரன் சஞ்சாரம் வார துவக்கத்தில் சாதகமாக இல்லை. மூன்றாம் வீடான முயற்சி ஸ்தானத்தில் சூரியன், சனி, புதன் இணைந்து பயணம் செய்கிறார். புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வேலையில் இருந்த தடைகள் தாமதங்கள் நீங்கும். தகவல் தொடர்பு சிறப்படையும். பூர்வீக சொத்திலிருந்து பணம் கிடைக்கும்.

தனுசு

குரு பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட தனுசு ராசிக்காரர்களே, உங்கள் ராசிக்குள் சுக்கிரன், இரண்டாம் வீட்டில் சூரியன், புதன், சனி, மூன்றாம் வீட்டில் குரு, ஆறாம் வீட்டில் ராகு, விரைய ஸ்தானத்தில் கேது என கிரகங்கள் பயணம் செய்கின்றன. சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. இந்த வாரம் உங்களுக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன் சனி இணைந்துள்ள தால் வீட்டிலும் அலுவலகத்திலும் தேவையற்ற வீண் பேச்சினை தவிர்க்கவும். நண்பர்களிடமும் சண்டை சச்சரவினை தவிர்க்கவும், விட்டுக்கொடுத்து செல்வது நன்மையை ஏற்படுத்தும்.

மகரம்

சனிபகவானை ராசிநாதனாகக் கொண்ட மகர ராசிக்காரர்களே, ராசிநாதன் சனி உங்கள் ராசியில் சூரியன் புதனோடு பயணம் செய்கிறார். இரண்டாம் வீட்டில் குரு ஐந்தாம் வீட்டில் ராகு, லாப ஸ்தானத்தில் கேது, விரைய ஸ்தானத்தில் சுக்கிரன் செவ்வாய் என கிரகங்கள் பயணம் செய்கின்றன. வேலையில் பளு கூடும், உடல் உழைப்பு அதிகரிக்கும். இந்த வாரம் பண வரவு அதிகரிக்கும் கூடவே சுப செலவுகளும் வரும். மூத்த உடன் பிறப்புகளின் உதவி கிடைக்கும். உறவினர்களால் நன்மை உண்டாகும். திடீர் பண வரவு வரும். வீண் செலவுகளில் கவனம் தேவை. பேச்சினாலேயே காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

கும்பம்

சனி பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கும்ப ராசிக்காரர்களே, நன்மைகள் நிறைந்த வாரமாக அமைந்துள்ளது. ராசியில் குரு நான்காம் வீட்டில் ராகு, பத்தாம் வீட்டில் கேது, விரைய ஸ்தானத்தில் சூரியன், சனி, புதன் என கிரகங்கள் பயணம் செய்கின்றன. வார துவக்கத்தில் சந்திரன் சஞ்சாரம் சாதகமாக இல்லை திடீர் பண வருமானமும் சுப விரைய செலவுகளும் அதிகரிக்கும். வேலை செய்யும் இடத்தில் சம்பள உயர்வும் அதிகரிக்கும். அரசு வேலையில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கும். அரசு பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

மீனம்

குரு பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட மீன ராசிக்காரர்களே, விரைய ஸ்தானத்தில் குரு, லாப ஸ்தானத்தில் சூரியன், சனி, புதன் இணைந்துள்ளதால் தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். முதலீடுகளில் லாபம் இரட்டிப்பாகும். மூன்றாம் வீட்டில் ராகு, ஒன்பதாம் வீட்டில் கேது என கிரகங்கள் பயணம் செய்கின்றன. விரைய ஸ்தானத்தில் உள்ள குரு சுப விரைய செலவுகளை ஏற்படுத்துவார். திடீர் மருத்துவ செலவுகள் வரலாம். குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது அவசியம்.

இலண்டன் தமிழர் வரலாற்றில் கலாநிதி இ. நித்தியானந்தன்

ஈழத்திலிருந்து உயர் கல்விக்காக 1966இல் இங்கிலாந்துக்குப் புலம் பெயர்ந்த கல்வியியலாளரான கலாநிதி இ நித்தியானந்தன் தனது வாழ்க்கைப் பயணத்தை 'Kudil and the headmaster' (குடில் கொண்ட தலைமை ஆசான்) என்கின்ற தலைப்பில் ஆங்கிலமொழியில் எழுதி 19.12.2021 அன்று மெய்நிகர் வழி வெளியிட்டிருந்தார். புலம்பெயர் சூழலில் வாழ்கின்ற இளம்சந்தியினருக்கு எங்களது வாழ்வியல் வரலாறு உணர்த்தப்பட வேண்டுமென்ற நோக்கில் இந்நூல் வெளி வந்தாலும் அனைவராலும் வாசிக்கப்பட வேண்டிய நூலாக அமைந்திருக்கின்றது. நித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழக இரசாயனவியல் விரிவுரையாளராகக் கடமையாற்றி, இலண்டனில் ஒரு விஞ்ஞானியாக, எழுத்தாளராக, ஊடகவியலாளராக, தமிழ் கலைபண்பாட்டுச் செயற்பாட்டாளராக, சமூகசேவையாளராகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டவர். சிறந்த தலைமைப்பண்பு, நிர்வாகத்திறன் என்பன இவரது ஆளுமைக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

ஈழத்திலிருந்து தமிழர்கள் பல்வேறு காலகட்டங்களில் மேலைத்தேச நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். அவற்றில் 1980களின் பின், குறிப்பாக 1983 இனக்கலவரத்தினை அடுத்து இளைஞர்கள் உயிரச்சம் கருதி பெருந்தொகையாக நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். அவர்களது வருகை ஏற்படுத்திய தாக்கம், பிரச்சினைகள், பண்பாட்டு இடர்ப்பாடுகள் சார்ந்து பல நூல்களும் கட்டுரைகளும் வெளி வந்த நிலையில் அதற்கு முன்னைய ஈழத்தமிழர் இலண்டனில் வாழ்ந்த வாழ்வு பற்றி இதுவரை பெரிதும் பேசப்படவில்லை. அந்த வகையில் நித்தியானந்தன் அவர்களது வாழ்க்கை வரலாற்றினூடாக அந்த வாழ்வு முறை பற்றி எம்மால் அறிய முடிகின்றது.

ஈழத்தமிழர்களது நிரந்தரமான புலம்பெயர்வு இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய ஐம்பது அறுபது வருடங்களை உள்ளடக்கியது. அவ்வளவு கால வரலாற்றோடு கலாநிதி இ நித்தியானந்தனின் இங்கிலாந்து வாழ்வு பிணைந்திருப்பது முக்கியமான விடயமாகும். ஏனெனில் இவரது வாழ்க்கை வரலாற்றோடு இலண்டனில் ஈழத்தமிழர் வரலாற்றை எம்மால் அனுமானிக்க முடியும். குறிப்பாக தனி மனித வாழ்வியல் சார்ந்து தனக்கான வரலாற்றையும் சமூகஞ் சார்ந்து முன்னெடுத்த இவரது நடவடிக்கைகள், இலண்டன் தமிழர்களது வரலாற்றையும் பேசுகின்றன.

தனது இலண்டன் வீட்டிற்குக் 'குடில்' எனப் பெயர் வைத்திருக்கும் இவரது செயற்பாடுகளும் எளிமையும் காத்திரமும் மிக்கவையாகும். நூல் வாசிப்போருக்கு உத்வேகம் தருகின்ற முறையில் அமைந்திருக்கும் காரணத்தால் வாழ்க்கையைத் திட்டமிட்டு முன்னேற்ற விரும்புகின்றவர்களை வெகுவாக கவர்ந்திழுக்கும். இலண்டன் சூழலுக்குள், கல்விக்குள், வேலைவாய்ப்புக்குள், தமிழ் சமூகத்துக்குள் தன்னை இணைத்துச் செயற்படுகின்ற போது தான் பட்ட சிரமங்களை, சாதித்த சாதனைகளை இயல்பாக எந்த விதக் கூட்டல் கழித்தலின்றி முன் வைத்திருக்கின்றார். அந்த வகையில் இதனைச் சம்பவங்களின் தொடர்ச்சியாகப் பார்க்காமல் ஒரு வரலாற்றின் தொடர்ச்சியாகப் பார்க்கத் தூண்டுகின்றது.

நித்தியானந்தன் அவர்களது குடும்பம் சார்ந்த விடயங்கள் உணர்வுபூர்வமானவை. அனைத்தையும் தட்டிக் கொடுத்து ஆதரிக்கும் தந்தையின் இயல்பும் கண்டிப்புடன் அறிவுரை கூறும் தாயின் அரவணைப்பும் அவற்றைத் தன் வாழ்நாளில் கடைப்பிடித்த ஒரு மகனின் வளர்ச்சிப் பாதையும் ஒவ்வொரு பிள்ளையும் அறிந்து வைத்திருக்க வேண்டியவையாகவுள்ளன. இவரது காதற்கதை இன்னும் சுவாரசியமுடையதாக இருக்கின்றது.

1960களில் படித்த இளைஞர்கள் உயர்கல்விக்காகவும் வேலை வாய்ப்புக்களுக்காகவும் இலண்டனுக்கு வந்தபோது, வீட்டு வசதிகள் பெரிதாக இருக்கவில்லை. குளிர் காலத்தில் வீட்டைச் சூடாக வைத்திருப்பதற்கு நிலக்கரி அல்லது மண்ணெண்ணெய் சூடாக்கிகளையே பயன்படுத்தியுள்ளனர். மலசலகூடங்கள் வீட்டின் வெளிப்புறத்திலேயே இருந்திருக்கின்றன. குளிப்பதற்கு 5p கொடுத்து பொதுக் குளியலறையில் குளித்துள்ளனர். 'skinhead' என்று அழைக்கப்படும் இனவாதிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பிப்பதற்காக மாலை நேரத்தின் பின்னர் வெளியில் செல்வதைத் தவிர்த்திருக்கின்றனர். இவர் வாராந்த சம்பளமாக 41.00 பெற்றிருக்கின்றார். 4.00 மாதாந்த வாடகையாக வீட்டிற்குச் செலுத்தியுள்ளார். இத்தகைய சூழலில் இலண்



டனில் பிரசித்து பெற்ற தனியார் பாடசாலையான Eton college இல் மகனைப் படிக்க வைத்திருக்கின்றார். அன்றைய காலத்தில் இது ஒரு சாதனையாகவே பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

இலண்டனில் முதலாவது தமிழ் வானொலி நிலையத்தை உருவாக்கியவரும் இவரே. 'Sunrise Radio' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு சிறந்த சேவையை இந்த வானொலி ஆற்றி வந்து கொண்டிருக்கின்றது. அத்துடன் இலண்டன் தமிழ் நிலைய முதியோர் அமைப்பையும் தோற்றுவித்து, முதியவர்கள் தனிமையில் வீடுகளில் முடங்காது மற்றவர்களோடு பேசிப் பழகவும் மகிழ்ச்சியாக இருக்கவும் வழி செய்து கொடுத்தார். தமிழர்கள் அகதிகளாக இலண்டனுக்கு வரும் போதெல்லாம் அவர்களுக்கான அரசாங்க உதவிகள், வீட்டு வசதிகள், தொழில் வசதிகள், மாணவர்களுக்கான கல்வி வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்கக் குழுவாக இணைந்து கடுமையாக உழைத்தவர், தாயகத்தில் சுனாமியால் மக்கள் பாதிப்புக்குள்ளாகிய போதும் உடனே அவர்களுக்கான உதவிகள் செய்து கொடுக்க முனைப்புக் காட்டி உதவிகள் செய்திருந்தார்.

தற்போது வரை தனது குடும்ப அமைப்பான இரட்ணம் அமைப்பினூடாக (Ratnam Foundation) இலங்கையில் உள்ள கிராமப் பாடசாலைகளுக்கு, வைத்தியசாலைகளுக்கு, கிராமங்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொண்டு வருவதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.. அந்தவகையில் இந்த நூலையும், கலாநிதி இ. நித்தியானந்தனின் வாழ்க்கைப் பயணத்தையும் சம்பவங்களின் தொடர்ச்சியாகப் பார்க்காமல் இலண்டன் தமிழ்ர்களின் வரலாற்றுத் தொடர்ச்சியாகப் பார்ப்பதே மிகவும் பொருத்தமாக அமையும்.

மாதவி சிவலீலன் ...✍

காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டிவைப்பு

தெஹிவளை மாநாகர சபை உறுப்பினர் திருமதி சரீனா முஸ்தபா பிரதம விருந்தினராக பங்கேற்பு

காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டி கௌரவிக்கும் வைபவம் திங்கட்கிழமை (24) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ்.எல்;. ஏ.கபூர் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தெஹிவளை மாநாகர சபை உறுப்பினர் திருமதி சரீனா முஸ்தபா பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் காத்தான்குடி கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன், காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன், காத்தான்குடி நகர சபை உறுப்பினர் எம்.ரமீஸ் உட்பட பிரமுகர்

எம்.எஸ்.எம்.நூர்தீன் ...✍

கள் முக்கியஸ்தர்கள் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டப்பட்டதுடன் சத்தியப் பிரமாணமும் செய்து கொண்டனர் இதில் ஒழுக்க கோவையொன்றும் வெளியிடப்பட்டு கையளிக்கப்பட்டன.

இதன் போது தெஹிவளை மாநாகர சபை உறுப்பினர் திருமதி சரீனா முஸ்தபாவுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

பாரம்பரியம் நிகழ்ச்சியில் மர்ஹூம் எம்.எம். இர்பானின் நினைவுகள்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில், மூத்த ஒலிபரப்பாளரும், முஸ்லிம் சேவையின் முன்னாள், சிரேஷ்ட தயாரிப்பாளருமான மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எம். இர்பானின் ஆளுமைகள் நினைவு கூரப்பட வுள்ளன.

பெப்ரவரி 01ஆம் திகதி இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகவுள்ள இந்நிகழ்ச்சியை, நேயர்களின் ரசனைக்கு ஏற்ப தயாரித்தளித்து, ஜனரஞ்சக படுத்துவதில், மிகத்திறமையான ஒரு தயாரிப்பாளராக, திகழ்ந்த இவர்.

இவரது நினைவுகளை சிரேஷ்ட ஊடகவியலாளரும், வசந்தம் தொலைக்காட்சி செய்தி பொறுப்பாளருமான, எம். சித்தீக் ஹனிபா, சிரேஷ்ட ஒலிபரப்பாளரும் மூத்த கலைஞருமான மஹ்தி ஹசன் இப்ராஹீம், சிரேஷ்ட கலைஞரும், கொழும்பு, பம்பலப்பிட்டி, முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆசிரியையுமான சில்மியா ஹாதி ஆகியோர், எம்.எம். இர்பானின் நினைவுகளை பரிமாறிக் கொள்கிறார்கள். நிகழ்ச்சியை முஸ்லிம் சேவைப்பணிப்பாளர், எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்க, எம். எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்கிறார்.

13

கொழும்பின் கதை

என். சரவணன்



கொழும்பின் பெயர் எப்படி உருவானது?

கொழும்பின் உருவாக்கம் எங்கிருந்து தொடங்கியது, அது எத்தனை அந்நிய சக்திகளிடம் சிக்குண்டு மாற்றம் கண்டு இந்த நிலையை அடைந்தது என்பதைப் பற்றிய விரிவான ஆய்வை இத்தொடரில் இனி வரும் வாரங்களில் செய்வோம். அதே வேளை "கொழும்பு" என்கிற பெயர் உருவானதன் காரணங்களை இங்கே ஆராய்வோம்.

கொழும்பு என்கிற பெயர் வருவதற்கான ஏதுவான உறுதியான காரணம் என்ன என்பது தொடர்பாக இன்றும் குழப்பகரமான விளக்கங்களே நீடிக்கின்றன. அதிகமான விபரங்கள் வாய்மொழிக் கதைகளாக நீல்பவையாக்கவுமே உள்ளன.

தமிழில் – கொழும்பு
ஆங்கிலத்தில் – கொலொம்போ
சிங்களத்தில் – கொலம்ப

எவ்வாறிருப்பினும் கொழும்பு என்கிற பெயரானது சுதேச இலங்கையரால் உருவாக்கப்பட்டதல்ல. மாறாக காலனித்துவ காலத்தில் காலனித்துவவாதிகளால் உருவாக்கப்பட்டது தான்.

இலங்கைத் தீவானதுஉலகின் மேற்குக்கும் கிழக்குக் குமான கடற்பயணத்தின் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தீவாக ஆவதற்கு அதன் அமைவிடம் முக்கியமானதொரு காரணம் என்பதை நாமறிவோம். அது தவிர்க்கமுடியாத தரிப்பிடமாக அது எப்போது உலக நாடுகளால் உணரப்பட்டதோ அப்போதிருந்தே இலங்கையின் பொருளாதார, அரசியல் கேந்திர முக்கியத்துவமும் உறுதியாயிற்ற என்றே கூறலாம்.

அந்த கேந்திர முக்கியத்துவத்துக்கு மேலும் பலமூட்டிய இடம் கொழும்பு தான். இந்துசமுத்திரத்தின் முத்து என்று இலங்கையை ஒரு குறியீடாக கூறினாலும்; இந்து சமுத்திரத்தின் அதி முக்கியமான கேந்திர மையமாக கொழும்பு அமையப் பெற்றது.

13 ஆம் நூற்றாண்டில் இன்னும் சொல்லப்போனால் தம்பதெனிய காலப்பகுதியில் கொழும்பை ஒரு துறை முகத் துறையாக பயன்படுத்தியிருக்கிறார்கள் என்கிற குறிப்புகள் உண்டு. சீனாவினூடாக இலங்கைக்கு வந்த மார்கோ போலோ இந்தியாவின் மலபார் பிரதேசங்களுக்கு செல்லுமுன் கொழும்பிலிருந்து அல்லது அதற்கு அருகாமையிலிருந்து தான் புறப்பட்டிருக்ககூடும் என்கிற

ஐயங்கள் உண்டு. ஆனால் மார்கோ போலோவின் குறிப்புகளில் குறிப்பாக கொழும்புத்துறைமுகம் பற்றி குறிப்பிடப்படவில்லை.

இலங்கையைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகளைப் பொறுத்தளவில்; 1344 இல் மாலைத்தீவில் இருந்து இலங்கைக்குவந்த இபன் பதூதா எழுதிவிட்டுச் சென்ற பதிவுகளையும் வரலாற்றாசிரியர்கள் முக்கிய கவனத்திற் கெடுப்பர். கொழும்பையும், மேற்கு தொடர்ச்சி கப்பற் துறை பற்றிய விபரங்களையும் அவர்பல விபரங்களைப் பதிவு செய்திருக்கிறார். ஏறத்தாழ அதே காலப்பகுதியில் சீனப் பேரரசரின் கடற்படைத் தளபதியான வாங் தா–யுவான் (Wang – ta Yuan), கொழும்பு நகரத்தைப் பற்றி விவரித்திருக்கிறார். அவர் இந்த இடத்தை "கொலாப்பு" என்று குறிப்பிட்டிருக்கிறார்.இபன் பதூதா அதை "கலங்பு" என்று குறிப்பிட்டார். அழைத்தார். ஆனால் அவர்களின் உச்சரிப்பு எந்த அளவிற்கு இதில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைக் குறிப்பாக உறுதிசெய்துவிட முடியாது..

16 நூற்றாண்டுக்கு முன்னர் கோட்டை அரசின் ஒரு பகுதியாகவும், அதே வேளை இந்தியத் தமிழர் மற்றும் இசுலாமிய வர்த்தகர்களின் ஒரு தளமாகவும் கொழும்பு விளங்கியது. கொழும்பு இவ்வாறு வர்த்தக நடவடிக்கைகளுக்கான வரலாற்று வழித்தடங்களை கடந்து தான் வந்துள்ளது.

கொழும்பு ஒரு வர்த்தகத் தலை நகரமாகவும் நிர்வாகத் தலைநகராகவும் போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னரே ஆகிவிட்டது. ஆனால் போர்த்துக்கேயர்கள் தான் அதை உறுதியாக பலப்படுத்தினார்கள். போர்த்துக்கேயரின் காலத்துக்கு அண்மைய காலத்தில் தான் சிங்கள ராஜாவலிய நூலும் எழுதப்பட்டது. மகாவம்சம், தீபவம்சம், பூஜாவலிய போன்ற இலங்கையின் வரலாற்று நூல்களின் வரிசையில் ராஜாவலியவும் முக்கியமானது. அதில் "களன் தொட்ட" என்று இந்த இடத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. "களனி கம்தொட்ட" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு என்கிற பெயர் நிலைபெறுவதற்கு முன்னரே களனி என்கிற பிரதேசமும், களனி அரசும், (களனியை கல்யாணி என்றும் சிங்களத்தில் அழைப்பார்கள்.) களனி விகாரையும், களனி கங்கையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு பிரசித்தி பெற்றிருந்தது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பழங்காலத்தில் "கொலன் தொட்ட" என்று சிங்களத்தில் அழைக்கப்பட்டு வந்தது தான் மருவி கொழும்பு என்கிற பெயர் ஆனதாகவும் கூறப்படுவதுண்டு. கொலன் தொட்ட என்றால் கெலனி (களனி) ஆற்றின் துறைமுகம் என்று பொருள்.

கொழும்பில் இருந்த அந்த களனி ஆறு அன்று மிகவும் பிரபல்யமானது. களனி கங்கை கொழும்பில் வந்து கலக்கும் இடங்களான இன்றைய முகத்துவாரம், காலிமுகத்திடல் போன்ற இடங்களையொட்டித் தான் அன்றைய சிறு துறைமுகம் அமைந்திருந்தது.

பிரபல வரலாற்றாசிரியர் எமர்சன் டெனன்ட் (Emmerson Tennent)கொழும்பு என்கிற பெயரின் உருவாக்கம் பற்றி குறிப்பிடும்போது;"களன் தொட்ட" என்கிற பெயரைத் தான் போர்த்துக்கேயர் தமது உச்சரிப்புக்கு ஏற்ற ஒலியுடன் "கலம்பு" என்று மாற்றினார்கள் என்கிறார். அந்த வரிசையில் நீர்கொழும்பின் பெயரையும் போர்த்துக்கேயர் தான் "நெகம்பு" (Negombo)என்று மாற்றியதாகவும் அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

கொழும்பு என்கிற பெயர் எப்படி உருவானது என்கிற கதைகளில் "கொள அம்ப தொட்ட" என்ற சிங்கள மொழிப் பெயரிலிருந்து மருவியது என்கிற கருத்தும் உண்டு. (கொளபச்சை,அம்பமாம்பழம், தொட்டதுறை முகம்). மாந்தோப்புள்ள துறைமுகம் என்கிற அர்த்தத்தை அது குறிப்பதாக பல நூல்கள் குறிப்பிடுகின்றன.

அதேவேளை சிங்கள இலக்கியங்களிலும் சிங்கள நிகண்டுகளிலும் "கொழும்பு" என்கிற பெயர் பிற்காலத்தில் இடம்பெற்றிருக்கிறது. குறிப்பாக சிங்கள மொழியில் (ஹெல மொழியில்) "கொழும்பு" என்கிற பெயர் இடம்பெற்ற முதல் நூலாக தம்பதெனிய காலத்துக்கு உரிய பிரபல இலக்கியங்களில் ஒன்றான "சிதத் சங்கராவ"என்கிற இலக்கியத்தில் முதன் முதலாக அடையாளம் காணமுடிகிறது.

பாளி மொழியில் "கதம்ப" என்று "கொலன் மரத்தைக்" குறிப்பிடுவார்கள். அதுவே காலப்போக்கில் சிங்களத்தில் மருவி "கொலம்ப" என்று ஆகியிருக்கலாம் என்கிற கருத்தும் கூட நிலவுகிறது. இதன் பிரகாரம் கொழும்பு என்கிற சொல் போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னரே பிறந்துவிட்டதாக வாதிப்பவர்களும் உள்ளார்கள்.

ஒருவகை படகுக்கு "கலம்பு" என்று மலையாள மொழியில் குறிப்பிடுவதாகவும், அடிக்கடி இங்குள்ள துறைமுகத்துக்கு கேரளாவில் இருந்து அந்த படகு போக்குவரத்தில் இருந்ததால் "கலம்ப" என்று இந்த இடத்துக்கு பெயர் வந்திருக்கலாம் என்கிற ஒரு கருத்துமுண்டு. இதை பிரபல சிங்கள மொழிப் புலவரான முனிதாச குமாரதுங்கவும் உடன்படுகிறார். தமிழின் "களப்பு" என்கிற சொல்லில் இருந்து "கலம்ப" உருவாகியிருக்கலாம் என்கிற கருத்தும் உண்டு. குறிப்பாக கொழும்பு பேறை வாவி ஒரு களப்பு போன்ற தோற்றத்தில் இருந்ததால் இந்த இடத்துக்கு கலப்பு என்று அழைக்கப்பட்டு அது திரிந்து காலம்ப என்று ஆகியிருக்கலாம் என்கிற வாதமும் இருக்கிறது. ஆனால் பேறை வாவி பிறகாலத்தில் தான் திருத்தப்பட்டு இந்த வடிவத்தைப் பெற்றது என்பதால் அந்த வாதமும் அத்தனை பலமானதாக இல்லை.

90 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் முக்கிய இடங்களின் பெயர்களைப் பற்றி ஆராய்ந்த யூலியஸ் தெனரோல் ராஜரீக ஆசியர் கழகத்தின் ஆய்வுச் சஞ்சிகையில் வெளியிட்ட ஆய்வுக்கட்டுரையில் கொழும்பு துறைமுகத்தை ஊடறுத்துச் செல்லும் "கொலன்னாவ நதி" கடலில் விழுந்த இடத்தைத் தான் "கொலொன் தொட்ட"என்றார்கள்என்று குறிப்பிடுகிறார். 14நூற்றாண்டில் கம்பளை இராச்சிய காலத்தைச் சேர்ந்த "நிக்காய சங்கிரஹா" என்கிற நூலில் கோட்டை அரசன் நடத்திய பௌத்த தீட்சை (உபசம்பத்தா) நடத்திய இடத்தை"கலம்பு" என்கிறார். அது "கொலன்னாவ ஆற்றைத் தான்" குறிப்பிடுவதாக அவர் தனது ஆய்வில் தெரிவிக்கிறார்.

கொழும்பு நகரத்தின் வரலாற்றைத் தேடிச்சென்ற இன்னொரு ஆய்வாளரான எஸ்.ஜே.பெரேரா என்கிற பாதிரியாரும் இக்கருத்தை ஏற்றுக்கொள்கிறார்.

களனி ஆற்றின் நிரம்பி வழியும் நீரை எடுத்துக் கொண்டு மாளிகாவத்தை சதுப்பு நிலங்கள் வழியாக மருதானை புனித செபஸ்தியான் மேட்டுக்கடியில் ஊடுருவி புறக்கோட்டை கைமன் வாசல் (ஐந்துலாம்பு சந்தி) வழியாக, ரேக்லமேஷன் வீதிக்கு சமாந்திரமாக வந்து கடலில் விழுவதாக குறிப்பிடப்படுகிறது. போர்த்துக்கேயர்கள் "புனித ஜோன்ஸ் ஆறு" என்று பெயரிட்டதுடன், பேறை வாவியை உருவாக்க இது பெரும்பங்கை வகித்ததாம்.

இதைவிட பிரசித்திபெற்ற இன்னோர் கதையுமுண்டு. மாம்பழம் இல்லாத மாமரம் ஒன்று கொழும்பு துறைமுகப்பகுதியில் (குறிப்பாக கோட்டை commissariat street பகுதியில்) இருந்ததாம். ஆனால் அதில் மாம்பழங்கள் இருந்ததில்லையாம், பதிலாக பச்சைநிற இலைகளால் பெருகிப் போய் இருந்ததாம்.

அந்த மரத்துக்குத் தான் "கொல – அம்ப" (பச்சை மாம்பழம்) என்று பெயரிடப்பட்டதாம். அதேவேளை கொலம்பலின் நினைவாக போர்த்துக்கேயர் "கொழும்ப" என்கிற பெயரை இந்த இடத்துக்குப் பெயராக இட்டார்கள் என்கிற ஒரு பிரபல கதை உண்டு. கொழும்புத் துறையை அடையும் கப்பல் சிப்பாய்களுக்கு இந்த மரம் இலகுவாக தூரத்தில் இருந்து அப்போது தென்படுமாம்.

இதன் உண்மை பொய்யை நாம் உறுதிசெய்ய முடியாது போனாலும் இதற்கு கிட்டிய விபரமொன்றை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒல்லாந்தர்கள் கொழும்பு கோட்டையைக் கைப்பற்றிய பின்னர் கொழும்பு கோட்டைகென ஒரு சின்னத்தை உருவாக்கினார்கள். இலங்கையில் ஒல்லாந்த கைப்பற்றிய சகல கோட்டைகளுக்கும் ஒவ்வுறு விதமான சின்னங்களை உருவாக்கிக் பேணினார்கள். கொழும்பு கோட்டையின் சின்னத்தில் மாம்பழம் இல்லாத வெறும் இலைகளை மட்டுமே கொண்ட மாமரத்தில் ஒரு புறாவொன்று வசிப்பதாக சின்னத்தை வடிவமைத்துப் பயன்படுத்தினார்கள். இன்றும் இந்த சின்னத்தை கொழும்பில் உள்ள டச்சு மியூசியத்தில் பெரிதாகக் காணலாம்.

கண்டி ராஜ்ஜியத்திலிருந்து கொழும்புக்கு தப்பிவந்த ரொபர்ட் நொக்ஸ் தனது குறிப்புகளில் போர்த்துக்கேயரால் உச்சரிக்கப்பட்டது போலவே "கொழும்பொ" என்று தான் உச்சரித்தார். அதே உச்சரிப்பு தான் ஆங்கிலேயரானும் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்டு நிலைபெற்றது.

(தொடரும்)

வவுனியா கற்குள கற்குவாரிக்கு மக்கள் எதிர்ப்பு

பூந்தோட்டம் .சிதம்பரபுரம் முகாம் மக்களை மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சினால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் முகாம் அமைந்திருந்த காணி மற்றும் வன இலாகாவின் கட்டுப்பாட்டில் இருந்த காணி விடுவிக்கப்பட்டு இங்கு இருந்த குடும்பங்களுக்கும் தலா 3 பரப்பு காணி வீதம் வழங்கப்பட்டுள்ளதுடன் மிகுதிக் காணி மைதானம் வீதி பொதுக் கட்டிடம் என உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன

வவுனியா ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கற்குளம் 2ம் பிரிவு பகுதியில் அமைந்துள்ள கற்குவாரியில் கல் உடைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையினையடுத்து குறித்த வேலைத்திட்டத்தினை உடனடியான நிறுத்துமாறு இம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கற்வாரியில் கல் உடைப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் அச்சத்துள்ளாகியுள்ளனர். இதற்கு முன்னர் குறித்த கற்குவாரி இயங்கிய சமயத்தில் இவற்றிற்கு அருகேயிருந்த வீடுகள் பல சேதமடைந்திருந்துடன் கற்குவாரியில் தவறி வீழ்ந்து 9வயது சிறுவன் உயிரிழந்ததுடன் இவற்றுக்கு அருகாமையில் முன்பள்ளி ஆலயம் என்பனவும் அமைந் திருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கற்குவாரி இயங்குவதற்கு பல தடவைகள் முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்ட போதிலும் பொது மக்களின் எதிர்ப்பினால் தற்காலிகமாக இடை நிறுத் தப்பட்டிருந்ததுஇ இந்நிலை யில் மீண்டும் கற்குவாரியினை

இயக்குவதற்குறிய நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. எனவே உடனடியாக கற் குவாரி மீள செயற்பட முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தினை நிறுத்துமாறு அப்ப குதி மக்கள் அரசாங்க அதிபர் பிரதேச செய லாளர் இ கிராம சேவையாளர் ஆகியோருக்கு மகஜரும் கையளித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனை தொடர்பு கொண்டு வினவிய போது இக் கற் குவாரி முன்னர் செயற்பட்ட காலத்தில் கற்கு வாரிக்கு அருகேயுள்ள வீடுகள் சேதமடைந்தி ருந்துடன் வீதியில் மக்கள் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டதாக மக்கள் எனக்கு பல தடவைகள் முறைப்பாடு இந்நிலையில் செய் திருந்தனர். கற்குவாரி மீண்டும் ஆரம்பிப்ப தற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாக மக்கள் எனக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் வவுனியா அரசாங்க அதிபருக்கும் பிரதேச செயலாளருக்கும் தகவல் வழங்கியுள்ளேன்.

அத்துடன் மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் எந்தவொரு செயற்றிட்டமும் எமது கிராமத்தில் முன்னெடுக்க அனுமதி வழங்க மாட்டேன் எனவும் தெரிவித்தார்.

பல அரசியல்வாதிகளும் வந்து இப் பிரச்சினைக்கு தீர்வு பெற்று தருவதாகவும் அடிப்படை வசதிகள் செய்து தருவதாகவும் வாக்குறுதிகள் கொடுத்தார்கள்.

ஆனாலும் இன்று வரை அம்மக்களுக்கான தீர்வும் வழங்கப்படாமையால் அம் மக்கள் முகாமில் அகதிகளாக வாழ்ந்ததைப் போன்றே தற்போதும் வாழ்ந்து வருவதாக கூறுகின்றனர். 25 வருடங்களாக அல்லல்படும் எம்மை போன்ற மக்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்பதே அந்த மக்களின் கோரிக்கை.

இது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் கருத்து தெரிவிக்கையில் வவுனியா கற்குளத்தில் கல்குவாரியில் கிரனைட்கல் என்று சொல்லப்படுகிற எமது கனியவளம் அகழ்வு செய்யப்படுகின்றது இதற்காக கொழும்பு மற்றும் வேறு சில மாவட்டங்களில் இருந்து வரும் சிலர் எமது பிரதேசசெயலாளருக்கு பெரும் அழுத்தம் கொடுக்கின்றார்கள் இதனை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளேன் இக்கிராமத்து மக்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடி இக்கிராமத்து மக்களின் நலனுக்காக அவர்களின் நலன் சார்ந்த முடிவை விரைவில் எடுப்பேன் மக்களின் விருப்பம் எதுவோ அதைத்தான் செய்வேன் அம்மக்கள் அதை விரும்பாவிட்டால் அதற்கு நான் அனுமதி வழங்க மாட்டேன் எனத்தெரிவித்தார்.



சிவகுமார் திவ்யா...

ஐம்பதாயிரம் பிரதிகளில் வெளியான நடேசய்யரின் நூல்

மலையகத்தின் முதல் தொழிற்சங்கத்தை நிர்மாணித்து, மலையக மக்களின் துயர் களைய முன்னின்ற கோ.நடேசய்யர் மறைந்து இந்த ஆண்டுடன் 75 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இந்த ஆண்டில் அவர் பற்றி நமக்கு இன்னும் தெரிய வராத சில அம்சங்களை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' (Indian Labourer's Rights and Responsibilities) என்ற தலைப்பில் 1928 ஆம் ஆண்டில் கொழும்பு, தொழிலாளர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு, 30 பக்கங்களில் 10 சதம் விலையிடப்பட்டு நடேசய்யரின் இந்நூல் வெளியாகியிருக்கிறது. ஆரு.முத்தையா அம்பலத்தால் 154 செட்டித் தெரு, கொழும்பு என்ற முகவரியிலிருந்து இந்நூல் பிரசுரிக்கப்பெற்றிருக்கிறது. முன்னட்டையில், கொழும்பு 'தேசபக்தன்' பிரதம ஆசிரியர் கோ.நடேசய்யர் M.L.C. என்று நூலாசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தொழிலாளர்களுக்கு இன்னல் புரிகின்ற முதலாளி ஆட்சி ஒழிக! ஒழிக! ஒழிக!' என்ற முழக்கங்களும் முன்னட்டையில் பொறிக்கப் பட்டிருக்கின்றன. இதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்நூலில் 50000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன என்ற முன்னட்டைக் குறிப்பாகும்.

இலங்கையில் ஒரு நூலில் ஐம்பதாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்ட செய்தி நம்மை வியப் பிலாழ்த்துகிறது. என் நினைவுக்கெட்டிய வகையில் இலங்கையில் ஐம்பதாயிரம் பிரதி கள் அச்சிடப்பட்ட நூல் இந்நூல் ஒன்றேயாகும்.

இந்நூலை வெளியிட்ட ஆரு.முத்தையா அம் பலம் 'எமது விண்ணப்பம்' என்ற மகுடத்தில் எழுதியுள்ள வெளியீட்டுரை நம் கவனத்திற்கு ரியது.

அவர் எழுதுகிறார்:

'அன்பர்காள்!

இலங்கையில் சுமார் 7 1/2 லட்சம் இந்தி யத் தொழிலாளர்களிருக்கின்றார்கள். அவர்க ளில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளர்க ளாக வதிகின்றனர். அவர்கள் தங்கள் 'கடமை', உரிமை' இன்னவென்பதை சரிவர தெரிந்து கொள்ளாமல் தங்களை அடக்கியாளும் சயித் தான் ஆட்சியாகிய முதலாளி ஆட்சியின் கீழ் அடங்கி, வெயில் மழையின்றி, பாடுபட்டும் தங்களுக்குப் போதிய உணவும், உடையும், இருக்க வசதியான இல்லமும் சுகாதார சௌக் கியங்கள் இன்றியும் மிருகங்கள்போல் நமது சகோதரி, சகோதரர்கள் வாழ்ந்துவருவதை நோக்குங்கால் ஆறறிவு படைத்த எந்த மனித னும் கண்ணீர் கலங்காமல் இருக்கமாட்டான். அவர்கள் அவ்விதம் தோட்டக்காடுகளில் தங்கள் கடமை உரிமைகளை சரிவர உணராமல் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டும் போதிய வசதி இல்லாததை நமது பிரதிநிதி கோ.நடே சய்யர் கண்டு மனம் கசிந்து அவர்கள் தங்கள் கடமை உரிமைகளை அறிந்து கொண்டாலன்றி தங்கள் நிலையை சீர்திருத்திக்கொள்ள இயலா தென்பதை நன்கறிந்து 'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் ' என்னும் நூலை எழுதி உதவியிருக்கிறார்.

இந்த நூல் தொழிலாளர்களுக்கென தெளி வாகவும் சுலபமான நடையிலும் எழுதப்பட் டுள்ளது. சொற்பம் தமிழ் வாசிக்கத் தெரிந்த வர்களும்கூட இதை வாசித்து விஷயங்களை எளிதில் உணர்வான்பொருட்டு சாதாரணமாகப் பேசும் தமிழிலே எழுதப்பட்டுள்ளது. தொழிலா ளர்கள் கேவலம் மாடுகள் மாதிரி உழைத்தும் அதன் பலனை முதலாளிகளை மூட்டைப்பூச் சிகளைப் போல் உறிஞ்சுவதற்கு விட்டு மிகச் சொற்ப சம்பளம் பெறுகின்றமையால் அவர் களுக்கென இந்த நூலை சொற்ப விலையில் பிரசுரித்திருக்கிறோம். ஆகையால் இந்த நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து தங்கள் கடமை உரிமை இன்னவென்பதை அறிந்து தொழிலாளர்களை அவமதிக்கும் சயித்தான் ஆட்சிக்கு பயப்படாமல் இருக்கவேண்டியதே இவர்களின் முக்கிய கடமை என்பதை ஞாபக மூட்டுகின்றோம்.

அன்பர்களே, இவ்விலங்கையில் 7 1/2 லட்சம் தொழிலாளர்களிருக்கின்றீர்கள். உங்கள் எல்லோருடைய கைகளிலும் ஒவ்வொரு புஸ் தகம் இருக்கவேண்டுமென்ற கருத்துடன் குறைந்த விலைக்கு தனிப்பிரதி சதம் 10, புஸ்தகம் 100 க்கு விலை ரூ .700 க்கு விற்க ஏற்பாடு செய்துள்ளோம். முதற்பதிப்பு புஸ்தகம் ஐம்பதினாயிரந்தான் தற்பொழுது வெளியிட நேர்ந்தது. பாக்கி 7 லட்சம் புஸ்தக மும் விரைவில் வெளிவந்து உங்களுக்கு ஆத ரவளிக்கும்படி எல்லாம்வல்ல இறைவனைத் துதிக்கின்றேன்.

ஐம்பதினாயிரம் பிரதிகொண்ட இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு எனக்குப்பலவகை யிலும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்திய கல்லுப் பட்டி ஸ்ரீமான் ப.ராம. பழனியப்ப செட்டியாரின் உதவியை என்றும் மறக்கற்பாலதன்று.

தங்கள் ஊழியன்

ஆரு.முத்தையா அம்பலம்' என்று கோட்டூர் 20.5.28 திகதியிட்டு தன் வெளியீட்டுரையை நிறைவு செய்கிறார் முத்தையா அம்பலம்

மலையகத் தொழிலாளர்கள்மீது இவர் கள் கொண்டிருந்த அக்கறையையும் பரிதாப உணர்வையும், அம்மக்களின் துயர் போக்க தொடுவான எல்லை வரை போகமுயன்ற லட்சிய வேகத்தைப் பார்க்கும்போது வியப்பு மேலிடுகிறது. ஒவ்வொரு தொழிலாளியின் கையிலும் ஒரு நூல் இருக்கவேண்டும் என்று இவர்கள் ஆசைப்பட்டிருக்கிறார். ஐம்பதாயி ரம் பிரதிகள் அல்ல, ஏழு லட்சம் பிரதிகளை எண்ணிப் பார்த்திருக்கிறார்கள் என்றால் மலைப்புத் தட்டுகிறது.

இந்நூலின் முன்னுரையில் நடேசய்யர் பின் வருமாறு கூறுகிறார்:

'இலங்கை இந்தியத் தொழிலாளர்களைப் பற்றி இந்தியாவும் இலங்கையும் பல சட்டங்கள் செய்திருக்கிறார்கள். இந்தியாவில் தொழிலாளர் களைச் சேர்க்கும் முறை, அந்நிய நாடுகளுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டபிறகு அவர்க ளது உரிமைகளைக் காப்பதற்கான காரியங்கள் முதலியவற்றைப்பற்றியது இந்தியச் சட்டம்.

தொழிலாளர்கள் இலங்கை வந்து சேர்ந் தது முதல் இந்தியாவிற்கு திரும்பிப் போகும் வரையில் அவர்களைப் பற்றிய சட்டம் இலங் கையில் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவை விட்டு வெளியேறும் எல்லாத் தொழிலாளர்க ளுக்குமே பொருத்தமுடையது இந்தியச் சட்டம். இலங்கையில் செய்யப்பட்ட சட்டம் தோட்டம், ரோட்டு முதலிய வேலைகளில் அவர்கள் இலங் கையில் அமர்ந்திருக்கும் வரையிலுமே பொருத் தமுடையதாகும்.

இந்திய கவர்ன்மெண்டாரால் ஸ்தூலமாகக் குறிக்கப்பட்ட கொள்கைகளைத் தழுவியே, தங்கள் நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வரப் படும் தொழிலாளர்களைப்பற்றிச் சட்டங்கள் பிறநாட்டார் செய்யலாம். அக்கொள்கைக ளுக்கு மாறாக எந்த நாடாவது சட்டங்கள் செய் யுமாகில், அந்த நாட்டிற்குத் தொழிலாளர்கள் அழைத்துப் போகாதபடி தடுக்க உரிமையுண்டு.

இச் சட்டங்கள் பெரும்பான்மையும் தமிழில் பிரசுரிக்கப்படாதவை. பிரசுரிக்கப்பட்ட சிலவும் சாதாரண படிப்புள்ளவர் அறிந்து கொள்ளக்

மு.நித்தியானந்தன்,...✍
லண்டன்

கூடாதவையாயிருந்தன.

தொழிலாளரோ ஏழைகள்; படிப்பில்லாதவர் கள்; கடமை, உரிமை ஆகிய இரண்டுண்டென்ப தையும் அறியார். அந்தந்த சமயங்களில் சிறிது உபகாரம் செய்வோரையும், அதிகமாய்ப் பொய் சொல்வோரையும் நம்பியே தம் காலத்தைக் கழித்து வருகின்றார்கள். பெரும்பான்மையா னவர்களும் இந்துக்களானபடியால் பூர்வஜன் மத்தில் செய்த பாபத்தால் கஷ்டப்படுவதாக எண்ணித் தமது மனதைத் தேற்றிக் கொள்கி றார்கள்.

மற்ற நாட்டுத் தொழிலா ளர்கள் எவ்விதம் நடந்து வருகிறார்கள் என்பதி அறிய இவனுக்கு வசதியே இல்லை. அறியாமை இருளில் அகப்பட்டு தடுமாறி அலைகிறான். இவர்களுக்குப் புத்துயிர் உண்டாக்குவது மிகவும் சிர மமான வேலை. அதற்கு எவ்வளவோ விரோதிகளி ருக்கிறார்கள். தொழிலா ளிகளுக்கு உதவி செய்ய முன்வருவோர்க்குத் தொல் லைகள் அதிகம் ஏற்படும்.

'தொழிலாளர்களே! ஒவ்வொரு இடத்திலும் தொழிற் சங்கங்களைக் கூட்டுங்கள். அதுவே உங்க ளுக்குச் சஞ்சீவி போன்றது' என்கிறார் நடேசய்யர்.

'பெரியகங்காணிமார்க ளுக்கு வேலை ஒரு தோட் டத்தில் போய்விட்டால் வேறு தோட்டத்தில் கிடைப்பது சிரமம். ஆனால், நெற்றி

வியர்வை நிலத்தில் விழ வேலை செய்யும் உங்க ளுக்கு யாதொரு பயனு மில்லை. உங்களுக்குள்ள மண்வெட்டியும் அலவாங் கும் எந்தத் தோட்டத்திலும் கிடைக்கும்.நீங்கள் யாருக் கும் பயப்படத் தேவை யில்லை.' என்று தொழிலா ளர்களுக்கு உரமூட்டுகிறார்.

காலையில் எழுந்திருப்பதும், பகலில் வேலை செய்து, மாலையில் குடி புகுதலுமே உங்கள் வாழ்க்கையின் முடிவென்பதை பெரிய மேதா விகளாய் வரக்கூடியவர்களும் உங்களிடையே இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். எல்லாவற்றிற்கும் முயற்சியே காரணம். ஒற்று மையே சாதனம். ஒன்றுபட்டால் நீங்கள் வாழ் வீர்கள். அது நீங்கிவிட்டால் நீங்கள் வீழ்வீர்கள். இது ஓர் எச்சரிக்கை' என்று இந்நூலில் கூறுகி றார் நடேசய்யர்.

எத்தனை மணிக்கு கப்பலில் சேர்ப்பார்கள், மன்னார் ஸ்டேசனில் தண்ணீர் கொடுப்பார் கள்,இரவு ஆகாரம் ரொட்டி, கொஞ்சம் சீனி, வாழைப்பழம் , காலை 6 மணிக்கு பொல் காவலை வந்துவிடும் என்று நுட்பமான விப ராங்களைச் சேகரித்துத் தொகுத்துத் தருவதில் தனது ஆற்றலை நிறுவி இருக்கிறார் நடேசய் யர். ஆனால், இந்த நூல் தொடர்பாக நடேசய் யர் நீதிமன்றம் ஏற வேண்டிவந்தது துரதிர்ஷ்ட மானது.

1928ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடரப்பட்ட இந்த வழக்கு 1929 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

'வழக்கில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள புத்தகங் கள், நாம் விசாரித்ததில் ,

'இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகளும் கடமைகளும்' என்று தெரிகிறது. தொழிலாளர் களுக்கு உபதேசம் செய்யப்புகுந்ததில் ஆசிரிய ருக்கே இடுக்கண் விளைந்தது விசனகரமானது' என்று 'இலங்கை இந்தியன்' பத்திரிகை குறிப் பெழுதி இருந்தது.

பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பு பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பதே நிதர்சனம்

நடைமுறையில் உள்ள சட்டங்கள் மீதான பயம் போதாமை இலஞ்சம் அரச அதிகாரிகளின் அலட்சியப்போக்கு கவனமின்மை குற்றவாளி களுக்கெதிரான தண்டனைகள் துரிதப்படுத்தப்படாமை போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் வரை சிறார்கள் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை துஷ்பிரயோகங்களை குறைப்பது கடினமாகும் என பெண்ணிய சமூக செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான திருமதி சதுர்த்திகா ரஜீ வன் " ஞாயிறு வாரமஞ்சரிக்கு " அளித்த நேர்காணலில் தெரிவித்தார். அவருடனான நேர்காணல் வருமாறு.

கேள்வி : சிறுவர்களுக்கெதிரான வன்முறை கள் மற்றும் துஷ்பிரயோகங்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?

பதில் : பதினெட்டு வயதிற்குட்பட்ட சிறுவர்கள் எதிர்நோக்கும் சகல வித வன்முறைகளும் சிறு வர்களுக்கெதிரான வன்முறைகளாகும். உடல் உள ரீதியாக ஆண் சிறுவர்களோ பெண் சிறுமி களோ சமமான ஆபத்தினையே சமூகத்தினால் எதிர்நோக்குகின்றனர். அதிலும் பெண் சிறார் களே உடல் ரீதியான வன்முறைகளை பெரிதும் தொடர்ச்சியாக எதிர்நோக்குகின்றனர். இது காலம் காலமாக தொடராக

அரங்கேறிக்கொண்டிருப்பது கவலைக்குரி யதென்பதை விட நாம் வெட்கப்பட வேண்டிய தொரு விடயமாகும்.

அரக்க குணம் படைத்த ஆண்கள் இருக்கும் வரை சட்டங்களால் அவ்வப்போது தண்டனை களை வழங்க முடியுமே தவிர திட்டமிட்டு கய வர்களால் முன்னெடுக்கப்படும் துஷ்பிரயோகங் கள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கும் இதில் பெற்றோரின் அசமந்தப் போக்கும் பாராமரிப் புக் குறைவும் ஒரு காரணியாகும். சிறுவர்க ளில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோருடையதாகும்.

2013ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத் தினால் செய்யப்பட்ட கணக்கெடுப்பின்படி ஒரு வரு டத்திற்கு 1500 க்கும் மேற்பட்ட சிறார்கள் தொடர் பான வழக்குகள் பதியப்படுகின்றன. அதிலும் துஷ்பிரயோக வழக்குகள் அதிகமானவை. கிராமங் களில் சிறுவர்களுக்கெதிரான வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் தற்போதைய காலங்களில் மிகவும் அதிகரித்தேயுள்ளன. இதில் போதை வஸ்து பாவனையின் அதிகரிப்பு மதுபோதை பெற்றோரின் கவனமின்மை வறுமை போன்ற காரணிகள் அதிகம் செல்வாக்கு செலுத்துகின்றன.

நீதிமன்றங்களில் சிறுவர்களுக்கெதிரான வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர் பான வழக்குகள் தவணைகள் மூலம் இழுத்தடிக் கப்படாமல் துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிக்கான தண்டனை கடினமாக்கப்பட வேண்டும்.

கேள்வி : மலையகத் தமிழ்ச் சமூகத்தின் கலாசார கட்டமைப்பை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?

பதில் : இந்தியத் தமிழர்கள் தோட்டத் தமிழர்கள் தோட்டத் தொழிலாளர்கள் மலையகத் தமிழர்கள் என அழைக்கப்படுகின்றனரே தவிர இலங்கைத் தமிழர்கள் என அழைக்கப்படுவதில்லை. இது அவர்களுக்கான அடையாளத்தை பாதிக்கின்ற ஒரு காரணியாகவே பார்க்கிறேன்.

இங்கு தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்தாலும் எஸ்டேட் பாடசாலைகளில் தமிழ் மொழியின் பாவனை குறைவாகவேயுள்ளது. இப்பாடசாலைக ளில் தமிழ் ஆசிரியர்களின் வீதம் குறைவாகவே யுள்ளது என்பது கவலைக்குரியது. தொழிற் சங் கங்களினாலும் முதலாளிகளினாலும் மலையகத் தொழிலாளர்களின் சமூக பொருளாதார அரசி யல் குடும்ப வாழ்க்கை முறைமை கட்டுப்படுத்தப் படுகிறது என்பதே நிதர் சன உண்மை.

> **நாட்டிற்கு பாரிய பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுக்கும் மலையக மக்களின் வாழ்க்கை நிலைமை இற்றைவரை கேள்விக்குறியாகவே உள்ளது**

நாட்டிற்கு பாரிய பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுக்கும் இலங்கை மலையக மக்களின் வாழ்க்கை நிலைமை இற் றைவரை கேள்விக்குரியா கவே பார்க்கப்படுகிறது. சமூக பொருளாதார அரசியல் ரீதியாக பாதிக்கப்பட் டுள்ள மலையக மக்கள் அடிப்படை உரிமைக்காக போராட வேண்டியதொரு சூழ்நிலையிலேயே இன் றுவரை வாழ்ந்து வருகின்றனர்.

கேள்வி : இலங்கை முழுவதிலும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் அதிகம் இடம்பெறுவதாக கூறப்படுகிறதே அவ்வாறு இடம்பெறுவதற்கான பின்னணி ?

பதில் : பெற்றோர்களின் வேலைப்பளுவினால் பெற்றோருக்கும் சிறார்களுக்கும் இடையிலான இடைவெளி குறைந்த கல்வியறிவு வருமானம் மற்றும் வன்முறை தொடர்பான விழிப்புணர் வின்மை, பெற்றோர்களுக்கிடையிலான பிரிவு வறுமை போதைவஸ்து மற்றும் மதுப் பாவனை அதிகரிப்பு குறைந்தளவிலான சமூக பாதுகாப்பு போன்றவைகளே சிறார்களுகிடையிலான வன்முறையியைத் தூண்டும் பின்னணியா கவுள்ளது.

கேள்வி : மிக மோசமான செயற்படுக ளில் ஈடுபடுபவர்களுக்கெதிரான சமூக மட்டச் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் ?

பதில் : கடுமையான தண்டனைச் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். உதாரணம் மரண தண்டனை. மிக மோசமான செயற்பாடுகளில் ஈடுப டுபவர்களுக்கெதிராக சமூக நலன் கருதி சட்டத்தரணிகள் நீதிமன்றங்க ளில் தோன்றாதிருத்தல், குற்றவாளியை தெரிந்தவர் அல்லது இனம் கண்டவர் சட் டத்தின் முன் நிலை நிறுத்த முன்வருவதன் மூலம் தகுந்த தண்டணையை பெற்றுக்கொ டுத்தல். மிக மோசமான செயற்படுகளில் ஈடுப தூண்டுபவர்களையும் அதற்கு துணை போகின் றவர்களையும் சட்டத்தின் முன்னும் சமூகத்தின் முன்னும் இனம் காட்டுதல் வேண்டும்.

கேள்வி : அரசலுவலகங்களில் சிறுவர்கள் பெண்கள் பிரிவு சமூக சேவை பிரிவு மற்றும் பெண்கள் துறைசார் அமைப்புகள் இருந்தும் சிறார்கள் மீதான பாலியல் வன்முறை துஷ்பிர யோகங்கள் குறைவதாக தெரியவில்லையே ?

பதில் : நடைமுறையில் உள்ள சட்டங்கள் மீதான பயம் போதாமை இலஞ்சம் அரச அதி காரிகளின் அலட்சியப்போக்கு கவனமின்மை

நேர்கண்டவர் :
பாக்கியராஜா மோகனதாஸ்...✍
(மண்டூர் குறூப் நிருபர்)

குற்றவாளிகளுக்கெதிரான தண்டனைகள் துரி தப்படுத்தப்படாமை போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் வரை சிறார்கள் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை துஷ்பிரயோகங்களை குறைப்பது கடினமாகும்.

கேள்வி : சிறார்கள் மீதான வன்முறை துஷ்பி ரயோகங்களுக்கெதிரான சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா ?

பதில் : 50 வீதமே முறையாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. மீதி இலஞ்சத்தினாலும் அரச அதிகாரிகளின் அலட்சியப்போக்கினாலும்

நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதுமட் டுமன்றி வெளிச்சத்துக்கு வரும் வழக்குகளும் சாட்சிகளின்றி மறைந்து போகின்றன.

கேள்வி : பெண்கள் முகங்கொடுக்கும் உடலி யல் உளவியல் ரீதியான பிரச்சினைகள் பொது வெளியில் பேசப்படுவதாக தெரியவில்லையே ?

பதில் : உண்மைதான். பெண்கள் சமூகத்தில் உடலியல் உளவியல் ரீதியாக பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது அல்லது பாதிக்கப்படும் போது தமது சுய மற்றும் குடும்ப கௌரவம் கருதி அதை பொது வெளியில் பேசுவதில்லை. பலர் தமது எதிர்காலத்தைக் கருதிற்கொண்டு மறைத்து அதை தமக்குள் அடக்கிக் கொள்கின் றனர். அவ்வாறு பொது வெளியில் பேச முயற் சித்தாலும் எமது

சமூகத்தில் பலர் அதற்கு எதிர்மறைக் கருத் துக்களை விமர்சித்து அதை ஒரு கிசு கிசுவாக்கி காலவோட்டத்தில் அது மறைந்தும் விடுகிறது

கேள்வி : பெண்களுக்கெதிரான வன்முறைக ளுக்கு எவ்வாறு முற்றுப்புள்ளி வைக்கலாம் ?

பதில் : நடைமுறையில் சற்று கடின காரியமே. இருந்த போதிலும் பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பாக சட்டங்களை இறுக்க மாக உருவாக்குவதன் மூலமும் இயன்றளவு பாதிக்கப்பட்டவர்கள் முன்வந்து குற்றவாளியை சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலமும் பாதிக் கப்பட்டவருக்கு சார்பாகவும் வன்முறையில் ஈடுபட்டவர் மேலும் அதைத் தூண்டியவருக்கெ திராக உரிய அரச அதிகாரிகள் அலட்சியமில் லாமல் துரித செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலமும் சமூக மட்டத்தில் இது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதன் மூலமும் ஓரளவு இவ் வன்மு றையினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

மக்கள் பிரதிநிகள் தமது கட்சிக்குள் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பிரி வொன்றை உருவாக்கி அதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள்

தொடர்பான விடயங்கள் அவர்களுக் கெதிரான துஷ்பிரயோக வன்முறைக ளுக்கெதிரான செயற்பாடுகளை சமூக மட்டத்தில் முன்னெடுப்பதன் மூலம் ஓரளவு வன்முறையினை கட்டுப்படுத்த முடியும்.

கேள்வி : 54 சதவீத பெண் வாக்காளர்களைக் கொண்ட சட்டமியற்றும் பாராளுமன்றத்தில் பெண் களின் வகிபங்கு எவ்வாறுள்ளது ?

பதில் : பெண் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பு பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பதே நிதர்சன உண்மை. அரசியல் கட்சி களில் ஆண்களின் ஆதிக்கமே செல்வாக்கு செலுத்துகிறது. சில கட்சிகள் பெயரளவில் மாத்திரமேபெண்களை உள்வாங்குகின்றனர். இதனால் பெண்களுக்கான வாய்ப்பு அதிகம் வழங்கப்படுவதில்லை. சட்டமியற்றும் நம் பாராளுமன்றத்தில் உண்மையில் பெண் பிரதி நிதித்துவத்தின் வகிபங்கு முக்கியமானதெனின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்காக குறைந்தது ஒரு ஆசனம் ஒதுக்கப்பட வேண்டும். உதாரணமாக ஐந்து ஆசனம் கொண்ட மாவட் டத்தில் குறைந்தது ஒன்றோ இரண்டோ ஆசன மாவது ஒதுக்கப்பட வேண்டும்.

இவ்வாறிருந்தாலே தவிர பெண்களின் வகி பங்கு நமது பாராளுமன்றத்தில் குறைவாகவே யிருக்கும். அதுமட்டுமன்றி நமது சமூகத்தில் படித்த உயர் பதவிகளிலுள்ள பெண்கள் மேலும் சமூகத்தில் முன்னிலையில் உள்ள பெண்கள் சமூகத்தின் எதிர்மறை கருத்துகளுக்கு பயந் தும்இ எங்கே ஆதரவானவர்கள் கூட வாக்க ளிக்காமல் தோற்று சுய கௌரவத்தை இழந்து விடுவோமோ என்ற பயத்தினாலும் தேர்தலில் இறங்குவதற்கு காட்டும் தயக்கமும் இதற்கான ஒரு காரணியாகப் பார்க்க முடியும்.

பெண்ணிய சமூக செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான திருமதி சதுர்த்திகா ரஜீவன்

அதே கண்கள்

மாலை ஐந்து மணியிருக்கும் – புதிதாக கட்டப்பட்ட அந்த மலையக வீட்டு திட்டத்தில் இருந்த கடைசி வீட்டில் ஒரே பரபரப்பாக இருந்தது... அந்த வீட்டுத் திட்டத்திலிருந்த தொழிலாளர்கள் அங்கு மிங்கும் ஓடிக் கொண்டிருந்த நிலையில் வெகுதூரத்தில் பொலிஸ் வாகனம் ஒன்று வந்து கொண் டிருந்தது. சுமார் பத்து நிமிடத்தில் அந்த இடத்தை வந்தடைந்த வாகனத்திலிருந்து நன்கைந்து பொலிஸ்காரர்கள் இறங்கினார் கள். அவர்களில்... இன்ஸ்பெக்டர் அழகு பாண்டியன் மிகவேகமாக குறிப்பிட்ட வீட்டை நோக்கி நடக்க சக பொலிஸ்காரர்கள் அவரை பின் தொடர்ந்தார்கள்.

அந்த வீட்டையடைந்தப் போது ஒரே அழுகை சத்தமாக இருந்தது. இன்ஸ்பெக் டர் – வீட்டினுள்ளே நுழைந்தார். பாதி திறந்திருந்த அந்த அறைக்கதவை திறக்கச் செய்தார். உள்ளே –ஒரு பெண் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள். பொலிஸ்கா ரர்கள் அறையை நோட்டமிட்டார்கள். பின்பு அழகு பாண்டியனின் உத்தரவுக்கமைய உடலை கீழே இறக்க யாரோ அலறினார்கள். இதற்குள் – அம்புலன்ஸ் வாகனம் வந்து சேர சம்பவம் நடந்த அறையில் செய்ய வேண்டியதை செய்து பிரேத பரிசோதனைக் காக சடலம் வைத்தியசாலைக்கு கொண்டு போகப்பட்டது. அழகு பாண்டியன் அந்த அறையிலிருந்த கைபேசி ஒன்றை எடுத்தார். பின்பு விசாரணை செய்ததில் பின்வரும் விட யங்களை பதிவு செய்தார்.

பெண்ணின் பெயர் அழகுநிலா. வயது 26 ஆடைத்தொழிற்சாலையில் விற்பனைப் பிரிவில் பணிபுரிகிறாள். கைநிறைய சம்ப ளம். ஸ்கூட்டி வைத்திருக்கிறாள். பல்கலைக் கழகம் போகும் வாய்ப்பு கிடைத்த போதும் அதை விரும்பாமல் உடனடியாக வேலைக்கு போய்விட்டாள். அவளுக்கு அப்பா இல்லை அம்மாலட்சுமி தோட்டத்தில் வேலை. லட்சுமி யின் தூரத்து சொந்தமான அண்ணன் பழி னிசாமியின் மகள் மதிமாறன் பத்து வயதிலி ருந்து லட்சுமியுடன் இங்கேயே இருக்கிறான். அவனுக்கு டவுனில் ஒரு கடை இருக்கிறது. அழகு நிலாவை தோளில் தூக்கி வளர்த்த அவனை மாமா மாமா என்று உயிரையே வைத்திருந்தாள். அழக நிலா சம்பவம் நடப் பதற்கு நாலைந்து நாளுக்கு முன்னிருந்தே அழகு நிலா முகவாட்டத்துடனிருந்தாள். யாரு டனும் பேசாமல் வீட்டுக்குள்ளேயே முடங் கிக்கிடந்தாள். வேலைக்கும் போகவில்லை. லட்சுமி எவ்வளவோ கேட்டும் எதுவும் சொல் லவில்லை.

அழகு பாண்டியன் பொலிஸ் காரியால யத்துக்கு வந்தார். பிரேதபரிசோதனை முடி வுகள் வரும் வரை காத்திருக்காமல் அழ குநிலாவின் அறையிலிருந்து எடுக்கப்பட்ட கைபேசியை ஆராயத் தொடங்கினார். அது அவளின் கைபேசிதான்.

அழகு நிலா – இறப்பதற்கு முன்னால் – அந்த கைபேசிக்கு ஒரு குறிப்பிட்ட இலக்கத்தி லிருந்து அடுத்தடுத்து அழைப்புகள் வந்திருக் கின்றன. அதே இலக்கத்துடன் அழகு நிலா வெகு காலம் தொடர்பில் இருந்திருக்கிறாள். அவர் அந்த எண்ணை குறித்துக் கொண்டு அலுவலக தொலைபேசி மூலம் தொடர்பை ஏற்படுத்த முயற்சி செய்தார். சில மணித்து ளிகளின் பின் மறுபுறம் ஒரு ஆணின் குரல் கேட்டது.

“ஹலோ .. நான் காவல் நிலையத்திலி ருந்து இன்ஸ்பெக்டர் அழகு பாண்டியன் பேசு கிறேன். உங்கக்கிட்ட கொஞ்சம் பேச வேண்டி யிருக்கு... உங்க பெயர் என்ன?

“என்னோடபேரு கலைமணி... நான் காப் புறுதி நிறுவனம் ஒண்ணுல உதவி முகா மையாளனா இருக்கேன்... இப்பகண்டியில யிருந்து வந்துக்கிட்டிருக்கேன்... ஏன் என்ன விஷயம்?

“உங்களுக்கு அழகு நிலாவை தெரியுமா?

“தெ.... தெரியும்...”

“என்ன விதத்துல தெரியும்?”

“அழகு நிலா பத்துலட்சத்துக்கு ஆயுள் காப் புறுதி செஞ்சிக்கிட்டாங்க... அவங்க மூலமா நிறைய பேருக்கு காப்புறுதி செய்யிற சந் தர்ப்பம் கிடைச்சது... ரொம்ப உதவி செஞ் சாங்க...”

“வேற எந்த தொடர்பும் இல்லையா...?

“வந்து நான் அழகுநிலாவை நேசிச்சேன். அவங்களும் தான். திருமணம் செய்யவும் முடிவு செஞ்சோம். ஆனா கடந்த சில வாரங் களா அவங்கு என் கிட்டசரியா பேசலை. எதையோ பறி குடுத்த மாதிரி இருந்தாங்க. எனக்கு எதுவும் புரியலை...”

இன்னைக்கும் பலமுறை கைபேசிக்கு ‘கோல்’ எடுத்தேன்.

ஆனா எந்த பயனும் இல்லை...”

“மிஸ்டர் கலைமணி... நீங்க கண்டியில இருந்து வந்ததும் காவல் நிலையம் வந்தி டுங்க...”

“சேர்... என்ன விஷயம்...?

“அதை நேர்ல வந்து தெரிஞ்சிக்கங்க....”

அழகு பாண்டியன் தொடர்பை துண்டித்து விட்டு மறுபடியும் கைபேசியில் தகவல்கள் பகுதியை சோதனை செய்தார். அதில் ஒரு செய்தி அவர் கண்ணில்பட்டது”. கலை அவ சரதேவைக்காக என் கிட்ட ஐந்து லட்சம் வாங்கினீங்க. அதை என் நண்பி ஒருத்திக் கிட்டயிருந்து வாங்கினேன். அவளோட கல் யாணத்துக்காக நதை வாங்க வச்சிருந்தா அதை உடனடியாக குடுக்கணும்..”

அவர் மேலும் ஆராய்ந்தார்.

“கலை... எப்போ கேட்டாலும் சாக்குப் போக்கு சொல்லுறீங்க பணம் கட்டாயம் தேவை. அதோட நானொரு பிரச்சினையில மாட்டிக்கிட்டேன். இப்போதைக்கு கல்யா ணமெல்லாம் சாத்தியமேயில்லை. நான் ரொம்ப குழப்பிப் போயிருக்கேன்...”

“என்ன கலை கடைசியில இப்படி சொல் லுறீங்க... நான் உங்களுக்காகத்தான் பணம் வாங்கி கொடுத்தேன்... ஆனா இப்ப அதை உங்க நண்பனுக்காக வாங்கியதாக வும் அவர் சாக்குப் போக்கு சொல்லுறதாக வும் சொல்லுறீங்க. எனக்கு தலை சுத்துது. நண்பி என்னை வாட்டியெடுக்கிறதா. வீட்டில தெரிஞ்சா வறுத்து எடுத்துடுவாங்க லாம்.. இருக்கிற பிரச்சினை பத்தாதுன்னு இதுவேற... நிம்மியில்லாத இருக்கேன். பேசாம செத்துடலாமான்னு இருக்கு... நீங்க ளுமா என்னை ஏமாத்துறீங்க...?

அழகுபாண்டியன் மேலும் ஆராய்ந்தார். ஆனால் வேறு விஷேடமான விஷயங்கள் எதுவும் காணப்படவில்லை. அவர் அப்ப டியே சோர்வுடன் இருக்கையில் சாயந்தார். அப்போது அலுவலக தொலைபேசி அலறி யது. மறுபுறம் அழகுநிலாவை பிரேத பரிசோ தனை செய்த வைத்தியர் பேசினார்.

“இன்ஸ்பெக்டர்.... இது தற்கொலை யில்லை. ஏற்கனவே கழுத்து நெறிக்கப்பட்டு கொலை செஞ்சி தூக்குல தொங்கவிடப்பட் டிருக்கு அதோட இவங்க கொலை செய்யப் படுறதுக்கு முன்னால பாலியல் வன்கொ டுமைக்குள்ளாக்கப்பட்டிருக்காங்க.. இதுல துரதிஸ்டமான விஷயம் என்னன்னா குற்றம் செஞ்ச வங்களோட கைவிரல் அடையாளம் எங்கேயும் இல்லை...”

அழகுபாண்டியன் – இதை எதிர்பார்க் கவில்லை. அழகுநிலாவை கொலை செய்தது யார்? எதற்காக கொலை செய் யப்பட்டாள்? அவருக்கு குழப்பமாக இருந் தது. கலை மணிதான் மிக நுணுக்கமாக திட்டம் போட்டு தீர்த்துக்கட்டியிருப்பானோ... முதலில் அவனைத்தான் கடுமையாக விசா ரிக்க வேண்டும். அவர் சிந்தனை வயப்பட்ட வராக சற்று நேரம் அமைதியாக இருந்தவர் சட்டென இருக்கையை விட்டு எழுந்தார். ‘அழ குநிலாவின் அறையை ஆராய்ந்து பார்த் துக் கொண்டிருந்தவர் அந்த அறையின் மூலையிலிருந்த சிறிய மேசையில் ஒரு பயிற்சிகொப்பியிருந்ததை அவதானித்தார். எதற்கும் இருக்கட்டும் என்று அதை எடுத்து வைத்திருந்தார். இப்போது – அதை எடுத் தார். அது கோடுகளில்லாத படங்கள் வரை யக்கூடிய கொப்பி. அதில் நிறையபடங்கள் வரையப்பட்டிருந்தன. எல்லாமே அழகு நிலாவின் கை வண்ணம். சில படங்கள் இயற்கையாக தத்ரூபமாக இருந்தன. அவர் ஒவ்வொரு பக்கமாக பார்த்துக் கொண்டே வந்தார். கடைசியாக ஒரு படம் தீட்டியிருந் தாள். அது அவரின் மனதை கவர்ந்துவிட் டது. இரண்டு கரும் விழிகள். நேரில் பார்ப் பதைப்போல அவ்வளவு சிறப்பாக இருந்தது உற்றுப் பார்த்தவருக்கு சட்டென பொறி தட் டியது. அழகுநிலா இறப்பதற்கு முன் தீட்டிய படமாக இருக்கவேண்டும். அதில் அவள் எதையோ சொல்ல நினைத்திருக்கிறாள். இந்த இரண்டு கண்களும் ஏன் கொலைக்கா ரர்களுடையதாக இருக்கக்கூடாது அவர் ஒரு முடிவுக்கு வந்தார். முதலில் கலைமணியை விசாரிக்கவேண்டும். இந்த கண்களுக்குறிய வன் அவன் தானா என்று ஆராய வேண்டும்.

ஒருவாரம் ஓடியது. அழகுபாண்டியன் மிக கவனமாக நேர்த்தியாக வேலை பார்த்ததில் எந்தப் பயனும் இல்லை. சம்பவம் நடந்த அன்று கலைமணி கண்டியில் இருந்திருக் கின்றான். அழகு நிலாவிடம் பணம் வாங்கி அதை பார்த்திபனுக்கு கொடுத்தது உண்மை தான். பார்த்திபனையும் விசாரித்து விட்டார். இருவரும் நான்கைந்து வருடங்களாகத்தான் நண்பர்களாக இருக்கிறார்கள். அழகுநிலா வின் தாய் லட்சுமியை விசாரித்த வகையில் அழகு நிலாவை பற்றி பெரிதாக எந்தகு றையும் சொல்லவில்லை. ஆனால் அன்று தோட்டத்தொழிலாளர்களின் சம்பள பிரச் சினை சம்பந்தமாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றுக்காக அந்தப் பகுதி தொழிலாளர்கள் அனைவரும் காலையிலேயே போய் விட் டதாகவும் அழகு நிலா மட்டும்தான் வீட்டில் இருந்ததாகவும் சொன்னமையானது அவ ருக்கு நெருடலாக இருந்தது. சம்பந்தப்பட்ட குற்றவாளி கையருகேதான் இருக்கின்றான். ஆனால் அவனை அடையாளம் காண்பதில் தான் கஷ்டமாக இருக்கின்றது. அவர் மறுப டியும் அந்த கண்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். சட்டென அவருக்கு மறுப டியும் பொறி தட்டியது. இந்த கண்களுக்குரி யவனை எங்கேயோ மிக சமீபத்தில் பார்த் திருக்கிறார். வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தவருக்கு இப்போது பளீச்சென்று ஞாபகம் வந்தது. அவர் கணக்கு சரியாக இருந்தால் அவன்தான் குற் றவாளி. அவர் தூண்டியைப் போடதயாரானார். மீன் நிச்ச யமாக மாட்டும் என்று நம்பி னார்.

அந்த ஹோட்டல் ஒதுக்குப் புறமாக இருந்தது. அதில் ஒரு அறையில் அவர்கள் இருவ ரும் எதிரும் புதிருமாக வட்டமே சையொன்றினருகே அமர்ந் திருந்தார்கள். மேசையில் வெளிநாட்டு மதுவும் டெவல் செய்யப்பட்டமீனும் இருந்தது. அதிலொருவன் கண்ணாடி கிளாஸிலிருந்த மதுவை வாயில் கவிழ்த்து விட்டு எதிரே இருந்தவனை பார்த்தான். ‘வெள்ளம் தலைக்கு மேலே போக ஆரம்பிச்சிடுச்சி. அவன் பாண்டியன் கேஸில் பாதிவரை வந்துட்டான். நம்ம போட்ட திட்டம் புஸ் வானமாகிக்கிட்டுவ ருது. இப்ப என்ன செய்யிறது.

“எல்லாம் உன்னால் வந்தது. அப்பவே சொன்னேன் சந்தேகத்துக்கிடமான பொருள் ஏதுமிருந்தா எடுத்துட சொல்லி நீபதற்றத்துல சரியா பார்க் காம ஒண்ணுமில்லை என்று சொல்லிட்டே... இப்ப அவங்க கையில என்னமோ மாட்டியி ருக்குன்னு நான் நினைக்கி றேன்... கொஞ்சம் கவனமா இருக்கணும்...”

“நீங்கதான் அழகுநிலா வோட கைபேசியையும் எடுக்க வேணாம்னு சொல்லிட் டிங்க...”

“இல்ல... அதுல பெரிசா எதுவும் இல்லை. நமக்கு பாதகமானதைவிட சாதகனமானது தான் இருக்கு...”

“சரி... எனக்கு தர வேண்டியதை எப்போ செட்டில் பண்ண போறீங்க... என்னால ரொம்ப நான்காத்திருக்கமுடியாது. இதுல ஏதாவது வில்லங்கம் வந்தா அவ்வளவு தான்... “எப்படியும் இன்னும் ஒரு மாதம் சரி நீ காத்திருக்கணும் அவசரப்பட்டா ஆபத்துல மாட்டிக்கணும்...”

அவர்கள் – மெதுவாக பேசிக்கொண்டி ருந்த வேளையில் திடீரென்று அவர் வந்து நின்றார். அவர் அழகுபாண்டியன் – அவரு டன் நான்கைந்து பொலிஸ்காரர்களும் நின் றிருந்தனர்.

மறுநாள் காலை மணி ஒன்பது. அந்த காவல் நிலையத்தில் – இன்ஸ்பெக்டர் அழகு பாண்டியன் இருக்கையில் அமர்ந்தி ருக்க எதிரே மேசைக்கு பக்கத்தில் அவர்கள் கைகளில் விலங்குகளுடன் தலை குனிந்தி ருந்தனர். இன்ஸ்பெக்டர் கோபத்துடன் அவர் களின் ஒருவனை பார்த்தார்.

“நீ அழகுநிலாவை பலவந்தப் படுத்த பலமுறை முயற்சித்ததாகவும் தனக்கு ஏதாவது நடந்தால் அதற்கு நீதான் காரண மாக இருப்பாய் என்று அழகுநிலா தன்கைப் பட கடிதம் எழுதி இந்த கொப்பியில் வைத் திருக்கிறாள் இது தான் உன்னை காட்டிக் கொடுத்தது. இப்போ சொல்லு... எதுக்காக அவளை நாசப்படுத்தி கொலை செஞ்சே... இவன் எப்போது உன்னோட கூட்டுச் சேர்ந் தான்...?

தலை குனிந்திருந்த மதிமாறன் சோர்வு டன் அவரைப் பார்த்தான்.

“அழகு நிலாவை சின்னவயசுல இருந்து நான்தான் தூக்கி வளர்த்தேன். அவமேல ஆரம்பத்துல அன்பு, பாசம் மட்டும் தான் இருந்தது. ஆனா அவ பருவமங்கையா பூத்து குலுங்கியப்போது எனக்கு அவமேலே காதல் ஏற்பட்டுச்சி. சாதாரணமான காதல் இல்லை. வெறிப்பிடிச்ச காதல். அவளுக்கு வேண்டியதை பார்த்துப் பார்த்து செஞ்சேன். “மாமா.... மாமா... ன்னு என்னையே சுற்றி சுற்றி வந்தவ திடீர்ன்னு ஒருநாள் தான் கலைமணியை காதலிப்பதாகவும் கல்யா ணம்னு நடந்தா அது அவனோடத்தான்னு சொன்னப் போது நான் ஆடிப் போயிட்டேன். கலைமணியை எனக்கு நல்லா தெரியும். அழகு நிலாவுக்கு ஆயுள் காப்புறுதி பத்து லட்சத்துக்கு போட்டதோட நொமினியாக என் பெயரை அவன்தான் போட்டான். அழகு நிலா எந்த விதத்திலாவது அகால மரணம் அடைஞ்சா நொமினிக்கு மூன்று மடங்கு பணம் கிடைக்கும். அவளே எனக்கு கிடைக் கமாட்டாள்ன்னுறப்ப அந்தப் பணமாவது எனக்கு கிடைக்கட்டும்னு நான் நினைச்சேன் அவன் கலைமணியின் நண்பன் பார்த்தி பனை பிடித்தேன். கலை மணிகிட்ட ஐந்து லட்சம் கேட்கசொன்னேடன். அவன் கிட்ட அவ்வளவு பணம் இருக்காது. அதுனால நிச்சயமா அழகு நிலாக்கிட்ட வாங்கித் தரு வான்னு கணக்குப் போட்டேன். திட்டம் வெற்றியளிச்சதும் பணத்தை பங்குப்போட் டுக்கிட்டோம். அடுத்தது அவளோட முப்பது லட்சம் ஆயுள் காப்புறுதிப் பணம். அதுக்கு ஒரு திட்டம் தீட்டினேன். அழகு நிலாவை நாசம் பண்ணி தூக்கில் போடுறது. கொலை – அகால மரணம் – காரணம் கற்பழிப்பு மூச்சுத்திணறல் என்று பிரேத பரிசோதனை வரவேண்டும். அப்போதுதான் அந்தப்பணம் கைக்கு கிடைக்கும். அவளுக்கு பலவந்த மாக போதையேற்றி நானும் பார்த்திபனும் அடுத்தடுத்து அனுபவித்தோம். பார்த்தியின் தான் கழுத்தை நெறித்தான். அடையாளங் கள் இல்லாத படி பார்த்துக் கொண்டோம். சாட்சிகளும் இல்லை. பழி கலைமணியின் தலையில் விழும் என்றுதான் திட்டம்போட் டோம். ஆனால் அவன் கண்டிக்கு காலையி லயே போன விஷயம் தெரியாது. அதோடு அவள் இப்படி ஒரு கடிதத்தை எழுதி வைத் திருப்பானென்றுநான் எதிர்பார்க்கவும் இல்லை. ஏற்கனவே போதை பொருளுக்கு அடிமையான எனக்கு அழகு நிலா கிடைக்க மாட்டாளென்று உறுதியானதுமே அவளை கொல்வதுடன் அவளிடமுள்ள பணத்தை யும் கையகப்படுத்துவதற்காகத்தான் இப்படி செஞ்சேன். ஆனா... ஆனா விதி வேறுமாதிரி கணக்கு போட்டிருச்சி...”

அழகு பாண்டியன் – கேலியுடன் அவனைப் பார்த்தார். “முட்டாள்... நீ சொன்ன வாக்கு மூலம் மிக சிறப்பாக பதிவாயிடுச்சி.... ஆனா – அழகு நிலா கடிதம் எதுவும் எழுதி வைக் கவில்லை. அவள் வரைந்த ஓவியம்தான் உன்னை சிக்கக வச்சது. அழகுநிலா... கலை மணியை மணம் முடிக்க போறதா எப்போது சொன்னாளோ அன்றிலிரிந்து நீ அவளுக்கு நெருக்குதல் குடுத்திருக்கே... பார்த்திபன் மூலமா பணம் வாங்க வச்சி அழகு நிலாவுக் கும் கலைமணிக்கும் பகையை ஏற்படுத்த முயற்சி செஞ்சே.

எனக்கும் ஆரம்பத்துல கலைமணி மேலே சந்தேகம் இருந்திச்சி. அவன் கண் டிக்கு போனதா சொன்னப்போ ஆள் வச்சி செஞ்சிருக்கலாமோன்னுற கோணத்துல யும் விசாரிச்சிப் பார்த்தேன். ஆனா அழக நிலாக்கிட்ட வாங்கின பணத்தை எப்படியா வது செட்டில் பண்ணுறதுக்காக கண்டிக்கு போய் கையோட பணம் கொண்டு வந்ததை என்கிட்ட காட்டினப் போதும் ஏற்கனவே அழ குநிலா தீட்டிய அந்த கண்கள் கலைமணிக்கு பொருந்துதான்னு நோட்ட மிட்டேன். இல்லை பொருந்தலை.

ஆனா நான் விசாரணைக்காக உன்னோட வீட்டுக்கு வந்தப்ப அந்த கண்களை பார்த் திருக்கேன். நல்லா யோசிச்சிப் பார்த்தப்ப உன்னோட ஞாபகம் வந்தது. தூண்டில் போட்டு பிடிச்சிட்டேன்....”

இன்ஸ்பெக்டர் அழகுபாண்டியன் வெற்றிப் புன்னகையுடன் அவனைப் பார்க்க அந்த கண்கள் பயபீதியுடன் மூடிக்கொண்டன. வெளியே தூறலாக பெய்துக் கொண்டிருந்த மழை திடீரென்று கொட்டத் தொடங்கியது.

(யாவும் கற்பனை)

பாலா சங்குப்பிள்ளை ...✍

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 08

01	02	03		04	05	06	07
08			09		10		
11						12	
			13		14		
15		16			17	18	
				19		20	21
22			23			24	
		25					

திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி **கையொப்பம்**

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :08

இடமிருந்து வலம்

(01) பாராட்டு அல்லது கௌரவப்படுத்தும் வகையில் வழங்கப்படுவது.
(04) வயலும் வயல்சார்ந்த இடமும்.
(08) இரத்தல்.
(10) உடலின் உள்ளுறுப்புகளில் ஒன்று.
(11) சந்திரன் (குழம்பியுள்ளது)
(12) பெருவிருட்சம் (திரும்பியுள்ளது)
(13) அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நீராகாரம்.
(15) மொட்டு. (திரும்பியுள்ளது)
(17) பாரம்
(20) பெருவிருப்பு
(22) ஒருவிதமான தாமத உணர்வு.
(24) தானிய வகைகளுள் ஒன்று.
(25) பெரும்பாலான பக்கம் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதி.

மேலிருந்து கீழ்

(01) நோய்.
(02) தமிழ் இலக்கிய நூல்களில் காணப்படும் செய்யுள் கூறுபாடு அல்லது நூற்பிரிவு. (குழம்பியுள்ளது)
(03) தூசு அல்லது புழுதி.
(05) ஆசான் மேல்நோக்கிப் பார்க்கிறார்.
(06) பலாப்பழச் சுளையை மூடியிருக்கும் பகுதி.
(07) ஒருவகை மலர். (குழம்பியுள்ளது)
(09) உடம்பு (குழம்பியுள்ளது)
(14) குழந்தை.
(15) தூய்மை.
(16) ஆணவம், கர்வம். (குழம்பியுள்ளது)
(18) நிசப்தம். (குழம்பியுள்ளது)
(19) வெட்கம். (குழம்பியுள்ளது)
(21) நறுமணம். (குழம்பியுள்ளது)
(23) ஆடு, எருமை போன்றவற்றின் ஆண் இனம்.

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 07

விடைகள்

இடமிருந்து வலம்

01. சுதந்திரம்	06. சகா	07. ருசி
08. சரி	09. தாரம்	11. மதியம்
13. ரதம்	14. கானகம்	15. கம்பன்
17. சரம்	18. பக்தன்	20. பனை
22. நடுவானம்	25. பாசி	26. வாகை
27. திரி		

மேலிருந்து கீழ்

01. சகாதாரம்	02. தசரதன்	03. திரு
04. சிரமம்	05. பரிகாசம்	08. சயனம்
10. கம்பம்	12. தினகரன்	16. படுக்கை
19. வாதம்	20. பசி	21. பானை
23. நரி	24. வாதி	

✦✦✦

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 06

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு

ப. மகேந்திரதாசன்,
வசந்தம், சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். .

இரண்டாம் பரிசு

எஸ். சஞ்ஜனா,
735, நடுவில்தம்பி வீதி,
வந்தாறுமூலை.

மூன்றாம் பரிசு

எம்.எஸ்.எப். சபீஹா,
இல. 122 மீகாஹமுல்ல,
அட்டுலுகம, பண்டாரகம.

பாராட்டு பெறுவோர்

1. கனகசபை நாகேந்திரன்,
நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

2. அய்ஷா அப்துல்லாஹ்,
மிகிந்து மாவத்தை,
தெஹிவளை.

3. எம். அப்ஸால் அஹமட்,
மங்கெதர,
துல்ஹிரிய.

4. எஸ். சத்தியவதனி,
பிரதான வீதி,
பாலமுனை,
மண்டூர்.

5. எபிபானா றூபி,
பாத்திமா மாவத்தை,
மாத்தறை.

6. எஸ். துஷாந்த்,
பிரதான மொனராகலை வீதி,
பசறை.

✦✦✦

கசப்பு 1

நம்மைப் போலவே பெரும்பான்மைச் சமூகக் கலாபிமானிகளும் நல்ல இசைப் பிரியர்களே.

இருந்தாலும் இப்பொழுது அதிசய மாறுதல் இசையைக் கொடுத்தும் ஒதுக்கி வைத்து விட்டு நாடகம் எங்கே அரங்கேறு கிறது என்றுநாளேட்டு விளம்பரங்களைத் தேடுகிறார்கள் .

நாம் அந்தத் துறையைச் சாகடித்து விட்டு இசையில் மூழ்கி இருக்கும் பொழுது, அவர்கள், டவர் மண்டபம், எல்பின்ஸ்டன் அரங்கு, லயனல் வெண்ட் தியேட்டர், பொரளை புஞ்சி தியேட்டர் என்று சனி, ஞாயிறு பொழுதுகளில மட்டுமன்றி கிழமை நாட்களிலும் ஓடுகிறார்கள்.

கொழும்புக்கு வெளியே உள்ள ரசிகர்கள் நேரகாலத்தோடு வீடு போய்ச் சேர 03.30 க்கு முதல் காட்சி வைக்கிறார்கள்.

ஒன்று செய்யலாம். நாம் இசை நிகழ்ச்

சிகளை மட்டும் தொய்வில்லாமல் நடத் துகிறோமே அவற்றில் அரை மணி நேரம் அல்லது கால்மணி நேரம் குறுநாடக மொன்றை அரங்கேற்றி நாடகத்துறையை உயிர்பெறச் செய்தால் குறைந்தா போய்விடு வோம்?

இங்கே பிரசுரமாகி இருக்கும் நாடக விளம் பரம் இன்று 30ல் பொரளை புஞ்சி தியேட் டரில் இரு காட்சிகளாக அரங்கேறும் நாட கத்தை அறிமுகப்படுத்துகிறது.

ஹூம்! பலதடவை பெருமூச்சுகள் தான் விடலாம்.

கசப்பு 2

இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை வரப்போகிற மார்ச் மாத மகளிர் தினத்தை ஒட்டி நடத்தத் திட்டமிட் டுள்ள மும்மொழி கவிதை, கதைப்போட்டி பற்றிய சில கசப்புகளை வழங்கியிருந்தேன்.

என் கசப்பில் முஸ்லிம் சேவைத் தயாரிப் பாளர் ஒருவர் முகநூலிலும் ஒரேயொரு தமிழ் ஏட்டின் ஞாயிறு அநுபந்தத்திலும் மட்டும் அறிவிப்பு இருந்தது என்றும் வழங்கி, போட்டி ஆண் பெண் இருபா லாருக்குமா என்ற தெளிவில்லையே பரிசு விவரங்களும் அறிவிக்கப்படவில்லையே எனவும் கசந்திருந்தேன்.

இப்பொழுது இன்று அபிமானிகள் சுவைக்கும் கசப்பையும் இனிப்பையும் கடந்த வியாழன் தயாரித்துக் கொண்டிருந்த பொழுது இரு தமிழ் நாளேடுகளில் மட்டும் முறையே 25 லும் 27லிலும் போட்டி விவரங் கள். அப்பாடா!

ஆனால்.... ஆனால்.... 15 வயதிற்கு மேற் பட்ட பெண்களுக்கு மட்டுமாம் ஆண்கள் எட்டி கூட பார்க்கக் கூடாதாம்! ஆனாலும் அதிலும் ஒரு நெருடல்

வெற்றிபெறுவோர்களுக்கான பரிசு விவ ரங்கள் அறிவிக்கப்படவில்லை. இப்படியும் யாரும் போட்டி நடத்துவார்களா? அதுவும் ஒரு பொறுப்பான இடத்தினர்?

கசப்பு 3

இந்தக் கிழமையும், 'அபின்' என்ற போதைப் பொருளை கள்ளத்தனமாகக் கடத்தியும் நல்லதனமாக ஏற்றுமதி செய்தும் அதன் வருவாயில் ஆட்சி நடத்த முயலும் **ஆப்கானிஸ்தான்** பற்றிய திடுக்கிடும் தகவல்.

கடந்த வியாழன் உலகப் புகழ்பெற்ற தொலைக்காட்சி **"அல்ஜஸீரா"** காலைச் செய்தி ஒளிபரப்பைப் பார்த்துக்கொண்டி ருந்த பொழுது

வாசித்தவர், ஐ.நா. சபைச் செயல் அதிபர் 'இன்றைய ஆப்கன் ஒரு **Frozen Hell** என வர் ணித்து அவசரமான அறிக்கை ஒன்றை விடுத் திருப்பதை விவரித்தார்.

இந்த ஆங்கில வார்த்தையை என் தனிவழி தமிழில் வழங்குவதென்றால் **'உறை நிலையில் ஒரு நரகம்'** என்றே அளிப்பேன்.

நிலைமையைப் புரிந்துகொள்க.

இனிப்பு1

இன்றைய இலங்கை மலையகப் பரம்ப ரைகளின் பாட்டன் பாட்டி, அப்பா அம்மா என மூன்று தலைமுறை 'பாவப்பட்டவர்கள்' பாலும் தேனும் பருகப் பயணித்து வந்த பிர சித்திபெற்ற பாலத்தின் இன்றை அழகிய தோற்றம். 104 அகவைகளைக் கடந்து பாம்பன் தூக்குப் பாலம் என்ற கிராமிய வழக்குச் சொல்லுடன் கடலில் கண் சிமிட் டுகிறது. எந்தக் கடல்? புனித தீர்த்தமாட யாத்ரீகர்கள் சென்றடையும் ராமேஸ்வரக் கடல் சேது சமுத்திரம் சற்று உன்னிப்பாகக் கவனித்தால் தொடருந்து (ரயில்) ஒன்று சென்றுகொண்டிருப்பது புரியும். அது பல நிமிடங்களுக்குக் கடலை ஊடறுத் துப் போகும். பயணிகளின் உற்சாகம் கரை புரண்டு ஓடும். அந்த அனுபவம் இந்தப் பேனைக்கும் ஏற்பட்டிருக்கிறது. தற்சம யம் 430 கோடி ரூபாயில் இந்திய அரசு இன்னுமின்னும் அழகுபடுத்த முனைந் துள்ளது. தமிழகத்தின் அழகு அப்பொ ழுது கூடும்.

பட உதவி தினத்தந்தி

நன்றி

இனிப்பு 2

கடந்த வாரத்தில் வழங்கப்பட்ட **'ஜெய்பீம்'** இனிப்பில் இன்னும் கொஞ்சம் மிச்ச சொச்சம் இருக்கிறது.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முதல் தடவையாக உலகப் புகழ் ஆஸ்கார் விருது பெறக்கூடிய வாய்ப்புகள் கூடி வந்திருக்கும் நேரத்தில் வேறு பல வெளிநாட்டுத் திரைப்பட விழாக்களி லும் முதலிடம்!

அந்த வகையில் நொய்டா எனும் இடத் தில் நடந்த திரைப்பட விழாவிற்குள் நுழைந்த ஜெய்பீம் மூன்று விருதுகளை சுவீகரித்துள்ளது.

சிறந்த திரைப்படம்
சிறந்த நடிகர்
சிறந்த நடிகை

சிறந்த திரைப்பட விருது என்பது எல் லோரும் எதிர்பார்ப்பது தான். அதேபோல் சிறந்த **நடிகராக சூர்யா** தேர்வாகாமல் போவாரா?

சிறந்த நடிகை தேர்வே யாரும்எ திர்பார்க்காதது. **லிஜி மோல் ஜோஸ்** என்னும் பெயர் உடையவர் பெற்றிருக் கிறார். பெயரை உச்சரிக்க தமிழ்ப்பட ரசிக சிகாமணிகள் தடுமாற்றம். ஏன் நம் பேனையும் கூடத்தான்

நடிக நடிகையருக்குப் பாலாபிஷே கங்கள், பூஜைகள், சிலைகள் வைத்துப் பழகிய அவர்களுக்கு எந்த சினிமா கவர்ச்சிப் பெயர்களையும் வைக்காமல் சொந்தப் பெயரிலேயெ வந்து படத்தில் பல தடவை மாமா வோவ் என்று அலறல் போட்டு பரிதாபத்தைப் பெற்றவர் பெற வேண்டிய விருதுதான் என்கிறார்கள்.

ஜெய்பீம் அவருக்கு 2 வது படம். முத லாவது சிவப்பு பச்சை மஞ்சள் இதைப் பார்த்தவர்கள் வெகு சிலரே கேரள (மலையாள) இறக்குமதி. நவநாகரிகக் குடும்பப் பெண். ஒரு பட்டதாரியும் கூட, திருமணமும் ஆகிவிட்டது. தமிழ்ப்பட வாலாக்கள் ஜீரணிக்கக் கஷ்டப்படுகிற தக வல்கள் இவை.

எவ்வாறாயினும் நம் அபிமானிகளுக்கு அவரது அழகான மேக்கப் இல்லை. பட மொன்றை அளித்து மகிழ்கிறேன். ஆனால் படத்தில் இந்த உருவம் இல்லை. முழுக்க முழுக்க கறுப்பழகி. காட்டுப் புறத்தில் அழுக்குச் சேலையுடன் அல்லல் படுகிற ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்.

மேலும் இனிப்பு வழங்க இடம் போதாதது நிறுத்துகி றேன்.

13 காதலில் விழுந்தால் வராதாமே பசி கனவுகளில் மிதப்பது தானாமே ருசி!

ஓட்டலுக்குள் வந்த மதுமிதா, விழிகளை,

வெளிச்ச வீட்டு விளக்கைப் போல், அப்படியும் இப்படியும்,

சுழல விட்டாள்.

ம்...

அவள் விழிகள் எதிர்பார்த்தது கிடைத்து விட்டது.

பிரசன்னா அமர்ந்திருந்த மேசையை நோக்கி,

அன்ன நடையில் நடந்தாள்.

"குட் மோனிங் பிரசன்னா?"

மகிழ்ச்சியுடன் சொல்லிய படியே,

எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"ஓ.....வெரி குட் மோனிங் மதுமிதா... எப்படி இருக்கீங்க...?" அப்போதுதான் அவளைப்பார்த்தது போல் அவனும் பாசாங்கு செய்தான்.

"எப்போதும் போலவே நல்லத் தான் இருக்கிறேன்... ம்... அதில்ல.... கடந்த ரெண்டு மூனுநாளா... உங்களைய இந்தப் பக்கமே காணோமே...!"

"ஓ... அப்படீன்னா அவள் எதிர் பார்த்து காத்திருந்திருக்கிறாள் என்று அவன் ஆழ் மனதுக்குப் புரிந்தது.

ஆனாலும்,

அதைப்பற்றி எதுவும் அவன் அவ ளிடம் எதுவும் கேட்கவில்லை.

அப்படி அவன் செய்ததற்கும் ஒரு காரணமும் இருந்தது.

அது,

அவள் மனதின் பிரதிபலிப்பை அறிந்து கொள்ளத்தான்.

"அடடா அப்படீன்னா நான் வரும் வரை நீங்க எனக்காக காத்திருந் திருக்கீறீங்க!" என்று பிரசன்னா சொல்ல நினைத்தாலும்.

அது

தனது பதவிக்கும்,

கௌரவத்துக்கும் இழுக்காக அமைந்துவிடுமே என்றும் தோன்றி யதினால்.

மௌனமாக இருந்துவிட்டான். "கடந்த இரண்டு மூன்று நாட்களாக நான் அவுட்டேஷன் போயிருந் தேன்.... அதுதான் வரமுடியாமல் போய் விட்டது!"

பச்சைப் பொய்யை பிரசன்னா! நச்சுன்னு சொன்னான்.

"ஓ... அப்போ இப்படி அடிக்கடி வெளியூர் போவீங்களா...?"

"இல்ல.... இல்ல அடிக்கடி போக மாட்டேன்... எப்போவாவதுதான் போவேன்... பெரும்பாலும் ஓபிசில் தான் இருப்பேன்...!" "நீங்கள் வேலை செய்யும் கம்பெனியின் பெயர் என்னவாம்?"

"டபள் சீரோ இம்போடர்ஸ் கம்பெனி!"

"அங்கே என்ன இம்போட் பண்ணு றீங்க?"

"டபள் சீரோ பெட்றீன்னு ஒரு பெட்றி இருக்கிறது உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ நல்லாத் தெரியுமே – என் காருக்கும் அந்த பெட்றியைத்தான் போட்டிருக்கிறேன்.

"என்ன! ஓ... அப்படீன்னா மதுமி தாவும் எங்கள் கஸ்டமர்ன்னு சொல் லுங்க...!"

"ம்... பெட்றி இருந்தால் உங்கள் கடையில் டயரும் இருக்குமே...?"

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"இல்ல... பெட்றி இருக்கிற நெறைய கடைகள்ள டயரும் இருப் பதை பார்த்திருக்கிறேன்...!"

"ஆமாம்... நீங்க நினைப்பது சரிதான் மதுமிதா... டபள் சீரோ என்ற ஒரு டயரையும் நாங்கள் இப்போ.... செய்கிறோம்... உங்களுக்கு நல்ல பிஸினஸ் நொலேஜ் இருக்குது...!"

"எங்க அப்பாவும் ஒரு பிஸ்னஸ் காரர்தான். அவருக்கு புறக்கோட்டை யில் நான்கு புடவை கடைகள் இருக் கிறது!"

"அடடா அப்படீன்னா இப்போது என்முன்னால் அமர்ந்திருப்பது ஒரு கோடீஸ்வரரின் மகள்... ம்...!"

"ஏன் உங்களுக்கு பயமாக இருக் கிறதா பிரசன்னா...?'

"ஐயையோ... நான் ஏன் பயப்படப் போறேன்... எனக்கு பெருமையாகத் தான் இருக்கிறது... ம்... அதில்ல மது உங்களுக்கு வேறு சகோதர சகோத ரிகள் இருக்காங்களா...?"

"இல்லை... பிரசன்னா.. நான் தனிக்காட்டு ராணி. அதனால் அம்மா வும் அப்பாவும் என்மீது உயிரையே வைத்திருக்கிறாங்க...!"

"இவ்வளவு பெரிய கோடீஸ்வர ரின் மகளாக இருந்து கொண்டு ஏன் இப்படி ஒரு பியூட்டி பாளரை நடத்து கிறீர்கள்?"

"அதை எனது பொழுதுபோக்கா கத்தான் செய்கிறேன்..அதுவுமில்லா மல் படித்த விஷயத்தை பயனுள்ள தாக்க வேண்டாமா?"

"அழகியற்கலை பற்றி ஏதாவது கோஸ் செய்தீங்களா?"

"ஆமாம்... பிரசன்னா மூன்று வரு டங்களாக ஒருகோஸ் செய்தேன்!"

"ஓ... மகிழ்ச்சி, வாழ்த்துக்கள். உங்க வீடு எங்க இருக்கு...?"

"ஏன் கேக்குறீங்க வாரதுக்கா?" அனாயாசமாகக் கேட்டாள் மதுமிதா.

பழகிய சில நேரத்திலேயே அவ னுடன் மனம் விட்டுப் பேசினாள். சில சொந்த விஷயங்களைக் கூட பகிர்ந்து கொண்டாள். "என்ன பிர சன்னா யோசிக்கிறீங்க...?"

"இல்ல இந்த மாதிரியான கோடீஸ்வரர்களின் வீடுகளுக்கு எங்களால் வர முடியாதல்லவா... அதனால்தான் கொஞ்சம் யோசித் தேன்!"

"அப்பா கோடீஸ்வரராக இருந் தாலும் நான் சாதாரண ஒரு பெண் தான் பிரசன்னா..... அதனால் என் னைக்காவது நீங்க எங்க வீட்டுக்கு வந்தா உங்களுக்கும் செங்கம்பள வரவேற்பிருக்கும்!"

"ம்... நல்லதொரு இதயத்தின் அறி முகம் கிடைத்தற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன் மதுமிதா....!'

"என்னைப் பற்றிய உங்கள் கணிப் பிற்கு மகிழ்ச்சி பிரசன்னா... ம்... அது வரை நீங்கதான் என்னைப் பத்தி அடுக்கடுக்கா கேள்விகளைக் கேட் டீங்க... ஆனா உங்கள பத்தி நான் இதுவரையில் எதுவும் கேக்கவே இல்லையே...!"

"ஓ... அப்படியா... சரி... என்னைப் பற்றி என்ன தெரிஞ்சி கொள்ள னும்...?"

"உங்கள் குடும்பத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்...!"

என்னுடைய அம்மா, அப்பா இரண்டுபேரும் இருக்கிறாங்க... அம்மாவின் ஊர் கண்டி. அப்பா மாத்தளை. நாங்கள் இப்போது தங்கி இருப்பது வத்தளையில்.

எனக்கு இரண்டு தங்கைகள், இருவரும் படித்துக் கொண்டிருக் கிறார்கள். இப்போதைக்கு இந்த விபரம் போதுமென்று நினைக்கி றேன்...?"

"ஐயோ... தாராளமாகப் போதும் நாங்க ரொம்ப நேரமா பேசிக் கொண்டு இருந்து விட்டோம் இல்லையா பிரசன்னா?

"ஆமாம்... கிட்டத்தட்ட ஒரு மணித் தியாலமாவது இருக்கும்!"

"ம்... சரி அப்போ புறப்பட லாமா...?'

"நான் ரெடி... இதோ எனது விஸிட் டிங்காட்டை வைத்துக் கொள்ளுங் கள்!"

"ஆகட்டும் நேரம் கிடைக்கும் போது நான் உங்களுக்கு போன் செய்கிறேன்... அப்போ நான் வாறேன், பை பிரசன்னா!"

"பை... மதுமிதா!"

இருவரும் தங்கள் வாகனத்தில் கிளம்பினார்கள்.

இருவருடைய மனதிற்குள்ளும், மீண்டும் சந்திக்க வேண்டும் என்ற நினைப்புதான் புரையோடி விட்டிருந் தது. ஆனாலும்,

இருவருமே அதை வெளிப்படை யாக காட்டிக் கொள்ளவில்லை.

எல்லாவற்றையும்,

காலத்தின் கையில் ஒப்படைத் துவிட்டு தனது காரை விரைவாக ஓட்டிச் சென்றான் பிரசன்னா.

★★★

தனது அறையில் அமர்ந்திருந்த துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்ப ராஜ்,

தீபன் –தீபிகா கொலை வழக்கில் இதுவரையில் கிடைத்த தகவல்களை வைத்து ஆராய்ந்து கொண்டிருந் தார். அதை ஆராய்ந்து பார்த்த போதுதான்,

அதில் விடுபட்டிருந்த ஒரு காரணம் அவருக்குப் புரிந்தது.

அது,

பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில், தீபன்,

வேறு எந்த பெண்ணுடனாவது காதல் தொடர்பில் இருந்தானா?

அதேபோல்,

தீபிகா கிராமத்து பாடசாலையில் படித்த காலத்தில்,

வேறு எவனுடனாவது காதல் தொடர்பில் இருந்தாளா?

என்பதை,

அவர் இதுவரையில் ஆராய்ந்து பார்க்கவே இல்லை!

இந்த எண்ணம் வந்தது,

விரைந்து செயலில் இறங்கினார் துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்ப ராஜ். அடுத்தவாரம்,

சிக்குவானா கொலைகாரன்?

(இளமை தொடரும்)

நல்லதை சொல்கிறோம்

இளைஞர் இயக்கங்களில் தலைமைத்துவம்

இளைஞர் தலைமைத்துவத்தில் மிக முக்கிய அங்கமாக திகழ்வன இளைஞர் இயக்கங்களாகும். எதிர்காலத்துக்கான பொருத்தமான தலைவர்களை வார்த்தெடுக்கும் பாசறைகளாக இவ் இளைஞர் இயக்கங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். தலைமைத்துவ பயிற்சிகளை பெறக்கூடிய மிக முக்கியமான அமைப்பாக இளைஞர் இயக்கங்களே இருக்க வேண்டும்.

இத்தகைய வாலிப இயக்கங்களின் ஆரம்ப மட்ட அங்கத்தவர்களிலி ருந்து தகுதியானவர்களை இனங்கண்டு நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக தேர்வு செய்து, அவர்களிலிருந்து தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றவர்களை தகுதி, ஆற்றல், அனுபவம், மூப்பு, பொருத்தம் என்பவற்றை முறையாக கவனித்து தெரிவு செய்தல் வேண்டும். அத்துடன் இத்தகைய பதவிகளில் குறிப்பிட்ட ஒருசிலரே நீண்டகாலம் நீடிப்பதற்கு இடமளிக்காது, மற்றைய இளைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பதவிகள் வழங்கி பயிற்சியளிக்கும் விதத்தில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

வை.எம்.பி.ஏ, வை.எம்.சி.ஏ, வை.எம்.எச்.ஏ, வை.எம்.எம்.ஏ போன்ற வாலிபர்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ள பௌத்த, கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் வாலிப இயக்கங்களை இன்று நோக்கும் போதும கூட அவற்றில் பதவிகளை வகிப்போர் பெரும்பாலும் வாலிபர்களாக அன்றி முப்பத்தைந்து வயதுகளையும் தாண்டிய மூத்தவர்களாக இருப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது. சாதி, சமய, இன, மொழி, பால் வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லா இளைஞர் அமைப்புகளிலும் இத்தகைய நிலையே காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இந்த விடயத்தில், உடனடி மாற்றம் ஏற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்த நிலை மாற்றப்பட்டு இளைஞர் இயக்கங்களில்பதவிகளை வகித்த அல்லது வகிக்கும் மூத்தவர்கள்,வாலிபர்களுக்கு வாய்ப்பளித்து,அவ்வியக்கங்களின் காப்பாளர்களாக, ஆலோசனை சபை உறுப்பினர்களாக, நம்பிக்கையாளர்களாக இருந்து கொண்டு, இளைஞர்களை சரியான தலைமைத்துவத்தினை நோக்கி முறையாக, வழிகாட்ட வேண்டும்.

அதேவேளை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் எண்ணற்ற தியாகங்கள் செய்து, இத்தகைய இளைஞர் இயக்கங்களை உருவாக்கி வளர்த்தவர்கள் அவற்றை செயலிழக்க செய்து விடாமல், இளைஞர்களுக்கு அதிகூடிய முக்கியத்துவமும் வாய்ப்பும் வழங்கும் வகையில் திட்டமிட்டு செயல்பட வேண்டியது அவர்களது தார்மீக கடமையாகும். மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்துக்காகவே உருவாக்கப்பட்டுள்ள இளைஞர் அமைப்புகள், இளைஞர்கள் நாட்டின் நாளைய நல்ல தலைவர்களாக உருவாகும் மத்திய நிலையங்களாக மாறட்டும்.

நெஞ்சுக்கு நீதி

வாழ்ந்தால் நல்லவன் எனப்பெயர் வாங்கு
வையகம் மகிழ்ந்திடவே எப்போதும் ஏங்கு
வீழ்ந்தால் வல்லவன் என்றே எழுந்தியங்கு
வியந்து வாழ்த்தவே நன்மைக்காய் முழங்கு

பிரிந்தார் பெருமை

கலாபூசணம் எம்.வை.எம். மீஆத்

மாவனல்ல, ஹெம்மாத்தகமையை சேர்ந்த பிரபல தமிழ், ஆங்கில எழுத்தாளரும், ஆங்கில ஆசிரியருமான கலாபூசணம் எம்.வை.எம். மீஆத் கடந்த ஜனவரி 9ம் திகதி (2022.01.09) காலமானார்.

1940.06.24ல் பிறந்த இவர், 1953 ஆம் ஆண்டில் தினகரன் பத்திரிகையின் பாலர் கழகத்தில் கவிதை ஒன்றை எழுதியதன் மூலம் எழுத்துப் பயணத்தை ஆரம்பித்துள்ளார். இவர் இடைவிடாது இறக்கும் வரை எழுதிக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அரசாங்க ஆங்கில ஆசிரியராக 33 வருடங்கள் கற்பித்த இவர் 1991ல் ஓய்வு பெற்று 1992லிருந்து மாலைத்தீவிலும் வெற்றிகரமாக கற்பித்தலை மேற்கொண்டிருந்தார்.

தமிழில் 200க்கும் மேற்பட்ட கவிதைகளையும், ஆங்கிலத்தில் 150க்கும் மேற்பட்ட கவிதைகளையும், 300க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில கட்டுரைகளையும், 16 சிறுகதைகளையும் கலாபூசணம் மீஆத் எழுதியுள்ளார். 'கலைமலர்', 'எடுகேசனல் டைஜஸ்ட்' (Educational Digest) எனும் இதழ்களை சொந்தமாக வெளியிட்டு இதழாசிரியராகவும், வெளியீட்டாளராகவும் தனியிடம் வகித்துள்ளார்.

குழந்தைகளுக்கான கவிதைகளை யாப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்த கலாபூசணம் மீஆத், இலங்கையில் பிரபலமான பத்திரிகைகள் டைய்லி நியூஸ், சண்டே ஒப்சோவர், தி ஐலண்ட், தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி உட்பட பல பத்திரிகையிலும் நிறைய எழுதி வந்துள்ளார். நபிபெருமானின் நல்லுரைகள்' எனும் கவிதை தொகுதி, மற்றும் இருவருடன் சேர்ந்து 'வாசமில்லா மலர் இது' எனும் சிறுகதைத் தொகுதி, உட்பட நூல்களை வெளியிட்டுள்ளார்.

சமூக சேவையில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்த இவரது சிறந்த பங்களிப்பாக 'அல் பலாஹ்' எனும் நூலகத்தின் உருவாக்கத்தை குறிப்பிட முடியும். அமெரிக்காவில் உள்ள ஓர் இலக்கிய கழகம் நடாத்திய போட்டியில் சிறந்த கவிஞர்களில் ஒருவராக இவர் தெரிவு செய்யப்பட்டமை இவரது ஆற்றலுக்கு சிறந்த சான்றாகும்.

1993இல் முஸ்லிம் சமய கலாசார அமைச்சினால் 'பத்ருல் உலூம்' பட்டமும், 1997இல் மலையக கலாசார அமைச்சினால் 'இலக்கிய செம்மல்' பட்டமும், 2004 இல் அரசாங்கத்தின் 'கலாபூசணம்' பட்டமும் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். எம்.வை.எம். மீஆத் அவர்களின் பிரிவு பொதுவாக இலக்கிய உலகுக்கும், குறிப்பாக சப்ரகமுவ மாகாணத்துக்கும் பாரிய இழப்பாகும்.

பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

பொத்துவில் அஸ்மினின் "இசை சங்கமம்"

இலங்கையின் பிரபல திரைப்பட பாடலாசிரியராக தனியிடம் பிடித்திருப்பவர் கவிஞர் பொத்துவில் அஸ்மின். இந்திய தமிழ் திரைப்படங்களில் இவரது பாடல்கள் இடம்பிடித்து, அதன்மூலம் இந்திய சினிமாவின் முக்கியஸ்தர்கள் பலரையும் கவர்ந்தவர். அவரது திறமைகளை புரிந்துகொண்ட சிலர், அண்மைக்காலத்தில் இலங்கையிலும் அவரின் ஆற்றல்களைப் பயன்படுத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

தெரண தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி, பல மில்லியன் பார்வையாளர்களை கவர்ந்து வெற்றி பெற்ற, நான்கு சிங்கள நாடகங்களில் இடம்பெற்ற பாடல்களை தமிழில் எழுதும் பணியை பொத்துவில் அஸ்மினிடம் ஒப்படைக்க, அவர் அதனை கனகச்சிதமாக, வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார். கேட்போர் நெஞ்சங்களை கவரும் வண்ணம், தமிழ்த் தேன் சொட்டும் வசனங்களில் அமைந்துள்ள பாடல் வரிகள் அவரது தனித்துவ ஆற்றலை பறைசாற்றுகின்றன.

"கலைகள் ஊடாக இன ஐக்கியத்தை ஏற்படுத்தி இலங்கை மண்ணை செழுமையாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் தெரண தொலைக்காட்சியின் பிரதித்தலைவரும் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளருமான லக்சிரிவிக்ரமகேயின் எண்ணக்கருவில் உருவான இவ்இசை சங்கமம் பாடல்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என இலங்கையின் அனைத்து இனங்களையும் சேர்ந்த கலைஞர்கள் பங்களிப்பு செய்துள்ளமை விசேடமாகும்.

பொத்துவில் அஸ்மின் பாடல்களை எழுத, நிமேஸ் குலசிங்க, சத்துரங்க டி சில்வா ஆகியோர் இசை வழங்க, கோகுலன் சாந்தன்(யாழ்ப்பாணம்), சுதர்சினி கோணேஸ்வரன் (திருகோணமலை), குகனேஸ்வரன் (பதுளை), சாதீர் அஹமட் (கொழும்பு), ரவி ரொயிஸ்ட்டர் (மாத்தறை) ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர்.

தெரண தொலைக்காட்சி பெரும் பொருட்செலவில், மிகச்சிறந்த காட்சியமைப்புகளுடன், உருவாக்கிய 'இசை சங்கமம்' பாடல்களின் வெளியீட்டு விழா, கொழும்பு சிட்டி சென்டரில் அமைந்துள்ள 'ஸ்கோப்' திரையரங்கில், இலங்கையின் பிரபல கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், கவிஞர்கள், இரசிகர்கள் பங்குபற்றுதலோடு வெகு சிறப்பாக நடைபெற்றது. தெரண தொலைக்காட்சியின் தலைவர் திலித் ஜெயவீர, பிரதித் தவிசாளர் லக்சிரிவிக்ரமகே, நிகழ்ச்சிப்பிரிவு பணிப்பாளர் சர்மிளா தர்மராசா இணைந்து இதனை வெளியிட்டுவைத்தனர்

நல்லதொரு முயற்சியைச் செய்துள்ள இவர்களைப் பாராட்டுவதோடு, பொத்துவில் அஸ்மின் மேலும், மேலும் முன்னேறிச் சென்று நாட்டுக்கு பெருமை சேர்க்க வாழ்த்துகிறோம்!

வாசித்ததில் வசீகரித்தது

புதுக்க விதைப்பது புதுக்கவிதை

'ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம்', 1992ல் வெளியிட்ட, வலம்புரி கவிதா வட்ட தலைவர் நஜ்முல் ஹுசைன் எழுதிய "பனித் தீ" கவிதைத் தொகுப்புக்கு பத்திரிகையுலக ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகம் ஜயா வழங்கிய ஆசிச்செய்தியிலிருந்து...

'பழைய விதைகளை ஒதுக்கிவிடாது புதுக்க விதைப்பது புதுக்கவிதை' என்பது எனது கருத்து. எப்படி? "செம்மை செறிந்த தமிழ் நாடு என்று சொல்லும் போது நமக்கு இன்பச்சுவை ஒன்று காதினிலே பாய்கின்றது" – இப்படி எழுதினால், அது வசனம். செந்தமிழ் நாடென்னும் போதினிலே – இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே – இப்படி எழுதினால், அது கவிதை. மரபுக் கவிதை என்று கூடச் சொல்லலாம். அப்போதும் ஒரு வழு உண்டு, பாயுது என்று எழுதக்கூடாது அது கொச்சை, பாய்கின்றது என்று எழுதினால்தான் அது செந்தமிழ் வழங்கும் இன்தமிழ் நாட்டுக்குப் பொருந்தும். செந்தமிழ் நாட்டில் 'பாயுது' என்ற கொடுந் தமிழ்ப் பிரயோகம் எப்படி அடுக்கும்?என்றாலும் பாரதி அப்படித்தான் எழுதிவிட்டான். அவன் மகா கவி. கவிதா – லைசன்ஸ் அவனுக்கு உண்டு. சரி இப்போது, இதே கருத்தைப் புதுக்கவிதையில் பார்ப்போம்.

உங்கள் காதுகள்
கற்கண்டைக் கடித்ததுண்டா?
இல்லையென்றால்.....
செந்தமிழ் நாடென்று
சொல்லிப் பாருங்கள்
கற்கண்டின் சுவை
நாவுக்கு மட்டுமல்ல
காதுக்கும் புரியும்!

இப்படி எழுதினால் அது புதுக்கவிதை ஆகிவிடும்! இதே போல மரபுக்கவிதையின் கருத்தை எல்லாம் புதுமை பொலிந்த புதுக்கவிதையாகப் புனைந்து விடலாம். தமிழ் நாட்டைப் பற்றிப் பாரதி பாடும் போது, வசனத்தில் இல்லாத ஒரு முரண்பாடு, ஓர் இயற்கை விரோதம் கவிதையில் வருகிறது.அது என்ன?

ஒருவன் வாயைத் திறந்து கொண்டு, கண்களை மூடிக் கொண்டு ஓய்வாகப் படுத்திருக்கிறான், அப்போது கிண்ணத்தில் தேனைக் கொண்டு வந்த மற்றொருவன் ஒரு மிடறை அவன் வாயில் விடுகிறான். படுத்திருந்தவன் 'ஆஹா இனிமை, இனிமை' என்று கூறிக் கொண்டு உற்சாகத்தோடு எழுந்திருக்கிறான். இது ஒரு காட்சி. தேனைக் கொண்டு வந்தவன், படுத்திருந்தவனுடைய காதிலே ஊற்றியிருந்தால் என்ன நடந்திருக்கும்? 'ஆ, ஊ, ஐயோ' என்று தான் துடித்திருப்பான். தேனின் சுவையை நாவு தான் அறியும். செவி அறியாது.

ஆனால் மேலே, தேனின் இனிமைச் சுவையை காது அனுபவித்ததாக பாரதி கூறுகிறான். இது இயற்கைக்கு விரோதமானதுதானே? எனினும் பாரதி அப்படித்தான் பாடியிருக்கிறான். இங்குதான் கவிதையின் உயர்வும், கவிஞனின் கற்பனையும் தூக்கி நிற்கின்றன. சாதாரணமாக பாரதி எப்படிப் பாடியிருக்க வேண்டும்?

நந்தமிழ் நாடென்றும் போதினிலே – இன்ப
யாழிசை பாயுது காதினிலே

என்று தான் பாடியிருக்க வேண்டும் அப்படிப் பாடினால் தான் இயற்கைக்கு உடன்பாடாக இருந்திருக்கும். ஆனால், நாவின் உணர்வைக் காதுக்கு ஏற்றிப் பாடியதில் தான் கவிதைச் சிறப்பு அமைந்திருக்கிறது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

நூற்றாண்டு விழாக்காணும் மல்வானை அல் முபாறக் தேசிய பாடசாலை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், களனி கல்வி வலயத்தில் மல்வானை மண் மீது கம்பீரமாய் வீற்றிருக்கும் அல் முபாறக் தேசிய பாடசாலையானது தனது நூற்றாண்டு கால நிறைவையொட்டி மாபெரும் அங்குரார்ப்பண நிகழ்வினை வெகு விமரிசையாக கடந்த 1ம் திகதி (2022/01/01) கொண்டாடியது. பாடசாலை அதிபர் திரு S.H.M. நயீம் தலைமையில் பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை நூற்றாண்டு விழாக்குழு என்பன இணைந்து இவ்விழாவினை பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்தன அதன் முதல் நிகழ்வாக சமயத் தலைவர்கள், ஊர் பள்ளிவாசல் மற்றும் தரீக்காக்களின் நிர்வாகிகளின் பங்குபற்றுதலுடன் பாடசாலையில் அதிகாலை தொடக்கம் சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து காலை 10.00 மணி முதல் நூற்றாண்டின் அங்குரார்ப்பண நிகழ்வின் பிரதான வைபவங்கள் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கௌரவ M.U.M. அலி சப்ரி கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பாடசாலையின் பழைய மாணவரும் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியுமான M.T.M. லபர், இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாடசாலையின் பழைய மாணவருமான காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பழைய மாணவர் சங்கத்தின் பிரதி தலைவரும் முன்னால் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியுமான M.M.A கபூர், நூற்றாண்டு அபிவிருத்திக் குழு தலைவர் A.R.M. லாபிர் மற்றும் அல் முஹ்ஸின் பவுண்டேஷன் ஸ்பாகர் M.M.A. இஸ்மாயில் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பு உரை நிகழ்த்தியதுடன் பழைய மாணவர் சங்கத்தின் அவுஸ்திரேலிய நியூஸிலாந்து பிரிவின் பிரதி தலைவரும் சர்வதேச வளவாளருமான இர்ஷாத் A. காதர் மெய்நிகர் (Virtual) ஊடாக இணைந்து சிறப்பு உரையாற்றினார்.

ஒரு சகாப்த காலமாக கல்விப்பணியை சமூகத்திற்கு அயராது வழங்கிக் கொண்டிருக்கும் பாடசாலையின் நீண்டகாலத் தேவைகளுள் ஒன்றாக விளங்கிய வகுப்பறைகளுக்கான இடப்பற்றாக்குறையை நிவர்த்திக்கு முகமாக மல்வானையின் சமூக ஆர்வலர் M.M.A. இஸ்மாயிலின் மகனாகிய தனவந்தர் M.I.M. அஸ்கரால் பாடசாலைக்கான மூன்று மாடிக் கட்டடமொன்றைத் சொந்த செலவில் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டதோடு பாடசாலையையும் மைதானத்தையும் இணைக்கும் வகையிலான மேம்பாலமொன்றை கட்டுவதற்கான அடிக்கல் M.M.A. இஸ்மாயில் தலைமையில் இயங்கிவரும் அல் முஹ்ஸின் பவுண்டேஷன் குடும்ப அங்கத்தவர்களால் நட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வின் விசேட அதிதிகளாக முன்னால் மேல் மாகாண சபை உறுப்பினர் நோனிஸ் பாடசாலையின் பழைய மாணவர்களான இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் அத்தார் ஹஸன், கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் M.M.A ஸாபிர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சமூக சேவையாளர் அப்துல் காதரும் கலந்து சிறப்பித்தார்..

பிரதேச சபை உறுப்பினர்களான மொஹமட் அன்வர், மொஹமட் இர்ஷாத் மற்றும் மல்வான பொ.ஜ.பெ. அமைப்பாளர் பாயிஸ் அஹமட் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகளுடன் களைகட்டிய இவ்விழாவில் நூற்றாண்டு காலமாக அதன் பயணத்தில் பங்குதாரர்களாக விளங்கிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பெருந் திரளானோர் கலந்து சிறப்பித்ததோடு பாடசாலை பழைய மாணவர் சங்கத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்று www.mubarakians.lk என்ற பெயரில் நீதியமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்ற பாடசாலை நூற்றாண்டிற்கான அங்குரார்ப்பண விழாவில் பாடசாலைக்கான கட்டிடமொன்றினை கட்டுவதற்கு முன்வந்த தனவந்தர் A.I.M. அஸ்கருக்கு நன்றி பாராட்டும் முகமாக நூற்றாண்டு அபிவிருத்திக் குழு தலைவர் A.R.M. லாபிர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்த அலி ஸ்ப்ரி க்கு நன்றியை தெரிவிக்கும் வகையில் சிறப்பு நினைவு சின்னமொன்று நீதிபதி M.T.M. லபரினால் பாடசாலை சார்பாக வழங்கி வைக்கப்பட்டது.

முர்ஸிதீன்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 30 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
சேந்தூரம்
2022 ஜனவரி 30 ஞாயிற்றுக்கிழமை



கானா பாடகன்

நவகம்புர கணேஷ்

உலகில் பாதுகாக்கப்பட்ட இடம்

உலகில் அதிகம் பாதுகாக்கப்படும் இடங்களில் ஒன்று அமெரிக்காவின் கன்டக்கியில் இருக்கும் நொக்ஸ் கோட்டை. அமெரிக்க கருவூலத் திணைக்களத்திற்குச் சொந்தமான இடம் இது. அமெரிக்காவின் தங்க கையிருப்பின் பெரும் பகுதி இங்கு தான் இருக்கிறது. அது 4,580 மெட்ரிக் தொன் வரை இருக்கும். இதுமட்டுமல்ல அமெரிக்க அரசியலமைப்பு, ஹங்கேரி கிரீட ஆபரணங்களின் ஒரு பகுதி மற்றும் அபின் மற்றும் ஓபியம் இருப்புகளும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. தனி ஒருவரால் இந்தப் பேடகத்திற்குள் நுழைய முடியாது. அதற்குள் நுழைய பலருக்கு வழங்கப்பட்டிருக்கும் கடவுச் சொற்களை ஒன்று சேர்க்க வேண்டும். பல ஊழியர்களுக்கு தலா ஒரு கடவுச் சொல்லாகவே வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது அவர்கள் தமது சகாகக்களின் உதவி இன்றி உள்ளே நுழைய முடியாது.

தூக்கிலிடப்பட்ட பன்றி

1386 ஆம் ஆண்டு பிரான்ஸில் ஒரு குழந்தையை பன்றி ஒன்று கடுமையாகத் தாக்கியது. அதனால் ஏற்பட்ட காயத்தில் அந்தக் குழந்தை இறந்துவிட்டது. பன்றியை என்ன செய்யலாம்? நீங்கள் நினைப்பது போலல்ல..அப்போது பன்றி கைது செய்யப்பட்டது. மூன்று வாரங்கள் சிறை வைக்கப்பட்ட அந்தப் பன்றி முறையாக வழக்கு விசாரணைக்கு முகம்கோடுத்தது. குற்றவாளியாக நிருபிக்கப்பட்ட அந்தப் பன்றிக்கு நீதிமன்றம் மரண தண்டனையும் விதித்தது. மனிதர் போல் ஆடை அணிவிக்கப்பட்ட பன்றி தூக்கு மேடைக்கு அழைத்து வரப்பட்டு தூக்கில் இடப்பட்டது.

ஐரோப்பா பக்கம் மத்திய காலத்தில் பன்றிகள் சிறை வைக்கப்பட்ட முதல் சம்பவமாக இது இருக்கவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

2,600 ஆண்டு ரகசியம் அம்பலமானது!

2,600 ஆண்டுகளுக்கு முன்னரும் இந்த குடிகாரர்கள் தொல்லை தாங்க முடியவில்லை.

தற்போது இஸ்ரேலாக இருக்கும் பகுதியில் 1965 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டம் ஒன்றில் ரகசியமாக ஏதோ எழுதி இருப்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தார்கள். ஆனால் என்ன எழுதி இருக்கிறது என்று தெரியவில்லை.

ஹிப்ரு மொழியில் இருந்த அந்த வாசகத்தில் 17 சொற்கள் இருந்தன, மொத்தம் ஐம்பது எழுத்துக்கள். அது ரகசியமாக எழுதப்பட்டிருந்தது என்பதில் தொல்பொருள் ஆய்வாளர்கள் உறுதியாக இருந்தார்கள்.

எனவே, கி.மு 600 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ரகசிய செய்தி என்பதால் அவர்களுக்கு அதன் மீதான ஆர்வம் அதிகரித்தது. ஆனால் அது என்ன என்பதை கண்டுபிடிக்க அரை நூற்றாண்டுக்கு மேல் தேவைப்பட்டது.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தியே என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை கண்டுபிடித்தார்கள் ஆய்வாளர்கள். ஆனால், எழுதி இருந்த செய்தி எல்லோருக்கும் எரிச்சலைத் தான் தந்திருக்கும். அங்கு ஏதேனும் வைன் இருந்தால் அனுப்பி வைக்கவும்..என்பது தான் அந்த ரகசியச் செய்தி.

ஜுதாஹ் பேரரசின் இராணுவத் தளமாகப் பயன்படுத்தப்பட்ட பகுதியிலேயே இந்த மட்பாண்டம் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே படை வீரர் ஒருவர் தான் இந்த செய்தியை எழுதி இருக்கக் கூடும். இந்த செய்தி எழுதப்பட்ட 15 ஆண்டுகளுக்கு பின்னர் அந்தப் பேரரசு பபிலோனியர்களால் அழிக்கப்பட்டது.

எனவே கூறியபடி அந்த வைன் கிடைத்ததா இல்லையா என்று தெரியவில்லை.

வட கொரியாவை ஏமாற்றிய போலி கொல்ப் வீரர்கள்

இரு அவுஸ்திரேலியர்கள் வட கொரியாவுக்கு சர்வதேச கொல்ப் போட்டியில் விளையாடச் சென்று அந்த நாட்டையே ஏமாற்றி இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கொல்ப் வீரர்களே இல்லை.

மோர்கன் ருக் மற்றும் எவாக் ஷை இருவரும் 2016 ஆம் ஆண்டு சீனாவுக்கு சுற்றுப்பயணம் சென்றபோதே வட கொரிய கொல்ப் போட்டி பற்றி தெரிந்து கொண்டார்கள். அவுஸ்திரேலியாவை பிரதிநிதித்துவம் செய்து போட்டியில் பங்கேற்க விளையாட்டாக விண்ணப்பித்தார்கள்.

ஆனால் அவர்களுக்கு போட்டியில் பங்கேற்க அனுமதி கிடைத்தது. இருவரும் தொழில்முறை விளையாட்டு வீரர்கள் போல் வட கொரியா சென்றார்கள். அங்கே அவர்களுக்கு பெரிய மரியாதை கிடைத்தது.

ஆனால் கொல்ப் அரங்கில் இருவரும் மோசமான ஆட்டத்தை வெளிக்காட்டினார்கள். உண்மையான கொல்ப் வீரர்களுக்கு இந்த இருவரும் கொல்ப் வீரர்களே இல்லை என்பது தெரியும் அளவுக்கு அந்த ஆட்டம் மோசமாக இருந்தது. என்றாலும் அந்த இருவரும் எப்படியோ தலை தப்பிக்கொண்டு அந்த நாட்டில் இருந்து தப்பி வந்தார்கள்.

46 மணி நேரம் முத்தமிட்ட ஜோடி

உலகில் நீண்ட நேரம் முத்தம் கொடுத்த உலக சாதனை தாய்லாந்து நாட்டு ஜோடியிடமே இருக்கிறது. ஆனால் இந்த சாதனை சாதாரணமானது என்று கூறிவிட முடியாது. ஏனென்றால் உதட்டோடு உதடாக 46 மணி நேரம் 24 நிமிடங்கள் இடைவிடாது முத்தமிட்டுக் கொண்டார்கள்.

2011 ஆம் ஆண்டு நடந்த இந்த முத்தமிடும் போட்டியில் 14 ஜோடிகள் பங்கேற்றிருந்தன. ஆனால் எக்கசாய் மற்றும் லக்சானா என்ற கணவன் மனைவி போட்டியை வென்று வைர மோதிரம் மற்றும் பணப் பரிசை வென்றார்கள்.

ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இந்த முத்த நிகழ்ச்சியில் முத்தமிட ஆரம்பித்த இருவரும் அடுத்த செவ்வாய்க்கிழமை அதிகாலையே உதடுகளை விலக்கிக் கொண்டார்கள்.

இருவரதும் அரவணைப்பை தவிர்க்காது உண்ண, குடிக்க மற்றும் கழிப்பறையை பயன்படுத்த அனுமதித்தார்கள். ஆனால் அமர்வதற்கு மற்றும் உறங்குவதற்கு அனுமதி இல்லை.

போட்டியில் பங்கேற்ற ஒரு பெண் அரை மணி நேரத்திலேயே மயங்கி விழுந்துவிட்டாள்.

புதிய அலை கலை வட்டத்தில் விருது பெறுவோர்

கலை, இலக்கியத்துறையில் இளம் ஆர்வலர்களின் வளர்ச்சி மேம்பாட்டுக்காக கடந்த 41 ஆண்டுகளாக தலைநகரில் இயங்கி வரும் புதிய அலை கலை வட்டம் பல்வேறு களங்களை ஏற்படுத்தி இலைமறை காயாக இருக்கும் இளங்கலைஞர்களை இனங் கண்டு வெளிக்கொணர்ந்து வருகின்றது. இந்த வகையில் 1995ஆண்டு முதல் கலை, கலாசாரப் போட்டிகளை "எவோட்ஸ் விருது" வழங்கும் நிகழ்ச்சியாக நடத்தி வருகின் றது.

இந்த வரிசையில் எவோட்ஸ் 2021க்கான விருது வழங்கும் நிகழ்ச்சி இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு 11 கதிரே சன் வீதியிலுள்ள ஸ்ரீ கதிரேசன் மணிமண்டபத்தில் நடைபெற வுள்ளது. வட்டத்தின் நிறுவன ரும் கலைஞரும் பத்திரிகை ஆசி ரியருமான ராதா மேத்தாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் பிரதம அதி தியாக புரவலர் புத்தகப் பூங்கா வின் நிறுவனரும் டவர் அரங்க மண்டப நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான புரவலர் ஹாசிம் உமர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அஸிஸ் மன்றத் தலைவர் அஷ்ரப் அஸிஸ், வீரகேசரி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.செந்தில்நாதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.ரி. குருசாமி, தொழிலதிபர் கலாநிதி பிரபாகரன், தொழில் அதிபர் கனக.ரகுநாதன், வத்தளை நகரசபை உறுப்பினர் ஆர். விஜயகுமார், தினக ரன் ஆசிரியர் தெ.செந்தில்வேலவர், வீரகேசரி

ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், காயத்திரி பீட நிர்வாகி ஸ்ரீரங்கதாஸ் விஜயானந்த், கவிஞர் பிரேம்ராஜ், டவர் அரங்க மண்டப தமிழ்த் துறைப் பொறுப் பாளர் கலாநிதி ஜெயபிரகாஷ சர்மா, தொழில் அதிபர் ரவீந்திரன், சமூகசேவகி கௌசலா தேவி மற்றும் ஏ.ஆர்.ஜெ.வி.ஆஷா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கடந்த வருடம் நடாத்தப் பட்ட கலை, கலாசாரப் போட்டிகளில் பங் குகொண்டு வெற்றி பெற்றவர்களும் கடந்த காலங்களில் வட்டத்தினுடன் இணைந்து செயற்பட்டவர்களும் இளம் ஆர்வலர்களும் விருதும்,'கலாமித்திரா' பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இங்கு கலைநி கழ்ச்சிகளும் நடைபெறும்.

2021 – கலாசாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்

பூர்விகா இராசசிங்கம்

கௌசி ராஜ்

க்ரிஷ்நளனி

ஷாமிலா நிஸார்

ஷாந்தகுமாரி நானு

கவிமோகன்

எஸ்.ஆர்.தினராஜ்

பி.சனந்தன்

கே.சுப்பிரமணியம்

ஹோப் ராஜேந்திரன்

எஸ்.சித்திரன்

மணி ஸ்ரீகாந்த்

கே.ஈஸ்வரலிங்கம்

ஜீ.சுப்பிரமணியம்

கே.எம்.எஸ்.குமரன்

எம்.உவைஸ் ஷரீப்

மொஹமட் நஸார்

கே.உதயகுமார்

பி.ரி. செல்வம்

ஞானம் பாஸ்கரன்

எம்.ஜிப்ரி சலீம்

முகுந்தன் சுந்தரலிங்கம்

இராமன் கேதீஸ்வரன்

மொஹமட் பாரிஸ்

எஸ்.அலெக்ஸாண்டர்

கே.எம்.எஸ்.குமரன்

ம.நிரோஷன்

திரேசா இந்திராணி

ஆர்.சுவஸ்திகா

சபீனா சோமசுந்தரம்

எம்.சிவகுமார்

சிவஸ்ரீ கந்தசாமி குருக்கள்

எச்.எப்.றிஸ்னா

ஜெ.சஜனி

வை.மோகதாஸன்

ரிம்ஸா ஹமீட்

மொஹமட் பரீன்

ரிம்ஸா மொஹமட்

சிவலிங்கம் இளங்கோவன்

கே.எம்.எஸ்.குமரன்

தலைநகரை அதிரவைத்த இசை சங்கமம் பாடல் வெளியீட்டு விழா

Nadi.lk நாடி நாடி பெருமையுடன் வழங்கிய #இசைச்சங்கமம் பாடல் வெளியீட்டு விழா Colombo City Centre இல் அமைந்துள்ள Scope Cinemas திரையரங்கில் கடந்த வெள்ளி மாலை வெகு விமர்சையாக நடைபெற்றது.

பாடல்களுக்கு நிமேஸ் குலசிங்க,சத்துரங்க டி சில்வா ஆகியோர் இசை வழங்க உலகப் புகழ் பாடலாசிரியர் கவிஞர் பொத்துவில் அஸ்மின் வரிகளை எழுதியுள்ளார் பாடல்களை கோகுலன் சாந்தன்(யாழ்ப்பாணம்), சுதர்சினி கோணேஸ்வரன் (திருகோணமலை) குகனேஸ்வரன்(பதுளை) சாதீர் அஹமட் (கொழும்பு) ரவி ரொயிஸ்ட்டர் (மாத்தறை) ஆகியோர் பாடியுள்ளனர்.

"கலைகள் ஊடாக இன ஐக்கியத்தை ஏற்படுத்தி இலங்கை மண்ணை செழுமையாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் தெரண தொலைக்காட்சியின் பிரதித்தலைவரும் பிரதம நிறைவேற்று பணிப்பாளருமான லக்சிரிவிக்ரமகேயின் எண்ணக்கருவில் உருவான "இசை சங்கமம்" பாடல்களில் இலங்கையின் அனைத்து சமூகத்தை சேர்ந்த கலைஞர்கள் நான்கு திசைகளிலும் இருந்து பங்களிப்பு செய்துள்ளனர்.

பாடல் வெளியீட்டு நிகழ்வுக்கு இலங்கையின் பிரபல கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், கவிஞர்கள் கலந்து விழாவினை சிறப்பித்தனர்.

பாடல்களை தெரண தொலைக்காட்சியின் தலைவர் டிலித் ஜெயவீர Dilith Jayaweera, பிரதித் தவிசாளர் லக்சிரிவிக்ரமகே, நிகழ்ச்சிப்பிரிவு பணிப்பாளர் சர்மிளா தர்மராசா ஆகியோர் இணைந்து eTunes.lk தளத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுவைத்தனர்.

டாக்டர்: வாங்க உட்காருங்க.. நாக்கை நீட்டுங்க.. ஆ..ன்னு சத்தம் கொடுங்க நல்லா இழுத்து மூச்சு விடுங்க. காச்சலா தலைவலியா சொல்லுங்க ..!
வந்தவர்: ஒன்னும் இல்லை டாக்டர்.. மகளுக்கு கல்யாணம் பத்திரிக்கை கொடுக்க வந்தேன்.. இந்தாங்க.வரட்டா! டாக்டர்

மகன்: அப்பா ஸ்கூலில் இன்னக்கி ஒரு நல்ல செய்தி, ஒரு கெட்ட செய்தி நடந்துச்சிப்பா.
அப்பா : நல்ல செய்திய மொதல்ல சொல்லு.
மகன் : ஸ்கூல் தீ பிடிச்சி எரிஞ்சி போச்சிப்பா
அப்பா : கெட்ட செய்தி
மகன் : வாத்தியார் எல்லாம் தப்பிச்சிட்டானுங்க
அப்பா:...?

பெண்: இலையை மடிக்க வேண்டாம்.
விருந்தினர்: ஏங்க மடிக்க வேண்டான்னு சொல்றீங்க.
பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.
விருந்தினர்: ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா ?
பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன ?

ஊழியர் 1: வேலை பாக்குறதுல பாதி வாழ்க்கை போயிருது..
ஊழியர் 2:வேலை முடிஞ்சு வீட்டுக்கு வந்த மீதி வாழ்க்கையும் போயிரும் .

அப்பா: டேய்! எப்பவுமே நம்மளைவிட வயசுல பெரியவங்ககிட்ட மரியாதையா நடந்துக்கணும் புரியுதா?
மகன் : ஏம்ப்பா! அம்மா உங்களைவிட வயசுல பெரியவங்களா?
அப்பா:..

ஆசிரியர் : உண்மைக்கு எதிர்ப்பதம் என்னன்னு கேட்டா, பதில் சொல்லாம முழிக்கிறியே .. .. ஏண்டா ?
மாணவன் : நீங்கதானே சார் பொய் சொல்லக் கூடாதுன்னீங்க .

அந்தக்கப்பல் எங்க சொந்தக்காரருடையது.
அப்போ ரிலேஷன்ஷிப்னு சொல்லுங்க!

நோயாளி : டாக்டர், எனக்கு சுகர் மாத்திரை தானே குடுத்திங்க..
டாக்டர்: ஆமாம்..
நோயாளி : இல்ல டாக்டர்.. வீட்டுக்குப் போய் சாப்பிட்டு பார்த்தேன்.. இனிப்பே இல்லை.கசப்பாக இருக்கு

வாத்தியார் : A=B, B=C அப்படின்னா A=C. குமார் இதை விளக்கு?
மாணவன் : சார், ஐ லவ் யூ, யூ லவ் யுர் டாட்டர், சோ, ஐ லவ் யுர் டாட்டர். கரெக்ட்டா சார்?
வாத்தியார்:..?

மட்டக்குளியில கட்ட கவுன் குட்டியோட சரசமாடிய நவகம்புர கணேஷ்!

இன்று தலைநகரில் நடைபெறும் மேடை இசை நிகழ்ச்சிகளையும், இசை நிகழ்ச்சிகளையும் அலங்கரித்து ஆடிப்பாடி ரசிகர்களுக்கு ஆனந்தம் அளித்து வருபவர் நவகம்புர கணேஷ். ஆரம்ப காலத்தில் தேவாவின் குரலில் கானா பாடல்களைப் பாடி வந்த இவர், தொடர்ந்து வேறு பின்னணிப் பாடகர்களின் பாடல்களையும் பாடி ரசிகர்களுக்கு பரவசமளித்து வந்தார்.

இவ்வாறு பாடி வந்த இந்த கலைஞன் இலங்கைக் கவிஞர் எழுதிய பாடலொன்றையும் பாடி தனது திருநாமத்தை உலகெங்கும் பரவச் செய்தார். அந்தப் பாடல் இலங்கையின் பட்டி தொட்டி எல்லாம் பரவி இவருக்கு பெரும் பெயரையும் பெற்றுத் தந்தது. கானா ஸ்டைலில் எழுதப்பட்ட இந்தப் பாடலை சிறப்பாக பாடி இலங்கை கலைஞர்களுக்கும் இந்திய தரத்திலான பாடல்களை இயற்றிப் பாட முடியும் என்ற நிலையை உலகுக்கு கோட்டிட்டு காட்டியுள்ளார் இவர்.

'நான் மட்டக்குளியில் கட்ட கவுனோட குட்டி ஒன்றைக் கண்டேன்' என்ற இந்தப் பாடலை கவிஞர் கே பாலசிங்கம் எழுதியுள்ளார். இந்தப் பாடலுக்கு ஏசியன் இசைக்குழுவின் செந்துரான் இசையமைத்துள்ளார். கொழும்பு மருதானையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொழும்பு மருதானை கப்பித்தாவத்தையிலுள்ள

தொண்டர் வித்தியாலயத்தில் கல்வி கற்றுள்ளார்.

டோலக் வாத்திய கலைஞரான இவர், ஆரம்ப காலத்தில் இசை நிகழ்ச்சிகளில் டோலக் வாத்தியக் கருவியை வாசித்து வந்த இவர் அவ்வப்போது பாடல்களையும் பாடத் தொடங்கியுள்ளார். இவரது குரல் வளமும் இதற்கு ஈடுகொடுக்க இசையமைப்பாளர்களும் பிரபல பின்னணிப்பாடகர்களுமான எம். எஸ். விஸ்வநாதன், தேவா ஆகியோர் பாடிய பாடல்களை பாடி வந்துள்ளார். தொடர்ந்து பாடி வருகிறார். எம். எஸ். விஸ்வநாதனின் பரம ரசிகன் என்று கூறும் இவர் இடையில் "சொல்லத்தான் நினைக்கிறேன் உள்ளத்தால் தவிக்கிறேன்"

என்ற பாடலையும் பாடி காட்டினார்.

இவரே இயற்றிப் பாடிய 'கொழும்பு நகர சுற்றிப் பாருங்க!' என்னும் பாடலும் இவரை அடையாளப்படுத்தி காட்டியது.

பொத்துவில் அஸ்மின் எழுதிய 'வெளிநாட்டு மாப்பிள்ளை' மற்றும் 'பாதையோரம் போறபுள்ள காயா பழமா சொல்லு' போன்ற பாடல்களும் இவரது இசைத்துறை வரலாற்றில்

பதியப்பட வேண்டிய பாடல்களாகும். இதுபோன்று 'கத்தியத்தான் கீழே வச்சு புத்தியத்தான் மேலே எடு' என்ற பாடலும் மிகவும் பிரபலமான பாடலாகவே அமைந்தது.

சில பாடல்களில் இவர் அணியும் உடைகள் அந்தக் கால கமலின் 'இமேஜை' ஞாபகப்படுத்துகிறது.

எம். எம். பாசில் ஏற்பாடு செய்கின்ற 'தேனும் பாலும்' நிகழ்ச்சியில் கணேஸுக்கு கட்டமாயமாக சந்திரபாபுவின் பாடல்கள் அமைந்திருக்கும்.

இவர் முத்துலிங்கம், சந்தனமேரிக்கு புதல்வராக 1965 இல் பிறந்தார். ஒரு சகோதரனும் நான்கு சகோதரிகளும் இவரது உடன் பிறப்புக்கள். மங்களம் இவரது இல்லத்தரசியாக வாய்த்துள்ளார். மூன்று ஆண் பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளை என நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாக உள்ளார்.

இவரிடம், இசைத் துறை பிரேவேசம்

பற்றிகேட்டபோது.....?

'எனது குடும்பத்துக்குள்ளும் டோல்க்கி வாசித்தவர்கள் இருக்கிறார்கள். அக்கலை எனக்குள்ளும் வந்தது. எம். சிவகுமாரின் 'அக்னி' இசைக்குழுவில் ஆரம்ப காலத்தில் பாடி வந்தேன். ஏசியன்ஸ், கலைவாணி இசைக் குழுக்களில் டோல்க்கி வாத்தியக் கலைஞராகத் திகழ்ந்தேன்.

பாடிக் கொண்டே ஆடுவது என்பது மிகவும் கடினமான ஒன்று. அதெப்படி உங்களுக்கு இலகுவானது?

நான் 1995 ஆம் ஆண்டுதொடக்கம் நடனக் கலைஞராக வலம் வந்துகொண்டிருக்கறேன். முதன்முதலாக 'மெளனஸ் புரொடக்ஷன்' நஸாரின் ஒலி ஒளி நிகழ்ச்சியில் மல்லிகா கீர்த்தியின் நடன அமைப்பில் ஆடினேன். கே. சோமசுந்தரம் என்பவரும் 'வண்ண மலர்கள்' என்ற நிகழ்ச்சியில் ஆடுவதற்கு வாய்ப்பு அளித்தார். அந்தப் பயிற்சிதான் பாடும் போது உதவுகிறது'.

நீங்கள் ஆரம்பத்தில் வேறு வேலை செய்து கொண்டு தான் இசைத்து றையில் ஈடுபட்டீர்களா? வேலை செய்து கொண்டு இசைத்துறையில் ஈடுபடுவது கடினம் இல்லையா?

வேலைகள் செய்துகொண்டுதான் ஈடுபட்டேன். வேலை செய்துகொண்டு இசைத்துறையில் ஈடுபடுவது கடினமாகத் தான் இருந்தது.

இத்துறையில் எவ்வளவு காலமாக ஈடுபட்டுள்ளீங்கள்?

25 வருட காலமாக

வெளிநாட்டிற்குச் சென்று பாடிய அனுபவங்கள் பற்றி கூறுங்ளேன்.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை முன்னிட்டு தோஹா கட்டாரில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன்.

அங்கு தொழில் புரிந்து கொண்டு இசை நிகழ்ச்சிகளை நடத்திவரும் சிங்களக் கலைஞர்களோடு இணைந்து 'சபாரி மோல்' ஹோலில் தமிழ்ப் பாடல்களைப் பாடினேன். தமிழ் பேசும் ரசிகர்களும் மற்றும் மலையாள ரசிகர்களும், சிங்கள ரசிகர்களும் வேறு நாட்டைச் சேர்ந்தவர்களும் இந்நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர். இது எனக்கு புத்துயிரை அளித்தது. இலங்கையில் பல பாகங்களிலும் பல மேடைகளில் பாடினாலும் இது எனக்கு புது அனுபவமாக இருந்தது.'

இந்த வாய்ப்பு எப்படி கிடைத்தது?

'இந்த சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தவர் பாத்திமா றம்ஸினா என்ற பாடகிதான். ஜனக என்பவரின் தலைமையில் சென்றோம்.

உங்களால் மறக்க முடியாத அனுபவம் ஏதும் உண்டா?

ஒரு முறை 'ஓடுகிற வண்டி ஓட' என்ற ஷேக் முஹம்மது பாடிய பாடலை சிவகுமாரின் 'அக்னி' இசைக் குழுவில் எடுத்து விட்டேன். ரசிகர்களுக்கு பிடித்து விட்டது. அபோது ரசிகர்கள் அளித்த ஆரவாரத்தையும் வழங்கிய கோஷத்தையும் மறக்க முடியாது.

இசைக் குழுக்களில் பாடிய அனுபவம் பற்றி...!

கலைவாணி இசைக்குழுவில் டோலக் வாத்தியக் கருவியை வாசித்துவந்த நான் பக்திப் பாடல்களும் பாடத்தொடங்கினேன்.

'அக்னி' இசைக் குழுவில் பாடி வருகிறேன். இலங்கையில் உள்ள அனைத்து இசைக் குழுக்களிலும் பாடிய பெருமை எனக்குண்டு. குறிப்பாக வட கிழக்கு பகுதிகளிலும், தென் பகுதிகளிலும் கொழும்பின் பல இடங்களிலும் எனது இசைப் பயணம் நீண்டு வருவதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். கல்முனை எஸ். சிவா (சுப்பர் டியூனர்ஸ்) பெரிய கல்லாறு சுந்தரின் புதிய ஸ்வரங்கள்' யாழ்ப்பாணத்தில் ராகம்ஸ் இசைக் குழுவிலும் சாரங்கா இசைக் குழு மற்றும் அப்ஸராஸ் இசைக் குழு மலையகப் பகுதிகளிலும் எங்கோ ஒரு மூலையில் நான் பாடிக் கொண்டுதான் இருக்கிறேன்.

செந்தூரனின் ஏஸியன்ஸ் இசைக் குழுவில் கடந்த 18 வருடங்களாக பாடி வருகிறேன்'.

இலங்கை ரசிகர்களின் ஆதரவு எப்படியுள்ளது ?

'ஈழத்துப் பாடல்களை அக்காலத்தில் பெரும்பாலான ரசிகர்கள் ரசிக்கவில்லை என்றாலும் ரசிக்கக் கூடிய நல்ல ரசிகர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். நான் பாடும் சினிமா பாடல்களை ரசிக்கும் ரசிகர்களே 'மட்டக்குளியில கட்டக் கவுனோட...' பாடலையும் ரசித்தனர். என்றாலும் மோசமான பாடல்களைத்தான் ரசிகர்கள் ரசிக்கிறார்கள் என்பது அர்த்தமல்ல. நல்ல பாடல்களை, பழைய பாடல்களை, நமது பொப்பிசை பாடல்களை இலங்கைத் திரைப்படப் பாடல்களை ரசிக்கும் சிறந்த ரசிகர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

உங்களது வளர்ச்சிக்கு யார் காரணம்?

'எனது வளர்ச்சிக்கு நான் மட்டும் காரணமல்ல. எனது தாய், தந்தைகக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இசைக் குழுக்களின் வாத்தியக் கலைஞர்கள், என்னோடு பாடும் பாடகிகள், இசை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், சிங்கள இசைச் கலைஞர்கள், என்னை அடையாளப்படுத்திய மின், அச்சு ஊடகங்கள்... குறிப்பாக இன்றைய தினத்தில் எனது பேட்டியைப் பிரசுரித்த தினகரன் வாரமஞ்சரிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அமரர் DIG அரசரத்தினம்

இவர் மனிதர்களுக்குள்
ஒரு ரத்தினம் !
எல்லோர் மனசுக்குள்
இவர் ஒரு சித்திரம் !
இவரது அன்பும்
பண்பும் ஒரு விசித்திரம் !
எல்லோருடனும் அன்பாய் இருந்தவர் !
என்னோடு பாசமாய்
வாழ்ந்தவர் !

Island முழுவதற்கும்
இவர் Traffic Director !
Silent ஆக இருப்பதுதான்
இவரது Charector !

கடமையை செய்வதிலே
இவர் ஒரு தனி ரகம் !
இவரோடு கதைத்துக்
கொண்டிருப்பதிலே
ஒரு சுகம் !

இந்த ரத்தினமும் என்
இதயத்தில் இருப்பார்
எத்தினமும் !

நீங்காத நினைவுகள் !
தூங்காத கண்கள் !
மாறாத துயரம் !
மா வீரன் மறைவு !
நெஞ்சம் பொறுக்குதில்லையே... !

இலங்கை பொன்மனச்செம்மல்
தாஜ்மஹான்

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எஸ் ஆர்.சங்கர்
களுபோவில.

கேள்வி: தென்னிந்திய சினிமா உலகம் எப்படி இருக்கிறது?

பதில் : சூரியனைக் கண்ட தாமரையைப்போல் மலர்ந்து இயங்கிக் கொண்டிருந்தது... மீண்டும் Lock down வந்ததும், சந்திரனைக்காணாத அல்லியைப்போல வாடிப்போய் நிற்கிறது.

ஆர் பானு.
வவுனியா.

கேள்வி: விரைவாக வளர்ந்து வரும் எனது அபிமான நடிகர் சிவகார்த்திகேயனின் தற்போதைய ஆசை என்னவாம்?

பதில்: பிரமண்ட பட இயக்குனர் ஷங்கரின் படத்தில் நடிப்பதற்கு தனக்கு ஆசையாக இருப்பதாக ஒரு பேட்டியின் போது அவர் தெரிவித்துள்ளார்.

எம்.மாகிரட்.
எலபடகம.

கேள்வி: பரபரப்பாக பேசப்பட்டு வரும் நடிகையான அமலாபால் முதலில் அறிமுகமான படம் எது? இறுதியாக நடித்து வெளி வந்த படம் எது? இப்போது நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் எவை?

பதில்: அவர் அறிமுகமான படம் 'மைனா'. கடைசியாக 2019இல் வெளிவந்த' ஆடை'படத்தில் முதன்மை கதாநாயகியாக நடித்தார். கடந்த வருடம் வெளிவந்த'குட்டி ஸ்டோரி'ஆந்தாலஜி படத்திலும் நடித்திருந்தார். தற்போது'அதோ அந்த பறவை போல','கடவர்'ஆகிய படங்களில் நடித்து முடித்துள்ளார்.

சமூகவலைத் தளத்தில் அவ்வப்போது தனது கவர்ச்சிப் படங்களை வெளியிட்டு அதிர்ச்சி கொடுப்பவர் அமலா பால்.

ஆர்.மோகன்.
வவுனியா.

கேள்வி: இளைய தளபதி விஜய்யின் 'பீஸ்ட்'எப்போது வெளிவரும்?

பதில்: கிட்டத்தட்ட ரெடியாகி விட்டது. படமாகி வந்த விதத்திலேயே விஜய்க்கு இயக்குனர் நெல்சன் மேல் மிகுந்த ஈடுபாடு வந்து விட்டது. இயக்குனர் அட்லி போல் இவருக்கும் அடுத்தடுத்து வாய்ப்பு தரும் முடிவில் இருக்கிறாராம். விரைவில் அதற்கான ஸ்கிரிப்ட் வேலைகள் தொடங்க இருக்கின்றன. இதனால் இரட்டை சந்தோஷத்தில் இருக்கிறார் நெல்சன்.

எஸ்.எம்.இஸ்மயில்.
மல்வான.

கேள்வி: இயக்குனர், நடிகர் சசிகுமார் மீண்டும் படங்களை இயக்கப் போகிறாராமே...?

பதில்: உண்மை தான்...பாலாவின் படம் சரியாகப் போகாததால் கடனில் வீழ்ந்தார் சசிகுமார். இப்போது தொடர்ந்து நடித்து கடனை கிட்டதட்ட. அடைத்து சகஜ நிலைக்குத் திரும்பிவிட்டார். அதனால் மீண்டும் இயக்குனர் நாற்காலியில் அமரலாம் என்ற முடிவு செய்திருக்கிறார். இப்போதுதான் உட்கார்ந்து 'ஈசன்' படத்துக்குப்பிறகு தான் இயக்கும் புதிய படத்திற்கான வேலைகளில் மூழ்கியிருக்கிறார் சசிகுமார்..

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

புரட்சிகரமான வக்கீலாக வனிதா விஜயகுமார்

வனிதா விஜயகுமார் புரட்சிகரமான வக்கீல் வேடத்தில் நடிக்கும் படத்துக்கு 'சிவப்பு மனிதர்கள்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது பற்றி படத்தின் டைரக்டர் அன்பு சரவணன் கூறுகிறார்:

''இந்திய திரையுலகில் இதுவரை சொல்லப்படாத சட்டத்தின் மறுபக்கத்தை சொல்லி, அதிர்வலையை ஏற்படுத்த இருக்கிறது, 'சிவப்பு மனிதர்கள்' படம். இதில் காதலும், காதல் சார்ந்த உணர்வுகளும் யதார்த்தமாக சொல்லப்பட்டுள்ளது.

இன்னொரு வக்கீலாக லிவிங்ஸ்டன் நடிக்கிறார். கதையின் நாயகனாக ஸ்ரீராம் கார்த்திக்கும், நாயகியாக மீனாட்சியும் நடிக்கிறார்கள். பி.டி.அரசகுமார் தயாரிக்கிறார்.

நடிகர் வெற்றி ரகசிய திருமணம்

தமிழ் சினிமாவில் வித்தியாசமான கதைகளை தேர்தெடுத்து நடித்து வரும் வெற்றி திடீரென ரகசிய திருமணம் செய்து கொண்டார்.

தமிழ் சினிமாவில் சிறந்த நடிகராக வலம் வந்து கொண்டிருப்பவர் நடிகர் வெற்றி. இவர் 8 தோட்டாக்கள், ஜீவி, வனம் போன்ற சில படங்களில் நடித்திருந்தார். இவர் வித்யாசமான கதைகளை தேர்தெடுத்து நடித்து அனைவரையும் கவர்ந்தார். இவர் தற்போது பிக்பாஸ் ஷிவானி நடிக்கும் பம்பர் திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

இந்நிலையில் இவர் திடீரென ரகசிய திருமணம் செய்துள்ளார். இந்த திருமணம் திருநெல்வேலியில் நடந்துள்ளது. திடீரென நடந்த இவரின் திருமணத்தால் அவரின் ரசிகர்களையும் சினிமா துறையினரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

வளர்பிறை யை வாழ்த்திய விஜய் சேதுபதி

தமிழ் சினிமாவில் பல சூப்பர் ஹிட் படங்களை கொடுத்து முன்னணி நடிகராக இருக்கும் விஜய் சேதுபதி வளர்பிறை என்னும் குறும்படத்தை பார்த்து பாராட்டி இருக்கிறார்.

சமீபகாலமாக குறும்படங்கள் சினிமா எடுப்பதற்கு முன் பயிற்சி பட்டறையாக இருந்து வருகிறது. அந்த வகையில் சமீபத்தில் வெளியான "வளர்பிறை" என்ற குறும்படம் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான நிறைய விருதுகளை வாங்கி குவித்துள்ளது.

இந்த வளர்பிறை குறும்படத்தை திரைப்பட விழாக்களில் பார்த்த ஒரு அமெரிக்கர் அந்த குறும்படத்தை தன் சொந்த யூடியூப் சேனலுக்காக வாங்கி இருக்கிறார்.

இந்த குறும்படத்தை பார்த்த விஜய் சேதுபதி, படக்குழுவினரை பாராட்டி, குறும்படத்தினை தனது சமூக வலைத்தள பக்கத்தில் பகிர்ந்து வாழ்த்து தெரிவித்து இருக்கிறார்.

Big boss பாவ்னிக்கு வந்த சோதனை

கமல் தொகுத்து வழங்கிய Big boss நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்து கொண்ட பாவ்னிக்கு வீட்டில் இருந்து வந்தவுடன் சோதனை வந்துள்ளது.

தெலுங்கு சினிமாவில் உறுதுணை கதாபாத்திரங்களிலும் சீரியலிலும் நடித்து வந்த நடிகை பாவ்னி தமிழில் 'ரெட்டை வால் குருவி' சீரியல் மூலம் அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து பல்வேறு சீரியல்களில் நடித்துள்ளவர், 'பிக்பாஸ் சீசன் 5' நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். கடைசி நாட்கள் வரை சிறப்பாக விளையாடி மூன்றாவது இடத்தினைப் பிடித்தார். Big boss வீட்டில் இருந்து வெளியே வந்த இவர், தனக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக தனது சமூக வலைத் தள பக்கத்தில் பதிவு செய்திருக்கிறார்.

அடையாளம் தெரியாமல் மாறிய 'டூயட்' பட நாயகி

டூயட் பட நாயகி மீனாட்சி சேஷாத்ரி யோகா செய்வது போன்ற தனது புகைப்படத்தை இணையதளத்தில் வெளியிட்டுள்ளார்.

1994ம் ஆண்டு கே.பாலசந்தர் இயக்கத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற படம் 'டூயட்'. பிரபு, ரமேஷ் அர்விந்த், மீனாட்சி சேஷாத்ரி, பிரகாஷ்ராஜ் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். ஏ.ஆர். ரகுமான் இசையில் பாடல்கள் அனைத்தும் பிரமாண்ட வரவேற்பு பெற்றது. இந்த படத்தில் மீனாட்சி சேஷாத்ரியின் துள்ளலான நடிப்பும், அவரது கொள்ளை கொள்ளும் அழகும் ரசிகர்களை வெகுவாக ஈர்த்தது.தமிழ் தவிர மீனாட்சி சேஷாத்ரி இந்தி, தெலுங்கு மொழி படங்களிலும் நடித்துள்ளார். அந்தவகையில் 'ஹோசியர்', 'பேவாபை', 'மேரி ஜங்', 'சுவாதி', 'டாகேட்', 'இனாம் தஸ் ஹசார்', 'ஷாகென்ஷா', 'மஹாதேவ்', 'ஜர்ம்', 'காயல்', 'கர் ஹொ டு ஆசியா', 'டாமினி' போன்ற பல படங்களில் நடித்துள்ளார். இவர் நடன வகுப்புகளும் கூட. 'கதக்' எனும் திரைப்படத்தை சொந்தமாக தயாரித்து வெளியிட்டார்.

பின்னர் கணவருடனும் குழந்தைகளுடன் அமெரிக்காவுக்கு சென்றுவிட்டார். அமெரிக்காவில் 'செரிஷ் டான்ஸ் ஸ்கூல்' எனும் பெயரில் நடன பள்ளியை நடத்தி வருகிறார்.

தற்போது மீனாட்சி சேஷாத்ரி யோகா செய்வது போன்ற தனது புகைப்படத்தை இணையதளத்தில் வெளியிட்டுள்ளார்.

இதை பார்த்த ரசிகர்கள் இப்படி அடையாளம் தெரியாமல் போய்விட்டாரே... என்று தங்களது ஆதங்கத்தை கொட்டி தீர்த்து வருகிறார்கள்.



கலைஞர்களின் கையேடு

சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் கலாவிபூஷண விருது வழங்கும் விழா

சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் 2022.02.12 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தும் கலாவிபூஷண விருது வழங்கும் விழாவில் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூகசேவையாளர்கள் பொன்னாடைபோர்த்தி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள். தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் ஊடக அனுசரணையில் நடைபெறும் இதில், தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் அதிதியாக கலந்துகொள்வார். சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் தலைவர் துரைராசா சரேஷ் இதற்கான ஏற்பாடுளை செய்து வருகிறார். இதில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகளின் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார், 40 வருடங்களுக்கும் மேலாக மாபெரும் ஊடக நிறுவனமான லேக் நிறுவனத்தில் சேவையாற்றி வரும் ஜெரால்ட் நடேசன் ஆகியோரும் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள். கலைஞர் கே. ஈஸ்வரலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்.

வலம்புரி கவிதா வட்டத்தின் பௌர்ணமி கவியரங்கம்

வலம்புரி கவிதா வட்டம் பௌர்ணமி தோறும் நடத்தும் கவியரங்கம் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டையிலுள்ள பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கலைஞர் ஸ்ரீசங்கர் நினைவு நிகழ்வு

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக கலைஞர் ஸ்ரீ சங்கர் நினைவு நிகழ்வை நடத்தி வருகின்ற கலைஞர் ஸ்ரீ சங்கர் நற்பணி மன்றம் இம்முறையும் எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டையிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் கலைஞர் ஸ்ரீ சங்கர் நினைவு நிகழ்வை நடத்தவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கலைஞர் சண்முகராஜா மேற்கொண்டு வருகிறார். கலைஞர் கே. ஈஸ்வரலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்.

இத்தினம் அரச ரத்தினம் ஐயா நம்முடன் இல்லை

வகவக் கவியரங்கில்
பிரதம அதிதியாய்த்
தகவல் பல சொன்னார்;
நினைவினிக்கும்!

"தன்னை கலையுலகிற்
கறிமுகப் படுத்தியவர்
நண்பர்
இலங்கை பொன்மனச்
செம்மல் தாஜ்மகான்தான்" என்றார் !
விழி நனைத்து !

நல்லவரின் ஞாபகங்கள்
நீர் விழியில் எத்தினமும் !

உள் மனசின் நட்பு மனம் உயரன்பு
தூய குணம் !
இத்தினம் ஐயா இல்லை !
இனி எத்தினம் வந்த போதும்
அரச ரத்தினம் ஐயா இல்லை !
ஆனால் வகவ அத்தினம் இன்னும்
எந்தன் ஆழ்மனந் தன்னில் மின்னும் !

அரச ரத்தினம் ஐயா
அன்பை என்றும்
ரசிகர்தம் உள்ளம்
எண்ணும் !

கிண்ணியா அமீர் அலி

கலைஞரீ கலை மன்றத்தின் ஏற்பாட்டில் கவியும் கலையும் இணைந்து வழங்கிய 'பாடுவோர் பாடலாம்' புதிய பாடக, பாடகிகளுக்கான இசை நிகழ்ச்சி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவண.பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ முன்னிலை கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார். இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தயான் லங்காவின் தலைவர் கேசவன் பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் ஊடக அதிதியாகவும் கலந்து சிறப்பித்தார். இந்தப் போட்டியில் மட்டக்களப்பு தியாகராஜன் கோகுலதாஸ் முதலாம் இடத்தைப் பெற்று 50 ஆயிரம் ரூபாவும் களுபோவில எஸ். அபிநயா இரண்டாம் இடத்தைப் பெற்று 25 ஆயிரம் ரூபாவும் எட்டியாந்தோட்டை எஸ். ஷாலினி மூன்றாம் இடத்தைப் பெற்று 15 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் தட்டிக் கொண்டனர். தயான் லங்கா நிறுவனத்தின் உரிமையாளர் கேசவன் பத்மநாதன் முதல் மூன்று பரிசுகளையும் வழங்குவதற்கான அனுசரணையை வழங்கினார். (படங்கள் : நஸார்)

பிரசன்யா -செல்லக்கதிர்காமம்

ஹம்தி ரபா
பொல்கஹவெல

சங்கீதா - கொச்சிக்கடை

விஷ்னு, ராஜ், தானு - சாவகச்சேரி

இர்ஷாத் மஜீத்

மொஹம்மட் ஹம்லான்

சாரீக் அமீன் - மடவள பஸார்

சந்திரமோகன் - வத்துளை

கலைஞர்.ஏ.ஓ.அனல் – பாண்டிருப்பு

பத்மா சந்திரமோகன் - இரத்தினபுரி

கர்வம் கொண்ட குதிரை

ஒரு வியாபாரியிடம் குதிரை ஒன்றும் பெரிய கழுதை ஒன்றும் இருந்தன. அவர் குதிரையைச் சவாரி செய்யவும், கழுதையை மூட்டை சுமக்கவும் உபயோகித்தார்.

ஒரு நாள், அருகிலுள்ள நகரத்திற்கு குதிரையையும் கழுதையையும் ஓட்டிச்சென்றார். கழுதையின் மேல் பெரிய பார மூட்டை ஒன்றை ஏற்றியிருந்தார். அதனால் கழுதை, பாரம் தாங்காமல் தள்ளாடித் தடுமாறி சிரமத்துடன் நடந்து சென்றது. குதிரையோ தன் மேல் பாரம் எதுவுமில்லாமல் குதூகலத்துடன் நடந்து சென்றது. வழியில் குதிரை கழுதையைப் பார்த்து நண்பனே! நீ பெரிய பார மூட்டையுடன் வெகுசிரத்துடன் நடந்து வருகிறாய். நானோ பாரம் எதுவுமில்லாமல், சுகமாக நடந்து வருகிறேன் என்று கூறி ஏளனம் செய்தது.

சிறிது தூரம் சென்றதும் கழுதையால் நடக்க முடியவில்லை. அதனால் கீழே படுத்தது. வியாபாரி பல வழிகளில் முயன்றும் கழுதை எழுந்திருக்க வில்லை.வேறு வழியின்றி வியாபாரி கழுதையின் மேல் இருந்த பார மூட்டையை எடுத்து குதிரையின் முதுகில் ஏற்றினார். பாரம் குறைந்தவுடன் கழுதையும் எழுந்து நின்றது.

பிறகு வியாபாரி இரண்டையும் ஓட்டிச் சென்றார். பாரம் முழுவதையும் குதிரை கடைசிவரை வெகு தூரம் சுமந்து செல்ல வேண்டியதாயிற்று அதனால் அது வெகுவாக துண்பப்பட்டது. தான் கழுதையை ஏளனம் செய்ததால் தனக்கு அக்கதி ஏற்பட்டது என்பதை உணர்ந்தது. அன்று முதல் கழுதையிடம் இரக்கத்துடன் நடந்து கொண்டது.

உங்களுக்கு தெரியுமா

டொல்பின்களும் மனிதனை போல பெயர் வைத்துக் கொள்கின்றன. ஸ்காட்லாந்து நாட்டை சேர்ந்த செயின்ட் ஆண்ட்ரூஸ் பல்கலைக் கழகத்தை சேர்ந்த குழு, டொல்பின்கள் ஒவ்வொரு டொல்பினை அழைக்க ஒவ்வொரு விதமான ஒலியெ முப்பி அழைப்பதை கண்டறிந்து உறுதிசெய்தனர்.

5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

நிறம் தீட்டுங்கள்



முட்டைகளை சேமிக்க வழிகாட்டுங்கள்

விடுகதைகள்

1. இவன் வா லுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?

தேள்

2. பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன?

தலைமுடி

3. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணீந்திருப்பான்? அவன் யார்?

வெங்காயம்

4. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?

கரும்பு

5. மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல அது என்ன?

விழுது

6. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன?

பட்டாசு

7. ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?

மூச்சு

8. கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான். அவன் யார்?

பூரி

ஆறடி குழிக்குள் தன்னை மூடிக்கொண்டு மேலே தீ மூட்டி எரித்தவாறு உலக சாதனை

ஆறடி தான் மனிதனின் இறுதி இருப்பிடம். அந்த மண்ணறைக்குள் புதைந்து நெருப்பை மூட்டி உயிரைப் பணயம் வைத்து சாதனை படைத்துள்ளார் நம் நாட்டு இளைஞர் ஒருவர். அவர் இந்த சாதனை முயற்சி தொடர்பாக ரொம்ப பிஸி பகுதி சார்பில் அவரை நேர்கண்டேன்.

கேள்வி: உங்கள் பெயர்

பதில் : முஹமட் மசூன் முஹமட் முசாதிக்

நான் மத்திய மலை நாட்டின் எழில் கொஞ்சும் மாத்தளை நகரின் கொங்காவலை வீதியில் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் திகதி பிறந்தேன். மாத்தளை தேசிய கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் வரை கல்விகற்ற நான் சொந்த வியாபாரத்தில் ஈடுபட்டு திருமணம் செய்து நான்கு குழந்தைகளின் தந்தை.

கேள்வி: உலகில் எவரும் செய்யாத ஒரு விசித்திரமான மண்ணறைக்குள் படுத்து மண்ணறையை மூடி அதற்கு மேல் தீ கொளுத்தி சாதனை புரிய அல்லது ஒரு சாகசத்தை நிகழ்த்த உங்களுக்கு எப்படியான ஒரு துணிச்சல் ஏற்பட்டது.

பதில் : எனது சிறிது வயது முதலே எனக்கு ஏதேனும் வித்தியாசமான செயலில் ஈடுபட வேண்டுமென்ற ஆசை ஏதாவது ஒன்றை சாதிக்க வேண்டுமென்ற நற்பாசை. நான் பிறந்ததது முதல் நான் பாடசாலையில் கல்வி கற்கும் போதும் பாடசாலையில் ஏதோ ஒன்றை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஏதாவது ஒரு சாதனையை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆசை ஆனால் நான் படைக்கும் அந்த சாதனையை உலகில் எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு மூலை முடுக்கிலும் உலகில் எந்தவொரு சாதனை புத்தகத்திலும் எவரும் இந்த சாதனையை சாதித்திருக்க கூடாது எந்த ஒரு புத்தகத்திலும் பதிவு செய்து இருக்க கூடாது. அந்த இலட்சியத்தில் நான் துணிச்சலுடன் செயல்பட்டு சாதித்த சாதனை தான் இது. இதுவரை இந்த சாதனையை உலகில் எவரும் சாதித்ததில்லை அப்படி சாதித்ததாக உலகில் எந்தவொரு சாதனை புத்தகத்திலும் பதிவு செய்யப்பட்டில்லை.

கேள்வி: இப்படியொரு துணிச்சலான ஒரு சாதனையை நிலைநாட்ட உங்களுக்கு ஏற்பட்ட மனவலிமையைப்பற்றி கூறுங்கள்.

பதில் : எனது இந்த மனோவலிமையை எனது உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை உருவாக்க வேண்டும். இதற்கு என்னால் மாத்திரம் முடியாது. இதற்கு ஒரு ஆசான் தேவை ஒரு கல்வியை தொடர ஆசான் தேவை ஒரு தொழிலை தொடர ஆசான் தேவை தனது வாகனத்தை முறையாக செலுத்திட நல்ல சாரதி அனுபவமுள்ள ஒரு ஆசான் தேவை அதேபோல எனது மனோவலிமையை அதிகரிக்க செய்திட எனக்கொரு நல்ல ஆசான் தேவைப்பட்டார். இதை நான் பிறந்த இந்த ஈழ திருநாட்டில் தேடிப் பார்த்தேன். அப்படிபட்ட ஒருவர் எனக்கு கிடைக்கவில்லை கடல் கடந்த நாடுகளில் இப்படிப்பட்ட ஒருவர் இருக்கின்றாரா என தேடிப்பார்த்தேன். இதை நான் பிறந்த இந்த ஈழ திருநாட்டு மண்ணில் இருந்து சாதிக்க முடியாது. அதனால் எமது சகோதர நாடான இந்தியாவுக்கு சென்றேன். அங்கே பல நாட்கள் இது சம்பந்தமாக அலசி ஆராய்ந்தபோது இந்தியாவில் உஸ்தாத் சாகுல் ஹமீட் ஷாகிப் என்பவரை சந்தித்தேன். அவரிடம் பத்து தினங்கள் இந்த கலை பற்றி மனோவலிமை பற்றி நன்றாக விசாரித்து தெரிந்து கொண்டேன். அவரிடம் தொடர்ந்து இந்தியாவில் இருந்து கொண்டு இதை கற்றிட எனது பொருளாதார நிலைமை எனக்கு தடையாக இருந்தது. மீண்டும் நான் இலங்கைக்கு திரும்பினேன். மீண்டும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு சென்ற நான் தொடர்ச்சியாக அவரிடமிருந்து பல அனுபவமிக்க மனோவலிமைகளை கற்றுக்கொண்டேன். தொடர்ந்தும் இந்தியாவில் இருந்து செயல்பட முடியாத எனக்கு உஸ்தாத் சாகுல் ஹமீட் ஷாகிப் அவருடைய அனுமதியுடன் அவரின் வழிகாட்டலின் பேரில் நம் ஈழ திருநாட்டில் அவருடைய சீடர்களில் ஒருவரை பெயர் குறிப்பிட்டு அவரிடம் போய் இந்த மனோவலிமையைப்பற்றி கற்று கொள்ளும் படி பணித்தார். மீண்டும் இலங்கைக்கு வந்த நான் குறிப்பிட்ட அந்த பெரியாரிடம் எனது பயிற்சிகளை ஆரம்பித்தேன். இப்படியாக சுமார் எட்டு வருடங்கள் எனது இந்த மனோவலிமையை அதிகரித்துக் கொள்வதற்காக வேண்டி பல இன்னல்களை பல கஷ்டங்களை சகித்துக்கொண்டு நான் இந்த பயிற்சியில் ஈடுபட்டேன்.

சோழன் புக் பதிவேட்டில் இடம்பிடித்த வீரதீரச் செயல்

கேள்வி: தாங்கள் கூறிய இந்த உஸ்தாத்மார்கள் அல்லது இந்த ஆசான்கள் மண்ணறைக்குள் இருந்து சாகசம் புரிவதற்கு தாங்களுக்கு அனுமதி தந்தார்களா?

பதில் : இல்லை, மண்ணறை என்பது ஒரு மனிதனின் மரணத்திற்கு பின்னால் பூமிக்குள் உருவாக்கப்படும் நிரந்தர இல்லடம். இந்த இல்லிடத்தை உயிருடன் எவரும் தெரிவுசெய்து கொள்வதில்லை. ஆனால், மண்ணறைக்குள் இருந்து ஒரு சாதனையை படைக்க வேண்டும் என்ற ஆசையை எனது ஆசான்களிடம் கூறியபோது ஆரம்பத்தில் அனுமதி மறுத்த ஆசான்கள் எனது மனோவலிமையை உரசிபார்த்து உன்னால் இதை சாதிக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி எனக்கு அனுமதி தந்தார்கள். இதற்காக வேண்டி இவர்கள் அனுமதி தந்து விட்டார்கள் என்று உடனடியாக நான் மண்ணறையில் இறங்கி சாதனை படைக்க முயலவில்லை. எட்டு வருட காலங்களாக 142 தடவைகள் மண்ணறையில் மூடிக்கொண்டு இதற்கான பயிற்சியில் ஈடுபட்டேன். அந்த பயிற்சி இறைவனின் உதவியோடு ஆசான்களின் ஆசீர்வாதத்தோடு சிறப்பே நடந்தது. அதன் பின்னரே ஒரு சாதனைக்கான அனுமதியை உலகரீதியில் மற்றும் நான் பிறந்த நாட்டிலும் அதற்கான வழிகளை தேடினேன். இதனடிப்படையில் சோழன் புக் உலக சாதனை தாபனத்தோடு தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொண்டேன்.

கேள்வி: இந்த மண்ணறை தயாரிக்கப்பட்டதும் அதில் நீங்கள் இறங்கி சாதனை படைத்தது பற்றியும் மண்ணறைக்குள் நீங்கள் கண்ட அனுபவங்கள் பற்றியும் கூறுங்கள்.

பதில் : 2022 ஜனவரி மாதம் 9ஆம் திகதி மாத்தளை மண்ணில் பல்லாயிர கணக்கான மக்கள் மத்தியில் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதகுருமார்களுக்கு முன்னிலையில் மாத்தளை நகர A9 வீதியில் ஒரு மண்ணறையை தயார் செய்யப்பட்டது. இதற்கு மாத்தளை நகர விளையாட்டு துறை அதிகாரி பீ. கே. அலுவிஹார மாத்தளை பொலிஸார் அரசியல்வாதிகள் என பல அரச அதிகாரிகள் முன்னிலையில் இந்த மண்ணறை தோண்டப்பட்டது. சோழன் புக் உலக சாதனையாளர் நிறுவனத்தின் மூலமாக இது பரிசீலிக்கப்பட்டது. எல்லோரும் முன்னிலையில் சர்வமத குருமார்களின் ஆசீர்வாதங்களுடன் நான் மண்ணறைக்குள் புகுந்தேன். ஒரு சாதாரண பிரேதத்தை மண்ணுக்குள் அடக்கம் செய்வது போன்று பலகையால் மூலப்பட்டது. அதற்கு மேலால் மண்கொண்டு மூடப்பட்டது. அதன் பின்னர் அந்த மண்ணறைக்கு மேல் கொலுந்து விட்டு எரிய கூடிய நிலையில் தீ கொளுத்தப்பட்டது. மாலை 6.15 முதல் 7.30 வரை நான் மண்ணறைக்குள் இருந்தேன். மண்ணறைக்குள் இருந்த நான் முழுமையாக இறை பிரார்த்தனையுடனே இருந்தேன். அதற்குள் எனக்கு எதுவும் தெரியவில்லை. எனது இந்த சாதனையை முடித்து குறித்த நேரத்தின் பின்னர் என்னை வெளியே எடுத்தார்கள். அப்பொழுது தான் நான் மண்ணறைக்குள் உட்புகும் போது இருந்த மக்களை விட பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளம் கூடியிருந்ததை நான் அவதானித்தேன். இறைவனின் ஆசிர்வாதம் எனது சாதனைக்கு உந்துசக்தியாக அமைந்தது.

கேள்வி: இவ்வளவு ஒரு சாதனையை நிலைநாட்டிய பின்னர் தாங்கள் எதிர்பார்க்கும் பிரதிபலன்கள் என்ன?

பதில் : நான் இதில் எந்தவித பிரதிபலன்களையும் எதிர்பார்க்கவில்லை எவனொருவன் ஒரு விடயத்தை சாதிக்க வேண்டும் என்ற நோக்கோடு உண்மையாக முயற்சி எடுப்பானேயானால் அவனுக்கு அதற்குண்டான வழியை இறைவன் திறந்து கொடுப்பான். அந்த வழியில் எவருக்கும் எந்த முயற்சியிலும் ஈடுபடலாம். வெற்றியும் தோல்வியும் அவரவரது முயற்சியிலும் அவர் பயணிக்கும் வழியிலுமே தங்கியிருக்கின்றது.

கேள்வி: சோழன் புக் சாதனை புத்தகத்தில் சாதனை படைத்த தாங்கள் இந்த நாட்டு மக்களுக்கு விஷேடமாக இளைஞர்களுக்கு நீங்கள் எதை கூறுகின்றீர்கள்.

பதில் : நான் பிறந்த ஈழ திருநாடு பல்லாயிரம் வருட சரித்திரம் நிறைந்த நாடு. இந்நாட்டின் சுதந்திரத்தை வெள்ளையர்களிடம் இருந்து இரத்தம் சிந்தாது தமிழ், சிங்கள, முஸ்லிம் தலைமைத்துவம் இணைந்து சுதந்திரம் பெற்றுக் கொண்ட நாடு. இந்நாட்டில் வாழும் அனைவரும் இலங்கை தாய் எனும் வயிற்றில் பிறந்த பிள்ளைகள். நாம் அனைவரும் இந்நாட்டில் இதுவரை காலமும் சகோதர வாஞ்சையுடன் வாழ்ந்து வந்துள்ளோம். எமக்குள் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படலாம், இவை யாவும் நிரந்தரமான பிரச்சினைகள் அல்ல தற்காலிகமானது. எனவே இவைகள் அனைத்தையும் சமாளித்து நாட்டின் நாம் அனைவரும் சமத்துவமாக வாழ்ந்தால் இந்த நாட்டை வளமான நாடாக கட்டியெழுப்ப முடியும்.

நான் படைத்த இந்த சாதனையை எனது சமூகத்திற்கு மாத்திரம் சொந்தமானது அல்ல நான் பிறந்த மாத்தளை மண்ணுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல இது நான் எனது நாட்டுக்கு தேடிக்கொடுத்த கௌரவம். அதனால் தான் நான் சாதனை படைத்த அந்த தினத்தில் என்னை சர்வமத பெரியார்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் கண்களில் கண்ணீர் ததும்ப என்னை கட்டித்தழுவி என்னை ஆசிர்வதித்தார்கள். அது இந்நாட்டு மக்களின் சகோதரத்துவத்தின் ஒரு துளியை அன்றைய தினம் நான் கண்டுக் கொண்டேன்.

நேர்காணல்: எம். எஸ். எம். மஸாஹிம்
உக்குவளை விசேட நிருபர்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

சருமத்திற்கு பத்துணர்வு தரும் இரவு நேர சரும பராமரிப்பு

அலுவலக பணிக்கு செல்லும் பெண்களில் பெரும்பாலானோர் சரும பராமரிப்புக்கு போதிய நேரம் ஒதுக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டில் பொருட்களை கொண்டு இரவில் படுக்கைக்கு செல்லும்போது சில பயன்படுத்தும் நிமிடங்கள் செலவழித்து சருமத்திற்கு புத்துணர்வு ஊட்டலாம். அதற்கு செய்ய வேண்டியவை! பாலுடன் மஞ்சள் சேர்த்து பூசி சருமத்திற்கு கூடுதல் பொலிவு சேர்க்கலாம்.

ஒரு பாத்திரத்தில் 2 டீஸ்பூன் மஞ்சள் தூளுடன் 6 டீஸ்பூன் பால் சேர்த்து குழைத்துக்கொள்ள வேண்டும். அதனை விரலில் எடுத்து முகம், கழுத்து மற்றும் சூரிய கதிர்வீச்சால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் பூசி மசாஜ் செய்துவிட்டு தூங்க செல்லலாம். காலையில் எழுந்ததும் குளிர்ந்த நீரில் முகத்தை கழுவிவிட வேண்டும். வாரத்தில் மூன்று, நான்கு நாட்கள் செய்து வந்தால் சருமம் பளிச்சென்று மின்னத் தொடங்கும்.

சரும பொலிவுக்கு முட்டையை பயன்படுத்தலாம். முட்டையின் ள்ளைக்கருவில் வைட்டமின் ஏ றைந்திருக்கிறது. அது சரும சுருக்கம், வயதான தோற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குகிறது. ஒரு கிண்ணத்தில் முட்டையின் வெள்ளைக்கருவை மட்டும் தனியாக பிரித்தெடுத்துக்கொள்ள வேண்டும். அதனை முகத்தில் தடவி விட்டு 15 நிமிடங்கள் உலரவைக்க வேண்டும். அதன்பிறகு குளிர்ந்த நீரில் முகத்தை கழுவி விடலாம். வாரம் இரண்டு, மூன்று முறை செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

சருமத்தை தூய்மைப்படுத்துவதில் ஓட்ஸுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. எண்ணெய் பசை சருமம், முகப்பரு, உலர்ந்த சருமம் போன்ற பிரச்சினைகளுக்கும்

தீர்வு தருகிறது. உலர்ந்த சருமத்திற்கு தேனையும் பயன்படுத்தலாம். ஒரு டீஸ்பூன்

ஓட்ஸுடன், ஒரு டீஸ்பூன் தேன் கலந்து ஐந்து நிமிடம் ஊறவைக்க வேண்டும். ஓட்ஸ் மிருதுவானதும் முகத்தில் லேசாக தடவி விட்டு தூங்க செல்ல வேண்டும். காலையில் எழுந்ததும் முகத்தை கழுவி விடலாம். தொடர்ந்து செய்து வந்தால் சூரிய கதிர்வீச்சுகளால் ஏற்படும் சரும பாதிப்புக்கு தீர்வு காணலாம்.

முகப்பரு பிரச்சினைக்கு தக்காளி பழத்தை பயன்படுத்தலாம். தக்காளி பழத்தை இரண்டு தூண்டாக வெட்டி அதனுடன் இரண்டு தேக்கரண்டி பால் சேர்த்து ஊற வைக்க வேண்டும். பின்னர் தக்காளி பழத்தை பிசைந்து, சாறு எடுத்து முகத்தில் பூச வேண்டும். 15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தை கழுவி விடலாம்.

கோதுமை ரவை கருப்பட்டி பொங்கல்

தேவையான பொருட்கள் :

கோதுமை ரவை 1 கப்
பயத்தம் பருப்பு 1/4 கப்
கருப்பட்டி பொடித்தது ஒன்றரை கப்
நெய் கால் கப்
முந்திரி பருப்பு சிறிது
காய்ந்த திராட்சை சிறிது
ஏலக்காய் தூள் 1/4 டீஸ்பூன்

செய்முறை :

வாணலியில் கோதுமை ரவை, பயத்தம் பருப்பு இரண்டையும் தனித்தனியாகப் போட்டு சிவக்க வறுத்தெடுக்கவும்.

வறுத்த ரவை, பருப்பு இரண்டையும் குக்கரில் போட்டு, 3 கப் தண்ணீரைச் சேர்த்து, 4 விசில் வரும் வரை வேக விட்டு எடுக்கவும்.

ஒரு பாத்திரத்தில் கருப்பட்டியை போட்டு அத்துடன் 1/2 கப் தண்ணீரைச் சேர்த்து கொதிக்க விடவும். கருப்பட்டி கரைந்து கொதிக்க ஆரம்பித்ததும், அடுப்பிலிருந்து எடுத்து, வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

குக்கரை திறந்து, வெந்த ரவை மற்றும் பருப்பை சற்று மசித்து விட்டு, அதில் வடிகட்டிய கருப்பட்டி பாகையும் விட்டு, மீண்டும் அடுப்பிலேற்றி, கிளறி விடவும். இடை இடையே சிறிது சிறிதாக நெய்யை சேர்த்து கொண்டே வரவும்.

அடுப்பை மிதமான தீயில் வைத்து, பொங்கல் சற்று கெட்டியாக வரும் வரை கிளறிக் கொண்டே இருக்கவும்.

கடைசியில் முந்திரி, திராட்சையை நெய்யில் வறுத்து போடவும்.

ஏலக்காய் தூளையும் தூவி, மீண்டும் ஒரு முறை நன்றாகக் கிளறி இறக்கி வைக்கவும்.

சூப்பரான கோதுமை ரவை கருப்பட்டி பொங்கல் ரெடி.

● தனது கணீரென்ற மணிக்குரலால் இசையுலகை ஆளுமை செய்தவர் "சீர்காழி எஸ். கோவிந்தராஜன்.

தேவாரம் பாடிய மூவர்களில் ஒருவரான திருஞானசம்பந்த நாயனார் அவதரித்த சீர்காழிப்பதியில் 19.01.1933 அன்று எளிய மிட்டாய்க்கார குடும்பத்தில் சிவசிதம்பரம், அபயம்பாள் இணையருக்கு மூன்றாவது மகனாக பிறந்தார் கோவிந்தராஜன். சிறு வயதிலிருந்தே சங்கீதம், நாடகம், இசையிலும், நடிப்பிலும் பெரும் ஆர்வம் கொண்டவர் இவர்.

தேவி நாடக சபாவில் இணைந்து இசை, நாடகம் என சில காலம் பொழுதைக் கழித்த கோவிந்தராஜன், பின் சேலம் மொடர்ன் தியேட்டர்ஸில் துணை நடிகராக மாதச்சம்பள அடிப்படையில் பணியாற்றினார். இவரின் வாழ்க்கை பாதை முட்கள் நிறைந்தது. படிப்படியாக முன்னேறி தமிழ் இசைக்கல்லூரியில் இசைமணி பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று சென்னை மத்திய அரசு கலைக்கல்லூரியில் சங்கீத வித்வானார்.

ஆலய மணியின் ஓசைக்கு நிகரான கணீர் குரலுக்கு சொந்தக்காரர் அமரர் சீர்காழி எஸ்.கோவிந்தராஜன். (19.01.1933)

தனது கணீரென்ற மணிக்குரலால் இசையுலகை ஆளுமை செய்த "சீர்காழி எஸ். கோவிந்தராஜன்" ஓர் இசை சாகரம்...!

தேவாரம் பாடிய மூவர்களில் ஒருவரான திருஞானசம்பந்த நாயனார் அவதரித்த சீர்காழிப்பதியில் 19.01.1933 அன்று எளிய மிட்டாய்க்கார குடும்பத்தில் சிவசிதம்பரம், அபயம்பாள் இணையருக்கு மூன்றாவது மகனாக பிறந்தார் கோவிந்தராஜன். சிறு வயதிலிருந்தே சங்கீதம், நாடகம், இசையிலும், நடிப்பிலும் பெரும் ஆர்வம் கொண்டவர் இவர்.

தேவி நாடக சபாவில் இணைந்து இசை, நாடகம் என சில காலம் பொழுதைக் கழித்த கோவிந்தராஜன், பின் சேலம் மொடர்ன் தியேட்டர்ஸில் துணை நடிகராக மாதச்சம்பள அடிப்படையில் பணியாற்றினார். இவரின் வாழ்க்கை பாதை முட்கள் நிறைந்தது. படிப்படியாக முன்னேறி தமிழ் இசைக்கல்லூரியில் இசைமணி பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று

சென்னை மத்திய அரசு கலைக்கல்லூரியில் சங்கீத வித்வான் பட்டம் பயின்று தனது தகுதியை திறம்பட வளர்த்துக்கொண்டார்.

சீர்காழி கோவிந்தராஜன் கர்நாடக சங்கீதம், நாடக சங்கீதம், பக்தி இசை, மெல்லிசை, கிராமிய இசை

ஆலய மணியின் ஓசைக்கு நிகரான கணீர் குரலுக்கு சொந்தக்காரர் இசைஞானபூபதி சீர்காழி கோவிந்தராஜன்

சினிமா இசை என அனைத்திலும் சுமார் 16000 பாடல்கள் பாடியுள்ளார் சீர்காழி கோவிந்தராஜன்.

சிவாஜி கணேசன், எம்ஜியார், எஸ்.எஸ். ராஜேந்திரன், முத்துராமன், என்.டி.ராமராவ், வி. நாகையா ரஜினிகாந்த், பாண்டியன் போன்ற நடிகர்களுக்கு பின்னணி பாடியுள்ளார்.

தனது வெண்கலக்குரலால் ஆலயங்களில் இவர் இசைக்கச்சேரி நடாத்தும் பொழுதுகளில் இறைவனே இறங்கி வந்து விடுவதைப்போல் பிரமை ஏற்படும். இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் கண்ணியம் மிக்க வரிகளை கொண்டதாக இருக்கும். நல்ல தரத்தில் அமைந்த பாடல்களுக்கு மட்டுமே பின்னணி பாடும் கொள்கையைக் கொண்டவர் சீர்காழி கோவிந்தராஜன். தமிழ் நாட்டில் காமராஜர், அண்ணா போன்றோர் தலைமையில் நடைபெற்ற காவல்துறை மாநாடு, உலகத்தமிழ் மாநாடு, போன்ற மிக முக்கியமான நிகழ்வுகளில் சீர்காழி கோவிந்தராஜனின் கச்சேரி

கண்டிப்பாக நடைபெறும். மக்கள் திலகம் எம்ஜியார் முதலமைச்சராக இருந்தபோது சீர்காழி கோவிந்தராஜன் அரசவை கலைஞராக இருந்தார். இவர் தொகுத்துப்பாடிய திருக்குறள் இசைதட்டு வெளியீடு பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றதை தன் வாழ்நாளில் பெரும் பாக்கியமாக கருதியவர்

சீர்காழி கோவிந்தராஜன். காஞ்சி காமகோடி பீடம், குன்றக்குடி ஆதீனம், தர்மபுர ஆதீனம் போன்ற ஆன்மீக பீடங்களின் இசைப்புலவர் பட்டங்களைப் பெற்றவர். கடைசி வரை அரசியல் சாயமின்றி எல்லாத் தலைவர்களிடத்திலும் சமமாகப் பழகி பண்பைப் பேணியவர் சீர்காழி கோவிந்தராஜன். உலகில் பல்வேறு நாடுகளில் தனது இசைப்பங்களிப்பை வழங்கியுள்ளார். இலங்கைக்கு பல தடவைகள் விஜயம் மேற்கொண்டு இசைப் பணியாற்றினார். இவர் லண்டனில் நடத்திய கச்சேரி இன்றளவிலும் வரலாற்று புகழ் கொண்டது. இவர் பாடிய சிறந்த பாடல்கள் சில...

கல்லிலே கலைவண்ணம் கண்டான், கண்ணன் வந்தான் இங்கே கண்ணன் வந்தான், இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி,

"கர்ணன்" படத்தில் இவரின் இசைப்பங்களிப்பு மகத்தானது. மழை கொடுக்கும் கொடையுமொரு, மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா, உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது, போன்ற பாடல்களும், காதலிக்க நேரமில்லை காதலிப்பார் யாருமில்லை, திருச்செந்தூரில் கடலோரத்தில் செந்தில்நாதன் அரசாங்கம், உலகம் சுற்றும் வாலிபனில் டைட்டில் பாடல் நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும், இதயக்கனியில் நீங்க நல்லாயிருக்கனும் இந்த நாடு முன்னேற, சிவந்த மண்ணில் அம்மா உன் மகனோடு உன் பொன்னுடலும் கலந்ததம்மா, அகத்தியரில் உலகம் சமநிலை பெறவேண்டும், தாயிற் சிறந்த கோயிலுமில்லை, நடந்தாய் வாழி காவேரி, வென்றிடுவேன் நாட்டையும், பழைய தசாவதாரம் படப்பாடல்கள், ராஜ ராஜ சோழனில் ஓசை ஒலியெலாம், கந்தன் கருணையில் ஆறுபடை வீடு கொண்ட திரு முருகா, பாகப்பிரிவினையில் ஒற்றுமையையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே, என்ற பாடலும் ,பணம் பந்தியிலே குணம் குப்பையிலே, நித்தம் நித்தம் மாறுகின்றதெப்படியோ, எங்கிருந்தோ வந்தான் கண்ணன் இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன், தேவன் கோவில் மணியோசை, செங்கனிவாய் திறந்து சிரித்திடுவாய், ஓடம் நதியினிலே ஒருத்தி மட்டும் கரையினிலே, என்னடா தமிழ் குமரா எனை நீ மறந்தாயடா, மலைகளில் சிறந்த மலை மருத மலை, சின்னஞ் சிறு பெண்பொலே சிற்றாடை இடை உடுத்தி சிவகங்கை குளத்தருகே, விநாயகனே வினை தீர்ப்பவனே, சித்தூர் ராணி பத்மினியில் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும், திருப்பதி மலை வாழும் வெங்கடேஷா, ஆத்தாடி மாரியம்மா, ஆண்டுக்கு ஆண்டு தேதிக்கு தேதி ஆயிரம் இருக்குது சுபதினம், இது நீரோடு செல்கின்ற ஓடம், கோட்டையிலே ஒரு ஆலமரம் அதில் கூடு கட்டும் ஒரு மாடப்புறா, என வரிசைப்படுத்திக் கொண்டே செல்லலாம். சீர்காழி கோவிந்தராஜன் ஓர் சிறந்த நடிகர். இவருக்கு சினிமாவில் நடிக்க பெரும் வாய்ப்பளித்தவர் இயக்குனர் ஏ.பி.நாகராஜனே. கந்தன் கருணை, வா ராஜா வா, திருமலைத் தென்குமரி, அகத்தியர், தெய்வம், ராஜ ராஜ சோழன் , திருவருள், தசாவதாரம் (பழையது), தாய் மூகாம்பிகை, மீனாட்சி திருவிளையாடல் போன்ற படங்களில் நடித்தும் உள்ளார். இதில் அகத்தியர் படத்தில் அகத்தியர் வேடத்தில் நடித்து பிரமிக்க வைத்தார். இந்திய அரசின் பத்மஸ்ரீ, சங்கீத நாடக அக்கடமி விருது, தமிழக அரசின் சிறந்த பின்னணி பாடகர் விருது, கலைமாமணி விருது, இசைஞானபூபதி விருது, மொரீசியஸ் தூதுவர் கௌரவ விருது, போன்ற சிறப்புகளை அடைந்தவர் சீர்காழி கோவிந்தராஜன். இவர் பாடிய பாடல்கள் காலத்தால் சாகா வரம் பெற்றவைகளாகும்.....!

24.03.1988 அன்று தனது 55 வது அகவையில் இறுதி மூச்சிலும் "உலகம் வாழ்க உலகம் வாழ்க "என பிராத்தனை செய்து கொண்டே இறைவனை அடைந்தார் இசைஞானபூபதி சீர்காழி கோவிந்தராஜன்.

ஆக்கம்:எஸ். கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

கொழும்பு றோயல் கல்லூரி பொங்கல் விழா

Principal
எம்.வி.எஸ். குணதிலக
Deputy Principal
எல்.டபில்யூ.கே. சில்வா
Primary Principal
திருமதி வை.ஜ. வியனகே

Assistant Principal of Tamil Section
எஸ். மயூரன்
Assistant Principal of Tamil Section
திருமதி. டி. நந்தகுமார்
Senior Master of Clubs and Societies
டி.ஈ.சி.பி. அமரதுங்க

Teacher in Charge of Royal College Hindu Students' Union
திருமதி. வி. ஸ்ரீப்பிரியாகுமாரி
Class Teacher ıC
திருமதி கே. சுரேஸ்குமார்
Class Teacher ıD
திருமதி எம்.எம். றுமீசா

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.